வெளியீடு 25-02-2000 Issued 25-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஏப்ரல் 29, 1999 - தொகுதி 76 - எண் 2**

**Thursday, 29th April, 1999—Volume 76 - No. 2**

*...ட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**...tive Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

101/2000.
D,
V2H,31'N99,
N99.76-2
221812

401

**29-4-1999**

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*


1. *வினாக்கள்—விடைகள்—*

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 257 - 298

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பதின்மூன்றாம் பட்டியல்) 299 - 335

2. *அறிவிப்புகள்—*

(அ) நிகழ்ச்சி நிரலில் உள்ள கவன ஈர்ப்பு ஒத்திவைக்கப் பெறுதல் 335

(ஆ) மேதகு ஆளுநர் அளிக்கும் விருந்திற்குச் செல்ல சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பேருந்து வசதி 339

3. *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, *1999* 335 - 336

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, *1999* 336 - 337

(இ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, *1999* 337 - 338

(ஈ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்த) சட்டமுன்வடிவு, *1999* 338

V 211, 31'N99
N99, 762



பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்
(ஆ) கோரிக்கை எண் 53—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு — 339 - 438

* மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 339, 344, 348, 400 - 433
* திரு. ப. ரங்கநாதன் — 340, 345, 348 - 354, 434, 436
திரு. ஆர். சிவராமன் — 354 - 357
திரு. கே. சுப்பராயன் — 342, 347, 357 - 361, 179, 437
திரு. பி.ஆர். சுந்தரம் — 361 - 366, 433
* திரு. ம. சண்முகம் — 366 - 371
திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் — 371 - 376
டாக்டர் அ. செல்லக்குமார் — 376 - 382, 410
திரு. குழந்தை தமிழரசன் — 382 - 387
* திரு. லா. சந்தானம் — 387 - 390
திரு. சி. வேலாயுதன் — 390 - 394
திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் — 394 - 400

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 438 - 440

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 16, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 ஏப்ரல் 29, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இரவார் இரப்பார்க்கொன்(று) ஈவர் கரவாது*
*கைசெய்தூண் மாலை யவர்"*

தாமே தொழில் செய்து, ஊதியம் பெற்று உண்ணும் இயல்புடையவர், பிறரிடம் சென்று கையேந்த மாட்டார்; தம்மிடம் வேண்டி நின்றவர்க்கும் ஒளிக்காமல் வழங்குவார்.

## 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 541, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**541—**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

***12509—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி மூர்த்திப்பட்டி கோல்காரனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[1999 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேச்சேரி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கு தற்போது அங்கு செயல்படும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாலும், மூர்த்திபட்டி-கோல்காரனூர் கிராமத்திற்கு அரை கிலோ மீட்டர் தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், மூர்த்திப்பட்டி-கோல்காரனூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 542, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**542—**

**தானியங்கி மின் நிலையம்**

***13096—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் 170 கே.வி. திறன்கொண்ட தானியங்கி மின் நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் 170 கே.வி திறன்கொண்ட தானியங்கி மின் நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு உள்ளது.

(ஆ) திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் தற்போதுள்ள அனைத்து மின் இணைப்புகள், மின்சாரம் பயன்படுத்தும் பல்வேறு உபகரணங்கள் மற்றும் பிரிவுகள் குறித்து பொதுப்பணித் துறையால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



1999 ஏப்ரல் 29]

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தானியங்கி மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் இருக்கக்கூடிய சூழ்நிலைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். திண்டுக்கல் நகருக்கு வந்திருந்தபோது முழுமையாகச் சுற்றிப்பார்த்து, அங்கே பல்வேறு கட்டடங்கள், ஆப்பரேஷன் தியேட்டர்கள், தானியங்கி மின் நிலையம் போன்றவை ஏற்படுத்தித் தருவது போன்ற பல்வேறு நிலைகளை அவர்கள் அறிந்து வந்தார்கள். அதற்கான உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்திருந்தார்கள். இந்த ஆண்டே அந்த அரசு தலைமை மருத்துவமனையில் பல்வேறு கட்டடங்கள், ஆப்பரேஷன் தியேட்டர்கள், தானியங்கி மின் நிலையம் போன்றவற்றை அமைத்துத் தருவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் 345 படுக்கைகள் தற்போது உள்ளன. ஏறக்குறைய நாளொன்றுக்கு 3,500-லிருந்து 4,000 பேர், வெளி நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, நான் திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது, இன்னும் பல வசதிகள் அங்கே செய்து கொடுக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன். அதற்காக அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறேன். நிதிநிலைமை சரியில்லாத சூழ்நிலையில், எப்படியாவது உலக வங்கித் திட்டம் செயல்படுத்தப்படுமானால், அதிலே ஒரு கணிசமான தொகையை திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்கு ஒதுக்கி அனைத்து வசதிகளையும் செய்துத் தருவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் கடந்த மூன்று நான்கு மாதங்களாக பிணத்தைக் கொண்டு வருவதற்கான ஊர்தி இல்லாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த மருத்துவமனைக்கு அந்த ஊர்தியை வழங்க ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே ஓர் ஊர்தி இருக்கிறது. அது பழுதடைந்திருக்குமானால் அதை விரைவில் சரிசெய்வதற்கான ஏற்பாடுகளை அரசு உடனடியாகச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் ஓராண்டு காலத்திற்கு முன்பு ஆப்பரேஷன் தியேட்டரில் விஷக் கிருமிகள் சூழ்ந்து, அந்தத் தியேட்டரையே மூட வேண்டிய சூழ்நிலை வந்தது. அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பித்துக் கொண்டதன்பேரில், உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்லி, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள். ஆனால், இதுவரையிலே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்று அங்கிருந்து எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. எனவே, அந்த ஆப்பரேஷன் தியேட்டரை உடனடியாகக் கட்டித் தருவதற்கான சூழ்நிலையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இந்த அரசாங்கம் உடனடியாக அந்த ஆப்பரேஷன் தியேட்டரைப் புதுப்பிப்பதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 543, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**543—**

**ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்**

***16307—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 ஏப்ரல் 29]

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து அடிப்படைத் தேவைகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதுமில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் 48 ஊராட்சிகள், சிற்றூராட்சிகளைக் கொண்டது. அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு வர வேண்டுமென்று சொன்னால் 10 கிலோ மீட்டர் தூரம் பொதுமக்கள் பயணம் செய்து பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களிலேயே மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியமாக அது இருப்பதால் அதைப் பிரித்து பெருவளந்தானை மையமாகக் கொண்டு செயல்பட்டால் திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்துவதற்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் மறுக்கவே இல்லை. மறுபரிசீலனை தேவையேயில்லை. அது பெரிய ஒன்றியம் என்பதை நான் அறிவேன். இருப்பினும் அதற்கான நடவடிக்கைகள் இதுவரை இந்த அரசாங்கத்திற்கு எவையும் அனுப்பப்படவில்லை. அதனால்தான் தற்போது என்னிடத்திலே இல்லை என்று குறிப்பிட்டேன். குறிப்பாக இந்த 3 மாத காலத்திற்குள்ளாக ஊராட்சி ஒன்றியமும் தீர்மானம் நிறைவேற்றி, மாவட்ட ஊராட்சியும் தீர்மானம் நிறைவேற்றி, அதை ஆட்சியாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்து, அதற்கான தகுதி, அதற்கான வாய்ப்புகள், அதிலே பொருளாதார நிலை, இவற்றுக்கெல்லாம் அதிலே விவரங்கள் வருமானால், அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, வருகிற ஊராட்சி பொதுத் தேர்தலுக்குப்பிறகு அதை நடைமுறைப்படுத்தலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

[1999 ஏப்ரல் 29

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 1990-1991 ஆம் ஆண்டிலே அந்த ஊராட்சி ஒன்றியத்திலே இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். அது அரசுக்கு அனுப்பப்படவில்லை என்பது இப்போது தெரிகிறது. ஆகவே, அந்தத் தீர்மானத்தை மீண்டும் புதுப்பித்து அனுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டால், அரசு பரிசீலிக்குமா? அதேபோல, ஊராட்சிகளையும் இப்படிப் பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படிப்பட்ட கருத்துருக்களுக்கும் ஊராட்சிகளின் மூலமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அவற்றையும் நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின் பேரில், ஏற்கெனவே இப்படிப் பெரியதாக இருப்பதைப் பிரிப்பதும், சிறியதாக இருப்பதைச் சேர்ப்பதும், இப்படி ஊராட்சி நிறுவனங்களில் எது இருந்தாலும் அவற்றை முறைப்படி நடவடிக்கைகள் எடுத்து, வருகிற பொதுத் தேர்தலுக்குள், அதாவது ஊராட்சி பொதுத் தேர்தலுக்குள் நடவடிக்கை இறுதி செய்யப்பட்டு, தேவைப்படின் பிரிக்கவோ அல்லது இணைக்கவோ, நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால், சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றிற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் இயக்குநருக்கு அனுப்பி, இயக்குநரிடத்திலிருந்து அரசுக்கு வந்தால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 544, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**544—**

**பாதாளச் சாக்கடை வசதி**

***23381—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



999 ஏப்ரல் 29]

(அ) வில்லிவாக்கம் தொகுதி, 63-ஆவது வட்டம், பாரதி நகர், முதல் மற்றும் இரண்டாவது பகுதிகளில் தெருக்களில் பாதாளச் சாக்கடை வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ.45.00 இலட்சம் செலவில் இப்பகுதியில் பாதாளச சாக்கடைத் திட்டம் அமைக்க தொழில் நுட்ப அனுமதி இத்திங்கள் வழங்கப்பட்டு, 1999-2000 ஆம் ஆண்டிற்குள் முடிக்கவேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 545, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**545—**

**விவசாயிகளுக்கு வீரிய விதைகள் வழங்குதல்**

***10433—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைந்த கோயம்புத்தூர் விஞ்ஞான மேதை ஜிடி நாயுடுவின் மிளகாய், எலுமிச்சை, அவரை, பப்பாளிப் பழம் போன்றவற்றின் வீரிய விதைகள் மீண்டும் விவசாயிகளுக்குக் கிடைக்க அரசு முயற்சி எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1999 ஏப்ரல் 29

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமேதை ஜி.டி. நாயுடு அவர்கள் கண்டுபிடித்த பப்பாளி, எலுமிச்சை, தக்காளி, மிளகாய், அவரை போன்ற பல்வேறு விதைகள் எல்லாம் 1971 ஆம் ஆண்டிலே அவரைச் சந்திக்கின்ற நேரத்தில், எங்களைப் போன்றவர்களிடம் கொடுத்து, அவற்றை அந்தப் பகுதியிலே பயிர் செய்தும்கூட, மீண்டும் அவற்றைத் தொடர்ந்து பயிரிடக்கூடிய சூழ்நிலை வராத காரணத்தால், அவற்றைத் தொடர்ந்து பயிரிட முடியவில்லை. அதுபற்றி வேளாண்மைத் துறை ஆராய்ச்சியாளர் அலுவலகத்திலே அதிகாரிகளிடத்திலே சென்று கேட்டாலும்கூட, அப்படிப்பட்ட விதைகள் தற்போது இல்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, பழைய நிலையைக் கண்டுபிடித்து, அவற்றை மீண்டும் விவசாயிகளுக்கு, பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜி.டி. நாயுடு அவர்கள் கண்டுபிடித்த அந்தத் துவரை, பப்பாளி, மிளகாய், எலுமிச்சை போன்ற அந்தப் புதிய ரகப் பயிர்களைவிட, இப்போது கூடுதலாக விளைச்சலைத் தரக்கூடிய துவரை போன்ற செடிகளைக் கண்டுபிடித்து, பவானி சாகர்-1 என்ற பெயரில் நாம் பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கி வருகிறோம். ஆகவே, மேதை ஜி.டி. நாயுடு அவர்கள் கண்டுபிடித்ததைவிட உற்பத்தி கூடுதலாக நல்ல விளைச்சலைத் தரக்கூடியதாக இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், அதை மேலும் ஆராய்ச்சி செய்கின்ற முயற்சியிலே பல்கலைக்கழகம் ஈடுபடவில்லை.

முற்பகல் 9-40

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் பண்ணையிலேயும், கோவை ஆராய்ச்சி நிறுவனத்திலேயும் நான் சென்று அதிகாரிகளிடத்திலே கேட்ட நேரத்திலே, அப்படிப்பட்ட சக்தியுள்ள ஜி.டி. நாயுடு கண்டுபிடித்த அளவுக்கு விதைகள் இல்லை என்று என்னிடத்தில் அதிகாரிகள் அத்தனைப் பேரும் கூறியிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமேயானால், எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு அவை கிடைப்பதற்கு, உடனடியாக அதிகாரிகளிடத்திலே சொல்லி ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், நல்ல விளைச்சலைத் தரக்கூடிய துவரை—பவானிசாகர்-1 என்ற அந்த இரகத்தை விரும்பிக் கேட்டால் தரப்படும். இப்போது, இந்தப் பண்ணையில் உற்பத்தி செய்த சான்று விதைகளை, உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்குத் தருகிறோம். நம்முடைய வேளாண்மைப் பண்ணையின் மூலம் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு இப்போதும் வழங்கிக் கொண்டு வருகிறோம். பவானிசாகர்-1 என்ற அந்தத் துவரை வீட்டுத் தோட்டங்களிலேயும் பயிரிட நல்ல ஏற்ற இரகமாகவும், ஊடு பயிராகப் பயிரிடுவதற்கு ஏற்ற, விளைச்சலைத் தரக்கூடிய இரகமாவும் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜி.டி. நாயுடு அவர்கள், இந்த வீரிய விதைகளை மாத்திரமல்ல; விஞ்ஞான ரீதியிலே பல கண்டுபிடிப்புகளை அவர் செய்தார். பிளேடுகூட, நீண்டகாலத்திற்கு உழைக்கக்கூடிய பிளேடைச் செய்தார். ஆனால், அன்றைக்கு இருந்த மத்திய காங்கிரஸ் அரசு, அவற்றையெல்லாம் அங்கீகரிக்காத காரணத்தால், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற பெருந்தலைவர்களை அழைத்து வைத்து, ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் சென்னையிலே நடத்தி, அவற்றையெல்லாம் பொதுமக்கள் மத்தியிலே போட்டு உடைத்தார்; கொளுத்தினார் என்பது வரலாறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிலிப்பைன்ஸ் நாட்டில் International Rice Research Institute என்ற ஒன்று இருக்கிறது. உலக நாடுகளிலே இருக்கக்கூடிய பல்வேறு விதமான நெல் போன்றவற்றை அங்கே விளைவித்து, உலக நாடுகளிலே, அவற்றைத் தீவிரமாகப் பயிர் செய்யும்படி அறிமுகப்படுத்துகிறார்கள். அந்த I.R.R.I. பண்ணையில், கிட்டத்தட்ட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட, பல நாடுகளிலேயிருந்து சேகரிக்கப்பட்ட நெல் விதைகளை, அவர்கள் நூறு ஆண்டுகள் வைத்திருக்கக்கூடிய அளவுக்குப் பாதுகாத்து வருகிறார்கள். அந்த Technology-ஐ, நம்முடைய தமிழகத்திலே விவசாயப் பல்கலைக்கழகத்திலே தெரிந்து வந்து, அதுபோன்ற முக்கியமான விதைகளைப் பல ஆண்டுகள் சேகரித்து வைக்கக்கூடிய அளவுக்கு இந்த அரசு பணிகளைச் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் நம்முடைய பல்கலைக் கழகத்தின் மூலம் ஒவ்வோராண்டும் புதிய நெல் இரகங்களை, நல்ல விளைச்சலைத் தரக்கூடிய இரகங்களை நாம் கண்டுபிடித்து, ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலே இருப்பது மட்டுமல்ல; நம்முடைய பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வெளிநாடுகளுக்குச் சென்று, சீனா போன்ற நாடுகளிலே நல்ல வீரிய, விளைச்சலைத் தரக்கூடிய நெல் இரகங்களைக்கூட பார்த்து, அங்கே ஆய்வு நடத்திவிட்டு, அதேபோல இங்கும் நல்ல விளைச்சலைத் தரக்கூடிய இரகங்களைக் கண்டுபிடிப்பதற்காக சிறந்த பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 546, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**546—**

**மானியம் பற்றிய விளம்பரப் பலகைகள்**

***18303—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய, மாநில அரசுகளின் விவசாய மானியம் பற்றிய விளம்பரப் பலகைகளை ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியம் மற்றும் சலுகைகள் பற்றிய முழு விவரங்களும் விளம்பரப் பலகையில் எழுதி, மாநிலத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், விவசாயிகளின் பார்வையில் படும்படி வைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டுவருகின்றன.



**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே விவசாயம் சம்பந்தமாக தமிழக அரசு பல சலுகைகள் மூலம், விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய உரம், பூச்சி மருந்து, சொட்டுநீர்க் கருவி, டிராக்டர், பவர் ட்ரில்லர், கதிர் அறுக்கும் இயந்திரம் மற்றும் விசைத்தெளிப்பான் போன்றவற்றிற்கு அளிக்கப்படும் மானியங்களைப்பற்றி விவசாயிகள் தெரிந்துகொள்கின்ற அளவிற்கு, ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் அல்லது ஊராட்சி மன்றத்தின் மூலம், அது குறித்து விரிவாக எழுதி வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதே நேரத்திலே விவசாயிகளின் நிலத்தை சீர்செய்ய புல்டோசர்களை வாடகைக்கு எடுத்து வேலை செய்யும்போது, குறைவாக நிலம் உள்ளவர்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு அளிக்கப்படும் சலுகையை பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு கூறியதைப்போல வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் மூலம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவில் இதுபோன்ற விளம்பரங்களை நாம் செய்து வருகின்றோம். இந்த விளம்பரங்களிலே, வேளாண்மை இயந்திரங்கள், செயல் விளக்க நிருபண வயல்கள் போன்ற விவரங்களையும், மானியங்கள் எந்தெந்த வகையிலே வழங்கப்படுகின்றன என்ற அந்த விபரங்களும் தெரிவிக்கப்படுகின்றன. அது மட்டுமல்லாமல், கருத்துக் காட்சிகள் மற்றும் வீடியோ படங்கள் மூலமாகவும் அரசு விளம்பரப்படுத்துகின்றது. சலுகைகள் குறித்த விவரங்களும் விவசாயிகளுக்கு விளம்பரம் செய்யப்பட்டு வருகின்றன. 1997-98-ஆவது ஆண்டிலே ரூ.5 இலட்சத்திற்கும், 1998-99-ஆவது ஆண்டிலே ரூ.10.38 இலட்சத்திற்கும் மாநில அரசாங்கத்தால் இதுபோன்ற படங்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இதுமட்டுமல்லாமல் துண்டு நோட்டீஸ்கள் விவசாயிகளுக்கு எந்தெந்த இடுபொருட்கள் மானியமாக வழங்கப்படுகின்றன என்பது குறித்தும் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் மூலம் அச்சடிக்கப்பட்டு அவையும் விவசாயிகளுக்கு கிராமப்புறங்களில் வழங்கப்பட்டு நல்ல முறையில் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

[1999 ஏப்ரல் 29

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கமானது விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்குப் பதிலாக, உர ஆலைகளுக்கு வழங்குவதாக செய்திகள் வெளிவந்தன. எனவே, மத்திய அரசு விவசாயிகளுக்கு தற்போது எவை, எவைக்கு மானியங்கள் வழங்குகின்றது, அதுபோல மாநில அரசு எவை எவைக்கு மானியங்கள் வழங்குகின்றது என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் உரத்திற்கு மானியம் வழங்குகிறது. அதைப்போல தீவிர நெல் உற்பத்திப் பணிகளுக்கு, அதை ஊக்குவிப்பதற்காக மானியம் வழங்கப்படுகிறது. இயந்திரங்கள், டிராக்டர்கள் போன்றவைகள் வழங்குவதற்காக மானியம் வழங்கப்படுகிறது. இதைப்போல பல்வேறு இடுபொருட்களுக்கு மத்திய அரசாங்கம் இப்போதும் மானியத்தை வழங்கிக் கொண்டு இருக்கிறது. மேலும் விவரம் வேண்டுமென்றால், இது குறித்து தனிக் கேள்வி போட்டால் முழுமையான விவரத்தைத் தெரிவிக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சென்ட் நிலம்கூட இல்லாதவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டுகின்ற விவசாயிகள் கூட்டத்திலே கலந்து கொண்டு, இந்த மானியங்களை எல்லாம் அரசு அதிகாரிகளை மிரட்டி, பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, நிலம் இல்லாதவர்கள் விவசாயத் தொழிலாளர்களாக இருப்பார்கள். ஒருவேளை தொழிலாளர்களுடைய உரிமைக்காக அப்படிப்பட்ட கூட்டத்திலே கலந்துகொண்டு கருத்துக்களைச் சொல்லியிருக்கக்கூடும். தவறாக அரசை மிரட்டி அல்லது அதிகாரிகளை மிரட்டி யாராவது மானியத்தைப் பெறுகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.



1999 ஏப்ரல் 29]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் மத்திய மாநில அரசுகள் அளிக்கக்கூடிய அந்த மானியங்களைப்பற்றி கரும்பலகைகளிலே எழுதி வைப்பதற்கான மூலக்கேள்வி இது. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து ஊராட்சிகளிலும் இந்த கரும்பலகைகளில் எது, எது அரசு மானியமாக அளிக்கப்படுகிறது என்று எழுதி வைப்பதை எந்த அதிகாரியாவது சோதித்து இருக்கிறார்களா? குறிப்பாக சேலம் மாவட்டம், இந்த அமைச்சர் பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய, அந்த மாவட்டத்திலே எந்த ஒன்றியத்திலும் கரும்பலகையில் எழுதி வைத்துள்ளதாகத் தெரியவில்லை. என்னுடைய இடைப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், இடைப்பாடி ஒன்றியங்களிலே இதுபோல நடைமுறையில் இல்லை. செய்யாத அரசு அதிகாரிகள்மீது அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். ஊராட்சி ஒன்றிய அளவில் வேளாண்மைத் திட்டங்கள் குறித்து, வேளாண்மைக்கு வழங்கப்படுகின்ற இடுபொருள்கள் சம்பந்தமான விளம்பர போர்டு எழுதி வைக்க வேண்டுமென்று தெளிவாக அரசு ஆணை இருக்கிறது. அதைப்போல எழுதியும் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சேலம் மாவட்டத்திலே அப்படியில்லை என்று சொன்னார்கள். என்னோடு அவர் வந்தால் நான், எழுதி வைத்திருக்கின்ற இடத்தையெல்லாம் காட்டத் தயார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குள்ளே வாதம் வேண்டாம், திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திலே சில இடங்களிலேதான் எழுதி வைத்திருக்கின்றார்கள். ஊராட்சி ஒன்றியத்திலே எல்லா மக்களும் செல்லாத நிலை இருப்பதன் காரணமாக அந்தந்த ஊராட்சி மன்றத்திலே அந்த விளம்பரங்களைச் செய்தால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தெரிந்துகொண்டு, அதன்மூலம் அரசு கொடுக்கின்ற பயனை அடைவதற்கு வசதியாக இருக்கும். மேலும் நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக புல்டோசர் வாடகைக்கு எடுத்து, வேலை செய்யும்போது,

[1999 ஏப்ரல் 29

5 ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்குச் சலுகை வழங்க முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள், சிறு, குறு விவசாயிகளுக்குச் சில சலுகைகள் இருகின்றன. இதைப்போல, சிறு விவசாயிகள் என்ற பெயரிலே அனைவருக்கும் எல்லா சலுகைகளையும் வழங்கக்கூடிய அந்த வாய்ப்பு, திட்டம் எதுவும் மத்திய, மாநில அரசுகளிடத்திலே இப்போது இல்லை. ஆனால், அரசு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் உழுவதற்கு டிராக்டர் போன்றவைகளை எல்லாம் வாடகைக்கு வழங்குவதற்கு, விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத தொழில்களுக்கு வாடகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. குறைந்த வாடகையிலேதான் விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை, இதுபோன்ற கருவிகளையும் கொடுத்து உதவுகின்றது. மற்றொரு கேள்வியை இங்கே எழுப்பினார்கள். ஊராட்சி மன்றம் இதுபோல விளம்பரங்கள் செய்ய இயலுமா என்று. இப்போது ஊராட்சி மன்றங்களுக்கு அதிகாரங்கள் வழங்குவதுபற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்துக்கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே, இதுபோல பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பது, மேலும் வேளாண்மையிலே நல்ல உற்பத்தியைப் பெருக்குவதற்கு, அவர்கள் பலன் பெறுவதற்கு, அரசு அதிகாரிகளுக்குத் துணையாக இருக்க, எந்த வகையிலே இந்த ஊராட்சி மன்றங்களை இதிலே ஈடுபடுத்தலாம் என்ற அந்த ஆலோசனையும் தற்போது இருந்துகொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு கதிர் அடிக்கும் இயந்திரம் அதிக அளவில் மானிய விலையில் வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல திட்டம் இப்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.



1999 ஏப்ரல் 29]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய இடுபொருள்கள் ஏற்கெனவே அக்ரோ மூலமாக, அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக டிராக்டர், தார்பாய் அனைத்துப் பொருள்களும் குறைந்த கட்டணத்திலே விவசாயிகள் பெற்றுக்கொண்டு, பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆட்சியில், அந்த டிராக்டர்கள் எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கு, நகராட்சிகளுக்கு மாற்றிவிட்ட காரணத்தினால், விவசாயிகள் அந்த டிராக்டர்களை எல்லாம் வாடகைக்கு எடுக்க முடியாத நிலை இருக்கிறதே, அதை அரசு அறியுமா, மீண்டும் அக்ரோ மூலமாக விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய இடுபொருள்களை, வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, AGROFED அந்தக் கூட்டுறவு பொறியியல் சொசைட்டி மூலம் - 1972-லே அந்த சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டது. அந்த சொசைட்டியினுடைய நோக்கம் விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய டிராக்டர் அல்லது வேறு சில கருவிகள், இவை எல்லாம் பழுதுபட்டால் அத்தகையப் பொருள்களை அவர்களுக்குத் தயாரித்து வழங்குவது போன்ற பணிகளையெல்லாம் மேற்கொள்ள, டிராக்டர் போன்றவைகளை வாங்கி குறைந்த வாடகையிலே விவசாயிகளுக்குத் தருவது போன்ற பணிகளை மேற்கொள்வதற்குத்தான் அந்தக் கூட்டுறவு சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டது. பிறகு கடந்த ஆட்சிக் காலத்தில் அதைத் தொடர்ந்து சரியாகச் செயல்படுத்தாமல் நிறுத்திவிட்டார்கள். இப்பொழுது தமிழகம் எங்கும் 210 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அதிலே 120 சங்கங்கள் இப்போது சரியாக செயல்படுகின்றன. எனவே, பொதுமக்களுடைய பிரதிநிதிகள்—இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, தேர்தல் நடத்தி அவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு, 120 கூட்டுறவு சொசைட்டிகள் நல்ல முறையிலே இலாபத்தோடு நடைபெறுகின்றன. சென்ற இரண்டு ஆண்டு காலமாக தஞ்சை போன்ற மாவட்டங்களிலே நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அழிக்கின்ற அந்தப் பணியைக்கூட அந்த சொசைட்டிகளுக்கு நாம் வழங்கிய காரணத்தினாலே அந்த சொசைட்டிகள் இயங்கக்கூடிய ஒரு வாய்ப்பு, அந்த சொசைட்டிகள் இலாபம் தரக்கூடிய ஒரு நிலையெல்லாம் ஏற்பட்டது. ஆகவே, தொடர்ந்து அந்தச் சங்கங்களெல்லாம் சிறப்பாகச் செயல்பட உரிய நடவடிக்கை இப்பொழுது எடுக்கப்பட்டு வருகிறது.

[1999 ஏப்ரல் 29

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 547, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**547—**

### பாலத்தைச் சீரமைத்தல்

***14256—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கோமல் வீரசோழன் ஆற்றில் கட்டப்பட்டுள்ள பழைய பாலம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாற்றுப் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இப்பாலத்தைச் சீரமைக்க தோராயமாக ரூ. 75 இலட்சம் தேவைப்படுவதால், அரசின் நிதி நெருக்கடி காரணமாக அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 548, திரு. லா. சந்தானம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**548—**

### சாலையை அகலப்படுத்துதல்

***15106—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, மேலக்கால் பேரணை சாலை 26/6-ல் உள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்தி சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?



1999 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பணியினைத் தற்போது எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் நிலையூர் கால்வாய் செல்கின்ற, அந்தச் சாலையில் அமைந்திருக்கிறது. அதோடு, தென் பகுதி, திருநெல்வேலி, இராஜபாளையம் போன்ற பகுதிகளிலேயிருந்து வருகின்ற கனரக வாகனங்கள் அனைத்தும் இந்தப் பாலத்தின் வழியாகத்தான் வருகின்றன. சென்ற பெருமழையினால், அதிலே வெள்ளம் அதிகமாகப் பாய்ந்த காரணத்தினால் அந்தப் பாலம் சற்று அரிப்பு ஏற்பட்டு, சரிகின்ற நிலையிலேகூட இருக்கிறது. மேலும் அந்தப் பாலத்தையொட்டி —அது மதுரை செல்கின்ற பாதை—ஒரு வளைவு வருகின்ற காரணத்தினால் அந்தத் திருப்பத்திலே பல்வேறு விபத்துக்கள் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அதை நிறைவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பாரா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையும் முக்கியமான சாலைதான். அதில் உள்ள பாலமும் குறுகிய பாலமாக இருப்பதும் உண்மைதான். இருந்தாலும் அந்தப் பாலத்தைத் திரும்பக் கட்ட வேண்டுமென்று துறை நடவடிக்கை மேற்கொண்டபோது அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக சோழவந்தான் தென் கரையை இணைக்கக்கூடிய காமராஜர் பாலம் என்று அழைக்கக்கூடிய அந்தப் பாலம் உடைந்துபோய்விட்டது. எனவே, உடைந்துபோன பாலத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று துறை கருதிய காரணத்தினால், அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு [illegible] கோடி ரூபாய் அளவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அந்த பாலத்தைக் கட்டுவதற்கான ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்தப் பாலமும் இந்தப் பாலமும் ஏறத்தாழ அருகிலேதான் இருக்கின்றன. எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப இந்தப் பாலத்தையும் கட்டுவதற்கு துறை நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு சம்பந்தமில்லை என்றாலும்கூட நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நேரடியாகத் தெரிந்த ஒரு பாலம் என்கின்ற முறையில், ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். மதுரை-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் சிலைமான் பக்கத்தில் ஒரு குறுகிய பாலம் இருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் ஒரு நல்ல பெரிய பாலம் கட்டி 10 ஆண்டு காலமாக திறக்கப்படாமலேயே இருக்கிறது. இப்பொழுது, சமீபத்திலேகூட நம்முடைய தலைமை நீதிபதி அவர்கள் அந்தப் பாலத்தில் வருகின்றபோது ஒரு லாரி மோதி, கார் சேதமாகி, நல்ல வேளையாக அந்தத் தலைமை நீதிபதி அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. அவர்கூட எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு பாலம் இருக்கிறது, பக்கத்திலே இப்படியொரு குறுகிய பாலத்திலே, அதுவும் தேசிய நெடுஞ்சாலையில் இப்படி பஸ் விடுகிறார்களே, இது என்ன நியாயம் என்றுகூட பேசி, பத்திரிகையில் எல்லாம் வந்திருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தப் பாதையில் வாரந்தோறும் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் புதிய பாலத்தில் பஸ் விடுவதற்கு என்ன தடை? அந்தத் தடையை நீக்குவதற்கு நம்முடைய அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பாலம் 1989 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பிலே இருந்த காலத்தில், பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் அதற்கான அனுமதியைத் தந்து, அந்தப் பாலம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, 1989-லேயே கட்டி முடிக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு, இருபுறங்களிலேயும் இருக்கக்கூடிய சாலை இணைப்புக்குத் தேவையான இடத்தைக் கையகப்படுத்துகிற முயற்சியில் கடந்த கால ஆட்சி ஈடுபடவில்லை. அதற்கான முயற்சியையும் அவர்கள் கவனம் செலுத்தவில்லை. இப்பொழுது நம்முடைய கழக அரசு பொறுப்பேற்ற பிறகு அதற்கான முயற்சியிலே நான் ஈடுபட்டேன். அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு, கட்டடங்களைக் கையகப்படுத்துவதற்கு, Urgency Clause-ல் எடுக்க வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. விரைவாக அந்த இடம் கையகப்படுத்தப்படும்; இணைப்புச் சாலை போடப்படும்; புதிய பாலத்தில் விரைவில் பேருந்து விடப்படும்.



முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேடப்பட்டி தொகுதியிலுள்ள பேரையூரிலிருந்து செல்லக்கூடிய எழுமலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எங்கே இருக்கிறது? ஒவ்வொரு தொகுதியாக நான் அனுமதிக்கலாமா?

**திரு. கோ. தளபதி:** அமைச்சருக்கு நன்றாகத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருக்கு எல்லாப் பாலங்களும் தெரியும். அதனாலே அதுபற்றி இப்போது கேட்டுக்கொண்டிருக்க முடியுமா?

**திரு. கோ. தளபதி:** பேரையூரிலிருந்து செல்லக்கூடிய அந்த எழுமலைக்கு மூன்று இடங்களிலே பாலங்கள் இல்லாததால், இப்போது போக்குவரத்து எல்லாம், வாகனங்கள் கீழே இறங்கி, ஏறி செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. மழைக்காலங்களில் சுத்தமாக போக்குவரத்து நின்றுவிடுகிறது. ஆகையால், இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையிலே அந்தப் பாலங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 240 பாலங்களுக்கு அனுமதி அளித்து, நிதியொதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பாலங்களைக் கட்டி முடிக்கின்ற பணியிலேதான் துறை தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. புதிய பாலங்களை அறிவிப்பது எளிது; அவற்றையெல்லாம் உடனடியாகக் கட்டுவது என்பது சற்று கடினம். எனவே, படிப்படியாகப் பாலங்களைக் கட்டுவதற்கு இந்தத் துறை, தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது; நிதியாதாரங்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. வருகிற காலத்திலே அவை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, கவனம் செலுத்தப்பட்டு, பாலங்கள் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 29

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கும் அதுதான். கேளுங்கள், எந்தப் பாலம் பற்றிக் கேட்கப்போகிறீர்கள்?

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியிலே நாசரேத்திலிருந்து ஆழ்வார் திருநகரி செல்லும் ரோடு அதாவது சாத்தான்குளத்திற்கு மெயின், அதுதான் எங்களுக்கு முதல் வழி. அந்த ரோடு 10 அடி அகலம்தான் இருக்கின்றது. இரண்டு side-களிலும் வயல்வெளியாக இருக்கிறது. ஆகவே, தினமும் கார்களும், கனரக வண்டிகளும் ஏறத்தாழ 500 பேருந்துகள் போய்க்கொண்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள் அந்தச் சாலையை செம்மைப்படுத்தி, அகலப்படுத்தித் தரவேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேலக்கால் பாலத்தின் வாயிலாக ஒரு நல்ல இனிப்பான செய்தியை நமது அமைச்சர் அவர்கள் இங்கு தெரிவித்தார்கள். சோழவந்தானிலே 5 கோடி ரூபாய் அளவிலே ஒரு பெரிய பாலத்தைக் கட்டித் தருவதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்று; அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்றுதான் இந்தப் பாலமும் மிக முக்கியம் வாய்ந்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தன்னுடைய பதிலிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கும ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 549, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 29]

**549—**

### திருக்கோயில்களில் பூசை

***18846—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் அனுபவித்துவரும் கிராமங்களில் உள்ள கோயில் மானியங்களைக் குத்தகைக்குவிட்டு கோயில்களில் பூசை நடைபெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் சாகுபடிக்காக பொது ஏலத்தில் விடப்பட்டும், குத்தகைதாரராகப் பதிவுபெற்ற இனங்களில் மட்டும் பதிவுபெற்ற குத்தகைதாரர்களைத் தொடர்ந்து திருக்கோயில் நிலங்களை சாகுபடி செய்ய அனுமதித்தும், வருவாய் ஈட்டி திருக்கோயில்களில் பூசை நடைபெற ஆவன செய்யப்படுகிறது.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே நாமகிரி நரசிங்கப்பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடம் சுமார் 1,000 ஏக்கர் இருக்கிறது. ஆர். புதுக்கோட்டை, ஆர். கொம்பை, திருக்கோகர்ணம், கரிககாலி ஊராட்சிகளிலே அந்த நிலத்தை அனுபவித்து வருகிறார்கள். 100 ஆண்டுகளுக்கு மேலாக நிலத்தை அனுபவிப்பவர்கள், 10 ஏக்கர் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், 10 ஏக்கருக்கும் 10 ரூபாய்தான் குத்தகை என்று செலுத்தி வருகிறார்கள். அந்த நிலத்தை மீட்டு—10 ஏக்கர் என்று சொன்னால், இன்றைக்கு விவசாயம் பெருகி வருகிற காலம், நம்முடைய கோயில்களிலே திருவிழாக் காலங்களிலே அந்தப் பகுதியிலே திருவிழா கொண்டாடுவதற்கு மிகவும் சிரமத்தில் இருக்கிறார்கள்—அந்த நிலக்

[1999 ஏப்ரல் 29

குத்தகையை அதிகப்படுத்தித் தர அரசு முன் வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கோயில் சார்ந்த நிலங்கள் அனைத்தையும் ஏற்கெனவே சொத்துப் பதிவேட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறோம். அது தொடர்பாக, எவற்றை ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள், யார் யார், வட்டாட்சியர், மற்றவர்களுடைய ஒத்துழைப்போடு அறநிலையத் துறைக்குத் தெரியாமலேயே பட்டா வாங்கியிருக்கிறார்கள் என்பதெல்லாம் கண்டறியப்பட்டு, இப்போது அது நடவடிக்கையில் உள்ளது. அதேபோல், தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் வருவாய்த் துறை மூலமாகப் பட்டா பெறப்பட்ட நிலங்களுடைய பட்டாக்கள் இரத்துச் செய்யப்பட்டு, இப்போது அறநிலையத் துறைக்கு மீட்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டுக்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மாயனூருககுப் பக்கத்தில் இருக்கக்கூடிய ஒரு பெரிய நிலம். ஒரு முக்கியப் பிரமுகருடைய பாதுகாப்பில் பட்டா வழங்கப்பட்டது. அதனை அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் இப்போது இரத்துச் செய்து அறநிலையத் துறைக்குச் சேர்த்திருக்கிறார். அதேபோல, இங்கே இருக்கின்ற காஞ்சிபுரம் மாவட்டத்தில், பனச்சியம்மன் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தினுடைய பட்டாவும் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அது, முன்னாள் அறநிலையத் துறை அமைச்சருடைய உறவினர் பெயரால் பட்டா வழங்கப்பட்டது. எனவே, இந்த முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றபோது, எந்தெந்த நிலங்கள் மீட்கப்பட்டன என்ற விவரத்தை உரிய நேரத்தில், மானியக் கோரிக்கையின்போது, விரிவாக நான் சொல்வேன். எனினும், அவர் குறிப்பிட்டதைப்போல, இப்போது பழைய குத்தகைக்கே அப்படியே விடாமல், வாடகை நிர்ணயம் செய்வதற்கு ஏற்கெனவே அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபோக, குத்தகை நிலங்களிலிருந்து முறையாக குத்தகையை வசூலிக்கவும், அவற்றை யாரும் ஏமாற்றிவிடாமல் கோயிலுக்குக் கொண்டு சேர்க்கவும் ஒரு சட்டத் திருத்தம் சில மணித்துளிகளில் வர இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 550, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 29]

**550—**

## RE-OPENING OF CLOSED FACTORIES

***15121—THIRU B. VENKATASAMY:**

Will the Hon'ble Minister for Labour be pleased to state—

(a) How many factories have been closed in Tamil Nadu since from 25-3-1993 (i.e.) for last 5 years?

(b) The reasons for the closure?

(c) The action taken by the Government to re-open them?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள அல்லது நீண்டகாலமாக இயங்காமலுள்ள நிறுவனங்கள் 28 ஆகும்.

(ஆ) இவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் நிதிநிலை நெருக்கடி காரணமாகவும், பங்குதாரர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு போன்ற காரணங்களினாலும் இயங்காமலுள்ளன. இவற்றில் எந்தவொரு நிறுவனமும் தொழிலாளர் பிரச்சினையினால் மூடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ) மூடப்பட்டு இயங்காமலுள்ள நிறுவனங்கள் பெரும்பாலும் நிதி நெருக்கடி காரணமாகவே மூடப்பட்டுள்ளதால் இவற்றைத் திறந்து இயக்க தொழிலாளர் துறையில் நடவடிக்கை ஏதுமில்லை. தொழில் தாவா எழுப்பப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான பிரச்சினையை அரசு நீதிமன்றத் தீர்ப்புக்கு அனுப்பி வருகிறது. இதைத்தவிர, இவற்றில் வேறு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை. மேலும், 57-ஆவது மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மீண்டும் திறக்க வாய்ப்பில்லாத நிறுவனங்கள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு தொழிலாளர் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

[1999 ஏப்ரல் 29

வினா எண் 551, திரு. கே. சுப்பராயன். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**551—**

**மீனவர்களுக்கு வீட்டுமனை**

***15604—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் தீவு மற்றும் இராமநாதபுரம் கடலோரத்தில் வசிக்கின்ற மீனவர்கள் சொந்த வீட்டுமனை இல்லாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், அவர்களுக்கு எப்போது மனை வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமேஸ்வரம் தீவு மற்றும் இராமநாதபுரம் கடலோரத்தில் வசிக்கின்ற மீனவர்கள் சொந்த வீட்டுமனை இல்லாதிருப்பது குறித்து அரசுக்கு விண்ணப்பம் செய்யவில்லை.

(ஆ) அவர்கள் வீட்டுமனை கோரும்பட்சத்தில் தகுதியின் அடிப்படையில் வீட்டுமனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் கடலோரப் பகுதியிலே இருக்கக்கூடிய அந்த மீனவர்களுக்கு ரெவின்யூ நிலங்களில் அவர்கள் குடிசை அமைத்துக் கொள்வது தடை செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதன்மூலம் அவர்கள் வீட்டுமனை பெறுவதற்கு சட்ட ரீதியிலும் வழியில்லாத ஒரு நிலை இருக்கிறது. அதுவும், கடலோரப் பகுதியிலே வாழ்கின்ற அந்த மீனவர்கள் தங்களுக்கென்று சொந்தமாக ஒரு குடிசை அமைத்துக் கொள்வதற்கு வழி இல்லாதிருப்பது என்பதை ஒரு மிக முக்கியமான பிரச்சினையாக மாநில அரசு கருதி, அவர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு, உரிய நடவடிக்கையை எடுக்க அரசு சிந்திக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டாக்கள் கோரி விண்ணப்பங்கள் ஏதும் வரவில்லை. மேலும், 15-3-1964 ஆம் நாளிட்ட வருவாய்த் துறையின் அரசாணை எண் 812-ன்படி, இராமநாதபுரம் கிழக்குப் பகுதி மற்றும் இராமேஸ்வரம் பகுதியில் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்கள் யாவும் சேது சமுத்திரத் திட்டத்தின்கீழ் ஒப்படை வழங்க தடையாணை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இராமேஸ்வரம் தீவு, கடலரிப்பினால் பாதிக்கப்படாமல் இருக்கும்பொருட்டு, அரசு நிலங்கள் யாவும் வனத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு, வனத் துறையால் சவுக்கு, நாட்டு மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. எனவே, கடற்கரை புறம்போக்கில் குடியிருக்கும் மீனவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலவில்லை. இருப்பினும், மீனவர்களுக்கு, மின்வசதி, சாலை வசதி, குடிதண்ணீர் வசதி, யாவும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டத்தை முன்னிட்டு வருவாய்த் துறை தடை செய்திருக்கிறது. ஆனால், அங்கே இருக்கக்கூடிய, தமிழ்நாட்டில் வாழ்கின்ற பிரஜைகளுக்கு—மீனவர்களுக்குக்—குடியிருக்க வீடு இல்லை அங்கே சேது சமுத்திரத் திட்டம் விரிவாக்கப்படுவதால் தடை செய்யப்பட்டுவிட்டது என்று நாம் கைகழுவி விட முடியாது. அந்த மீனவர்களுக்கு உரிய வீட்டுமனையை வழங்குவதற்கு எந்த வழிமுறைகளில் அரசு சிந்திக்க இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால், அங்கே மீனவர்களுக்கு சொந்தக் குடியிருப்பு என்று யாருக்குமே இல்லை. எனவே, அரசு மறுபரிசீலனை செய்து அந்த வருவாய்த் துறையினுடைய ஆணையைத் தளர்த்தி, அவர்கள் எல்லோருக்கும் குடியிருப்பு மனையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்கிறார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட மீனவர்கள் எந்தவித கோரிக்கையினையும் எங்களிடம் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கோரிக்கை கொடுத்தால் அதற்கு மாற்று இடங்கள் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 552, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**552—**

**பயனாளிகளின் பங்கைக் குறைத்தல்**

***21654—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் கடனில் ஏழை மக்களின் நலன் கருதி பயனாளிகளின் பங்கை 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக பயனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகை ரூ.50,000/- வரை பயனாளிகளின் பங்கு 5 சதவீதம்தான் வசூலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 553, திரு. கே. ரவி அருணன், ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**553—**

**வேலையற்ற இளைஞர்களுக்கு வங்கிக் கடன் வழங்குதல்**

***11278—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டமான பிரதமரின் ரோஜ்கார் யோசனாத் திட்டத்தின்கீழ் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் பரிந்துரை செய்யப்படும் பெரும்பாலான மனுக்களுக்கு வங்கிகள் கடன் வழங்க மறுப்பது அரசின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளதா?



1999 ஏப்ரல் 29]

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு கவனத்திற்கு வரப்பெற்றுள்ளது.

(ஆ) இப்பொருள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. உரியவர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பெற்றுள்ளன.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் நிதியாண்டில் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 18,500 நபர்களுக்கு கடன் உதவி வழங்குவதற்கு மத்திய அரசு ஒரு குறியீடு நிர்ணயம் செய்துள்ளது. மாவட்டத் தொழில் மையம் மூலமாக ஏறத்தாழ 45,125 விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டும்கூட 11,207 விண்ணப்பங்களுக்குத்தான் வங்கிகள் கடன் உதவி வழங்கியுள்ளன. இதற்கு முக்கியமான காரணம், வங்கிகள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஆர்வம் காட்டவில்லை என்பதேயாகும். ஆகவே, தமிழக அரசு இதுசம்பந்தமாக மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தி, மத்திய அரசின் மூலமாக வங்கிகளுக்கு பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத திட்டத்தை அமல்படுத்துவதற்கு தகுந்த அறிவுரைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்திலே வங்கிகள் மறுக்கின்றன, மாநில அரசு அக்கறை எடுக்கவில்லை என்பதைப்போல இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநில அரசைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட தொழில் மையத்தில் இருக்கின்ற பொது மேலாளர், வங்கிகளில் இருக்கின்ற மேலாளர்கள் அடங்கிய Task Force Committee-க்கு மனுக்கள் அனுப்பப்பட்டு, அதிலே தேர்வு செய்யப்படுகின்ற நேரத்திலே அந்த மனுவிலே ஏதாவது தவறான தகவல் தரப்பட்டிருந்தால், அந்த மனு உடனே அந்த இடத்திலே நிராகரிக்கப்பட்டு விடுகின்றது. அதேபோல அவர்களுக்கு தகுதி இல்லை என்றால் எந்தத் தொழில் அவர்கள் செய்வதற்காக மனுவிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்களோ அதிலே feasibility

இல்லையென்றால் அவர்களுக்குக் கடன் தருகின்ற வாய்ப்பு இல்லை என்ற காரணத்தைச் சொல்லி, சில மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. சில மனுக்கள் வங்கிகளிலேயே அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு முடிவு அடைந்து விட்டதால் நாங்கள் வழங்க இயலாது என்று சில பகுதிகளிலே இருக்கக்கூடிய வங்கி மேலாளர்கள் மறுத்து விடுகிறார்கள். ஆக, இப்படிப்பட்ட குறைகள் மாநில அரசினுடைய கவனத்திற்கு கடந்த ஆண்டு வந்த காரணத்தால் அவற்றை நீக்குவதற்காக, இப்போது மனுக்கள் வங்கிகளிலே முதலிலே பெறப்படுகின்றன, வங்கிக்கு அனுப்பப்படுகிறபோதே—அவர் சொன்னார், 18,000 மனுக்கள் அனுப்பப்பட்டு, 11,000 மனுக்கள் அளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று. இப்போது இருக்கிற நடைமுறை மாநில அரசு மனுக்களை முதலிலே வங்கிகளுக்கு அனுப்புகிறது 100 பேர் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றால், வந்திருக்கின்ற மனுக்களிலே 200 பேர்களுடைய மனுக்களை அனுப்புகிறார்கள். அவர்கள் எந்தெந்த மனுக்கள் தகுதியுடையன என்பதை Task Force Committee-லே அந்தத் தேர்வுக் குழுவிலே வைக்கின்ற நேரத்திலே எந்த மனுவும் இந்த ஆண்டு தள்ளுபடி செய்யப்படுவதற்கு வாய்ப்பு இல்லை; இந்த ஆண்டு நாங்கள் எப்படியும் நூற்றுக்கு நூறு இலக்கை அடைய வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆண்டு வருமான உச்சவரம்பை ரூ.60,000 என்று உயர்த்துவதற்கு மத்திய அரசிடமிருந்து ஏதாவது அனுமதி பெறப்பட்டிருக்கிறதா? அதுசம்பந்தமாக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற ஆண்டு வருமானம் ரூ. 24,000 என்பதை, ஒரு குடும்பத்திலே இன்னும் கூடுதலாக நபர்கள் இருந்தால் அதையும் ஏற்றுக்கொள்ளலாம் என்று மாநில அரசினுடைய பரிந்துரையை நாங்கள் ஏற்கெனவே கடந்த ஆண்டு—அதிலே சில குறைபாடுகள் இருந்தன, வயது வரம்பு, அதுபோல இந்தக் குறைபாடு, இன்னும் சொல்லப்போனால் கிராமத்திலிருந்து படித்த இளைஞர்கள்



ஐ.டி.ஐ. முடித்தவர்கள் தொழில் செய்ய வேண்டுமென்றால் ஒரு கலப்பையோ, மண்வெட்டியோ அல்லது ஏரோ தயாரிக்கும் ஏதாவது தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு அது விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்; ஆகவே அவர்களுக்குக் கடன் வழங்க முடியாது என்று தள்ளுபடி செய்தார்கள். நகரத்தில் இருக்கின்றவர்கள் தான், பெரிய பெரிய நகரத்தில் இருக்கின்றவர்கள்தான் பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயன்பெறும் அந்த வாய்ப்பு இருந்தது. கிராமங்களில் இருக்கின்ற ஐ.டி.ஐ. படித்த மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயம் சம்பந்தப்பட்ட கருவிகள் தயாரிப்பதற்கும் அனுமதி வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கடந்த ஆண்டு எடுத்துச் சொன்னதின்பேரில், நாங்கள் மத்திய அரசுக்கு அனுப்பினோம். அதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு இன்றைக்கு மண்வெட்டியாக இருந்தாலும், கலப்பையாக இருந்தாலும், ஏராக இருந்தாலும் எல்லாம் தயார் பண்ணலாம்; அதற்குக் கடன் வழங்கப்படும். ஆகவே, கிராமத்தில் இருப்பவர்களும் இந்தப் பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் கடன் பெறுவதற்குரிய வாய்ப்பை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 554, திரு. ஐ. கணேசன் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**554—**

**தியேட்டர் கட்ட கடன் வசதி**

***15802—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் செமி பெர்மனென்ட் தியேட்டர் கட்ட அரசு கடன் வசதி அளிக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 ஏப்ரல் 29

(அ) தமிழ்நாட்டில் செமி பெர்மனென்ட் தியேட்டர் கட்டுவதற்கு அரசு கடன் வசதி அளிக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நல்ல புரட்சிமிக்க கருத்துக்களை எடுத்துச்சொல்லி கிராமப்புற மக்களுக்கு ஒரு பொழுதுபோக்காக உள்ள இந்தத் திரைப்பட அரங்குகள், செமி பெர்மனென்ட் தியேட்டர்களை கட்டுவதற்கு அரசு முந்தைய காலகட்டத்திலே கடன் வழங்கி வந்தது. பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் தீட்டிய வேலைக்காரி, ஓர் இரவு போன்ற அறபுதமான திரைப்படங்களும், நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தீட்டிய பராசக்தி, மனோகரா, மந்திரிகுமாரி, பூம்புகார், காஞ்சித்தலைவன் போன்ற காலத்தால் அழிக்கமுடியாத அற்புதமான ஓவியங்களும், சமுதாயத்திலே நலிந்து இருக்கக்கூடிய அந்த ஏழைப் பாட்டாளிகளைத் தட்டி எழுப்பக்கூடிய புரட்சிமிக்க கருத்துக்களைச் சொல்லிய அந்தத் திரைப்படத் துறைக்கு நம்முடைய அரசு சலுகை வழங்கி கிராமப்புறங்களில் கட்டப்படும் அந்த செமி பெர்மனென்ட் தியேட்டர்களுக்கு கடன் உதவி அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மீண்டும் ஒரு முறை மறுபரிசீலனை செய்ய அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரார் தீட்டிய வசனங்களின்படி மாண்புமிகு உறுப்பினர் நடந்துகொள்வார்களேயானால், இந்த நாட்டுக்கு நல்லதாக இருக்கும். அதே நேரத்தில் கடந்த காலங்களில், 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்கக் கழகம் உருவாக்கப்பட்டு 81 பேர்களுக்கு ரூ. 91.05 இலட்சம் கடன் வழங்கப்பட்டது. அதிலே 53 பேர்கள் மட்டும் கடனைத் திருப்பிச் செலுத்தி இருக்கிறார்கள். 28 பேர்கள் இதுவரையில் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. வட்டியும் முதலுமாக 133.25 இலட்சம் ரூபாய் வரவேண்டிய பாக்கி இருக்கிறது. எனவே, இப்படி கடன் கொடுப்பது திரும்ப வசூல் ஆவதில்லை என்ற காரணத்தால் அந்தத் திட்டம் குறித்து நிர்வாகக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டு அது 1980 ஆம் ஆண்டு வாக்கிலே நிறுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, ஏனோ என்னை இழுத்துவிட்டார். என்னை முழுமையாக அவருக்குத் தெரிந்திருந்தும் ஏனோ என்னை அவர் இழுத்துவிட்டார் என்பதுதான் வருத்தம். நான் ஈரோட்டுச் சிங்கம், வெண்தாடி வேந்தன் பகுத்தறிவுப் பாசறையிலேயிருந்து வந்தவன். பேரறிஞர் அண்ணாவையும், நம்முடைய கலைஞர் அவர்களையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் நான் நன்கு அறிந்தவன். நான் எங்கே இருப்பது, எங்கே இருக்கக்கூடாது என்று தெளிவோடு இருப்பவன். எனக்கு வழிகாட்ட வேண்டியது இவர் இல்லை. இருப்பினும் எந்தக் காரணத்தைக் கொண்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் போதும்.

**திரு. ஐ. கணேசன்:** இருப்பினும் நெருப்பைக் காகிதத்தால் பொட்டலம் கட்ட நினைப்பது தவறு என்று சொல்லி விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 555, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**555—**

**கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்**

***20023—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்தி பெருமருத்துவமனையாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்தி பெருமருத்துவமனையாக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி கால்நடை மருத்துவமனை தொடங்கப்பட்டு 69 ஆண்டுகள் ஆகின்றன. இந்த நகராட்சிப் பகுதியிலே இருக்கின்ற கால்நடை மருத்துவமனையிலேயும், சுற்றுப்புறத்திலே இருக்கின்ற 45-க்கும் மேற்பட்ட கிராமங்களிலே இருக்கின்ற கால்நடைகள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக அங்கே வந்து வைத்திய சிகிச்சை நடைபெறுகிறது. சுமார் 20,390 கால்நடைகள் இருப்பதாகக் கணக்கிட்டுச் சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தக் கால்நடை மருத்துவமனையினுடைய அவசியத்தைக் கருதி, தரம் உயர்த்தித் தர வேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து நான் வைத்துக்கொண்டிருக்கிறேன். சமீபத்திலே நம்முடைய தமிழக அரசினுடைய மதிப்பீட்டுக் குழுவும் அங்கே பார்வையிட்டு அதைத் தரம் உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து மன்னார்குடி கால்நடை மருத்துவமனையை பெருமருத்துவமனையாக தரம் உயர்த்தித் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த கால்நடை மருந்தகம் 25-6-1990 முதல் கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு, ஒரு கால்நடை உதவி இயக்குநர் பொறுப்பில் தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு மருத்துவமனை பெருமருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், நாள் ஒன்றுக்கு 60-க்கும் மேற்பட்ட கால்நடைகள் சிகிச்சைக்காக வரவேண்டும். கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க உள்நோயாளிகள் கொட்டகையும், உள்நோயாளிகளாக வரும் கால்நடைகளை எந்த நேரமும் கவனிக்க பணியாளர்கள் பக்கத்தில் இருக்கின்றவாறு கால்நடை மருத்துவமனை ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதியும் செய்து தரப்பட வேண்டும். கால்நடைகளுக்கு சிகிச்சைக்கான மருந்துகள் இருப்பு வைக்க குளிர்ப்பதன வசதி கொண்ட கட்டடங்கள் மற்றும் அலுவலக அறை, கிடங்கு அறை, அறுவைச் சிகிச்சை அறை





மேலும் மின் வசதியுடன்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருத்தல் வேண்டும். இந்த வசதிகள் எல்லாம் தற்போது மன்னார்குடி கால்நடை மருத்துவமனையில் இல்லை. பெருமருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட, அதற்குக் கூடுதல் பணியாளர்களும் நியமிக்கப்பட வேண்டும். அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டும், கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டும், தேவைகளையொட்டியும், எதிர்வரும் காலங்களில் மன்னார்குடி கால்நடை மருத்துவமனையை பெருமருதுதுவமனையாக தரம் உயர்த்த பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 556, திரு. வி. கே. லட்சுமணன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**556—**

### தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்

***25123—திரு. வி.கே. லட்சுமணன்:**
**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**
**திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தை கால்நடைத் துறையுடன் இணைக்கும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் பெருத்த நட்டத்தில் இயங்கி வருகிறது. தொடர்ந்து பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்க இயலவில்லை. தற்பொழுது அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.359 இலட்சமாக உயர்ந்துள்ளது. கடந்த மூன்று, நான்கு மாத காலமாக சத்துணவுக்கு முட்டைகள் வழங்கக்கூடிய ஒப்பந்தக்காரர்களுக்குத் தர வேண்டிய பணம் இதில் பணியாற்றும் ஊழியர்களுக்குச் சம்பளமாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தொடர்ந்து அரசுக்கு நட்டம் ஏற்படுவதைத் தவிர்க்கவும், அதில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்குப் பாதகமில்லாமல் விரைந்து தீர்வு

காணவும், அந்தக் கோழியின வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டு இன்றைய முதல்வர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகமானது 288 பணியாளர்களைக் கொண்டது. இந்தக் கழகத்திலே 30 ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறக்கூடிய அலுவலர்கூட இருக்கிறார். இந்தக் கழகமானது தொடர்ந்து நட்டத்தில் இருக்கிறது என்று கருதித்தான் ராகவன் கமிட்டி இந்தக் கழகத்தை கால்நடைத் துறையோடு இணைக்க வேண்டுமென்று அறிவுரை சொல்லியிருக்கிறது. இந்தக் கழகத்தின் மூலமாக அகஸ்தீஸ்வரத்திலே .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினாவா இது? நீங்கள் ஒரு lecture கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களே?

**திரு. வி.கே. லட்சுமணன்:** இருக்கின்ற நிலைமையைச் சொல்லிவிடுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதை எழுதிப் படிக்கக் கூடாது. நீங்கள் senior Member.

**திரு. வி.கே. லட்சுமணன்:** சரி. இந்தக் கழகத்தின் மூலமாக கோவை அரசூரிலே, தெற்குப்பாளையத்திலே, கன்னியாகுமரி அகஸ்தீஸ்வரத்திலே மதுரை கப்பலூரிலே கட்டப்பட்டிருக்கிற எல்லா கட்டடங்களும் இயந்திரங்களும் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. எனவே விரைவாக இதைக் கால்நடைத் துறையோடு இணைப்பதோடு, இங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுடைய கோரிக்கையை ஏற்று அவர்களுக்கும் சம்பள உயர்வு அளிக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முறபகல் 10-25

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோழியின வளர்ச்சிக் கழகத்தைப் பற்றி பதில் அளிக்க வேண்டுமென்றால், சற்று விரிவாகப் பதில் அளித்தால்தான் நிறைவு தரக்கூடிய அளவில் இருக்கும். இருந்தாலும் இரத்தினச் சுருக்கமாக அதை அளிக்கின்றேன். தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



சொன்னதைப்போல 1973 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டில் முட்டை உற்பத்தியைப் பெருக்கவும், கோழி இறைச்சித் தேவையை நிறைவு செய்யவும் நல்ல நோக்கத்திற்காக இந்த கழகம் தொடங்கப்பட்டது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, கரையான் புற்றெடுக்க கருநாகம் குடி புகுந்ததைப்போல, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இதற்கு வாரியத் தலைவர்களை நியமனம் செய்து பல நிர்வாகச் சீர்கேடுகளையும், ஊழல்களையும், தேவையற்ற பணி நியமனங்களையும் செய்து நல்ல நோக்கத்தை சிதைத்துவிட்டார்கள். இந்தக் கோழியின வளர்ச்சிக் கழகத்திற்குத் தலைவர்களாக...... (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, கடந்த காலத்தில் நஷ்டம் ஏற்பட்டதை மட்டும் நீங்கள் சொல்லுங்கள். குற்றச்சாட்டு இரண்டு பக்கத்திலிருந்தும் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** இந்தக் கோழியின வளர்ச்சிக் கழகத்திற்கு 4 பேர்கள் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பெயர்களை எல்லாம் சொல்லக் கூடாது. கடந்த காலத்தில் நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்லி, அதோடு நிறுத்துங்கள்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 27.63 இலட்சத்திற்கு முறைகேடுகளும், ஊழல்களும், அதைப்போல தரக் குறைவான தீவனம் வழங்கியதால் ஏற்பட்ட முட்டை உற்பத்தியில் ரூ. 10 இலட்சமும், அதைப்போல குஞ்சுகள் கடனாக விற்ற வகையில் ரூ. 32 இலட்சமும், அங்கு பணியாற்றிய ** முன்னாள் துணை மேலாளர் மூலம் ரூ 26.86 இலட்சமும் மற்றும் சில அதிகாரிகள் எல்லாம் சேர்ந்து 80 இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டார்கள். அந்த நஷ்டம் இன்றையதினம் 359 இலட்சமாக உயர்ந்து இருக்கிறது. இதிலே கடந்த 3, 4 மாதங்களாக பணியாளர்களுக்கு சம்பளம்கூட இல்லாத நிலை ஏற்பட்டு சத்துணவுக்கு முட்டை வழங்கக்கூடிய ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கக்கூடிய பணத்தில் இருந்து 59 இலட்சம் ரூபாய் எடுத்து,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அந்தப் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில் தற்போது 288 பணியாளர்களே இதில் பணியாற்றுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, எஸ்.வி.எஸ். ராகவன் தலைமையில் ஒரு குழுவும், ராமநாதன் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டு, அவர்கள் சொன்ன கருத்தின்படி கடந்த 27-4-1998-ல் நம்முடைய அரசின் தலைமைச் செயலாளர் தலைமையிலே ஓர் உயர்மட்டக் குழு அமைத்து, அந்த உயர்மட்டக் குழுவிலே ஒரு முடிவு எடுத்து, இந்தக் கோழியின வளர்ச்சிக் கழகத்தை மூடி விடுவது என்றும், அப்படி மூடுகின்றபோது கோழியின வளர்ச்சிக் கழகம் தற்போது சத்துணவுக்கு வழங்கப்படுகின்ற முட்டையின் தரத்தைக் கணகாணிக்கின்ற வகையில் செயலாற்றுவதற்குத் தேவையான பணியாளர்களை வைத்துக்கொண்டு மீதியுள்ள பணியாளர்களை அந்தந்த அரசின் பொது நிறுவனங்களில் காலியாக இருக்கின்ற இடங்களுக்கு பரிந்துரை செய்வது என்றும், சுயவிருப்ப ஓய்வில் செல்ல விரும்பும் பணியாளர்களுக்கு விதிமுறைகளின்படி அவர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்கவும், சட்ட விதிகளுக்கு உட்பட்டும், நிதி நிலையைக் கருதியும், தொழிலாளர் நல ஆணையாளரைக் கலந்தும், அரசுக்கு மேலும் இழப்பு ஏற்படாமலும், பணியாளர்களின் நலன் பாதிக்கப்படாமலும், தீர்வு காணப்பட வேண்டுமென்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோழியின வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சித் துறையானது இலாபகாரமாக இயங்கக்கூடிய ஒரு தொழிலைத்தான் கொண்டுள்ளது. எனவே, கறிக்கோழி வளர்ப்பதற்கு அரசு நிதி உதவி செய்தாலோ அல்லது சத்துணவுக்கு முட்டைகளை டாப்கோ மூலமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்தாலோ—ஒரு முட்டைக்கு 6 காசு இலாபம் கிடைத்தால்கூட போதும் என்று சொல்கிறார்கள், அதை இலாபகரமாக நடத்துவதற்கு வழி இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே ஏற்பட்ட நிர்வாகக் குறைபாடுதான் இத்தகைய நஷ்டத்திற்குக் காரணம். எனவே இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, அப்படி கறிக்கோழி வளர்ப்பதற்கு நிதி உதவி வழங்கியோ



அல்லது சத்துணவுக்கு முட்டைகளை டாப்கோ மூலமாக வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமாகவோ, தொடர்ந்து இந்த நிறுவனம் மூடப்படாமல் இயங்குவதற்கும், அதேபோல 1-1-1996 முதல் அந்த ஊழியர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கின்ற ஊதிய உயர்வு, அகவிலைப்படி முதலானவற்றை வழங்குவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழிக் குஞ்சுகளைப் பொரித்து விற்பனை செய்வதில் அரசு நிறுவனங்களைவிட தனியார் நிறுவனங்கள் மிகக் குறைந்த விலையில் தருகின்ற காரணத்தினால், அரசு நிறுவனங்களின் சார்பில் குஞ்சு பொரிப்பகங்கள் நடத்த இயலாது. இரண்டாவதாக சத்துணவு முட்டைகளைக் கண்காணிப்பதற்கு, இந்தக் கோழியின வளர்ச்சிக் கழகத்தின் பணியாளர்களில் 141 பேர்கள் மட்டுமே தேவைப்படுவதால்—இதிலே மொத்தம் 288 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு எந்தவிதமான பணியும் வழங்க வாய்ப்பில்லை. எனினும், நிதிநிலையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய அரிய கருத்துகளைப் பரிசீலிப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ஐ. கணேசன், சீக்கிரம் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி. இந்தக் கோழியின வளர்ச்சிக் கழகத்திற்கு அதன் ஊழியர்களால் நட்டம் வரவில்லை; முன்பு இருந்த அரசு செய்த சில காரியங்களால் நட்டம் ஏற்பட்டது என்பதை இங்கு புள்ளிவிவரத்தோடு எடுத்துச்சொன்னார். இதை இந்த அவையும், நாடும், நம்முடைய முதல்வரும் மிகக் கவனமாகக் கண்டார்கள். 288 ஊழியர்களுக்கு இன்று வேலை போகுமோ, நாளை வேலை போகுமோ என்றிருக்கிறது. சம்பளம்கூட சரியாகக் கொடுக்காமல் இருப்பதால், அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள். இராகவன் கமிட்டி, இராமநாதன் கமிட்டி கூறியதைப்போல, இவர்களைக் கால்நடைத் துறையோடு இணைக்க என்ன சட்டச் சிக்கல் இருக்கிறது? அப்படி இணைத்தால்

அவர்களுக்குரிய வேலை கொடுப்பதிலே என்ன இடர்பாடு இருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல மொத்தமுள்ள 288 பணியாளர்களில் 156 பணியாளர்கள் தொழில் நுட்பப் பணியாளர்கள். மீதமிருக்கிற 132 பேர்கள் தொழில் நுட்பம் இல்லாப் பணியாளர்கள். சத்துணவு முட்டைகள் வழங்குவதில் தரம் கண்காணிப்பதற்குத் தேவைப்படுகிற பணியாளர்கள் 141 பேர்கள் மட்டுமே. கால்நடைப் பராமரிப்புத் துறையிலே ஆயிரத்து நூற்று சொச்சம்பேர் உதவியாளர்களாக, தினக் கூலிப் பணியாளர்களாக இருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்ற உத்தரவிட்டதிலிருந்து இங்கேகூட மிகுதியாக பணியாட்கள் இருக்கிறார்கள். எனவே, தொழில் நுட்பம் இல்லாதப் பணியாளர்களை இங்கே சேர்த்துக்கொள்வதில், அவர்களுக்கு இங்கேயும் எந்தவிதமான பணி வாய்ப்பும் வழங்க இயலாத நிலை இருக்கிறது. எனவே, அவர்களுடைய நலன் பாதிக்காத வகையில், அரசின் பொதுத் துறை நிறுவனங்களில், காலியுள்ள இடங்களுக்கு அவர்களை பரிந்துரை செய்வோம். அதுமட்டுமல்லாமல் சுய விருப்ப ஓய்வில் சென்றாலும் அவர்களுக்கு அந்த வாய்ப்பு அளிப்போம் என்று சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 557, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்

**557—**

**பட்டா வழங்குதல்**

***16167—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டம், பம்மல் பேரூராட்சி, நாகல்கேணி புல எண் 207/3-1 ஏ-இல் 50 ஆண்டு காலமாக வாழ்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?



**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்டம், பம்மல் பேரூராட்சி, நாகல்கேணி புல எண் 207 உட்பிரிவு 3-1ஏ-யில் குடியிருந்து வரும் ஆதிதிராவிட மக்களுக்கு குடியிருப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்து விரைந்து பட்டா வழங்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மாவட்ட ஆதிதிராவிட நலத் துறை அதிகாரியை அணுகிப் பேசியபோது, ஷேக் முகம்மது என்பவர், தனக்கு இது சொந்தமான இடம் என்றும், 48 ஆண்டுக் காலமாக, இலவசமாக, வாடகையின்றி, அந்த இடத்தை ஏழைகளுக்கு விட்டிருப்பதாகவும், இப்போதும் அந்த மனைகளை அவர்களுக்கு தந்துவிடத் தயாராக இருப்பதாகவும், ஆனால் அரசு விதித்திருக்கிற Urban Land Tax-ஐத் தள்ளுபடி செய்து கொடுத்தால், இலவசமாகவே தரத் தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறார். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வரோடு கலந்து பேசி, விதி விலக்களித்து, அந்த வரியைத் தள்ளுபடி செய்து, அங்கிருக்கின்ற ஏழைகளுக்கு இலவசமாகப் பட்டா வழங்க ஏற்பாடு செய்வாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள இடம் சம்பந்தமாக சுப்பிரமணியம் என்பவருக்கும், ஷேக் முகம்மது என்பவருக்கும் தகராறு இருந்து, நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. இப்போது சுப்பிரமணியம் என்பவருக்கு உரிமையுடையது என்று நீதிமன்றம் சாதகமாகத் தீர்ப்புக் கூறியுள்ளது. இந்த நிலையில், அந்த இடத்தினை 65 ஆதிதிராவிட மக்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக்கிரமிப்புகளை அகற்றித் தரும்படி சுப்பிரமணியம் கேட்டிருக்கிறார். இப்போது ஷேக் முகம்மதும் அந்த இடம் எனக்குத் தேவை என்று கேட்டிருக்கிறார். இந்த நிலையில் அவர்களுக்குள் பிரச்சினை தீரவில்லை. இந்தப் பிரச்சினை முடிந்த பிறகு, இந்த நிலம் யாருக்குச் சொந்தம் என்று தெரிந்த பிறகு, அதற்குப் பின்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள வரியை, மாண்புமிகு முதல்வரோடு கலந்து ஆலோசித்துத் தள்ளுபடி

செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 558, திரு. டி. மணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**558—**

**ஆதிதிராவிடர்களுக்கு நிலப் பட்டா**

***18528—திரு. டி. மணி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர்களுக்கு நிலப் பட்டா இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில், கடந்த இரண்டு ஆண்டுகளில் எவ்வளவு நிலப்பட்டா வழங்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர்களுக்கு நிலப்பட்டா இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில் கடந்த இரண்டாண்டில் வழங்கப்பட்டுள்ள நிலப் பட்டாக்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| வ.எண் | வருடம். | பட்டாக்கள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | நிர்ணய இலக்கு | எய்திட்ட இலக்கு | ஒதுக்கீடு | செலவினம் |
| 1. | 1996-97 | 3,00,000 | 85,309 | 1200.00 | 1,152.75 |
| 2. | 1997-98 | 1,00,000 | 80,806 | 1,334.00 | 1,696.78 |

முற்பகல் 10-35

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிதிராவிடர்களுக்கு நிலப்பட்டா வழங்குவதில் பேரூராட்சிப் பகுதிகளில் அதிலே வருகின்ற மலைப்பாங்கான பகுதிகளில்





பழங்குடியினர், ஆதிதிராவிடர்கள் ஆகியவர்களுக்கு, காலத்தில் பட்டா கிடைப்பதில்லை என்ற கருத்தும், அதுபோன்று வேப்பூர் ஒன்றியத்திலே, வேப்பூர் பகுதியில் 400-க்கும் அதிகமான குடும்பங்கள் நீண்டகாலங்களுக்கு முன்னால் பட்டா வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அந்த நிலத்திற்கான பட்டா வழங்கி, வேப்பூர் பகுதியில் இருக்கிற குடிமைகளைப் பாதுகாக்கின்ற அடிப்படையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடனே கடந்தகாலத்தில் 2 சென்ட் என்று கொடுக்கப்பட்டு வந்த நிலத்தை 3 சென்ட்டாக உயர்த்தி, பேரூராட்சிப் பகுதிகளிலும் 3 சென்ட் வழங்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வேப்பூர் பேரூராட்சியில் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டடிமனை தேவையென்று குறிப்பாக முன்மொழிவு அனுப்பினால், அதற்கு விரைந்து தகுந்த நடவடிக்கை எடுத்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 559, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**559—**

**குடுவம்பட்டியைச் சுற்றுலாத் தலமாக்குதல்**

***12122—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு மலையடிவாரத்தில் உள்ள குடுவம்பட்டியைச் சுற்றுலாத் தலமாக விரிவுபடுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், ஏற்காடு மலையடிவாரத்தில் உள்ள குடுவம்பட்டியை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு தற்போது இத்துறையில் ஏதுமில்லை.

[1999 ஏப்ரல் 29

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடுவம்பட்டி, சேலம் மாநகராட்சியினுடைய எல்லையை ஒட்டி, ஏற்காடு மலையடிவாரத்தில் உள்ளது. சேலம் மக்களுக்குப் பொழுதுபோக்கு வசதிக்காக அந்தப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக ஆக்கி, ஊட்டிக்கு அருகே மேட்டுபாளையத்திலே ஒரு Theme Park இருப்பதைப் போல, இங்கும் Theme Park-ஐ ஏற்படுத்தி, அந்தப் பகுதி மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய வகையிலும், அரசுக்கு வருவாய் ஈட்டித் தரக்கூடிய வகையிலும் இந்தத் துறையின் மூலமாகச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடுவம்பட்டி மலையடிவாரத்தினைப் பொறுத்தமட்டில், சுற்றுலாப் பயணிகளின் வருகை மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால், நிதிநிலையைப் பொறுத்தும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தும், வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 560, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**560—**

### சுற்றுலாத் தலத்திற்குக் கூடுதல் வசதிகள்

***15892—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, மனோரா சுற்றுலாத் தலத்தில் சுற்றுலா விடுதியும், பூங்காவும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேராவூரணி தொகுதி, மனோரா சுற்றுலாத் தலத்தில் சுற்றுலா விடுதி கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை. பூங்கா அமைக்கும் பணி ஊராட்சி ஒன்றியம் மூலம் இத்துறை வழங்கும் ரூ.4.00 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 29]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பதின்மூன்றாம் பட்டியல்)

**1—**

### உதவித் தொகை உயர்த்துதல்

வினா **21800—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரு குடும்பத்திலுள்ள ஒரேயொரு நபரும் இராணுவத்தில் பணி புரிந்தால் அக்குடும்பத் தலைவர் அல்லது தலைவிக்கு உதவித்தொகை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஒரு குடும்பத்திலுள்ள ஒரே ஒரு மகனும் இராணுவத்தில் பணி புரிந்தால் அவரின் பெற்றோர்க்கு ஊக்கத்தொகையாக வருடத்திற்கு ரூ.450/- என வழங்கப்படுவதை உயர்த்தித்தர அரசு பரிசீலனை செய்ததில் அரசின் நிதி ஆதாரங்களைக் கருத்தில்கொண்டு ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க இயலாது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**2—**

### துணை சுகாதார நிலையம் புதுப்பித்தல்

வினா **14893—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மற்றும் ஒன்றியம், வேம்பனேரியிலுள்ள துணை சுகாதார நிலையம் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேம்பனேரி துணை சுகாதார நிலையம், செட்டிமான்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் செயல்படுகிறது. இந்தத் துணை சுகாதார நிலையம் டானிடா திட்டத்தில் கட்டப்பட்டது. இந்தத் துணை சுகாதார நிலையத்தில் சிறு பழுதுகள் உள்ளன. அவற்றைச் சரிசெய்யுமாறு பொதுப்பணித் துறையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, வரும் நிதி ஆண்டில், வேம்பனேரி துணை சுகாதார நிலையப் பழுதுகளை முன்னுரிமை கொடுத்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத்துணை சுகாதார நிலையத்தில் கிராம சுகாதார செவிலியர் 1992 முதல் தங்கிப் பணிபுரிகின்றார்.

3—

### துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா **16693—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கடிச்சம்பாடியில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, கடிச்சம்பாடி கிராமம், அகரத்தூர் துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய ஒரு கிராமம். கடிச்சம்பாடி கிராம மக்கள் தொகை 2,102 ஆகும். 4,465 மக்கள்தொகை கொண்ட அகரத்தூர் துணை சுகாதார நிலையத்தில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர் தாய்சேய் நலம், தடுப்பூசி மருந்து மற்றும் மருத்துவப் பணி பணியாற்றி வருகிறார். அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி அகரத்தூரில் துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளதால் கடிச்சம்பாடி கிராமத்தில் தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை.





4—

### பள்ளிக்குப் புறம்போக்கு நிலம்

வினா **21213—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, வல்லம் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு வல்லம் வடக்குத் தெரு சர்வே எண் 177/2-இல் காடு புறம்போக்கு நிலம் 10 ஏக்கர் நிலத்தினைப் பள்ளிக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், வல்லம் வடக்கு சேத்தி கிராமம், புல எண் 177/2 கிராமக் கணக்குகளில் 'காடு புறம்போக்கு' என பதிவாகியுள்ளது என்றும், இதன் மொத்த விஸ்தீரணம் 18.85 ஏக்கர் என்றும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இதில் 11 ஏக்கர், வல்லம் பெரியார் நூற்றாண்டு மகளிர் தொழில் நுட்பக் கல்லூரிக்கு பராதீனம் செய்யப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள 7.85 ஏக்கர் நிலம் மேற்படி தொழில் நுட்பக் கல்லூரியால் ஆக்கிரமணம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இந்த ஆக்கிரமணம் அகற்றல் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் டபிள்யு.ப்பி.16582/98 மற்றும் டபிள்யூ.ப்பி.16775-16778/98 ஆகியவை நிலுவையில் இருந்து வருவதால், இவ்வழக்கு முடிந்த பின்னர், வனத் துறையைக் கலந்தாலோசித்து நிலமாற்றம் செய்வதற்கான தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5—

### பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்

வினா **16299—திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகரில் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குன்னூர் நகராட்சி, பேருந்து நிலையத்தை ரூ.306 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்த நகர்மன்றம் தீர்மானம் இயற்றியுள்ளது. நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாக இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. நிதி நிலை மேம்பட்டதும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**6—**

### இளநிலை உதவியாளர் பதவி

வினா **17863—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஆணை (நிலை) எண் 90, நாள்: 12-3-1991-ன்படி பட்டப்படிப்பு படித்து 5 வருடம் முடிந்த பதிவு எழுத்தர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவி கடந்த 20 ஆண்டுகளாக வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அரசு ஆணை (நிலை) எண் 90, 12-3-1991 நாளிட்ட அரசாணைக்குப்பின் திருத்திய ஆணைகள் அத்துறையின் ஆணை எண் 43, 15-3-1994 நாளிட்ட அரசாணையில் வெளியிடப்பட்டன. அதன் அடிப்படையில் 10-6-1997 நாளிட்ட ஊரக வளர்ச்சித் துறையின் அரசு ஆணை (நிலை) எண் 189-ல், மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர், இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர், காசாளர், தட்டச்சர் ஆகிய பதவிகளில் நேரடி நியமனம் மூலம் பணி



அமர்த்த வேண்டிய காலி இடங்களில் 10 விழுக்காடுக்கு மிகாமல் பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் போன்ற பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

**7—**

### தொடக்கப் பள்ளி தொடங்குதல்

வினா **17874—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திப்பணம்பட்டி ஊராட்சி, வீரபத்திரநாடானூரில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது வீரபத்திரநாடானூரில் தொடக்கப் பள்ளி தொடங்கும் திட்டம் எதுவும் இல்லை.

**8—**

### தொகுப்பு வீடுகள்

வினா **22111—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், அக்கரைவட்டம் ஊராட்சி, கல்வராயன் விடுதி ஆதிதிராவிட தெரு மக்களுக்கு 20 தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது. இனிவரும் 1999-2000 ஆம் நிதியாண்டில், திருவோணம் ஒன்றியம், அக்கரைவட்டம், ஊராட்சி, கல்வராயன் விடுதி ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர நிதி ஆதாரத்தைக் கருத்தில்கொண்டு முன்னுரிமை வழங்கப்படும்.

**9—**

**உர மானிய விவரம்**

வினா **14990—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டுக்கு தமிழ்நாட்டுக்கு உர மானியமாக மத்திய அரசு வழங்கிய தொகை எவ்வளவு?

(ஆ) அந்த மானிய தொகையை முழுமையான முறையில் அரசு செலவிட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டுக்கு தமிழ்நாட்டிற்கு உர மானியமாக மத்திய அரசு வழங்காமல், கட்டுப்பாடு நீக்கப்பட்ட உரங்களுக்கு [illegible] ஒன்றுக்கு மாநில வரி தவிர்த்து உரச் சலுகை மட்டும் வழங்குகிறது. தமிழ்நாட்டிற்கு என்று தனியே குறிப்பிட்ட தொகை எதுவும் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. கட்டுப்பாடு நீக்கப்பட்ட உரங்கள் வழங்கும் நிறுவனங்களுக்கு மத்திய அரசே நேரடியாக மாநில அரசின் பரிந்துரையின்படி சலுகைத் தொகை வழங்குகின்றது.

(ஆ) கட்டுப்பாடு நீக்கப்பட்ட உரங்களை உர நிறுவனங்கள் தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்கின்றன. இவ்வுரங்களுக்கு 1997-98 ஆம் ஆண்டில்



இதுவரை ரூ.97.728 கோடி உரச் சலுகையாக மத்திய அரசுக்கு இந்த அரசு சிபாரிசு செய்துள்ளது. மேலும், சுமார் ரூ.50 கோடி அளவுக்கு உரச் சலுகைக்கான சலுகைப் பட்டியல் மாவட்ட அலுவலர்களின் பரிசீலனையில் உள்ளது. அவை உடன் பரிசீலிக்கப்பட்டு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

**10—**

**விவசாய விரிவாக்க மையம் ஏற்படுத்துதல்**

வினா **15882—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை ஊராட்சியில் விவசாய விரிவாக்க மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்;**

புதிய செலவினங்கள் மேற்கொள்வதற்கான சில கட்டுப்பாடுகள் விதித்து அரசு வெளியிட்டுள்ள அறிவுரைகளின்படி புதிய செலவினங்கள் எதையும் தற்போது மேற்கொள்ள இயலாது என்பதால் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை ஊராட்சியில் விவசாய விரிவாக்க மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**11—**

**தானியங்களின் ஈரப்பதத்தைக் குறைக்க கிடங்குகள் கட்டுதல்**

வினா **21332—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரப்பதம் அதிகம் உள்ள தானியங்களை இயந்திரத்தின் வசதி கொண்டு ஈரப்பதத்தைக் குறைக்க இயந்திரங்கள் கூடிய கிடங்குகள் (குடோன்) கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விதை சுத்திகரிப்பு நிலையங்களுக்குத் தானியங்கள், விதை சுத்திகரிப்புப் பணிக்காகக் கொண்டு வரும்பொழுது, நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஈரப்பதம் உள்ள வயல்மட்ட விதைகளையே சுத்திகரிப்பு செய்ய ஏற்றுக்கொள்ளப்படுகிறது. காவிரிப்படுகை மாவட்டங்களில், குறிப்பாக குறுவை மற்றும் சம்பா நெல் விதைகள், அறுவடையாகி வரும்பொழுது, பருவமழை காரணமாக முறையாக உலர்த்தப்படாமல் குறைந்தபட்ச ஈரப்பதத்திற்கு மேல் 2 முதல் 5 விழுக்காடு உள்ள வயல்மட்ட விதைகளை விதைச்சுத்திகரிப்பு நிலையங்களில் ஏற்றுக்கொண்டு, அவற்றை விதைச் சுத்திகரிப்புக்கு முன்னர், அவற்றின் ஈரப்பதத்தைக் குறைக்க இயந்திரங்கள் கொண்டு உலர்த்தும் வசதி சாக்கோட்டை மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் உள்ள விதைச் சுத்திகரிப்பு நிலையங்களில் உள்ளன. அவ்வாறு, ஈரப்பதத்தைக் குறைக்க ஆகும் செலவினை விதைப்பண்ணை விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது. இவை தவிர புதிதாக ஈரப்பதத்தைக் குறைக்க இயந்திரங்களோடு கூடிய கிடங்குகள் (Godowns) கட்டும் திட்டம் தற்போது அரசிடம் ஏதும் இல்லை.

**12—**

## வேளாண்மைக் கிடங்கு அமைத்தல்

வினா **23001—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டில் வேளாண்மைக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டில் வேளாண்மைக் கிடங்கு ஏற்படுத்த, கோரிக்கை ஏதும் இதுநாள் வரையில் அரசுக்கு வரப்பெறவில்லை. கோரிக்கை வரப்பெற்றால் முறைப்படி பரிசீலிக்கப்படும்.



**13—**

## பாலம் வேலை முடித்தல்

வினா **2392—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, திருவிழந்தூர் காவிரிப் பாலம் வேலை ஆரம்பித்து முடிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் முடிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பரம்பொன் நா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறைக்கும், திருவிழந்தூருக்கும் இடையில் மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குள் மருத்துவமனைச் சாலையில் குறுக்கிடும் காவிரி ஆற்றின் மீது கட்டப்பட்டு வந்த உயர்மட்டப் பாலம் மற்றும் இப்பாலத்திற்கான அணுகு சாலைகளின் மேம்பாட்டு பணிகள் முடிவுற்று 26-9-1998 முதல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

**14—**

## பாலம் கட்டுதல்

வினா **5410—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரில் பாமணியாற்றில் கீழ்ப்பாலத்தை புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பரம்பொன் நா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள பாமணியாற்றுப் பால வேலை, தற்பொழுது நடைபெற்று வருகிறது. இப்பணி முழுவதுமாக 31-7-1999-க்குள் முடிக்கப்படும்.

**15—**

**BY-PASS ROAD TO HOSUR**

Question **13766—THIRU B. VENKATASAMY:** Will the Minister for Highways be pleased to state—

(a) Is there any proposal to deviate the four roads from Attibele to Perandapalli in between Hosur and Krishnagiri?

(b) If so, the reason thereof?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஓசூர் புறவழிச்சாலை அரசின் பரிசீலனையில் இல்லை. இதற்குப் பதிலாக வடக்கு - தெற்கு (North South Corridor Project) சாலை மேம்பாட்டுப் பணியின்கீழ் கி.மீ. 33/015 - 43/6 வரை நான்கு வழிப்பாதை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமம் (NHAI) மூலமாக நிறைவேற்றப்பட உள்ளது. தேசிய நெடுஞ்சாலை-7-ல் கி.மீ. 44/0-லிருந்து கி.மீ.48/6 வரை உள்ள பகுதிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஆயத்தப்பணிகள் விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**16—**

**பாலம் கட்டுதல்**

வினா **16835—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதியையும், ஜெயங்கொண்டம் தொகுதியையும் இணைக்கும் குருவாடி - கடம்பர் சாலையின் குறுக்கே உள்ள மருதையாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் கட்ட தோராயமாக ரூ. 300 இலட்சம் தேவைப்படும். இனிவரும் ஆண்டுகளில் நபார்டு மற்றும் ஹட்கோ போன்ற நிதி நிறுவனங்களின் நிதி உதவி கிடைக்கும் தருணத்தில், உரிய நேரத்தில் இப்பணியை மேற்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**17—**

**மாற்றுவழிப் பாதை மற்றும் தார்ச்சாலை அமைத்தல்**

வினா **16890—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க தற்போது இயங்கி வரும் புதிய பேருந்து நிலையத்திலிருந்து வட்டாட்சியர், நகராட்சி அலுவலகங்களின் பின்புறமாக மாற்று வழிப்பாதை அமைத்து, திருத்தணி, திருப்பதி செல்லும் பேருந்துகள் செல்வதற்கு தார்ச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மாற்றுவழிப் பாதை அமைக்க ரூ.500 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி நெருக்கடி காரணமாக இப்பணியினை அண்மைக் காலத்தில் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**18—**

**கண் பாலம் கட்டுதல்**

வினா **21260—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் ஒன்றியத்தில் மேலக்கோட்டை ரோட்டில் கிழக்கோட்டை அருகே கண் பாலம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாலம் கட்டக் கோரியுள்ள இடமானது மதுரை மாவட்டத்தில் உள்ள இதர மாவட்டச் சாலையான கூடக்கோவில் சாலையில் கி.மீ. 2/2-ல் உள்ளது. இவ்விடத்தில் உள்ள ஓடையில் மூன்று கண்கள் கொண்ட 7 மீ. அகலத்தில் பாலம் அமைக்கப்பட உள்ளது. இப்பாலப் பணியினை நபார்டு ஆர்.ஐ.டி.எப்-4 திட்டத்தில் எடுத்துச் செயல்படுத்திட ரூ. 45.00 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**19—**

### புதிய மேம்பாலம் அமைத்தல்

வினா **21288—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதி, சேந்தநாடு கிழக்கு மருதூர் கரும்புச் சாலையில் உள்ள கெடிலம் ஆற்று தரைப்பாலம் மிகவும் பழுதுபட்ட நிலையில் உள்ளதால் புதிய மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கெடிலம் ஆற்றுத் தரைப்பாலம் 1997ஆம் ஆண்டு பெய்த மழையால் ஏற்பட்ட





வெள்ளத்தில், பால மத்தியில் உடைப்பு ஏற்பட்டு தற்காலிகமாக சரி செய்யப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இவ்விடத்தில் ஒரு உயர்மட்ட பாலம் அமைத்து எல்லாக் காலத்திற்கும் ஏற்ற சாலையாக மேம்பாடு செய்வதற்கு ரூ. 100 இலட்சங்கள் தோராயமாகத் தேவைப்படும். தற்சமயம் இப்பணியினை மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**20—**

### வேகத்தடை அமைத்தல்

வினா **22312—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், தென்னமநாடு ஊராட்சியில் தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை சாலையில் விபத்தினைத் தடுக்க தென்னமநாட்டில் ஒரு வேகத்தடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை சாலையில் கி.மீ. 21/2-ல் தென்னமநாடு ஊராட்சியில் வேகத்தடை அமைக்க இயலாது.

**21—**

### ஆக்கிரமிப்பு குறித்து வழக்கு

வினா **5636—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் அருள்மிகு விஸ்வேஸ்வரசாமி மற்றும் வீரராகவப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடத்திலுள்ள ஆக்கிரமிப்பு குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நடத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் அருள்மிகு விஸ்வேஸ்வரசாமி மற்றும் வீரராகவப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமாக, கீழ்க்கண்டவாறு நிலங்கள் உள்ளன:

| | | ஏக்கர் | சென்ட் |
|---|---|---|---|
| (1) | தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்பு சட்டப் பிரிவு 8(2) (II)-ன்கீழ் திருக்கோயில் பெயருக்குப்பட்டு வழங்கப்பட்ட நிலத்தின் அளவு | 106 | 59 |
| (2) | திருக்கோயில் ஊழியர்கட்கு மைனர் இனாம் ஒழிப்பு, சட்டப்பிரிவு 8(2)(II) மற்றும் 13 (1)-ன்கீழ் பட்டா வழங்கப்பட்ட நிலம் | 6 | 01 |
| (3) | தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்பு சட்டப்பிரிவு 8 (1) (பி)-ன் கீழ்வரையறையுடன் (கன்சிடரேஷன்) தொகை வசூலித்து வழங்கப்பட்ட பட்டா நிலம் | 80 | 80 |
| (4) | தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்பு சட்டப்பிரிவு 8(2) (1) (ஏ) மற்றும் 8(1) மற்றும் 10 (சி)ன்படி தனி நபர் பட்டா வழங்கியும் புறம்போக்காக மாற்றிய நிலங்கள் | 178 | 91 |
| | கூடுதல் .. | **372** | **31** |

மேற்படி நிலங்களில் திருக்கோயில் பெயரில் பட்டா வழங்கப்பட்ட இனங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நபர்களை வெளியேற்றி சுவாதீனம் பெறும் பொருட்டு, மேற்படி ஆலய செயல் அலுவலரால்





திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் 70 அசல் வழக்குகள் தொடரப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மேலும் திருக்கோயிலுக்குப் பாதகமாக தனி நபர்கட்குப் பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து திருக்கோயிலால் (2 பிற நபர்களால் திருக்கோயிலுக்கு பட்டா வழங்கியதை எதிர்த்து) 7 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்டுள்ள வழக்குகளைத் தவிர நில ஆக்கிரமிப்பு குறித்து வேறு வழக்குகள் ஏதும் இல்லை.

**22—**

## ஆலயத்திற்கு விடுதி

வினா **13462—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அருள்மிகு அங்காளபரமேஸ்வரி ஆலயத்திற்கு விடுதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்கென 14 அறைகள் கொண்டு விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இது தவிர மேலும் 10 அறைகள் கொண்ட தங்கும் விடுதி உபயதாரர்கள் மூலம் அமைக்க ரூ.9 இலட்சத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு, 3 அறைகளின் கட்டுமானப் பணி முடியும் தருவாயில் உள்ளது.

**23—**

## குத்தகை பாக்கியை வசூல் செய்தல்

வினா **22731—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 29

தமிழ்நாடு இந்து சமயத் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களின் குத்தகை பாக்கியை வசூல் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

குத்தகை பாக்கிகள் ஓரளவிற்கு வசூலிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு பசலியில் முதல் ஏழு மாதங்களில் நன்செய் நிலங்களிலிருந்து ரூ.3.74 கோடியும், புன்செய் நிலங்களிலிருந்து ரூ.1.29 கோடியும் ஆகக் கூடுதல் ரூ. 5.03 கோடி குத்தகை பாக்கிகள் வசூலிக்கப்பட்டுள்ளன. திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் அறுவடைக் காலங்களில் களத்துமேட்டிற்கே சென்று வசூல் பணியைத் தீவிரப்படுத்தி முடுக்கிவிடும்படி சார்நிலை அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் குத்தகை பாக்கிகளைச் செலுத்தாமல் இருந்து வருகின்ற குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகையை வசூலிக்கும்பொருட்டு வருவாய் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டு குத்தகை பாக்கி வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது குத்தகைதாரர் நிவாரணச் சட்டம் 20/97 அமலில் இருந்து வருவதால், வருவாய் நீதிமன்ற வழக்குகளின் பேரில் குத்தகை பாக்கிக்காக குத்தகைதாரர்களை நிலத்திலிருந்து வெளியேற்ற ஆணை பெற இயலாத நிலை உள்ளதால் குத்தகைதாரர் நிவாரணச் சட்டத்திலிருந்து திருக்கோயில் நிலங்களுக்கு விலக்களிக்க வேண்டும் என்ற இத்துறையின் கோரிக்கை வருவாய்த் துறையால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதுதவிர திருக்கோயில் நிலங்களில் குத்தகை பாக்கிகளை உடனுக்குடன் நிலுவையின்றி வசூலிக்க ஏதுவாக வருவாய்த் துறையினர் நிலவரி வசூலிப்பது போன்ற அதிகாரங்களை திருக்கோயில் நிர்வாகிகளுக்கும் வழங்க உரிய சட்டத்திருத்தம் விரைவில் கொண்டுவர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**24—**

### நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா **17300—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 ஏப்ரல் 29]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மல்லிக்குந்தம் ஊராட்சியிலுள்ள நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மல்லிக்குந்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது மல்லிக்குந்தம், பள்ளிப்பட்டி, நாகோஜிப்பட்டி மற்றும் பள்ளக்காடு ஆகிய நான்கு நியாயவிலைக் கடைகளுக்கு "நமக்கு நாமே" திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட மொத்த மதிப்பீட்டில் 1/3 பகுதி செலுத்த தற்போது வங்கியின் நிதிநிலை சரியில்லாத காரணத்தினால் தொகையைச் செலுத்த இயலவில்லை. எனவே, மல்லிக்குந்தம் ஊராட்சியிலுள்ள நியாயவிலைக் கடைக்கு அரசு கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**25—**

### மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கான கடன் விவரம்

வினா **20447—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1998ஆம் நிதியாண்டில் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.6.00 இலட்சம் வரை கடன் கொடுக்க எவ்வளவு தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

(ஆ) சேலம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் எவ்வளவு பேருக்கு நிதி உதவி கிடைக்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தற்சமயம் 5 இலட்சம் ரூபாய் வரை வீட்டு வசதிக் கடன் வழங்க 1998 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 35 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 13-10-1998 நாளிட்ட அரசாணை (டி) எண் 248-ல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் வீடு கட்டும் நோக்கங்களுக்காக ரூ. 6 இலட்சம் வரையில் 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் நீண்டகாலக் கடன் வழங்க ஏதுவாக இவ்வங்கிகளுக்கு 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளில் தகுந்த விலக்களித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 1998-99 ஆம் ஆண்டின் கடன் வழங்கும் திட்டத்தின்படி இவ்வங்கி மூலம் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் வழங்கப்படும் கடன் அளவும் பயனடைவோர் எண்ணிக்கையும் பின்வருமாறு:

| மாவட்டம் | பயனடைவோர் எண்ணிக்கை | நிர்ணயிக்கப்பட்ட கடன் அளவு |
|---|---|---|
| சேலம் மாவட்டம் | 350 | ரூ. 250 இலட்சம் |
| நாமக்கல் மாவட்டம் | 250 | ரூ. 200 இலட்சம் |
| மொத்தம் | **600** | ரூ. **450** இலட்சம் |

சேலம் மாவட்டத்தில் மட்டும் இத்திட்டத்தின்கீழ் 350 நபர்களுக்கு ரூ. 250 இலட்சம் வரை நிதி உதவி வழங்க குறியீடு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

**26—**

**கூட்டுறவு வங்கிப் பணியாளருக்கு சம்பளம், இடமாற்றம் செய்தல்**

வினா **20452—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழகம் முழுவதுமுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளருக்கு தகுதிக்கு ஏற்ப சீரான சம்பளம், இடமாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நடைமுறைப் படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் இயங்கிவரும் 4,589 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பல வங்கிகளின் சிப்பந்தி செலவினங்கள் நடைமுறை மூலதனத்தில் 2 விழுக்காடு வரையறைக்கும் அதிகமானதாக உள்ளது என அரசுக்குத் தெரிய வந்துள்ள நிலையில் பணியாளர்களின் சம்பளம் உள்ளிட்ட செலவினங்களை மேற்கொள்ள இயலாத நிலையில் பணியாளர்களின் ஊதிய விகிதம், பணி நிலைகள் ஆகியவற்றைத் திருத்தியமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும், தமிழகத்தில் உள்ள 181 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிப் பணிய்யாளர்களின் சம்பளம் மற்றும் பணி நிலை ஆகியவற்றை 1-7-1997 முதல் திருத்தியமைக்கவும் வேண்டியுள்ளது. எனவே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிப் பணியாளர்களின் ஊதிய விகிதம் மற்றும் பணிநிலைகளை நன்கு பரிசீலனை செய்து 1-7-1997 முதல் பணியாளர்களின் ஊதிய விகிதங்களைத் திருத்தி அமைப்பது குறித்து உரிய பரிந்துரைகளை அளிக்க அரசு ஆணை (நிலை) எண் 289, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 18-12-98-ல் ஒரு பணிக்குழுவினை (Working Group) அமைத்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இப்பணிக்குழு (Working Group) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிப் பணியாளர்களின் ஊதிய விகிதம் மற்றும் பணி நிலை குறித்த பரிந்துரைகளுடன் தனது அறிக்கையினை ஒரு மாதத்திற்குள் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அளிக்க வேண்டுமெனவும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், பணிக் குழுவின் அறிக்கையினை பரிசீலனை செய்து உரிய பரிந்துரைகளுடன் அரசிற்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அந்த ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பணியாளர்களின் தகுதிக்கேற்ப சீரான சம்பளம் வழங்குவது குறித்தும் இடமாற்றம் குறித்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1999 ஏப்ரல் 29

27—

**வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம்**

வினா **20454—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, பின்னையூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பின்னையூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு 1977-ம் ஆண்டு அரசு நிதியுதவி பெற்று கட்டப்பட்ட அலுவலகம் மற்றும் கிடங்குடன் கூடிய கட்டடம் உள்ளது. இந்தக் கட்டடம் பழுது ஏதுமின்றி தற்போது நல்ல முறையில் உள்ளது. மேற்படி கட்டடம் கட்டுவதற்கு பெற்ற அரசுக் கடனில் அசல் நிலுவை ரூ.6,100/-ம் வட்டி நிலுவை ரூ.4,288/-ம் திரும்பச் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வங்கி தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு விவசாயக் கடன் ரூ. 16.77 இலட்சமும், அத்தியாவசியப் பொருள் காசுக் கடன் கணக்கில் ரூ.95,000/-மும் செலுத்த வேண்டிய நிலுவை உள்ளது. உர காசுக் கடன் கணக்கில் ரூ.22,622/-க்கு ஆதாரக் குறைவு உள்ளது. 1993-94-ஆம் ஆண்டிற்குப் பிறகு மத்திய கூட்டுறவு வங்கிக்குச் செலுத்த வேண்டிய அசல் தொகையில் ஏதும் திருப்பிச் செலுத்தவில்லை, கடன் வசூலும் இல்லை. மத்திய கூட்டுறவு வங்கிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் 10% திரும்பச் செலுத்தினால்தான் வங்கி, கடன் பெறும் தகுதியினை அடைய முடியும் என்ற நிலை உள்ளதால், மேற்படி வங்கி கடந்த 3 வருடங்களாக தனது உறுப்பினர்களுக்கு விவசாயக் கடன் வழங்க இயலாத நிலையில் செயல்பட்டு வருவதாலும் இவ்வங்கி ரூ.22.11 இலட்சம் நட்டத்தில் செயல்பட்டு வருவதாலும் இவ்வங்கிக்குப் புதிய கட்டடம் கட்டும் சாத்தியக்கூறுகள் இல்லை. ஏற்கெனவே கிடங்குடன் கூடிய அலுவலகக் கட்டடம் நல்ல நிலையில் இயங்கி



1999 ஏப்ரல் 29]

வருவதால், புதிய கட்டடம் கட்டுவதற்குத் தற்போது அவசியம் ஏதும் இல்லை.

28—

**நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்**

வினா **20456—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, குளிச்சப்பட்டு கிராமத்தில் உள்ள நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், குளிச்சப்பட்டு கிராமப் புல எண் 100/2-ல், 0.16.0 எக்டேர் தனியாருக்குச் சொந்தமான புலத்தினைத் தேர்வு செய்து நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உரியவர்களிடம் சம்மதக் கடிதம், அரசு வழக்கறிஞரின் சட்டக் கருத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நிலமதிப்பு அறிக்கை மற்றும் கட்டுமானப் பொறியாளரின் நிலத் தகுதிச் சான்று ஆகியவற்றைப் பரிசீலனை செய்தபின் மேற்கண்ட நிலம் வாங்கப்பட்டு நேரடிக் கொள்முதல் நிலையம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

29—

**நியாய விலைக் கடையை நடத்துதல்**

வினா **20498—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி 14-ஆவது வார்டு, கசுவிரெட்டிப்பட்டி கஸ்பா, நியாய விலைக் கடையை பாரக்கல்லூரில் நடத்த அரசு ஆவன செய்யுமா?

[1999 ஏப்ரல் 29

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது கசுவிரெட்டிப்பட்டி கஸ்பா, நியாய விலைக் கடையினை நடத்தி வருகிறது. அந்நியாயவிலைக்கடையில் 865 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. கசுவிரெட்டிப்பட்டி கஸ்பா நியாய விலைக் கடையில் வார்டு எண் 7, 14 மற்றும் 15 உள்ளடக்கியுள்ளது. தற்போது கசுவிரெட்டிப்பட்டி நியாய விலைக் கடை 7-ஆவது வார்டில் செயல்பட்டு வருகிறது. நேரடி விசாரணை மேற்கொண்டதில் கசுவிரெட்டிப்பட்டி கஸ்பா நியாய விலைக் கடையினை தற்போது செயல்பட்டு வரும் இடத்தில் நீடிக்க வேண்டும் என குடும்ப அட்டைதாரர்கள் விரும்புகிறார்கள். பாரக்கல்லூர் பகுதிக்குக் கடையினை மாற்றினால் பாரக்கல்லூர், அதனைச் சுற்றியுள்ள வெட்டிகரடு, வெட்டிகரடு மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய பகுதிகளில் உள்ள 148 குடும்ப அட்டைதாரர்கள் மட்டுமே பயனடைவார்கள். மேலும் பாரக்கல்லூருக்கும், கசுவிரெட்டிப்பட்டி, கஸ்பா நியாய விலைக் கடைக்கும் இடையே உள்ள தூரம் 1 கி.மீ மட்டுமே உள்ளது. எனவே, கசுவிரெட்டிப்பட்டி, கஸ்பா நியாய விலைக் கடையினை 14-வது வார்டு பாரக்கல்லூரில் மாற்ற அவசியமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**30—**

**புதிய பகுதிநேர நியாய விலைக் கடை**

வினா **20575 - திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட பேடரஹள்ளியிலிருந்து நியாய விலைக் கடையைப் பிரித்து ஓசஅள்ளிபுதூருக்கு புதிய பகுதிநேர நியாய விலைக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1999 ஏப்ரல் 29]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட பேடரஹள்ளி நியாய விலைக் கடையைப் பிரித்து ஓசஅள்ளிபுதூரில் புதிய பகுதிநேரக் கடை 21-6-1998 முதல் செயல்பட்டு வருகிறது.

**31—**

**புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்**

வினா **20583—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஒன்றியத்திற்குட்பட்ட பூச்சூரிலிருந்து நியாய விலைக் கடையைப் பிரித்து வத்தல்பட்டிக்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பூச்சூர் நியாய விலைக் கடை ஏற்கெனவே பிரிக்கப்பட்டு ஆரல்குந்தி கிராமத்தில் 9-12-1996 முதல் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை இயங்கி வருகின்றது. பூச்சூரிலிருந்து நியாய விலைக் கடையைப் பிரித்து வத்தல்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க கட்டடம் அளிப்பதில் இரு வேறு சமூகத்தினரிடையே ஊர்ப் பிரச்சினை உள்ளதால், தற்போது பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க இயலாது. தாய்க்கடையிலிருந்து ஏற்கெனவே ஆரல்குந்தி பகுதிநேர நியாய விலைக் கடை பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்ற நிலையில், பூச்சூர் நியாய விலைக் கடையிலிருந்து வத்தல்பட்டிக்கு மேலும் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை பிரிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1999 ஏப்ரல் 29

32—

### காய்கறி மொத்த விற்பனைப் பிரிவு ஏற்படுத்துதல்

வினா **20697—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் காய்கறி மொத்த விற்பனைப் பிரிவு ஏற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையின் சுற்றுப் பகுதிகளில் காய்கறிகள் அதிக அளவில் பயிரிடப்படாததால், கொங்கணாபுரம் கிளையில் காய்கறி மொத்த விற்பனைப் பிரிவு ஏற்படுத்த வாய்ப்புகள் ஏதும் இல்லை.

33—

### புதிய/பகுதிநேர நியாய விலைக் கடை திறத்தல்

வினா **20710—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட வீரப்பன்பாளையம், அருந்ததி மக்களுக்குப் புதிய அல்லது பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**



1999 ஏப்ரல் 29]

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையானது வெள்ளாண்டிவலசு கிராமத்தில் பொன்னி கடை எண் 9 என்ற நியாய விலைக் கடையை நடத்தி வருகிறது. இந்நியாய விலைக் கடையில் 1,167 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. வீரப்பன்பாளையம் பகுதி குடும்ப அட்டைகள் மேற்படி பொன்னி கடை எண் 9-ல் இணைக்கப்பட்டுள்ளன. வீரப்பன்பாளையத்திற்கும், வெள்ளாண்டிவலசு கிராமத்திற்குமிடையே 2.5 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. வீரப்பன்பாளையம் கிராமத்தில் மொத்தம் 477 குடும்ப அட்டைகள்தான் உள்ளன. மேற்படி பகுதிகள் நகராட்சியைச் சேர்ந்ததால் அரசு விதிகளின்படி புதிய நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமாதலால், புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியமில்லை. எனவே, சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளாண்டிவலசு நியாய விலைக் கடையில் உள்ள 1,167 குடும்ப அட்டைகளில் 477 குடும்ப அட்டைகளைப் பிரித்து வீரப்பன்பாளையத்தில் ஒரு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க 25-2-1999 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

34—

### நியாய விலைக் கடை தொடங்குதல்

வினா **21069—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், ஏர்வாடியில் நியாய விலைக் கடை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பொட்டனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மற்றும் குட்டப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆகிய இரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பொட்டனேரி மற்றும் குட்டப்பட்டி ஆகிய ஊர்களில் இரு நியாய விலைக் கடைகளை முறையே 908 மற்றும் 685 குடும்ப அட்டைகளுடன் நடத்தி வருகின்றன.

ஏர்வாடி கிராமத்தைச் சார்ந்த 86 குடும்ப அட்டைகள், பொட்டனேரி நியாய விலைக் கடையிலும், 97 குடும்ப அட்டைகள், குட்டப்பட்டி நியாய விலைக் கடையிலும் இணைக்கப்பட்டுள்ளன. இரு நியாய விலைக் கடைகளிலும் சேர்த்து தற்போது 183 குடும்ப அட்டைகள் உள்ளன. ஏர்வாடி கிராமம், பொட்டனேரி கிராமத்திலிருந்து 1½ கிலோமீட்டர் தூரத்திலும் அதேபோல் குட்டப்பட்டி கிராமத்திலிருந்து 1½ கிலோமீட்டர் தூரத்திலும் உள்ளது. தற்போதுள்ள விதிகளின்படி கிராமப்புற முழுநேர நியாய விலைக் கடையுடன் 500 குடும்ப அட்டைகளும், நகர்ப்புற முழுநேர நியாய விலைக் கடையுடன் 800 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட வேண்டும். மேலும், பகுதி நேர கடை திறக்க குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகளும், தாய்க்கடைக்கும் பகுதிநேரக் கடைக்கும் இடையே 2 கிலோமீட்டர் தூரமும் இருக்க வேண்டும். ஆனால், ஏர்வாடி நியாய விலைக் கடை 183 குடும்ப அட்டைகளும், தாய்க்கடையிலிருந்து 1½ கிலோ மீட்டர் தொலைவிலேயே ஏர்வாடி கிராமம் உள்ளதால் பகுதிநேர நியாய விலைக் கடையோ அல்லது முழுநேர நியாய விலைக் கடையோ அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**35—**

## சிந்தாமணியின் சொத்து, கடன் விவரம்

வினா **21216—திரு. கே. சுப்பராயன்**: மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிந்தாமணியின் மொத்த சொத்து மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதன் மீதுள்ள கடன்கள் எவ்வளவு?

விடை--

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு சார்பதிவாளர் மதிப்பீட்டின்படி (Sub-Registrar's Guideline Value) ரூ. 42.03 கோடிக்கு சொத்து மதிப்பு உள்ளது.



(ஆ) பண்டகசாலையின் சொத்துக்களின் பேரில் ரூ.11.63 கோடி கடன் கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு ஒன்றியம், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்டு உள்ளது. மேலும், இப்பண்டகம் பெற்றுள்ள அரசுக் கடன் விவரம் பின்வருமாறு:-

1. பண்டகம் பெற்ற அரசு கடன் தொகை ரூ.87.82 இலட்சம்
2. பண்டகம் திருப்பிச் செலுத்தியுள்ள தொகை ரூ. 17.33 "
3. பண்டகம் பெற்ற அரசுக் கடனில் நிலுவையுள்ள தொகை ரூ. 70.49 "
4. திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டிய தொகை ரூ. 40.41 "
5. திருப்பிச் செலுத்த காலக்கெடு உள்ள தொகை ரூ. 30.08 "

ஆக மொத்தம் கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு ஒன்றியத்திற்கும் அரசுக்கும் சேர்த்து ரூ.12,33,49,000 கடன்கள் உள்ளன.

**36—**

## அங்காடிகளுக்குச் சொந்தக் கட்டடம்

வினா **21368—திரு. மா. இராமச்சந்திரன்**: மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, சிவவிடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் உள்ள சென்னிய விடுதி அங்காடி, காரியவிடுதி அங்காடி, காடுவெட்டி விடுதி ஆகிய அங்காடிகள் வாடகைக் கட்டடத்தில் உள்ளதைச் சொந்தக் கட்டடம் கட்டி இயங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தாலுகாவில் உள்ள வெங்கரை கோட்டைக்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும்

[1999 ஏப்ரல் 29

சென்னியவிடுதி அங்காடி, இராஜாளி விடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் காடுவெட்டி விடுதி அங்காடி மற்றும் வெட்டுவாக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் காரியவிடுதி அங்காடிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் சொந்தக்கட்டடம் கட்டி அங்காடி இயக்க தொடர்புடைய தொடக்க கூட்டுறவு வங்கிகளால் இயலவில்லை. தற்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிதி மூலம் அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் 1998-99-ம் ஆண்டுக்கு இராஜாளி விடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் காடுவெட்டி விடுதி அங்காடிக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு கட்டடம் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டடம் கட்டப்பட்டு அங்காடி மாற்றப்படும். ஏனைய இரு சென்னியவிடுதி மற்றும் காரியவிடுதி அங்காடிகளுக்கு அடுத்த நிதி ஆண்டில் முன்னுரிமை கொடுத்து கட்டடம் கட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்குத் தகவல் தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**37—**

**பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்**

வினா **21838—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி, காலாங்கரை பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) செங்கோட்டை நகராட்சி காலாங்கரை பகுதியில் பகுதிநேரக் கடை கோரும் காலாங்கரை பகுதிக்கும் தாய்க்கடையான செங்கோட்டை கடை எண் 1-க்கும் இடையே 1 கிலோ மீட்டருக்கும் உட்பட்ட தூரமே உள்ளது. அரசு ஆணை எண் 214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15-10-1998-ன்படி தாய்க்கடைக்கும் பகுதிநேரக் கடைக்கும் இடையே குறைந்தபட்சம் 2 கிலோமீட்டர் இருக்க வேண்டும். எனவே, 252 குடும்ப அட்டைகளைக் கொண்ட பகுதியாக இருந்தபோதிலும், அரசு ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி குறைந்தபட்ச தூரமான 2 கிலோமீட்டர் தூரம் இல்லாத காரணத்தால் காலாங்கரை பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.



1999 ஏப்ரல் 29]

(ஆ) வினா எழவில்லை.

**38—**

**நியாய விலைக் கடை விவரம்**

வினா **21912—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் எத்தனை இயங்குகின்றன?

(ஆ) சங்ககிரி தாலுகா மற்றும் எடப்பாடி தாலுகாவில் முறையே எத்தனை நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 114 பகுதிநேர நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன.

(ஆ) சங்ககிரி மற்றும் எடப்பாடி வட்டத்தில் கீழ்க்கண்டவாறு முழுநேர மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன:-

| | சங்ககிரி வட்டம் | எடப்பாடி வட்டம் |
|---|---|---|
| முழுநேர நியாய விலைக் கடை | 76 | 62 |
| பகுதிநேர நியாய விலைக் கடை | 19 | 9 |
| மொத்தம் | **95** | **71** |

[1999 ஏப்ரல் 29

39—

பாதுகாப்பு அறை கட்டடம் கட்டுதல்

வினா 21915 திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, ஆலங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் பாதுகாப்பு அறை கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, தஞ்சாவூர் சரகத் துணைப் பதிவாளர் கட்டுப்பாட்டிலுள்ள ஆலங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பாதுகாப்பு அறை கட்டப்பட்டு, தற்போது இரும்புக்கதவு மட்டும் பொருத்த வேண்டிய நிலையில் உள்ளது.

40—

மூடப்பட்ட பஞ்சாலைகள் இயக்குதல்

வினா 22706—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றைத் திறந்து இயங்க வைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 27 (இருபத்தேழு).

(ஆ) தொழிற் தகராறு சட்டம் பிரிவு 25 '0'-ன்படி 100 தொழிலாளர்களுக்குமேல் பணிபுரியும் நிறுவனங்கள், மூடுதலுக்கு



1999 ஏப்ரல் 29]

முன்னர் தொழிலாளர் ஆணையரின் அனுமதி பெற வேண்டும். ஆனால், தற்போது தமிழ்நாட்டில் இயங்காமலுள்ள எந்த ஆலையும் தொழிலாளர் ஆணையரின் முன் அனுமதி கோரி விண்ணப்பித்து அனுமதி பெற்று மூடப்படவில்லை. இவை அனைத்துமே நிதி நெருக்கடி காரணமாக இயக்கம் நின்ற ஆலைகளாகும். இவற்றில் தொழிற் தகராறுகள் ஏதுமில்லை. ஆலைகள் இயங்காமல் உள்ளதற்கான காரணம் நிதி நெருக்கடியேயன்றி, தொழிலாளர்கள் தாவா ஏதுமில்லை. நிதி நெருக்கடி காரணமாக கதவடைப்பு செய்யப்பட்டு இயங்காமலுள்ள ஆலைகளைப் பொறுத்தமட்டில் திறப்பதற்கு தொழிலாளர் துறை எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது. இவற்றில் உள்ள தொழிலாளர் பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தையின் மூலம் முடிவு காணப்படவில்லையெனில், அரசு தொழில் நீதிமன்றத் தீர்ப்புக்குத்தான் விட முடியுமே தவிர இவற்றுக்கு வேறெந்தத் தீர்வும் காண இயலாது.

41—

வீட்டுமனைப் பட்டா

வினா 16793—திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வீட்டுமனைப் பட்டா கோரி 1997-98 ஆம் வருடம் வரை வந்துள்ள மனுக்கள் எத்தனை என்பதை அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதில் 1997-98 வரை வழங்கப்பட்ட பட்டாக்கள் எத்தனை?

(இ) அந்த மனுக்களில் இதுவரை நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கோரி 1997-98 ஆம் வருடம்வரை வந்துள்ள மனுக்கள் - 367.

(ஆ) 1997-98 வரை வழங்கப்பட்ட பட்டாக்கள் - 236.

(இ) அந்த மனுக்களில் இதுவரை நிலுவையில் உள்ள மனுக்கள் - 131

[1999 ஏப்ரல் 29

**42—**

**விட்டுமனைக்கு நிலம் கையகப்படுத்துதல்**

வினா **21310—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், காஞ்சிக்கோவில் மற்றும் திங்களூர் கிராமங்களில் நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்கிட நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது முடிவடையும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் உள்வட்டம், வெட்டையங்கிணர் கிராமம் க.ச.160,161 ஆகிய சாலைகளில் 4.36.5 ஹெக்டேர் (அல்லது) 11.00 ஏக்கர் நிலம் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 181 நபர்களுக்கு 6-3-1998 ஆம் தேதி மாவட்ட அளவிலான குழுக்கூட்டத்தில் நேரடிப் பேச்சுவார்த்தையின் மூலம் நிலமெடுப்பு செய்து பட்டா வழங்கப்பட்டுள்ளது. பெருந்துறை வட்டம், காஞ்சிக்கோயில் உள்வட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்புகளில் பயனாளிகள் தேர்வு செய்து, பின்னர் பயனாளிகள் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு ஒரு இடம் (பூமியை) தேர்வு செய்து விரைவில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**43—**

**நோய்களிலிருந்துப் பாதுகாக்க அமைப்பு**

வினா **18183—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுற்றுச் சூழலால் வரும் நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து மக்களுக்குத் தெரிவித்து பாதுகாக்க ஒரு அமைப்பு உருவாக்க அரசு ஆவன செய்யுமா?



1999 ஏப்ரல் 29]

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

சுற்றுச் சூழலால் ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து மக்களுக்கு தெரிவித்து, பாதுகாக்க தற்போது செயல்பட்டுவரும் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும், தற்போது ஏற்படுத்தப்பட்டு இரண்டாண்டுகளாகச் செயல்பட்டுவரும் சுற்றுச் சூழல் துறையும், நீர் மற்றும் காற்று சட்டங்களின்கீழ் தொடங்கப்பட்டு 16 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியமும் மக்களுக்கு சுற்றுச் சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதுடன் நீர் மற்றும் காற்று சட்டங்களின்கீழ் தொழிற்சாலைகள் இயங்க இசைவு வழங்கி அவைகளை முனைப்புடன் கண்காணித்து வருகின்றது.

**44—**

**காட்டுப் பன்றிகளைத் தடுத்தல்**

வினா **20855—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் இடங்களில் விவசாயப் பயிர்களையும், வீடுகளையும் காட்டுப் பன்றிகள் இரவு நேரங்களில் சேதப்படுத்துவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) மலைவாழ் மக்களின் விவசாயப் பயிர்களையும், வீடுகளையும் காட்டுப்பன்றிகள் சேதப்படுத்துவதாக புகார் ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) காட்டுப் பன்றிகளால் பெருமளவில் விளைவிக்கப்படும் பயிர்சேதம் மற்றும் இதர சேதங்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.2,500/- வரை வழங்க அரசு ஆணை உள்ளது. பயிர்சேதம் மற்றும் இதர சேதங்கள் குறித்து பொதுமக்கள் ஏதும் புகார்கள் செய்தால் அவற்றை விசாரணை செய்து தக்க நிவாரணம் வழங்கப்படுகிறது.

மலைவாழ் மக்கள் அமைத்துள்ள பாதுகாப்பு வேலி மற்றும் நீளமான குழிகளையும் தாண்டி காட்டுப்பன்றிகள் சேதம் விளைவிக்க முயன்றால் அவைகளை டமாரம் செய்தும் வாணம் வெடித்தும் விரட்டியடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**45—**

## PENNING PERMIT TO CATTLE

வினா **22540—THIRU B. VENKATASAMY:** Will the Minister for Forests be pleased to state—

(a) Whether there is any proposal to issue penning permit to stray cattle in the forest after grazing?

(b) If so, the details thereof?

விடை —

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**46—**

## கட்டடம் திறத்தல்

வினா **15597—திரு. ஜி.எல். வெங்கடாசலம்**: மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பாலக்கோடு காலநடை மருத்துவமனை வளாகத்தில், பல ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட கட்டடம் திறக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) தற்போது இக்கட்டடம் முழுவதும் அவசரத் தேவைக்கு சுத்தம் செய்யப்பட்டு, வெள்ளை அடித்து கால்நடை மருத்துவமனை அலுவலகத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

**47—**

## உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

வினா **19816—திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வேலூர் பெருமுகை கிராமத்தில் உள்ள ஆதிதிராவிட நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

அரசின் ஆய்வில் உள்ளது.

**48—**

## ஆதிதிராவிட மாணவர் விடுதி

வினா **20340—திரு. மா. இராமச்சந்திரன்**: மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பாச்சூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் ஆதிதிராவிட மாணவர் தங்கிப் பயில பாச்சூரில் ஒரு மாணவர் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

மேற்படி பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர் குறைவான தூரத்தில் உள்ள கிராமங்களில் இருந்து கல்வி பயில பாச்சூர் வருவதால் அங்கு விடுதி கட்ட வேண்டிய அவசியமில்லை.

[1999 ஏப்ரல் 29

**49—**

**ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதி அமைத்தல்**

வினா **21475—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வடக்கன்குளம், காவல்கிணறு, கள்ளிக்குளம் ஆகிய ஊர்களில் ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது வடக்கன்குளம் என்னும் இடத்தில் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி செயல்பட்டு வருகிறது. காவல்கிணறு, மேற்படி ஊரிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்திலும், கள்ளிக்குளம், வடக்கன்குளத்திற்கு சுமார் 20 கி.மீ. தூரத்திலும் உள்ளன. எனவே, மேற்படி வடக்கன்குளத்தில் ஒரு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி இயங்கி வருவதால் புதிதாக காவல்கிணறு மற்றும் கள்ளிகுளம் ஊர்களில் மாணவியர் விடுதி அமைக்கத் தேவையில்லை.

**50—**

**மீன் விற்பனை நிலையம் அமைத்தல்**

வினா **20989—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் மீன் விற்பனை நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1999 ஏப்ரல் 29]

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவுச் சங்கம் மூலம் பெண்ணாகரம் வட்டத்தில், ஒகேனக்கல் பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் மீன் சேகரிப்பு மற்றும் மீன் விற்பனைப் பணியினை மேற்கொள்ளவில்லை என்பதால், பெண்ணாகரத்தில் அரசு தற்போது மீன் விற்பனை அங்காடி அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (அ) நிகழ்ச்சி நிரலில் உள்ள கவன ஈர்ப்பு ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று எடுத்துக்கொள்வதாக இருந்த கவன ஈர்ப்பு நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. கோ.சி. மணி] [1999 ஏப்ரல் 29

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1999 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ்ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஈ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1999* ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1999* ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(ஆ) மேதகு ஆளுநர் அளிக்கும் விருந்திற்குச் செல்ல சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பேருந்து வசதி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் மேதகு ஆளுநர் அவர்கள் இன்று மாலை *6-00* மணிக்கு தேநீர் விருந்து அளிப்பதாக இருந்தது. அதற்கான அழைப்பிதழ்களும் உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டன. ஆனால், தேநீர் விருந்துக்குப் பதிலாக, இரவு *7-30* மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் விருந்து (Dinner) அளிக்க உள்ளார்கள். அதற்கான அழைப்பிதழ்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து ஆளுநர் மாளிகைக்குச் சென்று, திரும்ப, பேருந்துகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேருந்துகள் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து முறையே, மாலை *6-30, 6-40, 6-50* மற்றும் *7-00* மணிக்குப் புறப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் விருந்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்**

**(ஆ) கோரிக்கை எண் 53—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1999-2000* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *24*-தொழில்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில்கள் பற்றிய *24* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.*16,24,51,000*-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2751, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1955, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் ஒரு சிட்கோ தொழிற்பேட்டையை அரசு ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல். ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3083, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4046, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சென்னையில் மூடிக்கிடக்கும் ஸ்டேண்டர்டு தொழிற்சாலை மற்றும் டன்லப் தொழிற்சாலை இவற்றை மீண்டும் திறக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 896, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"விவசாயிகள் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்புகின்ற கரும்புக்கு வெட்டுக்கூலி, வாடகை ஆகியவற்றை சர்க்கரை ஆலைகளே ஏற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4500, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகையில் சிலிகேட் தொழிற்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2793, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி பகுதியில் நிலக்கரி படிவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நிலக்கரியைக் கொண்டு 300 ஆண்டுகளுக்கு மின் உற்பத்தி செய்ய இயலும் எனவும் கூறப்படுவதால், மத்திய அரசின் அனுமதியுடன் நிலக்கரி எடுக்கும் பணியைத் தொடங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1499, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம்' தொகுதியில் கரும்பு அதிகமாக விளைவதால், அங்கு ஒரு சர்க்கரை ஆலை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1159, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தஞ்சை மாவட்டத்தில் கரும்பு பயிர் செய்து சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பும் விவசாயிகளுக்கு கரும்பு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 513, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2578, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசி தொழிற்சாலை ஒன்றினை அரசு ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3777, திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4310, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3678, திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"புதிதாக ஆரம்பிக்கும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4132, திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி நாசரேத்தை சுற்றியுள்ள தேரிகாட்டுப் பகுதியில் உள்ள அபூர்வமான கருப்பு மணல் குறித்து ஆராய்ந்து வெளிநாட்டு உதவியுடன் அதை எடுப்பதின் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3704, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN:** Hon. Speaker, Sir,

'To discuss the need to open a SIPCOT Industrial Complex at Pallipat in Thiruvallur District', I move—

"That the sum of Rs.16,24,51,000/- allocated under Demand No.24 - Industries be reduced by Rs.100/-"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3559, திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1780, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் நகரில் சிறிய தொழிற்பேட்டை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,51,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 53—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 53—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2607, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டம், எடப்பாடி பகுதியில் பலரக கிரானைட் கிடைப்பதால் அங்கு அரசு சார்பாக ஒரு கிரானைட் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4370, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4043, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2436, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி தொழில் வளர்ச்சி ஏதும் இல்லாமல் மிகவும் பின்தங்கியுள்ளதால், அங்கு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4503, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விவசாயம் பொய்த்துவிட்ட நாகை தொகுதியில் தொழில் தகவல் மையம் மற்றும் தொழில் முனைவோர் ஊக்க மையம் ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3948, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கியுள்ளதால் சிறப்புக் கவனம் செலுத்தி அம்மாவட்டத்தைத் தொழில் துறையில் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4404, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3026, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,000-ல் ரூ. 100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2247, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2552, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் இரும்பாலை பகுதியைச் சுற்றி துணைத் தொழில்கள் தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4255, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சேற்றப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் அவையிலே படித்ததாகக் கருதி, அதை அவைக் குறிப்பிலே பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அளிக்கின்ற உயர்ந்த கருத்துக்களின் அடிப்படையில், என்னுடைய பதிலுரையை அமைப்பதாக எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11 உறுப்பினர்கள் இன்று பேச இருக்கிறார்கள். நேரத்தின் அருமை கருதி, விவாதத்தைத் தொடங்கி வைக்கிற திரு. ரங்கநாதன் அவர்களுக்குப் பத்து நிமிடங்களும், மற்ற உறுப்பினர்களுக்கு ஏழு நிமிடங்களும் அனுமதிக்கப்படும் என்று அறிவித்து, திரு. ரங்கநாதன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், இந்தத் தொழில் மானியக் கோரிக்கையிலே தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்புத் தந்த தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கப் புத்தகத்தைப் படித்துப் பார்க்கின்றபோது, 1980 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரையில், இடைப்பட்ட 1989, 1990 நீங்கலாக, அல்லது சேர்த்துக் கொண்டாலும், கணக்கிலே பார்த்தோமானால், 1996-97, 1997-98, 1998-99 இந்த இடைப்பட்ட காலத்தில்தான், தமிழகத்திலே தொழிற்புரட்சியே ஏற்பட்டிருக்கிறது

---

@ 441 முதல் 477 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



என்று தெரிகிறது. அதாவது, தமிழகத்தில் மட்டும் இந்த இடைப்பட்ட காலத்தில் 1,51,187 கோடி ரூபாய் முதலீடு. ஆனால், 2½ ஆண்டுகளில் மட்டும் இந்தியாவிலேயே மிக அதிக அளவில் முதலீடு தமிழ்நாட்டில்தான்; 60,537 கோடி ரூபாய். இதை சதவிகிதத்தில் நாம் கணக்கிட்டுப் பார்த்தோமானால், 24.98 சதவிகிதம்; இந்த 2½ ஆண்டுகளில் மட்டும். இது எதைக் குறிக்கிறது என்றால், தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வருபவர்கள், குறிப்பாக வெளிநாட்டினர், அண்டை மாநிலங்களைச் சேர்ந்தவர்களெல்லாம், இங்கே தொழில் தொடங்க வேண்டுமென்றால், இது ஒரு சிறந்த இடம்; அமைதியான பூமி; இங்கே தொழில் தொடங்கலாம்; மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தொழில் தொடங்குவதற்கான வசதிகளைச் செய்துகொடுப்பார்கள் என்ற எண்ணத்தினால், இந்த 2½ ஆண்டு காலத்தில் இவ்வளவு பெரிய முதலீடு தமிழ்நாட்டிலே; 60,537 கோடி ரூபாய்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதேபோன்று, தமிழகத்திலே அரசு சார்பிலே இயங்குகின்ற பல்வேறு நிறுவனங்களிலே ஒன்றை எடுத்துக்கொள்வோம். புவியியல் மற்றும் சுரங்கத் துறை. தமிழ்நாடு கனிம நிறுவனம், மிக அதிக அளவாக 1998-99 ஆம் ஆண்டு, ரூ. 53.10 கோடிக்கு விற்பனை, அதில் நிகர இலாபம் ரூ .10.10 கோடி. முந்தைய ஆண்டைக் காட்டிலும் இந்தத் துறையில்—TAMIN—நூறு விழுக்காட்டிற்கு மேல் வியாபாரம் நடைபெற்றுள்ளது. ஏறத்தாழ hundred per cent and above business. இதனால், இந்தத் துறை செயல்படுகின்ற மாவட்டங்களில் எல்லாம், படித்த, வேலையில்லாத இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பைக் கூடுதலாக உருவாக்கி இருக்கிறார்கள்; TAMIN துறையின் மூலமாக.

*முற்பகல் 10-50*

அதேபோல, 1998-99 ஆம் ஆண்டு TAMIN மூலமாக மட்டும் அன்னியச் செலாவணி வியாபாரம் 35 கோடி ரூபாய. இந்திய அரசுக்குத் தமிழகத்தின் சார்பில் அன்னியச் செலாவணியாக நாம் ஈட்டியிருக்கிறோம். ஒட்டுமொத்தமாக, தமிழகத்திலே, தமிழக அரசு சார்ந்த புவியியல் மற்றும் சுரங்கத் துறை நிறுவனத்தின் மூலமாக தமிழக அரசுக்கு கடந்த 1998-99 ஆம் ஆண்டில் மட்டும் ரூ. 110.37 கோடி வருமானம். ஆனால், 1991-96 ஆம் ஆண்டு வரையில் இந்தத் துறையில் ஏன் வருமானம் குறைவாக வந்தது? நான் பலமுறை இந்த மானியத்தில் பேசுகின்றபொழுது முதலமைச்சர் அவர்களிடத்திலே

கேள்வி கேட்டிருக்கிறேன். டாமின் நிறுவனத்தில் பல கோடி ரூபாய் - பல கோடியைக் காட்டிலும் - பல நூறு கோடி ரூபாய் கொள்ளை போனது அது தங்களுக்கும் தெரியும், இந்த நாட்டிற்கே தெரியும் அது எப்படிக் கொள்ளை போனது, யார் மூலமாகச் சுரண்டப்பட்டது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும் அதைச் சொல்லித்தான் நாம் வாக்குகளைக் கேட்டோம். இடையிலேயும் ஒரு நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. இப்பொழுது இன்னொரு நாடாளுமன்றத் தேர்தலையும் நாம் சந்திக்கப் போகிறோம். தேர்தலிலே சென்றபொழுது, வாக்காளர்களைச் சந்தித்தபொழுது, 1996 ஆம் ஆண்டு, கொள்ளையடித்த பணத்தை மீண்டும் அரசு கொள்ளையடித்தவர்களிடமிருந்து மீட்டு அரசு கஜானாவிலே சேர்ப்போம் என்று சொல்லித்தான் வாக்குகளைக் கேட்டோம், திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழ் மாநிலக் காங்கிரசும். ஆனால், அந்தவொரு பணியில் மட்டும் நாம் சற்றுத் தொய்வாகிவிட்டிருக்கிறோமோ என்ற ஒரு நிலை மக்கள் மனதிலே ஏற்பட்டுள்ளது. அதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் முனைவோரின் திட்டங்களுக்கு - இது நீண்டநாள் கோரிக்கை - தாமதமின்றி ஒப்புதல் அளிக்க ஒற்றைச் சாளர முறையும், அதாவது Single window system; தகவல் தொழில் நுட்பம் - தகவல் தொழில் நுட்பம் என்று சொன்னால் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே தொழில் தொடங்க வேண்டுமென்று சொன்னால் முதலாளிகளெல்லாம் Infrastructure basis வேண்டுமென்று சொல்கிறார்கள். அதாவது INTERNET வசதி, தொலைபேசி வசதி, Computer வசதி இதெல்லாம் இருந்தால்தான் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். இதை மனதிலே வைத்துத்தான் 1984 ஆம் ஆண்டு இந்தியாவினுடைய இளைஞர்களின் எழுச்சி நாயகனாக விளங்கிய இராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக வந்தபொழுது ஒரு புரட்சிகரமான திட்டத்தை இந்தியாவிலே கொண்டு வந்தார். அதாவது Tele Communications-இலே ஒரு புரட்சியைச் செய்தார்கள், தொலைபேசி வசதியிலே. அதற்குப் பக்கபலமாக இருந்து உதவியாக இருந்த சாம்பெட்ரோடா, அவர் மிகப்பெரிய நிபுணர் இதிலே. நமது முதலமைச்சரவர்கள் இன்றைக்கு சாம்பெட்ரோடாவோடு தொடர்பு கொண்டு தமிழகத்திலே, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு புதுமையை இன்றைக்குத் தொழில் துறையில் ஒரு புரட்சி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு, INTERNET தமிழ் இணையம் மூலமாக INTERNET



வசதியை WORLD TEL நிறுவனத்தோடு சாம்பிரோடா மூலமாகத் தமிழகத்திலே பட்டிதொட்டியெல்லாம் இன்றைக்கு INTERNET உருவாக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள அந்த முயற்சியை நான் உளமார வரவேற்கிறேன்.

1996, 1997, 1998 ஆம ஆண்டில் மட்டும் இந்தியாவிலேயே கார் தொழிற்சாலைகள், ஹூண்டாய், மிட்சுபிஷி, ஃபோர்டு போன்ற தொழிற்சாலைகள் -இவைகளெல்லாம் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன, குறுகிய காலத்தில். இதற்கு முன்பு 1991-96-ல் ஒரு வெளிநாட்டுக்காரர் வந்து பார்க்க வேண்டும் என்றால் ஒரு மாதம் அவர் கன்னிமாரா ஹோட்டலிலே இருக்க வேண்டும். அனுமதி வாங்குவதற்கு 2 கோடி. அதாவது, அனுமதி வாங்குவதற்கு என்று சொன்னால், பார்ப்பதற்கு அனுமதி வாங்கிக் கொடுப்பதற்கு; பார்த்துப் பேசிய பிறகு 500 கோடி; 2,000 கோடி மூலதனம் என்று சொன்னால் அதிலே 10 சதவீதம். அவர்களெல்லாம் அப்படியே போய்விட்டார்கள். அதாவது, பெங்களூர், குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களுக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள் அவர்களெல்லாம். அந்த 1991-96-ல் மட்டும் இங்கே வரவேண்டிய 4 இலட்சம் கோடி ரூபாய் மற்ற மாநிலங்களுக்குச் சென்றுவிட்டன. ஆனால், இந்த 2½ ஆண்டு காலத்தில் மிட்சுபிஷி, அதாவது, கார் தொழிற்சாலைகள், அதோடு இல்லாமல் அந்தத் தொழிற்சாலைகளுக்கு உதிரி பாகங்கள் தயாரிப்பதற்கு 710 கோடியில் ஆட்டோ துணை பாகங்கள் உற்பத்தி தொழிற்சாலை; 600 கோடி ரூபாய் செலவில் மணலியில், Tamil Nadu Petrochem Park Limited; தரமணியில் 320 கோடி ரூபாய் முதலீட்டில் TIDEL Software Technology Park—மென்பொருள் தொழில் நுட்பப் பூங்கா மற்றும் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டத்தில் உயர்தொழில் நுட்பப் பூங்கா ஒன்றினை ரூபாய் 800 கோடி முதலீட்டில் செயல்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-55

திருநெல்வேலி மாவட்டம் தொழில் துறையிலே மிகவும் பின்தங்கிய மாவட்டம். தொழில் துறையிலே பின்தங்கிய மாவட்டம் என்பதால் அங்கே பிரச்சினை உருவாகிறது, சாதிக் கலவரங்கள். உடனே சாதிக் கலவரங்களைப் பயன்படுத்தி படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களை எல்லாம் பயன்படுத்தி, சாதிச் சங்கங்கள் ஆரம்பித்து அதன் மூலமாக இலாபம் சம்பாதிக்கிறார்கள். யார் சம்பாதிக்கிறார்கள் என்றால் சாதிச் சங்கத் தலைவர்கள் சம்பாதிக்கிறார்கள். அதை ஒரு

முடிவுக்குக் கொண்டு வருவதற்காக திருநெல்வேலி மாவட்டத்திலே நாங்குனேரி வட்டத்தில் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தொழில் முதலீட்டுத் திட்டம். ஆனால் இவ்வளவு தொழிற்சாலைகள் திறந்திருந்தாலும் இந்த 2½ ஆண்டு காலத்தில் 3 ஆண்டு காலத்தில் மூடியிருக்கின்ற தொழிற்சாலைகள் பலவாகும். தற்போது ஒரு கேள்விக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, திறக்கவே முடியாத சூழ்நிலையில் இங்கே 28 தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன என்று சொன்னார்கள். அது மிகவும் மன வருத்தத்தை ஏற்படுத்தக்கூடிய பிரச்சினை. (மணியடிக்கப்பெற்றது) ஏனென்றால் திறக்கவே முடியாது என்று சொன்னால் அது பொதுமக்களுக்கு அல்லது படித்து வேலையில்லாதவர்களுக்கு, அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றுகிறவர்களுக்கு மனவேதனையாக இருக்கும். எனவே, அவற்றைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல டன்லப் தொழிற்சாலை, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவராமன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, 10, 11 நிமிடங்கள் ஆகிவிட்டன. பேரவைத் தலைவர் ஒதுக்கியது 10 நிமிடங்கள்தான். அவர் சொல்படிதான் நான் நடக்கமுடியும். உங்களுக்கு 10 நிமிடங்கள்தான், உட்காருங்கள். திரு ஆர். சிவராமன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 நிமிடங்கள் கொடுங்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 12 உறுப்பினர்கள் பேச வேண்டும். தொடங்கி வைப்பவருக்கு 10 நிமிடங்கள், மற்றவர்களுக்கு 7 நிமிடங்கள். பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டுப் போனதைத்தான் நான் செய்கிறேன். திரு ஆர். சிவராமன்.

**திரு ஆர். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....



**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள், 5 நிமிடங்கள் தரமுடியாது.

**திரு. ப. ரங்கநாதன்:** அரக்கோணம் ஸ்டீல் தொழிற்சாலை, பி & சி ஆலை, அதுபோல பல சாயப்பட்டறைத் தொழிற்சாலைகள், துணிநூல் தொழிற்சாலைகள், தோல் தொழிற்சாலைகள் என்று தமிழகத்திலே பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன பல மாதங்களாக. அவைகளைத் திறப்பதற்கு, நீதிமன்றங்களின் தலையீட்டால் மூடியிருந்தாலும், நீதிமன்றங்களை அணுகி அவைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து கடந்த 1997 ஆம் ஆண்டு இதே மாமன்றத்தில் முதலமைச்சர் அவர்கள் சிறுதொழில் நிறுவனங்களுக்கு 1959 ஆம் ஆண்டு போட்ட சட்டத்தைத் திருத்தி, அதாவது 15 விழுக்காடு சலுகை விலைக் கொள்முதல், அதை மாற்றி ஓர் உத்தரவு பிறப்பித்தார்கள். அதனால் இப்போது தமிழ்நாட்டில் பல சிறுதொழில் நிறுவனங்கள் நலிந்துபோகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. சிறுதொழில்களால்தான் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பே அதிகமாக கிடைக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை மாற்ற வேண்டும். உடனடியாக மாற்றினால்தான் அந்தச் சிறுதொழில்களுக்கு புத்துயிர் கொடுக்க முடியும். அதுமட்டுமல்ல, இன்னொரு பிரச்சினை அதிலே இருக்கிறது. இந்தச் சிறுதொழிலில் கொள்முதல் செய்வதற்கு அரசுத் துறையைச் சார்ந்த நிறுவனங்களின் தலைவர்கள், நிர்வாக இயக்குநர்கள் எல்லாம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கிறார்கள். அதாவது, Technical Bid, Commercial Bid என்று. தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி, வணிக ஒப்பந்தப்புள்ளி. இந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் சரியாக இருந்தாலும் அவர்கள் வேறொரு ஷரத்தை அதில் போடுகிறார்கள். அது என்ன ஷரத்து என்று சொன்னால் Technical Bid-ல் Selection ஆகி Commercial Bid-க்கு போகும்போது இந்தத் தொழிற்சாலை, அதாவது அந்த இரண்டிலும் தேர்வு செய்யப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் selection ஆன அந்தத் தொழிற்சாலை இதற்கு முன்பு எத்தனை டன்கள் சப்ளை செய்திருக்கிறது, வியாபாரம் செய்திருக்கிறார்கள் என்று அதைக் கொண்டு தள்ளுபடி செய்கிறார்கள். ஒட்டுமொத்தமாக தமிழகத்திலே உற்பத்தியாகின்ற பொருட்கள், சிறுதொழில் மூலமாக உற்பத்தி செய்யப்படுகிற பொருட்களைத்

தமிழகத்திலே இருக்கிற அரசுத் துறை நிறுவனங்கள் கொள்முதல் செய்தால்தான் தமிழகத்திலே வேலைவாய்ப்பு அதிகமாக உருவாகும். அதைக் கணக்கிலே வைத்துத்தான் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் 1959 ஆம் ஆண்டு S.S.I. Units-க்கு 15% Price Preference தந்தார்கள். அதை நீங்கள் மீண்டும் கொண்டு வந்தால்தான் தமிழ்நாட்டிலே வேலைவாய்ப்பு அதிகமாக ஏற்படும் என்று சொல்லி, எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு ஆர். சிவராமன்.

*முற்பகல் 11-00*

**திரு. ஆர். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் அரங்கமே உற்றுக் கவனிக்கின்ற வகையில் உயர்ந்து விளங்குகின்ற, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராகத் திகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய, தமிழக முதல்வர் அவர்களை வணங்கி, ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இன்றையதினம், இந்திய நாட்டிலே உள்ளடங்கிய மாநிலங்களில் தமிழகம் தொழில் துறையில் இரண்டாம் இடத்தில் சிறந்து விளங்குகின்றது. சிறந்து விளங்குவதற்குக் காரணம், தமிழக முதல்வர் அவர்களுடைய உழைப்பால், எதையும் எதிர்பாராமல், தொழில் தொடங்குவதற்கு வருகை தரக்கூடிய அனைவரிடத்திலும் எந்த நேரத்திலும் சந்திக்கக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த காரணத்தினால், உலகத்தில் இருக்கக்கூடிய தொழிலதிபர்கள் எல்லாம் தமிழகத்தை நாடி வந்து கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, தமிழகம் பல்வேறு தொழில் துறைகளில் வளர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்திலே, கடந்த ஆட்சியை நான் நினைத்துப் பார்க்கிறேன். கடந்த காலத்திலே முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தவர்களை, எந்த நாட்டிலிருந்து யார் தொழில் தொடங்க வருகை தந்தாலும், மாநிலத்தினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய முதலமைச்சரை நேரில் சந்திக்க முடியாது. அதற்கு மாறாக, அவர்களுடைய ஏஜெண்டுகளை மட்டுமே சந்திக்க முடியும். அப்படி அந்த ஏஜெண்டுகளைச் சந்தித்தாலும், அவர்கள் நிர்ணயிக்கக்கூடிய தொகையை வழங்கினால்தான் தொழில் தொடங்குவதற்கு வாய்ப்பு வழங்கினார்கள். அப்படி அவர்கள் எதிர்பார்த்ததை வழங்குவதற்கு அந்தத் தொழிலதிபர்கள் மறுத்தால், அவர்களுக்கு அனுமதி இல்லை என்ற நிலையில் கடந்த காலத்தில் ஆட்சி நடந்து கொண்டிருந்தது.



அந்த நிலைமை மாறி, இப்போது தமிழகம் தொழில் துறையில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அப்படித் தொழில் துறையில் வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய நமது மாநிலத்தில் 'கிராம மக்களால் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள், உள்நாட்டுச் சந்தையிலும், வெளிநாட்டுச் சந்தைகளிலும் விற்பனைக்குச் சென்றால்தான், இந்திய நாடு பொருளாதாரத்தில் வளம்பெறும்' என்று கூறிய மகாத்மா காந்தி அவர்களுடைய கருத்திற்கிணங்க, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தொழில் துறையில் முழுமையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில், நம்முடைய முதலமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்; தென் மாவட்டங்களில், குறிப்பாக என் தொகுதி தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கியிருக்கிறது. சாதிப் பிரச்சினைகள் உருவாவதற்கு என்ன காரணம் என்று ஆராய்வதற்காக நீங்கள் அமைத்த நீதிபதி மோகன் கமிஷன்கூட, தென் மாவட்டங்களில் படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்காத காரணத்தால், சாதிப் பிரச்சினைகள் உருவாகிறது; ஆகவே, தென் மாவட்டங்களில் தொழில்கள் தொடங்கப்பட்டு, அதன்மூலமாக அனைவரும் வேலை பெறக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் வெளியிட்டிருக்கிறது. ஆகவே, தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்'. உங்களால்தான் அதனைச் செய்து முடிக்க முடியும். வரலாற்றுச் சிறப்பு மிகுந்த செயல்பாடுகளைச் செய்து முடித்து நிறைவேற்றிக் காண்பித்த பெருமை உங்களுக்கு உண்டு. அவற்றை அதன் அடிப்படையிலே, தென் மாவட்டங்களிலே உள்ள ஒவ்வொரு தொகுதியிலும், அங்கே கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களை அடிப்படையாக வைத்து, தொகுதியில் குறைந்தது 500 பேர்களுக்காவது வேலை கொடுக்கக்கூடிய வகையிலே அரசின் சார்பிலே தொழிற்சாலைகளை நீங்கள் தொடங்கவேண்டும். உங்களால்தான் அதைச் செய்து முடிக்க முடியும். ஏனென்றால், தமிழகத்திலே, இந்திய நாட்டில், எவரும் செய்யமுடியாத அளவுக்கு சமத்துவபுரத்தைக் கண்டவர் நீங்கள்; தமிழகத்திலே, அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தைக் கண்டவர் நீங்கள்; நமக்கு நாமே திட்டத்தைக் கண்டவர் நீங்கள்; ஏழையெளிய குடும்பத்திலே பிறந்த பெண்கள் தங்களுக்குத் திருமண வாழ்வு உண்டா என்று அச்சப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்தவர்களுக்கு, அவர்களுக்கும் திருமணம் நடக்கும் என்று திருமண உதவித் தொகையை வழங்கியவர் நீங்கள்; ஆகவே, உங்களால்தான் முடியும். மொத்தத்தில் சொல்ல வேண்டுமென்றால், எத்துறையானாலும் அத்துறையில் அனைத்திலும் தனி முத்திரையைப் பதிக்கக்கூடிய தமிழக முதல்வராக

நீங்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, தென் மாவட்டங்களில் உங்கள் ஆட்சியில், உங்கள் காலத்தில் தொழில்கள் தொடங்கக்கூடிய வாய்ப்பை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நான் சார்ந்திருக்கக்கூடிய தொகுதியிலுள்ள கிரானைட் தொழிற்சாலை இப்போது பல்வேறு தனி நபர்களிடத்திலே முடங்கிக் கிடக்கிறது. கடந்தகால ஆட்சியிலே 39 என்ற சட்டத்தைப் பயன்படுத்தி;. அரசினுடைய நிலங்களை தனி நபர்களுக்கு, தனக்கு யார் அதிகம் பொருள்களைக் கொடுத்தார்களோ, பணம் கொடுத்தார்களோ அவர்களைப் பட்டியலிட்டு, அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அனுமதி வழங்கியது போக, நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பீடத்திற்கு வந்ததற்குப் பிறகு, அவர்கள் கொடுத்த நிலங்கள் போக, மீதம் இருக்கக்கூடிய நிலங்களை நமது அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு open tender மூலமாக ஏலம் விடப்பட்டு, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் நமது அரசுக்கு வருமானம் வந்திருக்கிறது. அதைக் கணக்கிட்டு கடந்த காலத்தில் 39-ஆவது சட்டத்தின்படி எடுக்கப்பட்டவர்களுக்கு அரசினுடைய தொகையை வழங்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருந்தாலும் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்று இன்றும் அரசினுடைய பொருட்களைக் கொள்ளை அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அரசோடு ஒப்பந்தம் செய்கிற பல்வேறு சட்டத்திட்டத்திற்கு உட்பட்டுதான் அந்தத் தொழிலைத் தொடங்க வேண்டுமென்ற அடிப்படையில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி எவருமே அரசினுடைய நிலங்களில் இப்போது தொழிலை நடத்தவில்லை. ஆகவே, அதனை ஆராயக்கூடிய வகையிலே ஒரு குழுவை அமைத்து போர்க்கால அடிப்படையிலே இதுபற்றி ஆராய்ந்து, அவர்களுடைய உரிமத்தை இரத்து செய்யக்கூடிய வகையிலே -அதற்கு நடவடிக்கை எடுத்து, மீண்டும் அந்த நிலங்களை ஏலத்தில் விடப்படுவதன் மூலமாக அரசுக்கு பல கோடி ரூபாய் வரக்கூடிய அளவிற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

இந்தச் சிறப்பு மிகுந்த தொழில் மானியத்திலே என்னுடைய தொகுதியைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில்



கயிறு தொழில் இருக்கிறது. பல தனி நபர்கள் இதனை நடத்தி கொண்டு இருக்கிறார்கள். அதன்மூலமாக பல இலட்சம் ரூபாய் அளவுக்கு மாதத்திற்கு வியாபாரம் அங்கு நடந்து கொண்டிருக்கின்றது. எனவே, இதனை உணர்ந்து, என்னுடைய தொகுதியிலே கயிறு தொழிற்சாலையினை அமைத்து, அதன்மூலமாக குறைந்தது 500 நபர்களுக்காவது வேலை வழங்கக்கூடிய வாய்ப்பை தமிழக முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் கூறுகிறேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்களால்தான் முடியும், எங்களுடைய தென் மாவட்டங்களில் ஜாதிப் பிரச்சினை உருவாகாமல் இருப்பதற்கு, அங்கு தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்பினை உருவாக்கித் தாருங்கள்; எனது தொகுதியில் ஒரு தொழிற்சாலையினை உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். கனிம வளத்திலே ஏமாற்றுக்காரர்களை அடையாளம் கண்டு, மீண்டும் அரசு அந்த இடத்தைப் பற்று, ஏலத்திற்கு விட்டு அரசுக்கு பல கோடி ரூபாய் இலாபம் கிடைக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தாருங்கள், தாருங்கள் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சிறப்பு மிகுந்த தொழில் மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 7 நிமிடங்களில் எதை விடுவது, எதைத் தொடுவது என்று தெரியவில்லை. தொழில் துறை மானியத்தின் மீது சில மானியங்களைப் போல ஒரு இரண்டு நாட்கள் விவாதமாக இருந்தால் விரிவாகப் பேசுவதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். இருந்தாலும், இந்த 7 நிமிடங்களுக்குள் சொல்ல வேண்டிய ஒன்றிரண்டை சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன்.

முதலிலே பஞ்சாலைத் தொழில். தமிழ்நாட்டில் ஏறத்தாழ இரண்டரை இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரு பழம்பெரும் தொழில். இந்தத் தொழில் கடும் நெருக்கடியில், அதன் வரலாற்றிலே இதுவரையிலே இல்லாத அளவிற்கு ஒரு கடுமையான நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. அது குறித்த விவரங்கள் முழுவதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரிடையாக எல்லா தரப்பையும் அழைத்துப் பேசி சேகரித்து இருக்கின்றார்கள். அதன்மீது முதலமைச்சர் அவர்கள் ஏதாவது தீர்வு

சொல்லக்கூடும் என்று நம்பிக்கையோடு தொழில் சார்ந்தவர்களும், தொழிலாளர்களும் காத்திருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நெருக்கடிக்கு காரணம் என்ன, ஏது என்ற விவரங்களுக்குள் நான் ஆழமாகச் செல்ல விரும்பவில்லை. ஆனால், நெருக்கடியிலே ஏறத்தாழ 300 தொழிற்சாலைகள் இந்தப் பஞ்சாலைகளிலே மட்டும் மூடிக் கிடக்கின்றன. இயங்கிக் கொண்டிருக்கின்றவைகள் கூட அவ்வளவு நல்ல முறையில் இயங்கவில்லை என்பதையும் நான் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதற்கான விவரங்கள் விரிவான முறையிலே, கோரிக்கையாக முதலமைச்சர் அவர்களுக்கு தரப்பட்டு இருக்கின்றன. அதன்மீது அவர்கள் பதில் அளிக்கின்றபோது, இந்தப் பஞ்சாலைத் தொழில் நெருக்கடியிலே மத்திய அரசு மட்டத்தில், மாநில அரசு மட்டத்தில், அவற்றை நெருக்கடியிலிருந்து மீட்டு அவை இயல்பான நிலையை மேற்கொள்வதற்கான காரியங்கள் என்ன எடுக்கப்பட இருக்கின்றன என்பது குறித்து விளக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, பொதுத் துறை நிறுவனங்கள். இதுபற்றி தனியாகவே ஒரு விவாதம் செய்ய வேண்டிய அவசியமே இருக்கிறது. அதிலும் குறிப்பாக, டான்செம். டான்செம் நடவடிக்கைகளிலே வருந்தத்தக்க சில விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக மாயனூரில் இருக்கிற தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் குழாய்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இதுவரை வாங்கப்பட்டு வந்தது. ஆனால், 19-2-1997 ஜி.ஓ.-படி 'ட்வாட்' பகிரங்க ஏலத்தின் மூலம் குழாய்கள் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது. இது இந்த அரசு நிறுவனத்தின் நடைமுறையை பாதிக்கிறது. 'ட்வாட்' தன்னுடைய தேவை முழுவதையும் மாயனூர் ஆஸ்பெஸ்டாஸ் என்ற தொழிற்சாலையிலிருந்துதான் வாங்கிக் கொண்டிருந்தது. ஆனால், இப்போது என்னவென்று சொன்னால் அங்கிருந்து வாங்குவதில்லை, இராஜஸ்தானிலிருந்து வாங்குகிறார்கள். இராஜஸ்தானிலிருந்து வாங்குகிற குழாய்கள் கூட மாயனூர் குழாய்கள போல தரமானது அல்ல.

முற்பகல் 11-10

ஆனால், இந்த மாயனூர் தொழிற்சாலை நடைமுறையில் இயங்காமல் இருப்பதற்கு நம்முடைய தொழில் துறை செயலாளரேகூட அதிக அக்கறை செலுத்துகிறாரோ என்று நான் அஞ்சுகிறேன். ஏனென்றால்,



இந்தத் தொழில் நடைபெறுவதற்கு நடைமுறையில் என்ன என்ன இடையூறுகள் இருக்கின்றன; டான்செம் நிறுவனத்திலே நடைபெற்று வருகின்ற முறைகேடுகள் என்ன என்பதை அந்தப் பணியாளர் சங்கங்கள் கூட, எல்.பி.எப். சார்ந்த பணியாளர் சங்கங்கள்கூட, ஆதாரபூர்வமான பல புகார்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அதேபோல், தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறது. அவற்றின் நகல்கள் வேண்டுமானால் என்னிடம் இருக்கின்றன. அதன்மீதும் விசாரித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவற்றை காப்பாற்றவில்லை என்றால், உண்மையிலேயே கடுமையான நெருக்கடி ஏற்பட்டுவிடும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதே இராஜஸ்தானிலே வாங்குகின்ற குழாய்கள்கூட, எப்படியெல்லாம் slander செய்கிறார்கள் என்பதற்காக நான் குறிப்பிடுகிறேன். இராஜஸ்தானிலே இருந்து வாங்கிய குழாய்கள், பதிக்கப்பட்டவுடன் வெடிக்கின்றன வெடித்தவுடன் இந்த மாயனூர் தொழிற்சாலை இயங்கக்கூடாது என்று விரும்புகிற தொழில் துறையில் சில குறிப்பிட்ட அதிகாரிகள், இது மாயனூர் குழாய்தான் வெடிக்கிறது என்று சொல்லி, மாயனூர் குழாய் செல்லுபடி ஆகாத ஒரு கருத்து நிலையை ஆதாரப்படுத்தி, உருவாக்குகிற முயற்சியை மேற்கொள்கிறார்கள் என்பதையும் நான் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, எதிர்காலத்தில் 'ட்வாட்' தன்னுடைய நூற்றுக்கு நூறு சத தேவைகளையும் நம்முடைய மாயனூர் ஆஸ்பெஸ்டாஸ் குழாய் நிறுவனத்திடமிருந்து பெற வேண்டும் என்பதற்குரிய ஆணையை மாநில அரசு வெளியிட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்தத் தொழில் துறை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நான் ஒரு விஷயத்தை மனந்திறந்து பாராட்ட விரும்புகிறேன். ஏனென்றால் நீண்டகாலமாக தமிழ்நாடு பின்தங்கியிருந்த நிலையிலிருந்து இந்திய அளவிலே தொழில் துறைக்கு முதலீடு செய்யப்படுவதில் 11.50 சதவிகிதம் இன்றைக்கு தமிழ்நாடு பெற்றிருக்கிறது என்பது மனநிறைவோடு பாராட்டத்தக்க ஒரு விஷயமாகும்.

அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு தொழில் துறையில் மிகுந்த வளர்ச்சி அடைய வேண்டுமென்பதில் அப்பழுக்கற்ற ஆர்வம் கொண்டிருக்கிறார் என்பதையும் நான் அறிவேன். அவருடைய ஆர்வம் வெற்றி பெறுவதற்கு நடைமுறையில் நிர்வாக ரீதியில் பல சிக்கல்கள், இடையூறுகள் இருக்கின்றன. அந்த இடையூறுகள்

குறித்த பல்வேறு விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. ஆனால், அந்த விவரங்களையெல்லாம் முன்வைப்பதற்கு எனக்கு நேரம் இல்லை. நான் குறிப்பாக ஒரு விஷயத்தை மட்டுமே சொல்கிறேன். தொழில் துறையில் பொறுப்பாக இருக்கக்கூடிய அரசுச் செயலாளர் இந்தத் தொழில் துறையின் பொதுத் துறை நிறுவனங்களை நடைமுறையில் நிலை குலைக்கின்ற செயலுக்கு துணையாகிவிட்டாரோ என்று சந்தேகிப்பதற்குரிய சில விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அது நல்லதல்ல என்பதைத் தெளிவாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை.

நிறைவாகச் சொல்ல விரும்புவது, தென் மாவட்டங்கள். அதேபோல இன்னொரு பாராட்டத்தக்க விஷயம்—தென் மாவட்டங்களிலே மிகவும் பின் தங்கிய நிலை, நாங்குநேரியில் 800 கோடி மதிப்பீட்டில் தொழில் பூங்கா தோன்றுவதற்குரிய இடம் கையகப்படுத்தப்பட்டு, நிறைவு அடைந்திருக்கிற பல விஷயங்கள் பாராட்டத்தக்க விஷயங்கள். தென் மாவட்டங்களில் சமூக விரோதிகள் சிற்றரசர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமூக விரோதிகள் பல்வேறு அமைப்புகளின் பெயர்களில் சிற்றரசர்களாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதற்கு ஒரு முடிவு காண வேண்டுமானால், தொழில் துறையில் தென் மாவட்டங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற வேண்டும் என்பதில் அரசு அக்கறைக் கொண்டுள்ளது என்பதெல்லாம் இந்த விவரங்களிலிருந்து நன்றாகத் தெரிகிறது.

அதேபோல மின் துறை. தொழில் துறை வளர வேண்டுமானால், மின் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நம்முடைய மாநில அரசு இந்தத் தொழில் குறிப்பிலேகூட 40,000 கோடி ரூபாய்ச் செலவில் கிட்டத்தட்ட 12,000 மெகாவாட் மின்சாரத்தை அடுத்த 7 ஆண்டு காலத்தில் உற்பத்தி செய்கின்ற வகையில் ஒரு நீண்டகால கண்ணோட்டத்தோடு, அதாவது தொழில்மயப்படுத்துகிற வேகத்திற்கு இணையான வேகத்தில் மின் உற்பத்தியை கொண்டு வருவதில் மிகுந்த நுண்மாண் நுழைபுலத்தோடு ஊடுருவி திட்டங்களை வகுப்பதில் முனைப்போடு செயல்படுகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பாராட்ட விரும்புகிறேன்.

நிறைவாக ஒரே ஒரு விஷயம். திருப்பூர் ஒரு தொழில் நகரம். அந்தத் தொழில் நகரம் திருப்பூரிலே Infrastructure என்பது Collapsed.



நிலைகுலைந்து போய் விட்டது. நடைமுறையில் இல்லை. ஓர் ஏற்றுமதி நகரம், பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை பெற்றுத் தருகிற நகரத்திற்கு இயல்பாக இருக்க வேண்டிய Infrastructure அந்தக் கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை. அதை உருவாக்குவதில் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கும், அதேபோல நகராட்சிக்கும், பிற நகராட்சிகளைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் கொடுத்து, அது ஓர் ஏற்றுமதி நகரம் என்பதால் அதனுடைய கட்டமைப்பை ஒழுங்கமைக்க கவனம் செலுத்த வேண்டும். அதேபோல் இந்தப் புதிய மேம்பாட்டு திட்டத்திலேகூட ஒரு விஷயத்தை நான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். திருப்பூரிலே வடக்கு பகுதியிலே ஒரு துணை நகரம் - புதிய திருப்பூர் நகரத்தை உருவாக்குவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு, அது இப்போது என்ன ஆகியிருக்கிறது என்றால், சில ரியல் எஸ்டேட் அதிபர்கள், விவசாயிகளுடைய நிலங்களை அடிமாட்டு விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு, அரசு புதிய நகரங்களை அங்கே உருவாக்குவதன் மூலம் அதைச் சுற்றியிருக்கிற ஒரு 10 ஊராட்சிகளில் வாழ்கிற நூற்றுக்கணக்கான கிராமங்களில் நில மதிப்பு கூடி, வறண்ட பகுதிகளில் வாழ்கிற அந்தக் கிராமப்புற மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக இந்த ரியல் எஸ்டேட் அதிபர்கள் பல்வேறு வகைகளில் இன்புளுயன்ஸ் செலுத்தி ஹைகோர்ட்டில் ஸ்டே வாங்கிவிட்டார்கள். இனிமேல் ஸ்டே வெக்கேட் ஆகாமல் தடுப்பதற்கான முறையிலும் வேலை செய்கிறார்கள். எனவே, போர்க்கால வேகத்தில் அந்த ஸ்டே வெக்கேட் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேச அனுமதி கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் நான் மூன்றாவது முறையாகப் பேசிக் கொண்டிருக்கின்றேன். முன்பு பேசும்போது, ராசிபுரம் ராசி இல்லாத புரமாக இருக்கின்றது. ஆகவே, அந்த ராசிபுரத்தில் ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று இரண்டு முறை

பேசிவிட்டேன். அப்போது முதல்வர் அவர்களும் அவருடைய பதிலுரையில் ராசிபுரத்தில் கண்டிப்பாக ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்கப்படும் என்று கூறினார்கள். முதல்வர் அவர்களுக்கு இந்தப் புராணங்களும் இதிகாசங்களும் என்னைவிட அதிகமாகத் தெரியும் என்ற காரணத்தினால் அவரிடம்கூட நான் இந்த மகாபாரதப் போரைப் பற்றிக்கூட நான் விளக்கமாகப் பேசினேன். அதாவது சேலம் மாவட்டம் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு, நாமக்கல் மாவட்டத்திற்கு ராசிபுரத்தைத் தலைமையிடமாகக் கேட்டோம், அதுவும் இந்த அரசு கொடுக்கவில்லை. வருவாய்க் கோட்டத்தை உருவாக்கிக் கொடுங்கள் என்று கேட்டோம். அதுவும் நடக்கவில்லை. அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் சேலம்—திருச்சி என்.எச்.-லே இருக்கின்ற அந்த இடத்திலே அமைக்க வேண்டுமென்று கேட்டோம். அதுவுமே முடியவில்லை. ஆகவே, மகாபாரதத்திலே எப்படியென்றால், பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் சண்டை நடந்தபோது அந்தப் பாண்டவர்கள் அனைத்தையுமே இழந்துவிட்டு அவர்கள் நிர்கதியாக நின்றபொழுது அவர்கள் 5 பேர்களும் தாங்கள் குடியிருப்பதற்கு 5 சிற்றூர்களைக் கேட்டு, அவர்களும் கொடுக்க முடியாது என்று கூறி, சரி 5 வீடுகளாவது கொடுங்கள் என்று கூறி, அதுவும் இல்லை என்று கூறி, இறுதியாக 5 அடி நிலமாவது வேண்டுமென்று கேட்டார்களாம். அப்போது அவர்கள் குத்தூசி குத்துவதற்குக்கூட நாங்கள் உங்களுக்கு இடம் கொடுக்க முடியாது என்று கூறியதற்குப் பிறகுதான் அங்கே ஒரு மகாபாரதப் போரே உண்டானது என்றுகூடக் கூறினார்கள். இதைத் தங்களுக்கு நான் எடுத்துக்கூறி அப்போதும் நான் கூறினேன். அப்போது முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், "மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் ஒன்றாவது கொடுக்கக் கூடாதா என்று கேட்டார். நிச்சயமாக ஏதாவதொரு தொழிற்சாலை ராசிபுரத்திலே அமைக்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று, ஒருமுறை அல்ல இரண்டு முறை பதிலுரையிலே கூறியிருக்கின்றார்கள். ஆனால், சொன்னதைச் செய்கின்ற அரசு என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நீங்கள் இதுவரை தொழில் முனைவோர் கருத்தரங்கைக்கூட என்னுடைய தொகுதியிலே நடத்தவில்லை. அதனால்தான் நான் உண்ணாவிரதம்கூட இருந்தேன் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கின்றேன்.



அடுத்தபடியாக, எங்களுடைய நாமக்கல் மாவட்டத்தில் சாயப் பட்டறைகள், ஜவ்வரிசி ஆலைகள் கிட்டத்தட்ட 1,000 சாயப்பட்டறைகள், நூற்றுக்கணக்கான ஜவ்வரிசி ஆலைகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் அந்த மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில், அவர்கள் கூறியபடி அந்தச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவில்லை என்பதற்காக உச்ச நீதிமன்றத்திலே தடையாணைப் பெற்றிருக்கிறார்கள். இருந்தபோதிலும் அரசாங்கம் சரியான முறையிலே அதற்கு அணுகி, நீங்கள் அந்த உத்தரவையெல்லாம் நீக்கி, அந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் நீங்கள் உடனடியாகத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த 3 ஆண்டு காலத்தில் மத்திய அரசினுடைய தொழிற்சாலைகள் எதுவுமே இதிலே இருக்கிறதா என்று கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்துப் பார்த்தால் எதுவுமே இல்லை. 2 ஆண்டு காலம் உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் தொழில் துறை அமைச்சராககூட இருந்தார்கள். ஆனால், ஒரு திட்டம்கூட வரவில்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, தொழிலுக்குத் தேவையானது மின்சாரம். இந்த மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இந்த 3 ஆண்டு காலங்களில் நீங்கள் எத்தனை மெகாவாட் மின்சாரம் தமிழ்நாட்டில் தயாரித்திருக்கிறீர்கள்? இந்த 3 ஆண்டுகளில் நீங்கள் எடுத்த நடவடிக்கை என்பது, 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் நீண்டகாலத் திட்டம் என்று கூறிக் கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் இந்த 3 ஆண்டு காலத்தில் மின்சாரம் உற்பத்தியாகவில்லை. ஒழுங்காக மின்சாரம் உற்பத்தியாகி இருந்தால், இன்னும் இங்கே தொழில் வளர்ச்சி அடையும், அடைந்திருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, இந்தக் கார்த் தொழிற்சாலைகளெல்லாம் ....

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடக் கூடாது என்றுதான் இருந்தேன். இருந்தாலும் உண்மைக்கு மாறாகக் கருத்து சொல்லும்போது குறுக்கிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மின்சாரம் உற்பத்தி செய்வது என்பது திங்கட்கிழமை நினைத்து செவ்வாய்க்கிழமை உற்பத்தி செய்வதில்லை. ஒரு திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்றால், குறைந்தது 15 மாதங்களிலேயிருந்து 3 ஆண்டுகாலம் வரை ஆகும்.

அதுவே நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டு மின்சாரம் தயாரிப்பது என்றால் நான்கு ஆண்டு காலம் ஆகும். எனவேதான், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு ஏறக்குறைய 8 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தங்கள் எல்லாம் இன்றையதினம் அனுமதிக்கப்பட்டு, அதிலே ஜி.எம்.ஆர். வாசவி என்ற மின் நிலையம் 200 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களும் திறந்துவைத்தார்கள். அதைப்போல பேசின் பாலத்திலே 130 மெகாவாட் மின்சாரம் இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகுதான் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-20

அதைப்போல, கும்மிடிப்பூண்டியிலே தனியார் மின்சார நிலையம் 63 மெகாவாட் உற்பத்தியாகி இப்போது மின்சார வாரியத்திலே இணைப்புக்கொடுக்க இருக்கிறார்கள். அதைப்போலவே மால்கோ நிறுவனம் 75 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அனைத்து பணிகளும் முடிவுபெற்று அவர்களும் மின்சாரத்தை மின்சார வாரியத்தோடு இணைக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஓரிரு ஆண்டுகாலத்திலே 500, 600 மெகாவாட் மின்சாரம் இந்த அரசாங்கத்திற்குக் கிடைக்கவிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மின்சாரமானது எப்படி திங்கட்கிழமை ஆரம்பித்து வெள்ளிக்கிழமை உற்பத்தி செய்ய முடியாதோ அதேபோலதான், நீங்கள் குறிப்பிட்டு இருக்கிறீர்களே Ford, Hyundai, Mitshubhishi இந்த கார் தொழிற்சாலைகள் எல்லாம ஜனவரியிலே ஆரம்பித்து, டிசம்பரிலே முடியாது. நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள், இந்தக் தொழிற்சாலைகள் எங்களுடைய ஆட்சிக்காலத்திலே வந்தது என்று. நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன், ஃபோர்டு கார் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு அடிக்கல் நாட்டினார்கள். அடுத்தபடியாக இந்த Hyundai கம்பெனியைப் பொறுத்தவரையில் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் அப்போது தொழில் துறைச் செயலாளராக இருந்த சி. இராமச்சந்திரன் அவர்கள்கூட (மணியடிக்கப்பெற்றது) இன்னும் நான் ஆரம்பிக்கவேயில்லை. நீங்கள் time-ஐப் பாருங்கள்; எனக்குக் கொஞ்சம் time-ஐக் கொடுங்கள்.



அடுத்தப்படியாக இந்த Hyundai கம்பெனியைப் பொறுத்தவரையில் எங்களுடைய ஆட்சிக்காலத்திலே அதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. நீங்கள் Mitshubhishi -ஐப் பொறுத்தவரையில் அதையெல்லாம் கூறியிருக்கிறீர்கள். 1995 டிசம்பரில் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே அவர்கள் எல்லாம் வந்து அவர்களோடு பேச்சுவார்த்தை நடந்து, அவர்களுக்கு எல்லாம் அனுமதி கொடுத்தார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Single Window System கூட எங்களுடைய ஆட்சிக்காலத்திலே, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்காலத்திலேதான் Single Window System-த்தை நடைமுறைப்படுத்தினார்கள்.

திரு. சுப்பராயன் அவர்கள் கூறியதுபோல், நேரம் இல்லாத காரணத்தினால், மாயனூர் சிமெண்ட் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், அதிகம் சொல்லவில்லை, அவர்கள் கூறியதுபோல் தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்காகவே ஆரம்பிக்கப்பட்டது அந்தத் தமிழ்நாடு தொழிற்சாலை. ஆகவே, அந்தத் தொழிற்சாலையில் நீங்கள் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தினுடைய அனைத்து ஆர்டர்களும் அங்கே கொடுத்து, வாங்குவதற்கு இந்த அரசு உடனடியாக உத்தரவிட வேண்டும்.

வெடிமருந்துத் தொழிற்சாலையைப்பற்றி குறிப்பிட்டீர்கள். இந்த வெடிமருந்துத் தொழிற்சாலை வேலூரிலே இருக்கிறது. அதைப் பொறுத்தவரையில் அந்த வேலூர் வெடிமருந்துத் தொழிற்சாலையிலேயிருந்து வெடிமருந்துகள் திருடப்பட்டு அல்லது களவாடப்பட்டு, எப்படியோ அந்த வெடி மருந்துகள் எல்லாம் கோயம்புத்தூரில் குண்டு வெடிப்புக்குச் சம்பந்தப்பட்டிருந்தது என்று கூறி இருந்தார்கள். இருந்தாலும் அவ்வளவு பெரிய தொழிற்சாலை; அந்தத் தொழிற்சாலைக்கு ஒரு பாதுகாப்பு அதிகாரியே இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். மேலும், அவர்களுடைய கோரிக்கை நிறைய இருக்கிறது. ஒரு கம்பெனி செகரட்டரிகூட இல்லையென்று கூறியிருக்கின்றார்கள். ஆகவே, முதல்வர் அவர்கள் .....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது வெடிமருந்துத் தொழிற்சாலையைப் பற்றி பேசுகிறார்கள். அங்கேயிருந்துதான் வெடிமருந்து கோவைக்குப் போயிற்று என்று சொன்னார்கள். வெடிமருந்து தொழிற்சாலையையே கோவைக்குக் கொடுப்பதற்குக்

கடந்தகால ஆட்சியிலே முயற்சி நடைபெற்றது. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் அதைத் தடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** புகளூர் காகிதத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் நான் சென்ற ஆண்டே குறிப்பிட்டேன். அதிலே, கூழ் வாங்குவதிலே பல இலட்சம் ரூபாய் மோசடி நடந்திருக்கிறது. அதிலே அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று ஆதாரத்துடன் கொடுத்தேன். முதல்வர் அவர்களும், நீங்கள் ஆதாரத்தைக் கொடுங்கள், நான் விசாரிக்கிறேன்; ஒரு கமிஷனேகூட போடுகிறேன் என்று சொன்னார்கள். பிறகு, தனிப்பட்ட முறையில் நான் அதற்கு ஆதாரம் கொடுத்து, கோப்பாகக் கொடுத்தேன். அவர்கள் இதுவரை விசாரணை நடத்தினார்களா, நடத்தவில்லையா என்பது எங்களுக்கு இதுவரை தெரியவில்லை.

இறுதியாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிங்கப்பூர் சென்ற பயணமானது, அதைப் பொறுத்தவரையில் நீங்கள் சென்றீர்கள்; பார்த்தீர்கள். அந்த சிங்கப்பூர் பயணத்திலே என்ன கண்டீர்கள்? எத்தனை தொழில் முனைவர்களைப் பார்த்தீர்கள்? என்ன செய்தீர்கள்? அங்கே ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டதா என்பதை நீங்கள் பதிலுரையில் சொல்ல வேண்டும். நீங்கள் சிங்கப்பூர் சென்றது உங்களுடைய தனிப்பட்ட பயணம் என்றுகூட சிலர் கூறியிருக்கின்றார்கள். ஆகவே, சிங்கப்பூர் சென்றபோது நீங்கள் யாரைச் சந்தித்து, என்ன தொழில் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்தீர்கள் என்றும் பதிலுரையில் கூறவேண்டும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

***திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்;*
*வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்"*

என்று மகாகவி பாரதியார் அழகாகச் சொல்லியிருக்கிறார்.



தமிழகத்திலே எல்லா வளமும் இருக்கிறது. 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்; ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்ற வரிகளுக்கேற்ப தமிழகத்தில் நீர்வளம்; கனிம வளம்; நில வளம்; மனித வளம்; மலைவளம் எல்லாம் சிறந்து இருக்கிறது.

*முற்பகல் 11-25*

இப்படி வளங்கள் மட்டும் இருந்தால் போதாது. அவற்றையெல்லாம் முறைப்படுத்தி, முழுமையாகப் பயன்படுத்தி, இன்றையதினம் பொறுப்பிலே இருக்கிற முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய முதிர்ந்த அனுபவத்தாலும், ஆற்றலாலும் தமிழகத்தை, தொழில் முதலீட்டைப் பொறுத்தமட்டிலே மே 1996-லே 5-ஆவது இடத்திலேயிருந்த தமிழகத்தை 1999 ஆம் ஆண்டிலே முதல் இடத்திற்குக் கொண்டு வந்த பெருமை நமது தமிழக முதலமைச்சர் அவர்களையே சார்ந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

ஒரு மாநிலத்தில் தொழில்கள் சிறக்க வேண்டுமென்று சொன்னால், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மிகுந்த அளவிலே செய்யப்பட வேண்டும். அதற்கான முதலீடுகள் எல்லாம் இன்றையதினம் மிகுந்த அளவிலே தமிழகத்திலே செய்யப்பட்டு வருவதை இந்தநேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியத்தோடு தொடர்புடைய என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சில பிரச்சினைகளையும் முன் வைப்பது சாலப் பொருத்தமென்று நினைக்கின்றேன்.

1996 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, பொள்ளாச்சி வட்டம், கிணத்துக்கடவு பகுதியிலே தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை அறிவிக்கப்பட்டது. சென்ற நிதியாண்டிலே ஜுன் 1999-லே உற்பத்தி ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் கல்கத்தாவைச் சேர்ந்த [illegible] என்ற நிறுவனம் தங்களுக்கு உரிய நிதியை அளிக்காத காரணத்தினால் அந்தத் தொழிற்சாலை தொடங்குவது தாமதப்பட்டுள்ளது என்பதைச் செயற்குறிப்பிலே நான் கண்டேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தத் தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலையை விரைவிலேயே அந்தப் பகுதியிலே தொடங்குவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பொள்ளாச்சிப் பகுதியிலே திப்பம்பட்டி கிராமத்திலே ஐக்கிய முன்னணி ஆட்சியிருந்தபொழுது அன்றையதினம் தொழில் துறை அமைச்சராகயிருந்த மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் முயற்சியின் அடிப்படையிலே, அங்கே ஒரு தென்னை நார் ஆராய்ச்சி நிலையம் 40 கோடி ரூபாய் செலவிலே ஆரம்பிப்பதற்காகச் செயல்வடிவம் திட்டப்பட்டு அதற்கான நிலமும் வாங்கப்பட்டது.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் தலைமை)**

அதற்குப் பிறகு, அந்த அடிக்கல் நாட்டு விழாவிற்குக்கூட ஏற்பாடு ஆன நிலையிலே அன்றையதினம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட காரணத்தால் அந்தத் தொழிற்சாலை அப்படியே நின்றுவிட்டது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு மீண்டும் அந்த மையத்தைத் திப்பம்பட்டி கிராமத்திலே ஆரம்பிப்பதற்கு அடிக்கல் நாட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி பகுதியிலே தேங்காய் அதிகமாக உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. தேங்காய்ப் பாலிலிருந்து பவுடர் தயாரிக்கின்ற தொழில் இன்றையதினம் பிரபலம் அடைந்து வருகிறது. அந்த வகையிலே தேங்காய்ப் பாலிலே கொழுப்பு நீக்கி, தண்ணீரை நீக்கி மதிப்பூட்டப்பட்ட அந்தப் பால் பவுடரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாக, அரசுக்கு வருமானம் பெருகும். அந்தப் பகுதியிலேயிருக்கின்ற தென்னை மர விவசாயிகள் நல்ல பலன் அடைவார்கள் என்பதை நான் இந்தநேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை மாவட்டம் தொழில் துறையிலே வளர்ந்துவரும் மாவட்டம் என்ற பரவலான கருத்து இருக்கிறது. 1989 ஆம் ஆண்டு கழக அரசு பொறுப்பிலிருந்தபொழுதுதான் பொள்ளாச்சி வட்டம் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டு, அன்றையதினம் சில தொழில்கள் தொடங்கப்பட்டன. ஆனால் பொள்ளாச்சி வட்டத்தை எடுத்துக்கொண்டால், அதிலேயிருக்கிற கிணத்துக்கடவு, பொள்ளாச்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் எல்லாம் இன்னும் அதிகமான தொழிற்சாலைகள் வரவில்லை. அதிலும் குறிப்பாகப் பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திலே 2 சதவீத அளவுக்குக்கூட தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வரும்



ஆண்டிலே பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தை தொழில் துறையிலே பின்தங்கிய ஒன்றியமாக அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொள்ளாச்சி பகுதியிலே ஏராளமான காய்கறிகள் உற்பத்தியாகிறது. விலைவீழ்ச்சி காரணமாக அந்தக் காய்கறி உற்பத்தியாளர்களெல்லாம் மிகுந்த அளவிலே பாதிக்கப்படுகிறார்கள். அந்த நிலையைப் போக்க அங்கே காய்கறி குளிர்பதன நிலையம் ஒன்றும், அதேபோன்று உணவு பதப்படுத்துகின்ற ஒரு தொழிற்சாலையும் நமது அரசு ஆரம்பிப்பதற்கு முன் வர வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழில் முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு முக்கிய காரணம் இங்கேயிருக்கின்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள்தான் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. அந்த அளவிலே கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு மின்சாரம், சாலைகள், துறைமுகங்கள், தகவல் தொடர்பு வசதிகளையெல்லாம் மேம்படுத்தி இன்றையதினம் தொழில் முதலீட்டாளர்களை ஈர்க்கின்ற வகையிலே அரசு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் அண்மையிலே மேற்கொண்ட சிங்கப்பூர், மலேசியா பயணத்தின் காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்களெல்லாம் இன்றையதினம் தமிழகத்தை நாடி வந்து கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் இந்த நாடு நன்கு அறியும். அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பொள்ளாச்சி பகுதியிலே கோழி வளர்ப்பானது மிகவும் அதிகமான அளவிலே—குறிப்பாகக் கறிக் கோழி உற்பத்தி கிட்டத்தட்ட 60 இலட்சம் கோழிகள் பொள்ளாச்சி மற்றும் உடுமலை பகுதிகளிலே மட்டுமே வளர்க்கப்படுகின்றன. கோழி இறைச்சி விலை விழும் காலத்திலே, அந்த உப தொழிலாகக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, கோழி இறைச்சியைப் பதப்படுத்தி ஏற்றுமதிக்கு ஒரு வாய்ப்பைத் தந்தால் அந்தப் பகுதியிலே அந்தத் தொழில் இன்னும் வளர்ச்சி அடைவதற்கும், அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகள் பயனடைவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, பொள்ளாச்சி பகுதியிலே கோழி இறைச்சியைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

முற்பகல் 11-30

அதேபோன்று, கிணத்துக்கடவு பகுதியிலே ஏகப்பட்ட கனிம வளம் இருக்கிறது. விலை மதிக்க முடியாத பல வண்ணங்களிலே இருக்கின்ற கிரானைட் கற்கள் எல்லாம் கிடைப்பதாக தனியார் கண்டறிந்து, இன்றையதினம் அவை அதிக அளவிலே வெட்டப்பட்டு வருகின்றன. இந்த நிலையை அரசு கருத்திற்கொண்டு, கிணத்துக்கடவு பகுதியிலே இருக்கின்ற கிரானைட் கற்களை ஆய்வு செய்து, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலமாக அங்கே ஒரு தொழிற்சாலை தொடங்கப்பட வேண்டும். அதன்மூலம் அந்தப் பகுதியிலே இருக்கின்ற நில உரிமையாளர்கள் எல்லாம் பயன்பெறும் வகையிலும், ஏற்றுமதியை அதிகப்படுத்துகின்ற வகையிலும், விரைவிலே அதை ஆய்வு செய்து, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலமாக ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கோவை சிந்தாமணியை எடுத்துக்கொண்டால், (மணியடிக்கப்பெற்றது) கடந்த நான்கு மாதங்களாக சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், தமிழகம் கணினி மென்பொருள் ஏற்றுமதியிலே சிறந்து விளங்குகிறது. அந்த வகையிலே, கோவை சிந்தாமணி போன்ற நிறுவனங்கள் பாரம்பரியமாகச் செய்து வருகின்ற காய்கறி விற்பனை, துணி விற்பனை இவற்றையெல்லாம் விட்டுவிட்டுக்கூட, இந்த கணினி மென்பொருள் ஏற்றுமதியைச் செய்கின்ற வகையில், அந்தப் பகுதியிலே சிந்தாமணி கணினி மென்பொருள் ஏற்றுமதி மையம் என்ற ஒன்றைத் தொடங்கி, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்களுக்கு, நிறுவனங்களில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு ஒரு பயிற்சியும் கொடுத்து, மென்பொருள் ஏற்றுமதியையும் விரிவுபடுத்தினால் கண்டிப்பாக வருங்காலத்திலே, சிந்தாமணி நிறுவனம் நல்ல இலாபம் ஈட்டக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், தமிழகத்திலே, இனிவரும் ஆண்டின் செயல் திட்டக் குறிப்பைப் பார்க்கின்றபோதும், சென்ற ஆண்டின் ஆய்வுரையைப் பார்க்கின்றபோதும், தமிழகம் தொழில் முதலீட்டில் முதலாம் இடத்திற்கு வந்ததிலே எந்தவித வியப்பும் இல்லை. அந்த அளவுக்கு தமிழகத்திலே இருக்கின்ற அமைச்சரவையானது திறமையாகச்



செயல்பட்டு, முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு இன்றையதினம் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வெற்றி தொடர வேண்டுமென்று வாழ்த்தி, எனது உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறக்கூடிய 1999-2000 ஆம் ஆண்டிற்கான தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு குறித்த மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களை இம்மாமன்றத்தில் எடுத்துவைக்க முன்வந்துள்ளேன்.

தமிழகம், தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலேதான் தொழில் துறையிலே இன்றையதினம் பீடுநடை போட்டு வருகிறது. வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று இன்றையதினம் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை புரட்சிகரமாகச் செய்து கொண்டிருக்கின்ற முதல்வர் அவர்களுக்கு இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நல்வாழ்த்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுகா, அரவக்குறிச்சி எனது தொகுதியாகும். இங்கு எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை. வானம் பார்த்த பூமியாகும். வானம் மழை பொழிந்தால்தான் இங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் விவசாயம் செய்ய முடியும். இந்த நிலையில் இருக்கின்ற இந்த விவசாயிகளுக்கு அங்கே மழை இல்லாத காரணத்தினால், குடிதண்ணீருக்கே மக்கள் சிரமப்படுகின்ற நிலைமை இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் குடிதண்ணீருக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இவ்வாண்டு வழங்கி, தொகுதி மக்களுக்கு அவர்கள் நன்மை சேர்த்திருக்கிறார்கள். அதற்காக, தொகுதி மக்களின் சார்பாக நான் முதல்வர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசு, கலைஞர் ஆட்சியிலே, 1996-லே அரவக்குறிச்சி பகுதியை பின்தங்கிய பகுதியாக B.C. பகுதியாக அறிவிக்க

வேண்டுமென்ற கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு முதல்வரவர்கள் ஏற்றுக்கொண்டு B.C. பின்தங்கிய பகுதியாக அறிவித்தார்கள். மேலும், அது வறண்ட பகுதியாக, வானம் பார்த்த பூமியாக, மழை இல்லாத பகுதியாக இருக்கிற காரணத்தினால் அதை M.B.C. பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையின் போது பேசியிருக்கின்றேன். அருள்கூர்ந்து அதையும் செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்கள் தொடங்குவதற்கு அந்தப் பகுதியில் உள்ள மக்கள் முன்வந்தாலும், மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது என்றும், தொழில்கள் தொடங்குவதற்குரிய Three Phase Supply மின்சாரம் பற்றாக்குறை இருக்கிறது என்றும் கூறி வருகின்றார்கள். ஆகவே, தொழிற்சாலை தொடங்க முன்வருபவர்களுக்கு மின்சாரம் ஒரு பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால், எனது மாவட்டம், எனது தொகுதியில் உள்ள பல தொழில் அதிபர்கள் வெளியூர்களிலே சென்று தொழில் தொடங்கி வருகின்றார்கள். படித்துவிட்டு பட்டதாரியாக உள்ளவர்கள் தொழில் தொடங்க முன்வரும் நிலையில் அரசின் உதவிகள் வங்கிகள் மூலம் கடன் உதவி பெற இயலவில்லை. சிறுபான்மை மக்களாக உள்ள இஸ்லாமிய மக்கள் வங்கிகள் மூலம் கடன் கேட்கின்றபோது கடன் கிடைப்பதில்லை. இச்சமுதாயத்தினருக்கு உறுதுணையாக உள்ள தமிழக அரசு, விகிதாச்சார அடிப்படையிலே 10 சதவிகிதமாவது அவர்கள் தொழில்கள் தொடங்க கடன் உதவி வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இதை வைத்துத்தான் அன்றிலிருந்து இன்றுவரை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் இட ஒதுக்கீடு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பட்டதாரிகளுக்கு சிறுபான்மை சமுதாயத்தின் சார்பிலும் 10 சதவிகித இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமாய் தொடர்ந்து வலியுறுத்தி கேட்டு வருகின்றோம். முதல்வர் அவர்கள் 1996 முதல் எங்களிடம் சொல்லி வருகின்றார்கள். இந்த நிதியாண்டிலாவது 10 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கவேண்டும் என்று தொழில் துறையின் மானியத்திலே பேசுகின்ற நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற சொல்லுக்கு சொந்தக்காரர்களாக வாழ்கின்ற எங்களுடைய பகுதியிலுள்ள மக்கள் எல்லாம் தொழில் தொடங்குவதிலே முன்னேற்றம் கண்டு வருகிறார்கள்.



எங்களுடைய மாவட்டத்தில் ஒரு பகுதியில் சிறப்புமிக்க விவசாயத்திலே முருங்கைக்காய் அதிகமாக விளைந்து வருகிறது. இங்கிருந்து வடமாநிலங்களுக்கெல்லாம் முருங்கைக்காயை வாங்கிச் செல்கின்றார்கள். வாரத்தில் 5 நாள் அங்கே சந்தை கூடுகிறது. இந்த மண்ணிலே முருங்கைக்காய் நன்றாக விளைகிறது. வருடத்தில் 6, 8 மாதங்கள் முருங்கைக்காய் அங்கே சிறந்த விளைபயிராக கிடைத்து வருகிறது. இதனைக் கொண்டு அரசு மூலம் முருங்கைக்காய் பவுடர் செய்யும் தொழிற்சாலை, அதன் விதையிலிருந்து ஆயில் எடுக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கக்கோரி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் மூலம் ஏற்கெனவே மனுவாகக் கொடுத்து இருக்கிறேன். இதனை கோவை Horticulture Research Station மூலமாக, வேளாண்மைத் துறை ஆராய்ச்சி மையம் மூலம் ஆய்வு செய்து வருகின்றார்கள். விதையிலிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய ஒரு திறனை அறிவித்திருக்கிறார்கள். ஒரு ஏக்கரிலே எவ்வளவு பயிராகிறது, இதனால் விவசாயிகளுக்கு என்ன பலன் என்பதையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கடந்த 3-4-1999-ல் மாவட்ட ஆட்சித் தலைவர் விவசாயத் துறை இயக்குநரோடு ஒரு கருத்தரங்கம் அரவக்குறிச்சியிலே நடத்தியிருக்கிறார்கள். ஆகவே, முருங்கைக்காய் பவுடர் செய்கின்ற தொழிற்சாலை, ஆயில் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை ஆகியவற்றிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பகுதியினுடைய மக்களுக்காக ஒரு தொழிற்சாலையை தொடங்கித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இப்பகுதியில் செம்மறியாடு, நல்ல இன ஆடுகள் உற்பத்தியாகி வருகின்றன. ஆகவே அங்கே ஒரு ஆட்டுப்பண்ணையையும் தொடங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

கரூர் மாவட்டம், புகளூர் காகித ஆலையிலே கழிவு நீர் அங்கே நிறைய வருகின்ற காரணத்தால் அருகிலுள்ள விவசாயிகளுடைய நிலம் பழுதடைந்து அந்த விவசாயிகள் விவசாயம செய்ய முடியாமல் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள். ஆகவே 10 விவசாயிகள் 9½ ஏக்கர் நிலத்தை அவர்கள் விவசாயம் செய்ய முடியாமல் விட்டுவிட்டு கூலி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய நிலத்தை T.N.P.L. காகித ஆலைக்கு விற்று விடுவதற்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இதில் காலதாமதம் செய்து வருகிறார்கள்.

மூன்று ஆண்டுகளாக விவசாயிகள் சிரமப்பட்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருத்தில்கொண்டு காகித ஆலைக்கு அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு அவர்களுடைய பிரச்சினையை தீர்த்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

குடகனாறு, திண்டுக்கல் மாவட்டத்திலே, குவாரி, கனிம வளத் துறையின் மூலமாக திருபுவனம் ஆற்றிலே மணல் ஏலம் விடப்பட்டுள்ளது. ஏலம் எடுத்தவர்கள் ஏல நிபந்தனையை மீறி குறிப்பிட்ட எல்லையை விட்டு அனைத்துப் பகுதிகளிலும் எடுக்கிறார்கள். இதனால் அருகிலுள்ள அரவக்குறிச்சி தொகுதிக்கு உட்பட்ட என்னுடைய தொகுதியான ஈசநத்தம், ஜமீனாத்தூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் வந்து அந்தப் பகுதியில் மணல் எடுக்க ஆரம்பித்துள்ளார்கள். ஊர் மக்கள், விவசாயிகள் ஆகியோர் காண்ட்ராக்டர்களோடு தகராறு ஏற்பட்டு காவல் துறையின் மூலமாக அப்பாவி விவசாயிகளை அடித்துத் துன்புறுத்தி வழக்கு போட்டிருக்கிறார்கள். வழக்கு ஒருபுறம் இருந்தாலும் ஊர் மக்கள், விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் கொடுத்து உண்ணாவிரதப் போராட்டம் எல்லாம் நடத்தியிருக்கிறார்கள் ஏலத்தை இரத்து செய்யக்கோரி அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு பல போராட்டங்களை நடத்தியுள்ளார்கள். (மணியடிக்கப்பெற்றது)

முக்கியமான சப்ஜெக்ட். ஒன்றுபட்டு பல போராட்டங்களை நடத்தி அரசினுடைய கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கும் தனிப்பிரிவின் மூலம் தபால் அனுப்பியிருக்கிறார்கள். அரசு மூலம் தனி அதிகாரிகளுடைய விசாரணைக்கு அனுப்பப்பட்டு அவர்கள் பார்வை செய்து உரிய விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு 31½ இலட்சம் ரூபாய் ஏலத்தின் மூலமாக வருமானம் உள்ளது. இதை நான் இரத்து செய்ய முடியாது, அரசுதான் ஏலத்தை இரத்து செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதன் காரணமாக காண்ட்ராக்ட் எடுத்தவர்கள் மேலும் கோபம் அடைந்து விவசாயிகளைத் தாக்கி கலவரத்தை உண்டாக்கி வருகிறார்கள். காவல் துறையினர் அவர்கள்மீது வழக்கு போட்டு மீண்டும் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து, விவசாயிகளைத் துன்புறுத்தி வருகிறார்கள். பல வழக்குகள் இவர்கள்மீது போடப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் பாதிக்கப்பட்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள்.



**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

குடகனாற்றில் மணல் எடுப்பதால் அருகிலுள்ள கிணற்று நீர் வறண்டு, ஆற்று நீரும் வறண்டு மணல் அள்ளிவிட்டதால் விவசாயிகளுடைய கிணறுகளில் அடிமட்டம் தெரிகின்றது. ஏலம் எடுத்தவர்கள் குறிப்பிட்ட எல்லையை விட்டு ஆறு முழுவதும் அடியாட்களை கையில் வைத்து எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், நூற்றுக்கணக்கான லாரிகளில் மணலை எடுத்து பல மாவட்டங்களுக்கு லாரிகளில் எடுத்துச் செல்கிறார்கள். இதனால் அரசு மூலம் ஏலம் ரூ. 3½ இலட்சத்திற்கு விடப்பட்டுள்ளது. அரசுக்கு வருமானம் என்று சொல்கிறார்கள். ஒரு சிறு புள்ளிவிவரத்தை இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்க முன்வருகிறேன். ஒரு லாரியில் ஒரு நாளைக்கு 4 யூனிட் என்று சொல்கிறார்கள். 5 யூனிட் வரை ஏற்றுகிறார்கள். ஒரு யூனிட்டினுடைய விலை 85 ரூபாய் என்றால் 4 யூனிட்டிற்கு 340 ரூபாய் ஆகிறது. ஆனால் ஒரு லாரிக்கு 500 ரூபாய் வசூலிக்கிறார்கள். ஒரு நாளைக்கு 100 லாரிகள் செல்கின்றன என்றால் 34,000 ரூபாய் ஒரு நாளைக்கு வசூல் ஆகிறது. ஒரு மாதத்திற்கு மட்டும் 10 இலட்சம் ரூபாய் வசூலாகக்கூடிய இந்தத் திருபுவனம் பஞ்சாயத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் இலாபம் என்று கணக்கிட்டு எடுத்துச் சொல்கிறார்கள். நடைச் சீட்டு போடுவது இல்லை. வெளியூர் லாரிகளுக்கு மட்டும் நடைச் சீட்டு போடுகிறார்கள், உள்ளூர் லாரிகளுக்கு நடைச்சீட்டு போடுவதில்லை. ஆகவே அரசுக்கு வருமானம் இழப்புதான் ஏற்படுகிறதே தவிர இலாபம் இல்லை. ஆகவே 50,000 மக்கள் வாழக்கூடிய இடத்தில், ஏழை எளிய விவசாய மக்களின் 700, 800 ஏக்கர் பரப்பளவிலே உள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு, விவசாயிகளின் வாழ்க்கையைச் சீரழிப்பது எந்த வகையில் நியாயம்?

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார். (குறுக்கீடு)

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இது முக்கியமான பிரச்சினை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய வாழ்வை சீரழிப்பது எந்தவகையில் நியாயம் என்பதை முதல்வர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குத்தகைதாரர் ஏலம் எடுத்தவர், மாவட்டத்திலுள்ள உயர் அதிகாரிகளுக்குக் கையூட்டு அளித்துக்கொண்டு தன்னுடைய குத்தகை நிலத்தில் நிபந்தனைகளை மீறி மணலை எடுத்துச் செல்கிறார்கள். பல முறை பல விண்ணப்பங்கள் கொடுத்தும், உண்ணாவிரதம் மேற்கொண்டும் இதைத் தடுக்க முடியாமல், இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து, இங்கே உண்ணாவிரதம் தொடர வேண்டுமென்று வந்தார்கள். முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி உங்கள் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும். மக்கள் சாசனம், நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க மக்கள் இயக்கம் முன்வடிவு செய்கின்ற நிலையில் இருக்கும்போது, முற்றிலும் இப்போது மாறுபட்டிருக்கிறது. இதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து தயவுசெய்து தக்க நடவடிக்கையெடுத்து ஆவன செய்து கொடுக்க வேண்டுமாய் தொகுதி மக்கள் சார்பாக பணிவோடு கேட்டு, எனது உரையை நிறைவு செய்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கைமீது பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு நன்றி கூறுகிறேன். தமிழகத்திலே தொழில்கள் வளர வேண்டுமென்று சொன்னால், அதனுடைய கட்டமைப்புகள் சரியான முறையிலே முழுமையாக அதை நிறைவேற்றுகிறபோதுதான் பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் வருவதற்கு வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கும்.

இன்றைக்கு சாலைகள் செப்பனிடுவதற்காக பல கோடிக்கணக்கான ரூபாயில் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் கடந்த ஆண்டு நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை, அந்தப் பணத்திலே ஒரு பங்கு திருப்பி அனுப்பப்பட்டதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அதுபோலதான் மின்சாரம்.



***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற குறைபாடு அல்லது குற்றச்சாட்டு தவறானது. எந்தப் பணமும் திருப்பி அனுப்பப்படவில்லை. நெடுஞ்சாலைத் துறைக்காக அனுமதிக்கப்பட்ட அல்லது கடன் பெற்று இருக்கக்கூடிய தொகை முழுவதும் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தொழில் துறை வளர வேண்டுமென்று சொன்னால் தொய்வு இல்லாமல் மின்சாரத்தைத் தரவேண்டியது அரசினுடைய கடமை என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். தமிழகத்திலே எரிவாயுவை எரிபொருளாகப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள் 20 வருகின்றன என்று சொல்லி, அதிலே 5 நிறுவனங்களுக்குத்தான் மத்திய அரசு அதற்கான அனுமதியும் கொடுத்து அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று கடந்த 3 ஆண்டுகாலமாக இந்த மானியக் கோரிக்கையில் சொல்லப்பட்டு வந்திருக்கிறது.

கடந்த ஆட்சி காலத்தில்கூட பல்வேறு மின் உற்பத்தி நிறுவனங்களை தமிழகத்திலே கொண்டு வருவதற்கு சில நிறுவனங்களிடம் எம்.ஓ.யூ. ஒப்பந்தம் கையெழுத்துப் போடப்பட்டது. அந்த ஒப்பந்தங்கள் எல்லாம் இன்றைக்கு நிலுவையில் இருக்கிறதா இல்லையா, அவர்கள் பின்வாங்கிவிட்டார்களா என்கிற செய்தியும் இந்தப் புத்தகத்திலே இல்லை என்பதை நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

பல்வேறு தொழில் நிறுவனங்கள் - இந்த அரசு தொடர்ந்து மின்சாரத்தைத் தர முடியாத காரணத்தால் மின் வெட்டு, மின் தடை நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. அரசு ஒரு குறிப்பிட்ட நேரத்தை மின் தடை என்று அறிவிக்கும் என்று சொன்னால், அந்தத் தொழில் நிறுவனங்கள் அதற்கான இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு - அவர்கள் ஆயிலைப் பயன்படுத்தி மின்சாரத்தை தயாரித்து பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். 15 நிமிடங்கள் மின் தடை இருக்கிறது. திடீரென்று மின்சாரம் வருகிறது. மீண்டும் ஒரு மணி நேரம் மின் தடை வருகிறது. இதுபோன்ற இடையூறுகள் இருப்பதன் காரணமாக அவர்களுக்கும் உற்பத்தியினுடைய தொகை அதிகமாகிறது என்பதைக் கணக்கிலே கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு export oriented யூனிட்டுகளைப் பொறுத்தவரையில் peak hour levy 25 சதவீதம் மின்சாரத் துறையின் சார்பாக இன்றைக்கு வசூல் செய்யப்படுகிறது. அந்த peak hour levy 25 சதவீதம் export oriented யூனிட்டுகளுக்கு இல்லை என்று அறிவித்தால் அவர்கள் போட்டிச் சந்தையில் அவர்கள் தங்களுடைய தரத்தை உயர்த்துவதற்கு வாய்ப்பு இருக்கும். தமிழகத்தில் மிகப் பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிற தோல் தொழிற்சாலைகள் போன்றவைகள், நீதிமன்றத்தின் உத்தரவு ஏற்பாட்டின்படி சுற்றுச் சூழல் பாதுகாப்பு காரணமாக பல இடையூறுகளுக்கு, இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-45

நீதிமன்றத்தினுடைய உத்தரவுக்குக் கட்டுப்பட்டு சில நிறுவனங்கள் உலகச் சந்தையில் போட்டிப் போட முடியாமல், விற்பனையிலே, உற்பத்தியைப் பெருக்க முடியாத சூழ்நிலையிலே பாதிக்கப்பட்டிருக்கிறபோது, வட மாநிலங்களைப் பொறுத்தவரை, கான்பூர் போன்ற பகுதிகளிலே இன்னும் அந்தப் பணிகளை அவர்கள் செய்து கொடுக்காமல் இன்னும் அந்தத் தொழிற்சாலைகள் அங்கே நடைமுறையிலே இருக்கின்ற காரணத்தால், உலகச் சந்தையிலே குறைவான விலைக்கு அவர்கள் பொருட்களை விற்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இந்த அரசு அதனைக் கருத்திலே கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல தொழில் நிறுவனங்கள்பற்றி இந்தப் புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. Industry-ஐப் பொறுத்தவரை friendly policy-ஐ நாங்கள் கடைபிடிக்கிறோம் என்று சொல்கிறீர்கள். நமக்கெல்லாம் தெரியும், சென்னையிலே ஏறத்தாழ பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற Best and Crompton தொழிற்சாலை, இடையிலே நலிவுற்றிருந்ததும், அந்தத் தொழிற்சாலைக்கு புனரமைப்புக்காக வேற்று நாடுகளிலிருந்து பல தொழிலதிபர்களை நீண்ட காலம் எதிர்பார்த்திருந்து, அதற்குப் பிறகு இந்தோனேஷியா நாட்டிலிருந்து ஒரு தொழிலதிபர் ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செலவு செய்து புனரமைப்புச் செய்வதாக ஒத்துக்கொண்டிருந்தார்கள். Best and Crompton தொழிற்சாலையை அவர்கள் புனரமைப்புச் செய்கின்றபோது, அரசிடம் சில



நிபந்தனைகளை விதித்திருந்தார்கள். அரசும் அதை முழுமையாகச் செய்து கொடுப்பதாக எழுத்துபூர்வமாக கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, அந்தத் தொழிலதிபர் அவர் சொன்ன, ஒத்துக்கொண்ட நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றிவிட்டு, தாங்கள் முழுமையாக நிறைவேற்றிவிட்டோம் என்று நீதிமன்றத்திலேகூட அதற்கான சாட்சியைப் பெற்றிருக்கிறார்கள், அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழில் நிறுவனத்தைப் பொறுத்தவரை அவர்கள் அந்த இடத்திலே 1½ ஏக்கர் இடம் Urban Land Ceiling-லிருந்து அதற்கு அனுமதியைப் பெற வேண்டுமென்று மனு செய்து ஏறத்தாழ 10 மாதங்கள் ஆகிவிட்டன. 10 மாதங்கள் ஆகியும், அரசு ஒத்துக்கொண்ட அந்த அனுமதியைக்கூட, அவர்கள் செய்து கொடுப்பதிலே 10 மாதங்களாக கோப்புகள் எங்கோ மூடிக்கிடக்கின்றன என்று சொன்னால், எதற்காக கோப்புகள் தயங்கி நிற்கின்றன என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை. ஏனென்றால் இண்டஸ்ட்ரியை பொறுத்தவரை friendly policy என்று சொல்கிறோம். Friendly policy என்று சொன்னால் 100 கோடி ரூபாய்க்கான முதலீட்டை தமிழகத்திலே ஒருவர் தொழில் துறையை மேம்படுத்துவதற்காக, புனரமைப்புச் செய்வதற்காக அவர் இங்கே நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான பணியை செய்து முடித்துவிட்ட பிறகும், அந்த Urban Land Ceiling Clearance-க்காக 10 மாதங்களாக கோப்புகள் தலைமைச் செயலகத்திலே தேங்கிக் கிடக்கின்றன என்று சொன்னால், அதனுடைய பின்னணியிலே என்ன இருக்கும் என்பதுதான் பலருக்கும் புரியாத ஒரு புதிராக இருக்கிறது.

இன்றைக்கு பல தொழிற்சாலைகள் இங்கே வருவதாகச் சொல்லி இருக்கிறீர்கள். அதிலே ஒன்று மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக L.N.G. (மணியடிக்கப்பெற்றது) 7 நிமிடங்கள்தான் ஆகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம். பேசி முடியுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** L.N.G. நிறுவனத்தினுடைய தொழில் நிறுவனம் இங்கே வருகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். உலகச் சந்தையிலே டெண்டர் கோரப்பட்டு - கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 13 நிறுவனங்கள் அதற்கு அனுமதி கேட்டு, ஒப்பந்தம்

கோரியிருக்கிறார்கள், ஒப்பந்தத்திலே மனு செய்திருக்கிறார்கள், இந்த 13-லே ஒன்றுக்கு கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்த 13-லே இல்லாத ஒரு பெயருக்குத்தான் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக இன்றைக்கு இந்த ஆண்டினுடைய கொள்கைக் குறிப்பிலே இருக்கிறது. எனக்கு இருக்கின்ற ஐயப்பாடு என்னவென்று சொன்னால், இந்தியத் திருநாட்டினுடைய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்கள் அண்மைக் காலத்திலே பத்திரிகையிலே ஒரு பேட்டி அளித்திருக்கின்றார்கள். L.N.G.-னுடைய அனுமதி வழங்கியதிலே, ஒப்பந்தத்திலே அனுமதி வழங்கியதிலே சில தவறுகள் நடந்திருக்கின்றன என்று முதலமைச்சரைச் சாட, முதலமைச்சரும் பல்லவா நான் என்ன சொல்லவா என்று அன்றைக்கு பத்திரிகைகளிலே மறு அறிக்கை கொடுக்கவும், இன்றைக்கு எல்லாமே அமைந்துவிட்டது என்று பார்க்கின்றபோது, அந்தச் சிதம்பர இரகசியம் என்ன என்பதுதான் என்னைப் போன்ற சாமானியர்களுக்கு இன்றும் புரியாத புதிராக இருக்கிறது.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியைப் பொறுத்தவரையிலே சிதம்பர இரகசியம் என்பது ஒன்றும் கிடையாது. சிதம்பரமே அங்கேதான இருக்கிறார். எனவே, இரகசியம் ஒன்றும் கிடையாது. ஆனால், ஒன்றை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். L.N.G.-ஐப் பொறுத்தவரையிலே global tender வரவழைக்கப்பட்டு, விதிமுறைகள்படிதான் இந்த அரசு முடிவு செய்திருக்கிறதே தவிர, எந்தச் சலுகையும் யாருக்கும் கொடுக்கவில்லை என்பதை வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறோம், பத்திரிகைகளுக்கும் தெளிவுப்படுத்தியிருக்கிறோம். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே இது ஒரு திறந்த புத்தகம், யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் தெரிந்துகொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-50*

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, கடந்த ஆண்டு தொழில் மானியத்திலே பேசியபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்பந்தம் கோரியவர்களுடைய பட்டியலை, மேசையைத் தட்டும் ஒலி எழுப்ப, அதற்கிடையிலே 13 பேர் பட்டியலை சொன்னார்கள். இவர்கள் மட்டும்தான் முன்வந்து இருக்கிறார்கள்; குளோபல் டெண்டரில்



கேட்டு இருக்கிறார்கள். எனவே, இந்த 13 பேரில் ஒருவருக்கு நிச்சயமாக கிடைக்கும் என்று மேசையைத் தட்டும் ஒலி எழுப்ப, முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 13 பேர்களில் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற Siemens நிறுவனம் ஒன்றாக இல்லை என்பதுதான் என்னுடைய கேள்விக்குறி.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, டெண்டர் கேட்பதிலே மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாததல்ல. டெண்டர்கள் கேட்கிறோம். பிறகு அதிலே காலதாமதம் ஆகாமல் இருப்பதற்காக, எத்தனை கம்பெனிகள் போட்டாலும், பிறகு short-list செய்கிறோம். அப்படி வந்ததிலே இந்த ஒரு நிறுவனம்தான் Siemens என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல இன்றைக்கு கணினியினுடைய வளர்ச்சியை நாங்கள் பாராட்டுகிறோம்; அந்தத் துறையிலே இந்த அரசு செலுத்தி இருக்கின்ற கவனத்தை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால், சமூக கணினி இணைய மையத்தை 13 ஆயிரம் பகுதிகளிலே உருவாக்குவதற்காக மரியாதைக்குரிய திரு. சாம் பிட்ரோடா அவர்களுக்கு நீங்கள் அனுமதி வழங்கி இருப்பதை நாங்கள் பார்க்கிறோம். திரு. சாம் பிட்ரோடா அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் சொன்னதுபோல, எங்கள் நெஞ்சங்களில் நிறைந்து இருக்கின்ற அருமைத் தலைவர் இராஜீவ் காந்தி அவர்களால் இந்தியத் திருநாட்டிலே கம்யூனிகேஷன் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்காக அவருடைய ஆற்றலை அறிவை இந்திய மண்ணுக்கு பயன்படுத்த வேண்டும் என்பதற்காக கொண்டுவரப்பட்டவர். இன்றைக்கு நீங்கள அதற்கான ஒப்பந்தத்தை அவருக்குக் கொடுத்து இருக்கிறீர்கள். அவருடைய அறிவை நான் குறைத்துச் சொல்லவில்லை; அவருடைய ஆற்றலை நான் குறைத்துச் சொல்லவில்லை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். அடுத்து, திரு. குழந்தை தமிழரசன். (குறுக்கீடு) 12 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட்டை சொல்லி முடித்து விடுகிறேன். அவர்களுடைய நிறுவனத்தின் செயல்பாட்டை நான் குறை சொல்ல விரும்பவில்லை. என்னுடைய கருத்தெல்லாம், அவரை அழைத்து இருப்பது ஆலோசனை வழங்குவதற்காகவோ, அறிவுரை வழங்குவதற்காகவோ அல்ல. இது ஒரு நீண்டகால வியாபார ஒப்பந்தம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் புரிந்து இருக்கும். எனவே, இதுபோன்ற ஒரு வியாபார ஒப்பந்தம் வருகின்றபோது, உலக நாடுகளிலே, திரு. சாம் பிட்ரோடா அவர்கள் மட்டும்தான் இந்தத் துறையிலே திறமை வாய்ந்தவர்களா. அவரால் மட்டும்தான் இதைச் செய்ய முடியுமா, அல்லது வேறு நிறுவனங்கள் மேலை நாடுகளிலே இல்லையா என்பதை நாம் ஒப்பிட்டுப் பார்த்து இருக்க வேண்டும். அதற்காக எத்தனையோ தொழில் நிறுவனங்கள் உருவாகின்றபோது — அதற்கு குளோபல் டெண்டர் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; குளோபல் டெண்டரை கோருகின்றபோது, ஏறத்தாழ 530 கோடிக்கு அதிகமாக ஒரு வியாபார ஒப்பந்தமாகத்தான் இது நடைபெறுகின்றது. காரணம், இன்றைக்கு அவர்கள் இண்டர்நெட் நிறுவனத்தை நிறுவி விட்டார்கள் என்று சொன்னால் அதற்குப் பிறகு அதன் மூலமாக அதற்கான ஈட்டுத் தொகையை அவர்கள் பெறப் போகிறார்கள்; இலாபத்தைப் பெறப் போகிறார்கள். எனவே, குளோபல் டெண்டர் ஏன் இந்தத் துறையிலே நீங்கள் அழைக்கவில்லை என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுதல்; அதை அழைத்து இருக்க வேண்டும். தமிழ்நாட்டினுடைய மக்களுக்கு இன்னும் குறைந்த கட்டணத்திலே அவர்களைவிட திறமை வாய்ந்தவர்கள் ஒரு வேளை இந்த குளோபல் டெண்டரிலே பங்குபெற்று அதன்மூலமாக தமிழகத்திற்கு இன்னும் குறைந்த விலையிலே இண்டர்நெட்டின் வசதி கிடைத்து இருப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். எனவே, இந்த அரசு அதைச் செய்து இருக்க வேண்டும் என்று நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. குழந்தை தமிழரசன். (குறுக்கீடு) டாக்டர் அ. செல்லக்குமார், உங்களுக்கு அதிக நேரம் ஆகிவிட்டது.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கையிலே சில கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



தமிழகத்தை தொழில் வளர்ச்சியிலே 21 ஆம் நூற்றாண்டை நோக்கி செம்மையாக அழைத்துச் செல்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திட்டமிட்டுப் பணியாற்றுவதை இந்த நேரத்தில் நாங்கள் முழு மனதாகப் பாராட்டுகிறோம். சிந்தையிலும் செயலிலும் ஒரே எண்ணத்தைக் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணியாற்றுகின்ற காரணத்தினால் இந்தியாவில் தொழில் துறையிலே தமிழகம் இன்று முதலிடத்தைப் பெறுகின்ற அளவிற்கு வெற்றி பெற்று இருக்கின்றது. அந்த முயற்சிக்கு உங்களுக்குத் துணையாக தொழில் துறையிலே பணியாற்றக்கூடிய தொழில் துறை செயலாளர் உள்ளிட்ட அத்துணை பேரையும் இந்த நேரத்திலே நாங்கள் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மலேசியாவிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு வார்த்தை குறிப்பிட்டார்கள். 'எறும்பைப்போல சுறுசுறுப்பாக உழையுங்கள்; கரும்பைப் போல செய்தி கிடைக்கும்' என்று சொன்னார்கள். அதைப்போல கடந்த 2½ ஆண்டு காலத்தில் தொழில் துறையிலும் நீங்கள் தலைவராக இருந்து எறும்பைப்போல சுறுசுறுப்பாக உழைத்ததன் காரணமாக, இன்று தமிழகத்திற்கு கரும்பைப்போல பல செய்திகளும முன்னேற்றமும் கிடைத்து இருக்கின்றன என்பதைப் பெருமையோடு நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

*முற்பகல் 11-55*

நீங்கள் தமிழ் மண்ணிலே இருந்தாலும் சரி அல்லது வேற்று நாட்டு மண்ணிலே இருந்தாலும் சரி, தமிழக மக்களுடைய நலனிலே அக்கறை கொண்டு, தமிழகத்தினுடைய வளர்ச்சியை, தொழில் வளர்ச்சியைக் குறிப்பாக மனதிலே கொண்டுதான், செயலாற்றி வந்திருக்கிறீர்கள். அதற்கு நீங்கள் சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்கு சனவரி 1 ஆம் தேதியிலே மேற்கொண்ட பயணம் வெற்றிகரமான பயணமாக அமைந்தது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். இந்திய மக்களுக்கே நாமத்தைப் போட்ட சில பேர் குறிப்பிட்டுப் பேசினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மலேசியாவிற்கும், சிங்கப்பூருக்கும் சென்று யார், யாரைச் சந்தித்தார்கள்; என்னென்ன பேசினார்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிங்கப்பூர் சென்று, 5-1-1999 ஆம் தேதி மட்டும் அன்று காலையிலே ஆரம்பித்து மாலை வரை தொழில்

துறை சம்பந்தப்பட்ட அத்துணை பேரையும் சந்தித்தார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்திய வர்த்தகக் குழுவினுடைய தலைவர் தேவேந்தர்சிங் அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 5-1-1999 அன்று சிங்கப்பூரிலே சந்தித்தார்கள். அதற்குப் பின்பாக, சிங்கப்பூர் துறைமுகக் கழகத்தினுடைய துணைத் தலைவரைச் சந்தித்தார்கள். சிங்கப்பூர் மூத்த தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் ஜார்ஜ் அவர்களைச் சந்தித்தார்கள். அதற்குப் பின்பாக சிங்கப்பூரினுடைய பிரதம அமைச்சரைச் சந்தித்தார்கள். அதிலே சிங்கப்பூரினுடைய மூத்த தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் ஜார்ஜ் அவர்கள் முதலமைச்சரோடு உரையாடும்போது, நீங்கள் எப்படிச் சுறுசுறுப்பாக தொழில் துறையை வளர்க்கப் பாடுபடுகிறீர்களோ, அதேபோல சென்னை யாநகர மேயரும் தொழில் துறையை வளப்படுத்த ஆசைப்படுகிறார் என கேள்விப்பட்டோம்; அவரைச் சிங்கப்பூருக்கு அனுப்பி வையுங்கள் என்றுகூட உங்களிடம் வேண்டுகோள் வைத்தார்கள்.

அதை அடுத்து நீங்கள் மலேசியா சென்றீர்கள். மலேசியாவிற்கு 7-1-1999 அன்று நீங்கள் சென்ற நேரத்திலே மலேசியா நாட்டினுடைய தொழில் துறை மந்திரி டத்தே ரபீதா அஜீஸ் அவர்களைச் சந்தித்து, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியைப் பெருக்க உதவிடும்படி நீங்கள் கேட்டீர்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் டத்தோ சாமிவேலுவைச் சந்தித்தார்கள். மலேசிய பிரதமர் மகாவீர் முகம்மது அவர்களைச் சந்தித்தார்கள். நீங்கள் அங்கே எல்லோரையும் சந்தித்துவிட்டு, அங்கே இரண்டு நாடுகளின் தமிழ் மக்களோடு உரையாடிய நேரத்தில், அங்கேயிருக்கின்ற சிங்கப்பூர் நிருபர்கள் உங்களைக் கேட்ட நேரத்தில், நீங்கள் சொன்னீர்கள். "கலாச்சார உறவை உறுதிப்படுத்துவதற்கும், தொழில் துறை, வணிகத் துறை, கல்வித் துறை தொடர்புகளை தமிழ்நாட்டோடு ஒருங்கிணைத்து நிலைப்படுத்துவதற்கும்தான் நான் சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்கு வந்திருக்கிறேன்; அதிலே நான் வெற்றி பெற்றிருக்கிறேன்" என்று சொன்னீர்கள். ஆனால் இப்படிச் சிங்கப்பூருக்கும், மலேசியாவிற்கும் சென்று, தொழில் வர்த்தக மேம்பாட்டினை தமிழகத்திலே கொண்டு வருவதற்குப் பாடுபட்ட அந்த ஒரு கட்டத்தை தமிழ்நாடு நினைத்துப் பார்க்கிறது. இதற்கு முன்பாக முந்தைய ஆட்சிக் காலத்தில், ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் இதே சிங்கப்பூரிலிருந்த தொழில் முதலீட்டாளர்கள், அவர்கள் என்ன அறிவித்தார்கள் என்றால் நாங்கள் சாதாரணமாகச்



சென்று, தமிழகத்திலே தொழில் திட்டத்தைத் தொடங்க முடியாது. மூல டெயிட்டி, மூல விக்கிரகத்தைப் பார்த்து கொடுக்க வேண்டிய பெட்டியைக் கொடுத்தால்தான், நாங்கள் தொழில் தொடங்குவதற்குரிய வாய்ப்பே கிடைக்கும் எங்களுக்கு என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. ஆனால் தமிழக முதல்வர் அவர்கள் இப்போது சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கும், மலேசியாவிற்கும் வந்து, தொழில் துறை, வர்த்தக நிபுணர்களோடு பேசி, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியை மேம்படுத்த ஆசைப்படுவதைப் பாராட்டுகிறோம் என்று அந்தப் பத்திரிகை நிருபர்கள் தங்களிடம் பெருமையாகத் தெரிவித்தார்கள்.

சில பேர் 'டீ பார்டி' கொடுக்கிறார்கள். 'டீ பார்டி' கொடுப்பதிலே பலவிதம் இருக்கிறது. 'டீ பார்டி' கொடுத்து பூகம்பம் வெடித்தது என்று சொல்லி, அது புஸ்வாணமான கதை உள்ளது. ஆனால் சிங்கப்பூர், மலேசியா தொழில் அதிபர்கள் உங்களை அழைத்து 'டீ பார்டி' கொடுத்து, உங்களிடம் "நாங்கள் தமிழகத்தில் வந்து தொழில் முதலீடுகளைத் தருகிறோம், எங்களை அரவணைத்து, எங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுங்கள்" என்று கேட்ட நேரத்தில உங்களுக்கு அத்தனை வசதிகளையும் செய்து கொடுப்பேன், வாருங்கள், வாருங்கள் என்று அழைத்து இன்று இந்தியாவில் தமிழ்நாட்டை தொழில் வளர்ச்சியிலே முதல் மாநிலமாக மாற்றிக் காட்டியிருப்பது உண்மையிலேயே பெருமைப்படத்தக்க விஷயமாகும்.

தமிழக அரசினுடைய வெளிப்படையான, ஒளிவு மறைவற்ற, முதலீட்டாளர்கள் நாட்டம்கொள்ளும் தொழில் நேயம் மிகுந்த கொள்கை காரணமாக புகழ் வாய்ந்த பல பன்னாட்டு நிறுவனங்கள் நமது மாநிலத்தில் பெருமளவிலே இப்போது வருகை தந்து தொழிலைத் தொடங்கிக் கொண்டிருக்கின்றன.

1996 ஆம் ஆண்டு மே மாதம் நீங்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற நேரத்தில் தமிழகம் தொழில் துறை வளர்ச்சியில் 5 ஆம் இடத்தில் இருந்தது. ஆனால் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், மும்பையிலிருந்து வரக்கூடிய ஒரு சுயேட்சை நிறுவனமான இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையிலே என்ன வெளியிட்டு இருக்கிறார்கள் என்றால், தொழில் முதலீட்டில், இந்தியாவில் தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது என்று குறிப்பிட்டு ஒரு கோடியே 51 இலட்சத்து 187 கோடி. ரூபாய் இப்போது தமிழகத்திலே முதலீட்டாளர்களால் முதலீடு

செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்தியாவில் தொழில் முதலீட்டிலே தமிழகம் முதலிடம் வகிக்கிறது; அதற்கு முதல்வர் கலைஞர் அவர்கள்தான் காரணம் (மணியடிக்கப்பெற்றது) என்று அதிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோன்று, திறக்கப்பட்ட தொழிற்சாலைகள். நீங்கள் வந்ததற்குப் பின்னால்தான் தமிழகத்திலே தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன. ஹூண்டாய் தொழிற்சாலையை 2,750 கோடி ரூபாயில் 9-12-1998 அன்று திறந்தீர்கள் மிட்சுபிஷி தொழிற்சாலையை 320 கோடி ரூபாயில் 14-4-1998-இலே திறந்தீர்கள்.

நண்பகல் 12-00

ஃபோர்டு தொழிற்சாலையை 1,700 கோடி ரூபாய் முதலீட்டிலே 19-3-1999-லே திறந்தீர்கள். ஆட்டோ நிறுவனங்கள் தங்களுடைய தொழிலைத் தொடங்குகின்ற இந்தக் காலத்தில் உதிரி பாகங்களை சுமார் ஆயிரம் கோடி ரூபாயிலே தயாரிக்கின்ற 20-க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் இப்பொழுது தமிழகத்திலே தொடங்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற அந்த நிலைமை உருவாகியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வோர்ல்டு டெல் மூலம் நீங்கள் அந்த ஒப்பந்தம் செய்து, கணினியிலே மேம்பாடு அடையச் செய்யக்கூடிய அந்த நிலையின் காரணமாக, தமிழ்நாட்டு இளைஞர்கள் 1½ இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை நீங்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறீர்கள். அதுபோன்று இப்பொழுது கம்ப்யூட்டர் பயிற்சி மூலம் மேல்நிலைப் பள்ளிகளில், ஒரு பள்ளிக்கு 40 மாணவர்கள் என்ற வீதத்திலே தமிழகத்திலே ஓர் ஆண்டுக்கு 48 ஆயிரம் மாணவர்களை நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கின்ற காரணத்தால், அவர்களும் உடனடியாக வேலைவாய்ப்பு பெறுகின்ற ஒரு வாய்ப்பை நீங்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோன்று உலகம் முழுவதும் இப்பொழுது பணவீக்கம் அதிகமாக உள்ளது. அதற்குக் காரணம் ஹர்ஷத் மேத்தா வங்கி ஊழலுக்குப் பின்னால் தொழில் முதலீட்டாளர்களுக்கு யாரும் பணம் முதலீடு செய்ய முன்வருவதில்லை. அதன் காரணமாக தொழில் தொடங்குகின்ற முதலீட்டாளர்களுக்கு அவர்கள் முதலீடு செய்வதற்கு உரிய வழிவகைகளை நாம் செய்து கொடுக்க வேண்டும்.



(மணியடிக்கப்பெற்றது) அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு உரிய மார்க்கெட்டை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நூற்பாலைகள் (Spinning Mills). பஞ்சாலைகள் இக்கட்டான நிலையில் இருப்பதாக இங்கே கூறப்பட்டது. அதிலே ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். Spinning Mills பிரச்சினையில் நெருக்கடி இருந்த காலகட்டத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்களோடு பேசினார்கள். 25 ஆயிரம் கோடி ரூபாய் இந்தியாவில் உள்ள Spinning Mill-களுக்கெல்லாம் அவர் உதவி செய்தபோது, தமிழ்நாட்டுக்கு அந்த உத்தரவில் இல்லை. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தியதற்குப் பின்னால்தான், மாண்புமிகு வாஜ்பாய் அவர்கள் தமிழ்நாட்டுக்கும் அந்த 25 ஆயிரம் கோடி ரூபாயில் நிதியுதவி செய்து, மூடி கிடக்கின்ற Spinning Mill-களுக்கு உதவி செய்கின்ற உத்தரவாதத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுத் தந்தார்கள். அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. குழந்தை தமிழரசன்:** என்னுடைய தொகுதியைப் பற்றி, தொழில் துறையைப் பற்றி ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசியது போதும், உட்காருங்கள். அடுத்து, திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் துறை மானியத்திலே என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே தொழில் வளம் சிறந்தோங்க வேண்டுமென்கிற எண்ணத்தோடு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியின் காரணமாக இன்றைக்கு இந்தியாவிலேயே, தொழில் முதலீட்டிலே முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று சொன்னால், அதற்காக முதல்வர் அவர்களுக்கும், அந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு தொழில் நிறுவனங்கள் நமது தமிழகத்திலே உருவாக்கப்பட்டு, அதன் காரணமாக ஆயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்புகளைப் பெறுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினையும் ஏற்படுத்தித் தந்து, இன்று தமிழ்நாட்டில் தொழில் துறையைச் சீராகச் செய்திருக்கிறார்கள் நமது முதல்வர் அவர்கள். ஆனால் இன்றைக்கு தனியார் முதலீட்டு நிறுவனங்களெல்லாம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கின்றபோது. நாம் கடைபிடிக்கின்ற அந்த இட ஒதுக்கீட்டு முறையை பின்பற்றாமல் இருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில் இந்த அரசு சமூக நீதியிலே மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிற அரசு என்கிற காரணத்தால் அந்த இட ஒதுக்கீட்டு முறையை தனியார் துறையிலும் ஓரளவாவது பின்பற்ற வேண்டும் என்கிற அறிவுரையை நமது அரசு அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இருக்கின்ற இடைவெளி இன்றைக்கு அது மிகுந்த இடைவெளியாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இது ஒரு ஜனநாயக நாடு. இந்த நாட்டிலே எல்லோரும் சமமான நிலையை, சமமான அந்தஸ்தைப் பெற வேண்டும் என்கிற எண்ணத்தோடு, தொழிலாளர்களுக்கு உரிய உரிமைகள் எல்லோருக்கும் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என்கிற இந்த நேரத்தில் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே நிச்சயமாக மிகுந்த இடைவெளி இருக்கிறது என்பதை நாம் உணர முடிகிறது. பெரிய முதலாளிகளையெல்லாம் தொழிலாளர்கள் தங்கள் பிரச்சினை சம்பந்தமாக நேரிலே போய் சந்திக்கின்ற நிலைகள்கூட மறுக்கப்படுகின்ற நிலைமைகளெல்லாம் இருக்கின்றன.

*பிற்பகல் 12-05*

என்னுடைய தொகுதிக்கு பக்கத்திலேகூட 'தாபே' என்ற தொழில் நிறுவனம் இருக்கிறது. அந்தத் தொழில் நிறுவனத்திலே தொழிலாளர்கள் பிரச்சினையைப் பற்றிச் சொல்வதற்காக அணுகினோமானால், அவர்களைச் சந்திக்கக்கூட வாய்ப்பு அளிக்காத ஒரு நிலை. மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள், அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுடைய நிலையை எடுத்துச் சொல்லக்கூட முடியாத நிலையை இன்றைக்கும் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இரும்புத் திரைக்குள்ளே இருப்பதுபோல, Iron curtains, behind the iron curtains என்று சொல்வார்களே, அதுபோலத்தான் இன்றைக்கும் முதலாளிகள் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்கிற வேதனையான செய்தியைத்தான் நாம் பார்க்க முடிகிறது.



இன்றைக்கு தொழில் துறையைப் பொறுத்தவரையிலே, சர்க்கரைத் தொழில் என்பது, இங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமான தொழிலாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் தொழிலில், பொதுத் துறையின் மூலமாக இன்றைக்கு நடக்கின்ற சர்க்கரை ஆலைகளெல்லாம் மிகுந்த சிரமத்திலே இருந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலேகூட பொதுத் துறையின் மூலமாக இயக்கப்படுகின்ற இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்தச் சர்க்கரை ஆலைகளிலே ஏறத்தாழ மூன்று மாதங்களாக கரும்பு கொடுத்த விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க முடியவில்லை. ஜனவரி மாதம் முடியத்தான் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஏப்ரல் மாதம் முடிகின்ற இந்த அளவிலே மூன்று மாதங்களுக்கு, அந்த விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை என்கின்ற ஒரு இக்கட்டான நிலை இருக்கிறது. அதை நான் தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே இயங்குகின்ற இரண்டு ஆலைகளிலே மதுரா சர்க்கரை ஆலை என்பதுதான் இன்றைக்கு சர்க்கரை கட்டுமானத்திலே இரண்டாவது இடத்தை வகிக்கிறது. நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற அத்தனை சர்க்கரை ஆலைகளிலும் அந்த ஆலை சர்க்கரை கட்டுமானத்திலே இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அந்த ஆலை, பொதுத் துறை நிறுவனத்திலே இருப்பதை தனியாருக்கு ஏதோ கொடுக்கப்போவதாக அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள இரண்டு சர்க்கரை ஆலைகளிலே அது மிகச் சிறப்பாக இயங்கி, விவசாயிகளுக்கு பணத்தைக் கொடுக்கின்ற ஆலையாக இருக்கிறது. சர்க்கரை கட்டுமானமும் அதிகமாக உள்ள ஆலையாக இருக்கின்ற காரணத்தினால், அதை பொதுத் துறையே எடுத்துச் செயல்படுத்துகின்ற நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், பொதுத் துறையை ஊக்கப்படுத்துகின்ற அளவிலே, அதை அரசே எடுத்து, தற்போது நடத்திக் கொண்டிருப்பதுபோல, தனியாருக்கு வழங்காது அதை நடத்துகின்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு இதே தொழில் துறை மானியத்திலே நான் பேசுகின்ற நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் என்னுடைய தொகுதிக்கு ஒரு தொழிற்சாலை வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் அடிக்கடி சொல்வார்கள். "ஒருவன் பதவியிலே எத்தனை ஆண்டுகள் இருந்தான் என்பதைக் காட்டிலும், அவன் இருந்த காலத்தில் என்ன செய்தான் என்பதுதான் முக்கியம்" என்று அவர்கள் குறிப்பிடுவார்கள். அதுபோல, பதவியில் இருந்த காலத்தில் அந்தத் தொகுதிக்கு என்ன செய்திருக்கிறோம் என்கின்ற நிலையை நான் உணர்ந்து, அந்த மக்களுக்குச் செய்ய வேண்டுமென்ற கடமை உணர்வோடு, நான் கேட்டுக்கொள்கிறேன். அது விவசாயிகள் நிறைந்த பகுதி, அங்கே தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. மூலப்பொருளான தேங்காய் அதிகமாக இருக்கிறது. எனவே, அந்தத் தேங்காயை வைத்து, தேங்காய் செய்முறைப்படுத்துகிற ஒரு தொழிற்சாலையை அமைத்துத் தருவதாக சென்ற ஆண்டே உறுதி அளித்திருக்கிறார்கள். நமது முதல்வர் அவர்கள், அளித்த உறுதியிலே, செய்வதைச் சொல்வார்கள்; சொல்வதைச் செய்கின்ற முதலமைச்சர் என்கின்ற முறையிலே, அவர்கள் சொல்லிய அந்த வாக்குறுதியை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை அளித்த உங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பாரத நாட்டில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகம் தொழில் துறையில் முன்னோடியாக இருப்பது பாராட்டத்தக்கது என்று சொன்னால், நிச்சயமாக அது மிகையாகாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியால் தமிழகம் இப்போது பாரத நாட்டிற்கு வழிகாட்டியாக தொழில் துறையில் அமைந்திருக்கிறது என்று சொன்னால், அதுதான் உண்மை. அதேசமயத்தில் நம்முடைய நாட்டினுடைய பொருளாதாரம், ஜனத்தொகை, இவற்றைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, சிறுதொழில் முதலீடுகள் மூலம் அதிகம் பேர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய அந்த விதத்தில் அதிகமான கவனம் செலுத்தி பாமர மக்களுடைய அன்றாட பிழைப்பில் அதிகக் கவனம் செலுத்தினால், இன்னும் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 300-க்கும் மேற்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருந்தன. அரசாங்கம் என்.ஓ.சி. வழங்குவதில் காலதாமதம், அதேபோல கச்சாப் பொருள்கள் கிடைப்பதில் உள்ள சிக்கல் ஆகியவற்றின் காரணமாக இப்போது அவை நூறாகக் குறைந்துவிட்டன. கிட்டத்தட்ட 25,000 மக்களுடைய வேலை வாய்ப்பு இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்குத் தயாராக உள்ளார்கள். எனவே, இவற்றில் உள்ள சிக்கலைப் போக்குவதற்கு மாவட்ட நிர்வாகத்தோடு அரசாங்கம் தொடர்பு கொண்டு, அவற்றைத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அதுபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு தொழில், கிட்டத்தட்ட 25,000 மக்கள் கயிறு தொழிலைச் செய்து பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அந்தத் தேங்காய்த் தொண்டு, அந்த நார் என்று சொல்லக்கூடியது கேரளாவிற்கு ஏற்றுமதிக்காகச் சென்றுவிடுகிறது. எனவே, கச்சாப் பொருள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கின்ற காரணத்தால் அந்தத் தொழிலும் நசியக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதுபோன்று இந்தப் பனந்தும்பு, பனை நாரிலிருந்து பிரஷ் செய்யக்கூடிய கம்பெனி. இதைக் குடிசைத் தொழிலாகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏராளமான மக்கள் அதைச் செய்து வந்தார்கள். இப்போது இந்த பிளாஸ்டிக் பிரஷ் வந்த காரணத்தால் அந்தத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும்கூட அந்தத் தொழிலை ஊக்கப்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். மேலும், மெழுகுவர்த்தி, சாக்பீஸ், ஊதுவத்தி போன்ற பொருட்கள் அனைத்துமே கிராமத் தொழிலாக செய்யப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு கச்சாப் பொருள் கிடைக்கவில்லை. மின்தட்டுப்பாடு காரணமாக அவர்களுக்குப் பிரச்சினை இருக்கிறது. இவைகளை அரசு கவனத்தில் கொண்டு அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தமிழகத்திலேயே அதிகமாக நயமான ரப்பர் உள்ள மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்ற எங்களுடைய கோரிக்கை நீண்ட காலமாக இருந்து கொண்டுவருகிறது. முதலமைச்சர்

[திரு. சி. வேலாயுதன்]

அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குண்டான அனைத்து முயற்சிகளையும் எடுத்திருந்தார். ஆனால் ஏதோ தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொய்வு எது என்பதைக் கண்டறிந்து அந்தத் தொய்வைப் போக்கி, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குண்டான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கைத்தொழில். சிறிய முதலீட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏராளமான மக்கள் வாழை நார், கற்றாழை நார், பனை ஓலை, சங்கு போன்ற இந்தப் பொருட்களைக் கொண்டு அழகு பொருட்கள் செய்து தங்களுடைய வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு அந்தத் தொழில் செய்வதற்குண்டான கடனுதவியை அரசாங்கம் செய்து அவர்களுக்கு உதவ வேண்டும்.

அதேபோல தென்னை ஓலையை முடைந்து விற்பனை செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். சென்னைக்குத்தான் அவை அதிகமாக வந்து கொண்டிருந்தன. சென்னை மாநகரத்திலே தீ பிடிக்கக்கூடிய அந்தப் பிரச்சினை காரணமாக அதைத் தற்போது தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மற்ற மாவட்டங்களில் அது விலை போவதற்கு என்ன செய்யலாம் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு அவர்களுடைய பிரச்சினையைப் போக்க அவர்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாறை அடிக்கக்கூடிய கல்தொழில் செய்யக்கூடியவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் கல் தொழிலைச் செய்து பிழைத்து வருகிறார்கள். மிகவும் ஏழைகள். அரசாங்கம், பல இடங்களில் பிரச்சினை உள்ளது, பொதுமக்களுக்கு பாதிப்பு உள்ளது என்று சொல்லி அந்த வேலைக்குத் தடை செய்திருக்கிறது. எங்கு பாதிப்பு இல்லை என்பதைக் கண்டறிந்து அவர்களுக்குத் தங்குதடையில்லாத அந்த உரிமம் கிடைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுபோல, கல் உடைக்கக்கூடிய தொழிலில் லாரிகளில் லோடு ஏற்றக்கூடிய தொழிலாளர்கள், கல் உடைக்கக்கூடியவர்கள் என்று சொல்லி கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பாமர மக்கள், ஏழைகள், அவர்களுடைய பிழைப்பை நடத்தி வருகிறார்கள்.



[திரு. சி. வேலாயுதன்]

அதுபோல மண்பாண்டம். செங்கல், ஓடு இவைகளை எல்லாம் செய்வதற்கு பலவிதமான மண் தேவைப்படுகிறது. அரசாங்கம் இந்தக் கனிமச் சட்டத்தைப் பயன்படுத்தி அவர்கள் மண் எடுப்பதற்கு உரிமம் வழங்கினாலும்கூட லாரிகளில் ஏற்றி வரும்போது அதைத் தடுத்துவிடுகிறார்கள். எனவே, இந்தக் குடிசைத் தொழில்களை ஊக்குவிக்கக்கூடியமுகமாக எங்கு மண் எடுத்தால் பாதிப்பு இல்லையோ அந்த இடத்திலிருந்து மண் எடுக்க அரசாங்கம் அவர்களுக்கு உதவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கைத்தொழிலை, ஊக்கப்படுத்துவதற்காக அரசாங்கம் விசைத்தறித் தொழிலாளர்களுக்கு ஏராளமான கடன் கொடுத்தது. அந்தக் கடனைப் பெற்றுக்கொண்டவர்கள், விசைத்தறித் தொழில் இப்போது நலிந்த காரணத்தினால் அந்தக் கடனை திரும்பச் செலுத்தமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அரசாங்கமே அவர்கள் வாங்கிய அந்த விசைத்தறிகளை, அந்த இயந்திரங்களைப் பெற்றுக்கொண்டு, அவர்களுடைய கடன்களை இரத்து செய்துகொடுத்தால்கூட போதும் என்று சொல்கிறார்கள். அதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு அந்த விசைத்தறி இயந்திரங்களை பெற்றுக்கொண்டு, அந்தக் கடனை இரத்து செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோன்று பதநீர், கருப்புக்கட்டி, கற்கண்டு, பனஞ்சீனி, பனந் தும்பு, ஓலை போன்றவைகளின் மூலம், தமிழ்நாட்டிற்கு 8,777 இலட்சம் ரூபாய் விற்பனை செய்து கொடுக்கக்கூடிய அந்தத் தொழில் சில காலங்களாக நசிந்து, தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்திலுள்ள பணியாளர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படாமல், அந்தத் தொழிலே நசியக்கூடிய அளவில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 7 கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் இதை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே அரசாங்கம் இதைக் கவனத்திலே கொண்டு, இந்தத் தொழில் ஊக்கம்பெற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஊனமுற்றோர் மறுவாழ்வு. (மணியடிக்கப்பெற்றது) கண் தெரியாதவர்கள், ஒயரிலே நாற்காலி பின்னக்கூடிய தொழிலை நடத்தி வருகிறார்கள். அவர்கள் ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது என்று அவதிப்படுகிறார்கள். அவர்களுடைய ஊதியத்தையும்

அதிகப்படுத்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி,

'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்;
வாழிய பாரத மணித்திருநாடு.
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

என்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் இன்று பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். காரணம், இதிலே நான் பேசுவதில்லை; எப்பொழுதோ ஒரு தடவை பேசியிருக்கிறேன். ஆகவே, இன்று வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். எனது நன்றியைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1996 ஆம் ஆண்டில், தொழில் துறையிலே ஐந்தாவது இடத்திலே இருந்த தமிழகம், இப்போது முதலாவது இடத்திற்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முதல் இடத்திற்கு வந்திருக்கிற காரணத்தினாலே, உண்மையிலேயே நாம் எல்லாம் பாராட்டுகிறோம்; பெருமைப்படுகிறோம். அதுமட்டுமல்ல; தொழில் முதலீட்டிலே 13,15,017 கோடி ரூபாய் மொத்தம் இந்தியா முழுவதற்கும்; அதிலே தமிழகத்திற்கு மட்டும் 1,51,187 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால், அதுவும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சாமர்த்தியத்தால்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிலைமையில் நம்முடைய நாட்டில், தொழில் துறையில் மிக நல்ல முறையிலே கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக பல கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி, அதற்கு வேண்டிய நிலம் எல்லாம், மற்றவர்களுக்கு நாம் கொடுக்காவிட்டாலும்கூட, ஹூண்டாய், ஃபோர்டு, மிட்சுபிஷி போன்ற மிகப்பெரிய நிறுவனங்கள் எல்லாம் இங்கே தொழில் தொடங்க வந்திருக்கிறார்கள். இதற்கு இந்த அரசாங்கத்தின்மீது, குறிப்பாக தமிழகத்து முதலமைச்சர்மீது அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதுதான் காரணம். நாம் போடக்கூடிய பணம், நாம் போடக்கூடிய பணத்தை வைத்து தொழில் நடத்துகிறோம் என்றால், அதற்கு என்றைக்குமே பங்கம் வராது; அது



பாதுகாப்பாக இருக்கும்; அந்தத் தொழில் சிறப்பாக அமையும் என்ற காரணத்தால்தான். நாம் அதிலே பணம் போடவில்லை. நிலம்தான் நாம் கொடுக்கிறோம். அந்த நிலத்திற்குக்கூட கிரயம் வாங்கியிருக்கிறோம். அதற்கான கிரயத்தை வாங்கி, நிலத்தைக் கொடுத்திருக்கிறோம். அதிலே ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கின்ற நிலைமையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். தமிழகத்திலே படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு ஒரு சூழ்நிலை இங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் நினைத்து மகிழ்ச்சியடைகிறேன்; பெருமைப்படுகிறேன்.

என் தொகுதியில் நடந்த சில விவரங்களைச் சொல்லிவிடுகிறேன். 1989-90 இல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 415 ஏக்கர் என்று நினைக்கிறேன், அதிலே தொழில் அமைக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்தார்கள். சோழவந்தான் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக நான் இருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் சொன்னார்களே அந்த அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்கு ரூ.30 இலட்சம் பணம் வசூல் செய்தோம், பங்குத் தொகையாக. 90 இலட்சம் ரூபாய் கடனாக வாங்கினோம். 90 இலட்சம் ரூபாய் கடனாக வாங்கி, பங்குத் தொகை ரூ.30 இலட்சம் வசூல் செய்து, முயற்சித்தபோது, அதற்கான இடம் கொடுக்க மறுத்துவிட்டார்கள். அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே—அன்றைக்கு நான் சிறியவளாக இருந்தேன். என்னுடைய தகப்பனார், என்னுடைய பெரியப்பாவினுடைய மகள், அத்தனைப் பேரையும் டி.பி.-யிலே உட்கார வைத்து, அவர்களை அழைத்து நிலம் வாங்கி, அவர்களிடத்திலே எழுதி வாங்கி, அங்கே பிரம்மாண்டமானக் கட்டடத்தைக் கட்டி, கரும்பை அரைத்தோம், அதாவது முதலிலே 2,500 டன் கரும்பு அரைக்கப்பட்டது; அது முதலாவது அரவை. அதன் பிறகு, எனக்கு ஆக்ஸிடெண்ட் ஆகி, நான் எங்கும் செல்ல முடியவில்லை. மீண்டும் தேர்தல் வந்தது நான் வெளியே வந்துவிட்டேன. அன்றைக்கு அவ்வளவு சிறப்பாக நடந்த அந்த மில், இப்போது சிக் யூனிட் மாதிரி இருக்கிறது என்றால், அதுகுறித்து உண்மையிலேயே நான் மிகவும் மன வேதனையடைகிறேன். எனவே, அதற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து, விரைவில் அந்த மில்லை ஓட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான நிலக்கோட்டையில், 379 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் வளாகம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே 17 கோடி ரூபாய் செலவில் அந்தத் தொழில் வளாகம் அமைய இருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன். டாசிட் மூலமாக, நிலக்கோட்டையிலும், தருமபுரி மாவட்டத்தில் பர்கூரிலும் தொழில் வளாகங்கள் அமைக்கப்பட்டு வருவதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

*பிற்பகல் 12-20*

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கு நிறைய காய்கறிகள் உற்பத்தியாகின்றன, நிறைய பழங்கள் உற்பத்தியாகின்றன. நிறைய மல்லிகைப் பூக்களை உற்பத்தி செய்கின்றோம். பழங்களைப் பொறுத்தவரையிலே, திராட்சைப் பழம், கொய்யாப்பழம், மாம்பழம், அன்னாசிப் பழம், ஆரஞ்சு பழம், சாத்துக்குடி பழம் இவை அனைத்தும் நிறைய உற்பத்தியாகி வருகின்றன. ஆனால், அவர்களுக்கு சரியான விலை கிடைப்பதில்லை. ஆகையினாலே அங்கே ஒரு cold storage அதாவது குளிர்சாதன வசதியுடன் கூடிய கட்டடங்களை கொடை ரோடிலோ, நிலக்கோட்டையிலோ, வத்தலக்குண்டு பகுதியிலோ கட்டித் தந்து அந்தப் பழங்களையெல்லாம் cold storage-ல் வைத்து அதற்குப் பிறகு விற்பனை செய்தால் சாதாரண விவசாயிகள் எல்லாம் நல்ல முறையிலே பயன்படக்கூடிய அளவிற்கு அது இருக்கும் என்பதை இந்தநேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

அதுமாதிரி மல்லிகைப் பூக்கள்—பூ வியாபாரிகள் எல்லாம், சின்ன, சின்ன விவசாயிகள். அவர்களுக்கு வேறு வழியில்லை. பூக்களையெல்லாம் கொண்டு வந்து பஸ்களை நிறுத்தினால் மல்லிகைப் பூ, மல்லிகைப் பூ என்று சத்தம் போடுவார்கள். அவர்களுக்குப் பிழைப்பிற்கு வேறு வழியே கிடையாது. மல்லிகைப் பூவிலிருந்து ஜாஸ்மின் என்ற ஒரு தைலம் தயாரிக்கப்படுவதாகவும், அந்தத் தைலத்திற்கு இலண்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலே நல்ல கிராக்கி இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகையினால், இந்த ஜாஸ்மின் தைலத்தைத் தயாரிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அதை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் நமக்கு டெக்னாலஜி கிடைக்கவில்லை, அது ஃபிரான்சிலிருந்துதான் வர



வேண்டும் என்று சம்பந்தப்பட்ட சில அதிகாரிகளை நான் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எல்லா வகையிலும் திறமைசாலி. யாரிடம் எப்படிப் பேசி காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் படைத்தவர். அந்த அடிப்படையிலே இன்றைக்குக் காரியங்களை எல்லாம் சாதித்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஆகையினால், பிரான்ஸ் நாட்டிலிருந்து அந்த டெக்னாலஜியைப் பெறுவதற்கும் ஒரு முயற்சி எடுத்து, அதைப் பெற்று வந்து, நிலக்கோட்டை தொகுதியிலே கொடை ரோடிலே இந்த மல்லிகைப் பூ செண்ட் தயாரிப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் பெண்கள் தொழில் செய்வதற்கு ரூ.50,000 மானியம் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால், அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது, இங்கு இரண்டு பெண் அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஒரு முன்னாள் அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். இவர்களுடைய தலைமையில் ஒரு பத்து பேர்களைக் குழுவாக நன்றாக படித்த விஷயம் தெரிந்த பெண்களைப் போட்டு, சிங்கப்பூர் மற்றும் மலேசியாவிற்கு அனுப்ப வேண்டும். (குறுக்கீடு) என்னைச் சேர்க்க வேண்டாம். இல்லை, நான் சொல்லித்தான் அவர் செய்ய வேண்டுமா? நான் கேட்கிறேன், அமைச்சர்கள் எல்லாம் இருக்கிறார்கள், நாங்கள் சாதாரண அங்கத்தினர்கள். ஆகையினாலே இவர்களுடைய தலைமையில் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு அனுப்பி அங்கு, பெண்கள் குடிசைத் தொழில் வளர்வதற்கு எப்படி வேலை செய்கிறார்கள், அவர்களுடைய நிலை எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் ஆராய்ந்து, நம்முடைய பெண்கள் மத்தியிலே நிறைய தொழில்கள் வளர்வதற்கான வாய்ப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்டாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான வாய்ப்பைக் கொடுப்பார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

மேலும் பெண்களுக்கு மானியமாக ரூ.50,000 கொடுப்பது பற்றி சிறு தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 50,000 ரூபாய் போதாது. அதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்கள் தொழில் செய்யும் அளவிற்கு

வாய்ப்பை உருவாக்க வேண்டும். பல பெண்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களில் படித்துவிட்டும் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள். விதவைகள் இருக்கிறார்கள் Deserted, Destitute Widows என்றெல்லாம் இருக்கிறார்கள். ஆகையினாலே அவர்களுக்கெல்லாம் தனிப்பட்ட முறையிலே தொழிலை நடத்தும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற்றம் அடைவதற்கான, அவர்கள் வாழ்க்கையை செம்மையாக நடத்துவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நாம் பல தொழில்களுக்கு லைசன்ஸ் கொடுக்கின்றோம். அப்படி லைசன்ஸ் கொடுக்கப்படும்போது 19% என்றும், 30% என்றும் உள்ள இடஒதுக்கீடு பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது. அரசாங்கம் பணம் கொடுக்கின்றது, கடனாகவும், மானியமாகவும் கொடுக்கின்றது. எனவே, அதிலே பெண்களுக்கு 30% வேலை வாய்ப்பினை நாம் கொடுத்தாக வேண்டும். அதுபோல, எஸ்.சி/எஸ்.டி.-க்கு 19% வேலைவாய்ப்பினை நாம் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்கிற ஒரு நிலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இதை நான் பலமுறை காங்கிரஸ் ஆட்சியின்போதும், வெங்கட்ராமன் அவர்கள் தொழில் அமைச்சராக இருந்தபோதும், பேசியிருக்கின்றேன். அதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அன்றைக்கு முடியாவிட்டாலும், இன்றைக்கு உங்கள் காலத்திலே இதைச் செய்து தரவேண்டும். அதற்குப் பெண்கள் நன்றி சொல்வார்கள், உங்களை வாழ்த்துவார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-25*

சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையிலே கரும்பு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றோம். எங்களுக்கு, கரும்பு விவசாயம் 10 மாதங்கள் ஆகின்றன. பெரிய விவசாயிகளாக இருந்தாலும்கூட தண்ணீர் இல்லாவிட்டால், 4 வருடங்கள் மழை இல்லாவிட்டால் நாங்கள் நலிந்து போய்விடுகிறோம். அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக ஏற்கெனவே தேர்தல் அறிக்கையிலே தாங்கள் சொல்லி இருந்தீர்கள். ஆனால், இன்று மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் சொன்னதைப் போன்று, கரும்பு விவசாயம் செய்வதற்கு வேலைக்கு



ஆள் கிடைப்பதில்லை, வேலைக்கு வருவதில்லை. எல்லோரும் கேரளாவிற்குச் சென்று விடுகிறார்கள். அங்கே சென்று ஒரு நாளைக்கு 100 ரூபாய், 150 ரூபாய் சம்பளம் என்று வாங்குகிறார்கள். ஆனால், இங்கே வேலைக்குகூட ஆள் கிடைக்காத சூழ்நிலையிலே, கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு எப்படியோ நீங்கள் நினைத்தால் கொடுக்கலாம் - ஒரு ஆயிரம் ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து அதோடு டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ், கட்டிங் சார்ஜஸ்—ஒரு காலத்தில் 10 வருடத்திற்கு முன்பு 12 ரூபாய் கொடுத்தோம். இன்றைக்கு 200 ரூபாய், 250 ரூபாய் என்று கட்டிங் சார்ஜஸ் ஆகிறது. டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் அதிகமாகிற காரணத்தினாலே 'உழைப்பவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சவில்லை' என்கின்ற சூழ்நிலையிலேதான் இன்றைக்கு விவசாயிகள் இருந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகையினாலே, கரும்புக்கு டன்னுக்கு எப்படியும் ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கான ஒரு முயற்சியினை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பன்னாட்டு நிறுவனங்களிலே கார் உற்பத்தி செய்கிறார்கள். 5 நிமிடத்திற்கு ஒரு கார் உற்பத்தி செய்கிறார்களாம். 5 நிமிடத்திற்கு ஒரு கார் உற்பத்தி செய்கிறார்கள் என்று சொன்னால் அதை நாம் மிகவும் பாராட்ட வேண்டும். அவர்களுக்கு எந்த வகையிலேயும் அரசாங்கம் எந்த உதவியும் செய்யவில்லை. அவர்கள் பணம் போடுகிறார்கள்; வேலைக்கு நம்முடைய ஆட்களை எடுத்திருக்கிறார்கள். அதிலேயும்கூட இந்த ரிசர்வேஷனிலே எடுக்கக்கூடிய அளவிற்கு தாங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கல் குவாரியைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள், கல் உடைக்கிறவர்கள், பாவம் ஏழைகள், அவர்கள் பணம் போட்டு ஏதோ லீஸுக்கு எடுத்து அந்தக் கல்லை உடைப்பதாகச் சொல்கிறார்கள். காலையிலே தான் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அந்த லீஸுக்கு எடுத்து கல்லை உடைக்கும்போது அவர்களுக்கு டெண்டர் விடுவதிலே புதியதாக டெண்டர் விட்டால் விடுங்கள். ஆனால், ஏற்கெனவே லீஸுக்கு எடுத்த அந்தக் கல் உடைக்கக்கூடிய அந்தக் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு, அதிலே பணம் போடக்கூடிய அந்த சின்ன, சின்ன, பேர்களுக்கு பணம் போட்டு வேலை செய்யக்கூடிய அந்த நபர்களுக்கு நஷ்டம் வராத அளவிற்கு லீஸுக்கு மறுபடியும் நீங்கள் புதுப்பித்துக் கொடுத்தால், அந்த குத்தகையைப் புதுப்பித்துக் கொடுத்தால் அவர்கள் வாழ்க்கையிலே வளம்

பெறுவதற்கான ஒரு நல்ல நிலையை உருவாக்குவோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

என்னுடைய நிலக்கோட்டை தொகுதியிலே எப்படியாகிலும் பழம் பதப்படுத்தும் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் எனக்கு நிலம் இருக்கிறது; நீங்கள் தான் எடுத்தீர்கள். மல்லிகைப் பூ சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, இதனை என்னுடைய வேண்டுகோளாக வைத்து, என்னுடைய உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்தின் மீது மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய சீரிய, செழுமிய கருத்துக்களை எடுத்துக்கூறி, நல்லவைகளைப் பாராட்டி, தேவைகளைத் தொகுத்து அளித்திருக்கின்றார்கள். முதலில் இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், தமிழகத்திலே இன்றைக்குத் தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கின்ற வேகமான முன்னேற்றத்தைப் பாராட்டி, அதே நேரத்தில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை எல்லாம் திறந்திடல் வேண்டும் என்பதை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தியுள்ளார்கள். அந்தத் தொழிற்சாலைகள் ஏன் மூடப்பட்டன, தொழிலாளர்களுடைய தகராறு காரணமாகவா அல்லது அரசின் செயல்பாடு காரணமாகவா என்ற வினாக்களுக்குக் கிடைக்கின்ற விடை, "அல்ல" என்பதுதான். அந்தத் தொழில் அதிபர்களுடைய நிர்வாகத் திறன், நிதிப் பற்றாக்குறை, அவர்களிடையே ஏற்படுகின்ற பூசல், நீதிமன்றத்திலே அவை கிடப்பிலே இருக்கிற சூழல், இந்தக் காரணங்களால் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் குறித்து பல விளக்கங்கள் இந்த அவையிலே அரசின் சார்பிலே அளிக்கப்பட்டிருக்கின்றன. தொழிற்சாலைகள் மூடிக் கிடப்பது என்பது அரசுக்கு மகிழ்ச்சிகரமான செய்தி அல்ல. அவற்றை எந்த வகையிலே திறக்கலாம், எந்த முயற்சியில் ஈடுபடலாம் என்பதில் அரசு கவனம் செலுத்தும் என்பதை நண்பர் ரங்கநாதன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-30

தென் மாவட்டங்களில் தொழில்கள் தொடங்குவதன் மூலம் நல்ல பொருளாதார மேம்பாட்டை அங்கே ஏற்படுத்தி, இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கின்ற சாதி சச்சரவுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்ற நல்ல யோசனையை, ஏற்கெனவே அரசு கொண்டிருக்கின்ற கருத்தை, தி.மு. கழகத்தின் சார்பில் இங்கே பேசிய சிவராமன் அவர்கள் எடுத்துரைத்திருக்கின்றார்கள். அதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு, தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி, மக்கள் முன்னேற்றம், வேறு பல மேம்பாடுகளை எவ்வாறு இந்த அரசு செய்யலாம் என்ற பரிந்துரைகளை அளிக்கும் என்று நிதிநிலை அறிக்கையிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே, அது விரைவிலே செயல்படும், அந்தக் குழு அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய நம்முடைய சுப்பராயன் அவர்கள், இன்று பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள கடுமையான பிரச்சினையை எடுத்துக்காட்டி, அது குறித்து நான் இருசாராரையும் அழைத்து வைத்து, இதே கோட்டையில், நாமக்கல் கவிஞர் மாளிகையிலே நீண்ட நேரம் கலந்து பேசியதையும் சுட்டிக்காட்டி இருக்கிறார். இது மாநில அளவிலான பிரச்சினை அல்ல, அகில இந்தியப் பிரச்சினை என்பதையும், அதற்கு அகில இந்திய அளவிலே மத்திய அரசு வழி காண வேண்டும் என்பதையும் நாம் பல முறை எடுத்துரைத்து, அதை வலியுறுத்தி அரசின் சார்பில் மத்திய அரசுக்குப் பல வேண்டுகோள்களை விடுத்திருக்கிறோம்.

அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள், 'டான்செம்' பற்றி. அதைப்பற்றிப் பேசும்போது தொழில் துறைச் செயலாளரைக் கடுமையாகச் சாடினார்கள். அதிகாரிகளைச் சாடுவது என்றால் சுப்பராயனுக்கு அதிரசம் சாப்பிடுவதுபோல (சிரிப்பு). ஆனால், நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே இந்த அளவிற்குத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டதற்குக் காரணமானவர்களில் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபொழுது இருந்த தொழில் துறைச் செயலாளரும், இப்போதிருக்கின்ற தொழில் துறைச் செயலாளரும் முக்கியமானவர்கள் என்பதை நான் நன்றியுணர்வோடு இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

'டான்செம்' பற்றி அவர்கள் குறிப்பிடும்பொழுது, மாயனூர் கல்நார்த் தொழிற்சாலையைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். அதற்கு, நான் ஒரு சுருக்கமான விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

19-2-1997 அன்று வெளியிடப்பட்ட அரசாணை, நிதித் துறையினுடைய ஆணையின்படி, அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கொள்முதல், பாதுகாப்பு மற்றும் விலை முன்னுரிமை நீக்கப்பட்டது. 30-3-1998 வரை 'ட்வாடு' நிறுவனம் தனது மொத்த, குழாய் மற்றும் இணைப்புகள் தேவைக்கு, 'டான்செம்' நிறுவனத்திடமிருந்தே பெற்று வந்தது. எனவே, இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர், 'ட்வாடு' தனது கல்நார்க் குழாய்த் தேவைகளுக்குப் பொது ஒப்பந்த முறைப்படி பெற முனைந்தது. 'ட்வாடு' தனது 1998-99 ஆம் ஆண்டு தேவைகளைப் பூர்த்தி செய்ய ரூபாய் 22 கோடி மதிப்புள்ள குழாய்களுக்குப் பொது ஒப்பந்த முறைப்படி பெற நடவடிக்கை எடுத்தது. இதில் எல்-1 ஒப்பந்தக்காரர் M/s. Infrastructure—மெஸர்ஸ் இன்ஃப்ராஸ்ட்ரக்சர், இராஜஸ்தான் என்ற நிறுவனம். இதனுடைய விலை ரூபாய் 11,964 per Metric Tonne ஆகும்.

'ட்வாடு' தனது தேவைகளுக்கேற்ப, 'டான்செம்' நிறுவனத்தை, ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட எல்-1 விலைக்கு சம்மதிக்கக் கேட்டுக்கொண்டது. 'டான்செம்' நிறுவனம் எல்-1 விலைக்கு விநியோகம் செய்ய 50 சதவீதம் மட்டும் ஒப்புக்கொண்டு, அதைப் பெற்றுக்கொண்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, 'டான்செம்' அறவே புறக்கணிக்கப்பட்டு விடவில்லை. அவர்களுக்கு 50 சதவீதம் தரப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்பொழுது, திருப்பூரிலே கட்டமைப்பில், மேம்பாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கலைக் குறித்துச் சொன்னார்கள். அதைப் பற்றி அவரும், நானும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், எவ்வளவு தூரம் அக்கறை எடுத்துப் பணியாற்றி வருகிறோம் என்பதும், இடையிலே இப்போது ஏற்பட்டுள்ள இந்த நீதிமன்ற இடைக்காலத் தடையை எப்படி எதிர்கொண்டு, அதிலிருந்து நாம் மீண்டு வருவது என்பதும், இப்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகின்றவைகளாகும். எனவே, விரைவில் அந்த மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்குகின்ற முயற்சியில் நாம் வெற்றி அடைவோம் என்பதை திரு. சுப்பராயன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.



பிற்பகல் 12-35

அ.தி.மு.க. சார்பில் உரையாற்றிய திரு. சுந்தரம் அவர்கள், சிங்கப்பூர் போனாயே, யாரைப் பார்த்தாய்; என்ன கொண்டு வந்தாய் என்று கேட்டார்கள். அதற்கு திரு. குழந்தை தமிழரசன் சில விளக்கங்களை அளித்தார்கள் என்றாலும்கூட, சிங்கப்பூரில் பிரதமரைச் சந்தித்தேன்; அமைச்சர்களைச் சந்தித்தேன்; சிங்கப்பூர் தொழிலதிபர்களைச் சந்தித்தேன். அவர்கள் எனக்களித்த வரவேற்பிலே கலந்துகொண்டு, அவர்கள் எல்லாம் தொழில் தொடங்க, தமிழகத்திற்கு வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேன். அவர்களில் பலர் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். சிலர் வந்தும் இருக்கிறார்கள். மலேசியப் பிரதமரைச் சந்தித்தேன். மலேசியாவில் உள்ள பல அமைச்சர் பெருமக்களைச் சந்தித்தேன். தொழில் விற்பன்னர்களை, தொழிலதிபர்களைச் சந்தித்தேன். அவர்கள் அளித்த விருந்திலே கலந்துகொண்டு, அவர்களும் தமிழகத்திலே தொழில் தொடங்க வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தேன். இப்போதுகூட, திரு. டத்தோ சாமிவேல் என்ற பொதுப்பணித் துறை அமைச்சருடைய தலைமையில் 20 பேர் கொண்ட ஒரு பெரிய குழு தமிழகத்திற்கு வந்து, குமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தைச் சீர்படுத்த, ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருந்த துறைமுகத்தை இப்போது இயங்காமல் இருக்கின்ற சூழ்நிலையிலேயிருந்து மாற்றி, அது ஏறத்தாழ சிறிய துறைமுகம் என்றாலும்கூட, தூத்துக்குடித் துறைமுகத்திற்கு அடுத்து, அதற்கு ஈடாகக்கூட அதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். சுமார் 2 மணி நேரம் அது பற்றி விவாதம் கடந்த சில நாட்களுக்கு முன்பு இதே கோட்டையில் நடைபெற்றிருக்கின்றது. அதைப்போலவே, அவர்களுடைய முழு முயற்சியோடு - இது தனிப்பட்டவர்கள் செய்கின்ற ஒப்பந்தமல்ல - மலேசிய அரசும், தமிழக அரசும் செய்து கொள்கின்ற ஒப்பந்தம். அடுத்து, பறக்கும் சாலை என்று சொன்னால்தான் புரியும் என்பதற்காகச் சொல்கின்றேன். துறைமுகத்திலேயிருந்து மீனம்பாக்கம் விமானநிலையம் வரையில் முதற்கட்டமாக ஈரடுக்குச் சாலை ஒன்றை அமைப்பதற்கும் திட்டம் தீட்டப்பட்டு, அதற்கான வரைவுகளும் அன்றைக்கு விவாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மலேசியா, சிங்கப்பூர் சென்றது என்பது, அரசாங்கச் செலவில், அரசாங்க விமானத்தை எடுத்துக்கொண்டு நெல்லூர் சுப்பிராமிரெட்டியாருடைய சாவிற்குப் போனதைப்போல அல்ல என்பதை நான் நம்முடைய சுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் "என்னுடைய தொகுதிக்குத் தொழிற்சாலை இல்லை, இரண்டு முறை சொல்லிவிட்டேன்" என்றார். கங்கைக்குக்கூட மூன்று முறை தவணை கொடுப்பார்கள். எனவே, திரு. சுந்தரம் அவர்களை, மூன்றாவது தவணை கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கின்றேன். மூன்றாவது தவணையிலே தொழிற்சாலை தொடங்குவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"கார் தொழிற்சாலைகள் எல்லாம் நாங்கள் கொண்டு வந்ததுதான் ஃபோர்டு தொழிற்சாலை நாங்கள்தான் கொண்டு வந்தோம். நீங்கள் பெயர்தட்டிக் கொண்டு போகிறீர்கள்" என்று அவர் சொன்னார். இல்லை, ஃபோர்டு தொழிற்சாலைக்கு MoU போட்டதோடு நின்றுவிட்டது. அதற்குப் பிறகு கழக அரசு பொறுப்பேற்றது 1996 ஆம் ஆண்டு. அதற்கு நிலம் வாங்கி ஒப்படைத்தது உட்பட, எல்லாப் பணிகளையும் மேற்கொண்டு, அந்தத் தொழிற்சாலையைத் தொடங்கிவைத்தது வரையில், திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கெனவே ஆரம்பித்ததற்காக நான் ஒன்றும் குறை சொல்லவில்லை. ஏன் ஆரம்பித்தீர்கள் என்று கேட்கவில்லை. அவர்கள் ஆரம்பித்த காரணத்தாலே நாங்கள் அதை நிறுத்திவிடவில்லை. இதற்கு முன்பிருந்த அரசு எதைத் தொடங்கியிருந்தாலும், அது நல்லவைகளாக இருந்தால் அவற்றைத் தொடர்ந்து செய்வதுதான் பிறகு வருகின்ற அரசுக்கு ஜனநாயகத்திலே அழகு. அந்த ஜனநாயகக் கடமையை நாங்கள் நிறைவேற்றிக்கொண்டுதான் வருகிறோம் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

புகளூர் பற்றிப் புகார் கொடுத்தேன், என்ன ஆயிற்று என்று அவர் கேட்டார். அது ஊழல் விசாரிப்புக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது என்பதையும், விசாரணை முடிந்து, அதில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் விரைவிலே தெரிவிப்பேன். உடனடியாக அந்தக் குழுவிற்கு அனுப்பப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. அதற்குப் பொறுப்புள்ள அதிகாரிகள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தி.மு.க. சார்பில் பேசிய திரு. சண்முகம் அவர்கள், பொள்ளாச்சியை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டும் என்று



குறிப்பிட்டார். பின்தங்கிய வட்டமாக ஒரு பகுதியை அறிவிப்பது என்றால், அதற்கு என்னென்ன நிலைகள் தேவை, எத்தகைய அடிப்படைகள் தேவை என்பதையெல்லாம், ஒரு முறை அல்ல, பல முறை இந்த அவையிலே கேள்வி நேரத்திலும், வேறு பல நேரங்களிலும் நான் விளக்கியிருக்கின்றேன். அத்தகைய அடிப்படைகள் அமைகின்றபோது பொள்ளாச்சியைப் பின்தங்கிய வட்டமாக அறிவிப்பதற்கான பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-40*

. இந்திய தேசிய லீக் சார்பில் பேசிய முகம்மது இஸ்மாயில் அவர்கள், அவருடைய தொகுதியிலே முருங்கைக் காய்த் தொழிற்சாலை ஒன்று வேண்டுமென்று சொன்னார். அதை அமைத்து, பாக்கியராஜை அழைத்துத் திறப்பு விழா நடத்தலாம் என்று (சிரிப்பு) நான் அவருக்கு உறுதி கூறுகின்றேன்.

குடகனாற்றில் மணல் எடுப்பதைப் பற்றி, அதிலே இருக்கின்ற குறைபாடுகளைப் பற்றியெல்லாம் இங்கே நம்முடைய இஸ்மாயில் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுது கரூர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கின்ற திரு. அய்யர் அவர்கள், இந்த மணல் குவாரியில் நடைபெறுகின்ற ஊழல்களையெல்லாம் பெரிதும் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். அதைப்போல இந்த மாவட்டத்தில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதை முகம்மது இஸ்மாயில் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசிய டாக்டர் செல்லக்குமார் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். Best and Crompton கம்பெனியின் Urban Land Ceiling சம்பந்தமான கோப்பு 10 மாத காலமாக ஏன் உறங்குகிறது, அதிலே மறைந்து கிடக்கின்ற மர்மம் என்ன என்றெல்லாம் கேட்டார். "மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்னவோ" என்பது தில்லானா மோகனாம்பாளிலே நான் கேட்ட பாட்டு. தம்பி செல்லக்குமாரும் அதைக் கேட்டிருப்பார், ஆர்வத்தோடு பார்த்திருப்பார் அதை. ஆகவே, இதிலே எந்த மர்மமும் கிடையாது. ஒரு கோப்பு சில நாள் தங்கி விடுகின்ற காரணத்தாலே, இதிலே மர்மம் இருப்பதாகக் கருதிவிடக் கூடாது. இதிலே என்ன பிரச்சினை என்றால், அவர்கள் ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு மேலாக, அங்கே உள்ள surplus vacant land-ஐ விற்று

விட வேண்டுமென்று அனுமதி கேட்டார்கள். அதற்கு ஒரேயடியாக ஒரு அதிகாரியோ, ஒரு அமைச்சரோ உத்தரவு போட்டு விட முடியாது. முதலமைச்சரேகூட உத்தரவு போட முடியாது. அது மிகத் தேவை, பொது நலனுக்கு உகந்தது என்றால் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டித்தான் அந்த முடிவெடுக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் அப்படித்தான்.

அவருக்கே தெரியும். காங்கிரஸ் மைதானத்திலே 22 மாடிக் கட்டடம் கட்டுவதற்கு அறங்காவல் குழுத் தலைவராக உள்ள சி. சுப்பிரமணியம் அவர்கள் எனக்குக் கடிதம் எழுதினார்கள். அதில்கூட 10 மாதம் ஆயிற்று. 10 மாதம் ஆயிற்றே, இடையிலே என்ன மர்மம் என்றா என்னைக் கேட்பது? அப்படி சி.எஸ்.ஸும் என்னைச் சந்தேகித்து விட மாட்டார், நானும் அப்படிச் சந்தேகத்திற்கு உரியவனாக இருக்க மாட்டேன் என்பது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். ஆனாலும் அந்த அனுமதியைக் கொடுப்பதற்கு அமைச்சரவையைத்தான் கூட்டினோம். நானாக ஒரு கையெழுத்துப் போட்டு, கொடுத்து விட்டோம் அனுமதியை என்று சொல்லவில்லை. புதிதாக ஒரு கொள்கை நிலை எடுக்கும்பொழுது, அமைச்சரவைக் கூட்டத்திலேதான் அந்த நிலையை எடுக்க வேண்டியிருக்கிறது.

அதைப்போலவே, Best & Crompton கோரிக்கை அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதித்து முடிவெடுப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறதேயல்லாமல், வேறல்ல. மிகை வெற்று நிலம் அது. Surplus vacant land அதை விற்பனை செய்துகொள்ள இதுவரை யாருக்கும் அரசு அனுமதி கொடுத்தது இல்லை. அவர்கள் விற்பனை செய்துகொள்ள அனுமதி கேட்கின்ற காரணத்தினாலேதான், அமைச்சரவைக் கூட்டம் தேவைப்படுகிறது என்பதை நான் டாக்டர் செல்லக்குமார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போல, அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். L.N.G. இதிலே நீங்கள் படித்த அந்த 13 பேரில் இல்லாதவருக்குக் கொடுத்திருக்கிறீர்களே, எப்படி என்று கேட்டார்கள். அந்தப் படித்த பேர்களில் இப்பொழுது யாருக்குக் கொடுத்திருக்கிறோம் என்றால், Siemens என்ற நிறுவனத்திற்குக் கொடுத்திருக்கிறோம். அப்பொழுது இருந்த பேர்களில் UNOCAL அமெரிக்காவைச் சேர்ந்தது. C.M.S. அமெரிக்காவைச் சேர்ந்தது. GRASIM இந்தியாவைச் சேர்ந்தது.



WOODSIDE ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தது. இவைகள் அனைத்தும் சேர்ந்து Siemens என்ற பெயரிலே இப்பொழுது ஒரு தொகுப்பாக அவர்கள் செயல்படுகிறார்கள். இத்தனையும் சேர்ந்ததுதான் Siemens. அதற்குத்தான் இது கொடுக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல், வேறல்ல. மத்திய அமைச்சர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் எழுதிய கடிதத்திற்கு விளக்கமான பதில் கடிதம் அவருக்கு அனுப்பப்பட்டு, அவரும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இடையிலே ஏற்படுகின்ற அரசியல் பேச்சு வார்த்தைகளெல்லாம், இதிலே எந்தவிதமான தொடர்பும் உடையன அல்ல என்பதையும் திரு. செல்லக்குமார் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய ஃபார்வர்டு பிளாக் கட்சியினுடைய சார்பில் உரையாற்றிய திரு. சந்தானம் அவர்கள், அலங்காநல்லூர் தொழிற்சாலை-பொதுத் துறை ஊக்கப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டார்கள். அதையேதான் நம்முடைய திருமதி பொன்னம்மாள் அவர்களும் குறிப்பிட்டார்கள். அது நீண்டகாலமாக ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. அங்கேயுள்ள விவசாயிகள் எல்லாம்கூட என்னை வந்து பார்த்து, அதை யாராவது ஒரு தனியாருக்கு, நல்ல வாய்ப்பு உள்ளவர்கள், அதை ஒழுங்காகச் செய்யக்கூடியவர்கள், நல்ல முறையிலே நிர்வாகம் நடத்தக்கூடியவர்களுக்குத் தரவேண்டும் என்றுகூடக் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அதற்கு யார் முன்வருகின்றார்கள் என்பதை நாங்கள் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். சில பேர் முன் வந்திருக்கிறார்கள். அதிலே யார் தகுதியுடையவர்கள் என்பதைப் பார்த்து, அந்த ஆலையை ஒழுங்காக நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 12 45

நம்முடைய திரு. வேலாயுதன் அவர்கள், கயிறு திரிக்கும் தொழில் கன்னியாகுமரியிலே வேண்டுமென்று கேட்டார்கள். நல்ல முறையிலே கயிறு திரிக்க (சிரிப்பு) கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்தத் தொழிற்சாலை தொடங்குவதற்கு, அது தொடர்ந்து நடப்பதற்குத் தேவையான கச்சாப்பொருட்கள் இவை எல்லாம் கிடைப்பதற்கு, அரசு ஒழுங்கு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரப்பர்த் தொழிற்சாலை ஆரம்பிப்பதாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். இன்னும் வரவில்லை என்கிறார்கள். ரப்பர் என்றாலே கொஞ்சம் இழுக்கத்தான் செய்யும். அதற்கும் பல முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அதற்குரியவர்கள் வருகின்ற நேரத்திலே நிச்சயமாகத் ரப்பர் தொழிற்சாலை அங்கே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாகப் பேசிய திருமதி பொன்னம்மாள் அவர்கள், மல்லிகைப் பூ சென்ட் தொழிற்சாலை ஒன்றை அவரது தொகுதியிலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சிங்கப்பூருக்குப் பெண்களை எல்லாம் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். பெண்களை அனுப்பலாம் சிங்கப்பூருக்கு; ஆனால், அங்கே போய் சேலைகளை எடுத்துக்கொண்டு வரக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்குத் தேவையான, நல்ல வேலைகளை, நல்லத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கானத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டும்.

அவர்கள் இன்னொன்று சொன்னார்கள். கரும்பு விலை பற்றிச் சொன்னார்கள். தேர்தல் அறிக்கையிலே 1,000 ரூபாய் என்று போட்டுவிட்டு ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். நானும் பல முறை இந்த அவையிலே விளக்கி விட்டேன். ஒருவேளை நான் பேசும்போது திருமதி. பொன்னம்மாள் அவர்கள் இல்லையோ அல்லது நான்தான் அவர்களுக்குப் புரியும்படியாக விளக்கவில்லையோ என்பது எனக்குத் தெரியவில்லை. தேர்தல் அறிக்கையிலே அப்படி ஒன்றும் சொல்லவில்லை. அன்றைக்கு திரு. பழனிசாமி அவர்களுக்கு நினைவூட்டியதைப்போல, திருச்சியில், தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற ஒரு மாநாட்டில், 1,000 ரூபாய் கரும்புக்குத் தரவேண்டுமென்று தீர்மானம் போட்டது உண்மை. ஏனென்றால், எதிர்க்கட்சி அப்படித்தான் போடும். ஆளுங்கட்சியாக வந்த பிறகுதான் கஷ்டம். அதனுடைய சிரமம் தெரியும். 1,000 ரூபாய் தரவேண்டுமென்று தீர்மானம் போட்டது உண்மை. ஆனால், தேர்தல் அறிக்கையிலே, மிகுந்த எச்சரிக்கையோடு அதை நாங்கள் குறிப்பிடவில்லை. "கட்டுப்படியான விலை தரவும், அவர்களுக்கு வண்டிச் சத்தம் போன்றவைகளை ஏற்றுக்கொள்ளவும், அவர்களுக்கு நிர்வாகத்தின் மூலமாகக் கிடைக்கக்கூடிய ஆதாயங்கள் எவையெவையாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றியும் முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, நல்ல முடிவு காண்பதற்கு, தி.மு.கழகம் வென்றால் பாடுபடும்" என்றுதான் தேர்தல் அறிக்கையிலே இருக்கிறது.



1,000 ரூபாய் என்று குறிப்பிடவில்லை. அப்படி குறிப்பிடாததற்காக, அதிக விலை கொடுக்க முடியாது என்று சொல்லவில்லை. நான் மீண்டும் ஒருமுறை ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன், மாநில வாரியாக.

சர்க்கரைக் கட்டுமானம் 10.22 சதவிகிதம் இருக்கின்ற ஆந்திராவில் சராசரி கரும்பு விலை, ஒரு டன் 630 ரூபாய். 10.54 சதவிகிதம் கட்டுமானம் உள்ள கர்நாடகத்தில் கரும்பு விலை ஒரு டன் 730 ரூபாய். சர்க்கரைக் கட்டுமானம் 11.11 சதவிகிதம் என்று உள்ள மராட்டியத்தில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு 680 ரூபாய். 10.72 சதவிகிதம் கட்டுமானம் உள்ள குஜராத்தில் கரும்பு விலை ஒரு டன் 648 ரூபாய். இவைகளை எல்லாம் விடக் குறைவாக 8.94 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள தமிழ்நாட்டில் சராசரி கரும்பு விலை ஒரு டன் 753 ரூபாய். இது எல்லா மாநிலங்களோடும் ஒப்பிடும்போது அதிக விலையா, இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் இந்த விலையைச் சற்று ஏற்றித் தருவதற்கு இயலாத நிலையிலே நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இடைக்காலத் தடையை சில தனி அதிபர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரால் இங்கே பலமுறை விளக்கப்பட்டிருக்கிறது. முத்தரப்புப் பேச்சுவார்த்தையின் மூலமாக இன்னும் எந்த அளவுக்கு இதை உயர்த்தித் தரமுடியும் என்பதை அரசு ஆலோசிக்கும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

WORLD TEL நிறுவனத்தைப்பற்றி டாக்டர் செல்லக்குமார் அவர்கள் சொன்னார்கள். அந்த WORLD TEL என்பது தனியார் கம்பெனி அல்ல; அந்த நிறுவனத்திலே உள்ள சாம் பிட்ரோடா என்பவர் ஒரு தனிப்பட்ட மனிதர் அல்ல. அவர் அந்த நிறுவனத்தினுடைய தலைவர். WORLD TEL நிறுவனம் என்பது International Telecommunication Union (ITU) என்கின்ற ஒரு யூ.என். ஏஜென்ஸியால் எற்படுத்தப்பட்டது. அந்த நிர்வாகத்தில் Assembly of Governors-மத்திய அரசின் பிரதிநிதியும் அதிலே இருக்கிறார். இதுவொரு தனியார் நிறுவனம் அல்ல. சாம் அந்த பிட்ரோடாவினுடைய சொந்த நிறுவனம் அல்ல. அவர் அந்த WORLD TEL நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார். அவ்வளவுதான். WORLD TEL நிறுவனத்தின் திட்டத்தில் தமிழக அரசும் கூட்டாக இணைந்து, Joint Sector Project ஆக செயல் படுத்துவதால் இதற்கு உலக அளவிலே ஒப்பந்தப்புள்ளி கோரும் அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலேகூட சமீபத்திலே WORLD TEL நிறுவனத்தோடு நம்முடைய அதிகாரிகள் பேசினார்கள். அவர்கள் இன்னும் சில நிபந்தனைகளை விதித்து, கொஞ்சம் தாமதமாகும்போல்கூட எங்களுக்குத் தெரிகிறது. இந்தப் பெரிய முயற்சி தாமதமாகுமேயானால் WORLD TEL-க்குப் பதிலாக வேறு ஒரு பெரிய நிறுவனத்தை அணுகி விரைவில் இந்த சமுதாய இணையம் தமிழகம் முழுவதும் பரவிடவும், இலட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் அந்தப் பெரு முயற்சியை அவர்களிடமிருந்து மாற்றிக்கூட வேறு ஒரு நிறுவனத்திற்கு அதை ஒப்படைக்கலாமா என்றுகூட அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது, இன்னும் முடிவாகவில்லை. இப்படிச் சொல்வதால இவர்களுக்கு அறவே இல்லை என்றும் பொருள் அல்ல. அவர்கள் தாமதம் செய்வார்களேயானால் வேறு ஒருவருக்கு இதை மாற்ற முடியுமா என்பதையும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாம் பிட்ரோடாவினுடைய சொந்த நிறுவனம் என்பது அல்ல என்னுடைய கருத்து. அதைப்போன்று இன்னும் பல நிறுவனங்கள் International Level-ல் இருக்கின்றன. நீங்கள் இந்தத் துறையைப் பொறுத்தவரையில், 1½ இலட்சம பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்பதில் நான் மாற்றுக் கருத்து கொள்ளவில்லை. ஆனால் இது ஒரு வணிகமாக நடைபெற இருக்கிறது. நாளையதினம் 13,000 இணையங்கள் ஆங்காங்கு பொருத்தப்பட்ட பிறகு, தமிழகத்து மக்களிடமிருந்து ஒரு மணி நேரத்திற்கு இத்தனை ரூபாய் என்று வசூலிக்கயிருக்கிறார்கள். அதிலே அரசுக்கு ஒரு பங்கு, 26 சதவிகிதம் என்று நான் கருதுகிறேன். அந்த 26 சதவிகிதம் அரசுக்குக் கிடைத்திருந்தாலும் இன்னொரு நிறுவனத்திற்கு போக இருக்கிறது. அதைவிடக் குறைவான கட்டணத்திலே வேறு நிறுவனங்கள், இதைவிடக் திறமையான நிறுவனங்கள் இதிலே பங்கு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே, Transparency என்று சொல்கிறபோது Global tender-ல் நீங்கள் இதற்கும் அழைப்புகளை விடுத்திருக்கலாம். இதைவிடச் சிறந்தவர்கள் இதிலே பங்கு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை ஏன் விடவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யோசனையை முன்வைத்து இந்தியா முழுவதும், எல்லா மாநிலங்களிலும் அலைந்து திரிந்தவர் சாம் பிட்ரோடா. அதை அவரே ஒரு பேட்டியில், சென்னையில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார். எந்த மாநிலமும் இந்த முயற்சிக்கு அவருக்குக் கை கொடுக்க முன்வரவில்லை. அந்தநேரத்திலேதான் நாம் அவரைத் அழைத்துத் தமிழ்நாட்டிற்கு அந்தப் பணியைச் செய்து கொடுப்பீர்களா என்று கேட்டபோது ஒத்துக்கொண்டார். இப்போது வேறு பல நிறுவனங்களும் அதே அளவிற்கு இருக்கின்றன என்றால் அவர்களை எல்லாம் விட்டுவிட்டு இவருக்கேதான் கொடுக்க வேண்டும் என்கின்ற பிடிவாத குணத்தோடு அரசு செயல்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் குறைந்த அளவிலே, இவர் விதிக்கின்ற நிபந்தனைகளுக்குக் குறைவான நிபந்தனைகளை விதித்து, வேறொரு பெரிய நிறுவனம் முன்வருமானால்—ஆனால் அவர்கள் செய்து முடிக்க வேண்டும்—செய்து முடிக்கின்ற அத்தகைய திறனுள்ள ஒரு நிறுவனம், எந்த நிறுவனமாக இருந்தாலும், அவற்றை அழைப்பதிலே எந்தவிதமான தயக்கமும் இந்த அரசுக்குக் கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். யாரோ ஒருவருக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக அல்ல. அந்த முதல் முயற்சியை அவர் எடுத்தார். திரு. ராஜீவ்காந்தி அவர்களிடத்திலே நல்ல பழக்கம் உடையவர் அவர். ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்தவர். இன்றைக்கு அகில உலகத்தில் இப்படிப்பட்ட ஒரு விஞ்ஞான ரீதியான செயல்களைச் செய்வதிலே நல்ல பாண்டித்யம் பெற்றவராகத் திகழ்பவர். எனவே, அவர் பல மாநிலங்களில் முயன்றும் அது நடைபெறாத சூழ்நிலையில், தமிழகத்திற்கு அவரை அழைத்து இந்தப் பணியை ஒப்படைக்கலாம் என்று கருதியது. தமிழகம் அந்த முயற்சியை மேற்கொண்ட பிறகு, வேறு பல மாநிலங்களிலே உள்ள முதலமைச்சர்கள் எல்லாம் அவரைத் தொடர்பு கொண்டு, 'அங்கே வருக, இங்கே வருக' என்று அழைத்தார்கள். ஆனால் அவர் 'முதலிலே என்னை அழைத்தது தமிழ்நாடுதான். அங்கேதான் இந்தப் பணியை செய்வேன்' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இப்போது அண்மையிலே அவர் என்னோடு பேசியபோது, சில நிபந்தனைகள் நாம் உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாக இருப்பதை எண்ணிப் பார்த்து, டாக்டர் செல்லக்குமார் அவர்கள் சொல்வதைப்போல, வேறு நிறுவனங்களையும் அழைத்துப் பேசக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்பதை நாம் யோசித்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

தொழில துறையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1967 ஆம் ஆண்டு தொடங்கிய பிறகு—அதற்கு முன்பு பெருந்தலைவர் காமராஜருடைய தலைமையில், பக்தவச்சலம் அவர்களுடைய தலைமையில், இந்த ஆட்சி இங்கே நடைபெற்ற பொழுதெல்லாம் தொழிற்சாலைகளிலே பெரும்கவனம் செலுத்தப்பட்டது என்பதும், அன்றைய தொழில் துறை தமிழகத்திலே வளருவதற்குக் காரணமாக அப்போது தீட்டப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் அமைந்தன என்பதும் அனைவரும் அறிந்த உண்மையாகும். ஆனால் ஐந்தாண்டுத் திட்டம் நலிந்து திட்டத்தினுடைய தொகை குறைந்துபோன ஒரு சூழ்நிலையிலேதான் 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே ஏற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது என்பதையும் அனைவரும் நன்கு அறிவீர்கள். இருந்தாலும் 1969 முதல் 1975 வரையிலே உள்ள அந்த இடைத் காலத்திலேதான் தூத்துக்குடியிலே பெரிய தொழிற்சாலை, ஸ்பிக் உரத் தொழிற்சாலையை தொடங்கினோம். அன்றைக்கு ஒரு 100 கோடி, 150 கோடி ரூபாய்தான். இன்றைக்கு 1,000 கோடி, 2,000 கோடி ரூபாய் என்கிற அளவுக்கு அது வளர்ந்து பெரிய தொழிற்சாலையாக. தூத்துக்குடி உரத் தொழிற்சாலை விளங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாமல், தமிழகத்தில்தான் அன்றைக்கு சிப்காட் என்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கினோம். ஆங்காங்கு ஒரு தொழிற்சாலை அமைவது, ஒரு மாநிலத்திலே, ஒரு நாட்டிலே என்ற நிலைக்கு மாறாக, வளாகங்கள் அமைத்து, அந்த வளாகங்களுக்கு உள்ளே பல தொழிற்சாலைகளை அமைப்பது, Park என்ற பெயராலோ அல்லது வளாகம் என்ற பெயராலோ, பல தொழிற்சாலைகளை அமைக்கின்ற சிப்காட் நிறுவனமே கழக ஆட்சியிலேதான் 1969 முதல் 1975 வரையிலே உள்ள அந்த இடைக் காலத்திலேதான் தொடங்கப்பட்டது. அதிலே அந்த சிப்காட்டின்படி, தூத்துக்குடியிலே ஸ்பிக் தொழிற்சாலை, இராணிப்பேட்டையிலே தொழில் வளாகங்கள், ஓசூரிலே தொழில் வளாகங்கள் இவை எல்லாம் 1969-லிருந்து 1975 வரையிலே தொடங்கப்பட்டன. State Industries Promotion Corporation of Tamil Nadu என்பதுதான் சிப்காட். அந்தக் காலகட்டத்திலேதான் சேலம் இரும்பு ஆலை கிடைத்தது என்பதையும் மறந்துவிடக் கூடாது.



சேலம் இரும்பு ஆலை கிடைப்பதற்காக, அன்றைக்குப் பாராளுமன்றத்திலே இருந்த 24 கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாதிட்டோம், போரிட்டோம். அப்போது இந்திரா காந்தி அவர்கள் மைனாரிட்டி கவர்ன்மென்ட் என்ற நிலையிலே அந்த சர்க்கார் இருந்தபோது, 24 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம் இதுதான் நேரம் என்று பயன்படுத்திக்கொண்டு, இந்திரா காந்தியை நாங்கள் மிரட்டவில்லை; இந்திரா காந்தியிடத்திலே நாங்கள் மிரட்டியதெல்லாம் எங்களுக்குத் தொழிற்சாலை கொடுங்கள் என்பதற்காகத்தான்; இந்திரா காந்தியிடத்திலே நாங்கள் வாதாடினோம், போராடினோம். இன்னும் சொல்லப் போனால் அந்தத் திட்ட வரைவுக்காக முதலமைச்சர்களை எல்லாம் அழைத்து, இந்திரா காந்தி அவர்கள் பிரதமராகவும் மொரார்ஜி தேசாய் அவர்கள் துணைப் பிரதமராகவும் இருந்து நடத்திய அந்தக் கூட்டத்தில், அந்தத் திட்ட வரைவை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, "இதிலே சேலம் திட்டம் இல்லை. ஆகவே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்" என்று நானும் அன்றைய நிதி அமைச்சராக இருந்த நண்பர் மதியழகனும் வெளிநடப்பே செய்தோம். அதற்கு அடுத்த ஒரு வாரத்திற்கெல்லாம் இந்திரா காந்தி அம்மையார் டில்லிக்கு என்னை வருமாறு தந்தி கொடுத்து அழைத்து, சேலம் தொழிற்சாலைக்கான அந்த ஆணையை வழங்கினார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். இப்படி நாட்டுக்காக, மாநிலத்திற்காகத்தான் 24 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அன்றைக்குப் பயன்பட்டார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

இந்தக் காலகட்டத்திலேதான் ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டது. இவைகளுக்கு எல்லாம் நாம் உருவாக்கிய சிப்காட் நிறுவனம் பெரும் பயனுள்ளதாக அமைந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1973 ஆம் ஆண்டில் இராணிப்பேட்டையில் 729 ஏக்கர் பரப்பு நிலம் இருந்தது. நாங்கள் பொறுப்புக்கு வந்தவுடன், அந்த இடம் ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியிலே வாங்கிப்போடப்பட்ட இடம் என்றும், அது எதற்கும் பயன்படாத இடம், ஆகவே அதை விற்றுவிடலாம் என்றும் ஒரு முடிவு எடுக்கப்பட்டிருந்தது. நானும் அன்றைய தொழில் அமைச்சர் மாதவனும் இராணிப்பேட்டைக்குச் சென்று அந்த இடத்தைப் பார்த்து, அப்போதுதான் சிப்காட்டை உருவாக்கி ஒரு வளாகத்தை இங்கு அமைத்தால் என்ன என்ற கேள்வி எழுப்பி, இராணிப்பேட்டையிலே அந்த வளாகத்தை அன்றைக்கு அமைத்தோம். அதிலே அந்த வளாகத்திலே 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன.

பிற்பகல் 1-00

அதற்கு அடுத்து 1974 ஆம் ஆண்டில் ஓசூரில் 1,236 ஏக்கர் நிலப் பரப்பில் இரண்டாவது தொழில் வளாகம் கழக அரசால் அமைக்கப்பட்டது. அதில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 186 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. இராணிப்பேட்டை, ஓசூர் ஆகிய இரண்டு தொழில் வளாகங்களிலும் தொடங்கப்பட்டுள்ள 293 தொழில்களில் ஏறத்தாழ 20 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

1989-க்குப் பிறகு, 1989 முதல் 1990 வரையிலே அமைந்த தொழிற்சாலைகளுடைய விவரங்களைப் பார்த்தால், 1989-90 இல்தான் 22 கோடி ரூபாய் முதலீட்டில் "ஏஷியன் பெயிண்ட்ஸ்" என்ற தொழில் நிறுவனம் தொடங்கப்பட்டது.

29 கோடி ரூபாய் முதலீட்டில் "டெலி கம்யூனிகேஷன்ஸ் கன்சல்டண்ட் இந்தியா லிமிடெட்" என்ற நிறுவனம் தொடங்கப்பட்டது.

ஓசூரில் 140 கோடி ரூபாயில் "டைட்டானியம் டை ஆக்ஸைடு" தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

சிப்காட் துணையோடு கடலூரில் 20 கோடி ரூபாய் முதலீட்டில் மரவள்ளிக்கிழங்கிலிருந்து இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் "உஸ்தா-தே-பயோடெக்" தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

6 கோடி ரூபாய் செலவில் "டான்டெக் அக்ரோ" தொழிற்சாலை கடலூரில் தொடங்கப்பட்டது.

40 கோடி ரூபாய் முதலீட்டில் கடலூரில் "டங்ஸ்டன் மெட்டல் பவுடர்" தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

மணலியில் 189 கோடி ரூபாய் முதலீட்டில் "தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ்" தொழிற்சாலை 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலே தொடங்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் மணலியில் 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "டி.பி. பெட்ரோ புராடக்ட்ஸ்" தொழிற்சாலை மற்றொன்று தொடங்கப்பட்டது.

மேலூருக்கு அருகில் நரசிங்கம்பட்டியில் ஏறத்தாழ 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலை 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.



இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்தில் 10.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "தமிழ்நாடு மக்னீசியம் மற்றும் மெரின் இரசாயனத் தொழிற்சாலை" தொடங்கப்பட்டது.

கடலூரில் 29.50 கோடி ரூபாய் முதலீட்டில் "தமிழ்நாடு புளோரின் மற்றும் சல்பைடு கெமிக்கல் தொழிற்சாலை" 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

ஓசூரில் 184 கோடி ரூபாய் முதலீட்டில் "டைட்டான்" கைக்கடிகார உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

அதற்குப் பிறகு 1991-லிருந்து 1996 வரை, 5 ஆண்டுகாலத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் 21 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. அதற்கான மொத்த முதலீடு 1,125 கோடி ரூபாய். அதன்மூலம் நேரடி வேலைவாய்ப்பு 4,230 பேருக்கு. தி.மு.க. ஆட்சியில் இந்த மூன்று ஆண்டு காலத்தில் உற்பத்தி தொடங்கியுள்ள தொழிற்சாலைகளுடைய எண்ணிக்கை 28. 5 ஆண்டு காலத்திலே 21, மூன்று ஆண்டு காலத்திலே 28. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது 5 ஆண்டு காலத்திலே மொத்த முதலீடு 1,125 கோடி ரூபாய். இப்போது மூன்று ஆண்டு காலத்திலே மொத்த முதலீடு 6,067 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது நேரடி வேலைவாய்ப்பு, அந்த 5 ஆண்டு காலத்திலே 4,230 பேர். இப்போது மூன்று ஆண்டு காலத்திலே 9,626 பேர். (மேசையைத் தட்டும் ஒலி)

இஃதன்னியில் ஏறத்தாழ உற்பத்திப் பணி தொடங்கக்கூடிய சூழ்நிலையிலே உள்ள தொழிற்சாலைகள் இந்தக் குறிப்பிட்ட 28 அன்னியில் மேலும் 28 தொழிற்சாலைகள். அதற்கு முதலீடு 22,946 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலமாக வேலைவாய்ப்பு பெற இருப்போர் 11 ஆயிரம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி)

1996 முதல் 1999 வரை தமிழ்நாட்டிலே தொடங்கப்பட்ட புதிய தொழிற்சாலைகள், காஞ்சிபுரம் செல்கின்ற வழியிலே இருங்காட்டுக் கோட்டையில் 1,829 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது, தொழில் வளாகத்திற்காக, பல தொழில்களைத் தொடங்க வேண்டும் என்பதற்காக, இந்த மூன்று ஆண்டு காலத்தில்.

2,450 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் "ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட்" நிறுவனத்தினுடைய கார் தொழிற்சாலை.

320 கோடி ரூபாய் செலவில் திருவள்ளூரில் "மிட்சுபிஷி லேன்சர்" கார் தொழிற்சாலை.

1,700 கோடி ரூபாய் செலவில் மறைமலை நகரில் அமைக்கப்பட்ட "போர்டு மோட்டார்ஸ்" நிறுவனத்தினுடைய கார் தொழிற்சாலை.

40 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் "இல்ஜின் இண்டஸ்டிரியல்" நிறுவனத்தின் ஆட்டோமொபைல் கார் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

23 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் "டைனமாடிக் குரூப் கம்பெனிகள்" நிறுவனத்தின் ஆட்டோமொபைல் கார் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

பிற்பகல் 1-05

44 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் போஸ் ஹூண்டாய் ஸ்டீல் மேனுபாக்சரிங் லிமிடெட் நிறுவனத்தின் காயில் சென்டர் (Coil centre) தொழிற்சாலை.

27 கோடி ரூபாய் செலவில் மறைமலை நகரில் வாலியோ பிரிக்ஷன் மெட்டீரியல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நான்-ஆஸ்பெஸ்டாஸ் பிரிக்ஷன் மெட்டீரியல்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை; காரின் உதிரிப் பாகங்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலை.

30 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் மேண்டோ பிரேக் சிஸ்டம்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் ஹைட்ராலிக் பிரேக்கிங் சிஸ்டம் தயாரிக்கும் தொழிற்சாலை.

59 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் மட்சுஷிடா ஏர்கண்டிஷனிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஏர்கண்டிஷனர்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை. அறைகளுக்கு வைக்கக்கூடிய ஏர்கண்டிஷன் இயந்திரங்களைத் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை.

8.6 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் லூமெக்ஸ் சாம்லிப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமோடிவ் லைட்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை.



45 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் ஜே.பி.எம். சங்வூ லிமிடெட் நிறுவனத்தின் தகடு உலோகப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

17 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் ஜே.கே.எம். டேரியம் ஆட்டோமோட்டிவ் லிமிடெட் நிறுவனத்தின் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

9 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் பி.எச்.சி. மேனுபேக்சரிங் லிமிடெட் நிறுவனத்தின் கார் கதவுகள் தயாரிக்கும் தொழிற்சாலை.

43 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் டோங்கி விஷன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் உலோகத் தகடு பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

9 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் ஷார்தா மோட்டார் இண்டஸ்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் கார் எக்சாஸ்ட் (Car Exhaust) தயாரிக்கும் தொழிற்சாலை.

5 கோடி ரூபாய் செலவில் ஓசூரில் ப்ளூமிங் மெடோஸ் லிமிடெட் நிறுவனத்தின் மலர் வளர்க்கும் தொழிற்சாலை; அதாவது வெளிநாடுகளுக்கு மலரை ஏற்றுமதி செய்வதற்கான தொழிற்சாலை.

41 கோடி ரூபாய் செலவில் ஈரோடு அருகிலே உள்ள சோளங்கபாளையத்தில் S.K.M. Egg Products Limited நிறுவனத்தின் முட்டை பதப்படுத்தும் தொழிற்சாலை; அதைத்தான் மயில்சாமி கவுண்டர் ஆரம்பித்தார்; அந்தத் தொடக்க விழாவில் அவர் தன் சாதிப் பட்டத்தை விட்டார். இனிமேல் நான் மயில்சாமி கவுண்டர் அல்ல; சாமியையும் விட்டு விடுகிறேன்; மயிலானந்தம் என்று தன்னுடைய பெயரை அன்றைக்கு மாற்றிக் கொண்டார். அந்த முட்டை பதனிடும் தொழிற்சாலை 41 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது.

5 கோடி ரூபாய் செலவில் காஞ்சிபுரம் அருகில் உள்ள செட்டிப்பாளையத்தில் பாரத் டெக்ஸ் பேஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை.

300 கோடி ரூபாய் செலவில் கும்மிடிப்பூண்டியில் தாப்பர் டூபாண்ட் லிமிடெட் நிறுவனத்தின் நைலான் இழை தயாரிக்கும் தொழிற்சாலை. இதுகூட கடந்த ஆட்சிக் காலத்திலே தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல பிரச்சினைகளுக்கு இடையே, பிறகு இந்த ஆட்சிக் காலத்திலேதான் அந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

27 கோடி ரூபாய் செலவில் தாம்பரம் ஏற்றுமதி வளாகத்தில் ஆசியன் லைட்டிங் நிறுவனத்தின் உலோகக் குழல் விளக்கு தயாரிக்கும் தொழிற்சாலை.

4.5 கோடி ரூபாய் செலவில் கரூர் அருகிலே உள்ள அப்பர்பாளையத்தில் கரூர் யார்ன் லிங்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நூல்ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை.

10 கோடி ரூபாய் செலவில் ஓசூரில் டாரஸ் நாவல்டீஸ் லிமிடெட் நிறுவனத்தின் டோலமைட், ஸ்டோன்வேர் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

21 கோடி ரூபாய் செலவில் திருப்போரூரில் ஸ்ரீராம் ஆட்டோ காம்பனொன்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமொபைல் உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

11 கோடி ரூபாய் செலவில் சென்னைக்கருகில் உள்ள மணலியில் ரமணசேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் உலோகச் சுருள்களைத் தகடாக மாற்றும் தொழிற்சாலை.

12 கோடி ரூபாய் செலவில் கோயம்புத்தூரில் இன்சில் இண்டஸ்ட்ரியல் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலை.

33 கோடி ரூபாய் செலவில் புழல் கிராமத்தில் செம்பவாங்-ஸ்ரீராம் நிறுவனம், சிங்கப்பூர் நிறுவனம் இது, இதன் பொருள் விநியோகத் தொழிற்சாலை.

500 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் சிஸ்கால் நிறுவனத்தின் எஃகுத் தொழிற்சாலை. அண்மையிலே திறந்து வைக்கப்பட்டது. நான்கூட திறப்பு விழாவில் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.



756 கோடி ரூபாய் செலவில் சென்னை பேசின் பிரிட்ஜில் ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனத்தின் மின் திட்டம்.

மொத்த முதலீடு ரூபாய் 6,067 கோடி. இதில் நேரடியாக வேலை வாய்ப்பு 9,626 பேருக்கு; மறைமுகமான வேலை வாய்ப்பு 18 ஆயிரம் பேருக்குக் கிடைக்கும் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இஃதன்னியில் இப்போது வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற தொழில்கள்—அவை எவை என்று பார்த்தால், 450 கோடி ரூபாய் செலவில் திருப்பெரும்புதூரில் செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் மிதவைக் கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலை அதனுடைய வேலை முக்கால் பகுதி முடிந்துவிட்டது. நேற்றுகூட நான் சமத்துவபுரம் திறப்பு விழாவிற்காக காஞ்சிபுரம் அருகே சென்றபோது அந்தத் தொழிற்சாலை வெகு வேகமாக தன்னுடைய பணிகளை நிறைவேற்றிக் கொண்டு இருப்பதைக் காண நேரிட்டது.

பிற்பகல் 1-10

நீங்கள் யாராவது ஒரு முறை பெங்களூர் சாலையிலே காஞ்சிபுரம் வழியாகச் செல்லும்போது பார்த்தால், வழியின் இரண்டு புறமும் தொழிற்சாலை மயமாக இருப்பதைக் காண முடியும். அதுவும் ஹூண்டாய் தொழிற்சாலையைப் பார்த்தால் எவ்வளவு நீளத்திற்கு அது கட்டப்பட்டுள்ளது என்பதையும், அதைத் தொடர்ந்து அடுத்துள்ள இந்தக் கண்ணாடி தொழிற்சாலை எந்த அளவுக்கு, எவ்வளவு ரம்மியமாகக் காட்சியளிக்கிறது என்பதையும் காண முடியும். திரு. சொக்கர் போன்றவர்கள், தொழிலிலே அக்கறை உள்ளவர்கள் போய் இதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சொக்கரை அழைப்பதால் எதிர்க்கட்சித் தலைவரை அழைக்கவில்லை என்று அர்த்தம் அல்ல. எல்லோரும் போய்ப் பார்த்து, நீங்கள் அந்த உண்மையை உணர வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அவ்வளவு அற்புதமாக இருக்கிறது.

50 கோடி ரூபாய் செலவிலே இருங்காட்டுக்கோட்டையில் மார்க்யூப் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பேப்பர் போர்டு மிஷினரி தயாரிக்கும் தொழிற்சாலை.

44 கோடி ரூபாய் செலவிலே இருங்காட்டுக்கோட்டையில் கோவேமா உட்பிளாஸ்ட் லிமிடெட் நிறுவனத்தின் ரிஜிட் பி.வி.சி. பலகை தயாரிக்கும் தொழிற்சாலை.

5 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் ஆட்டோலெக் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் நீர் மற்றும் எண்ணெய் பம்ப் தயாரிக்கும் தொழிற்சாலை.

30 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் ரெனால்ட்ஸ் பென் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் பால்பாயின்ட் பேனாக்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

15 கோடி ரூபாய் செலவில் திருபெரும்புதூரில் இன்வால் (மெடிக்கல்) இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் குருதிப் பைகள் (Blood bags) தயாரிக்கும் தொழிற்சாலை.

20 கோடி ரூபாய் செலவில் ஓசூரில் டான்ப்ளோரா இன்ப்ரா ஸ்ட்ரக்ச்சர் லிமிடெட் நிறுவனத்தின் தொழில் வளாகம்.

6 கோடி ரூபாய் செலவில் Bio-technology Part for women, சென்னையில் மகளிருக்கான உயிர் தொழில் நுட்பப் பூங்கா.

210 கோடி ரூபாய் செலவிலே செங்கல்பட்டில் மகேந்திரா இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோ உதிரிப்பாகங்களுக்கான தொழில் வளாகம்.

27.7 கோடி ரூபாய் செலவில் சென்னையில் மெடிடெக் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலை.

5.6 கோடி ரூபாய் செலவில் சென்னையில் இண்டியன் அண்டு நேச்சுரல் மெடிக்கல் ப்ராடெக்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

24 கோடி ரூபாய் செலவில் மறைமலை நகரில் ஆப்டிகல் பைபர் கேபிள் ப்ராஜெக்ட் தொழிற்சாலை.

320 கோடி ரூபாய் செலவில் தரமணியில் டைடல் பார்க் லிமிடெட் நிறுவனத்தின் தொழில் வளாகம்.

3,200 கோடி ரூபாய் செலவில் கடலூரில் பென்னார் ரிபைனரீஸ் நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை. இப்போது விரைவிலே அதற்கு அடிக்கல் நாட்டப்பட இருக்கிறது. 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள்ளாக அது முடிவடையும் என்கின்ற உறுதியோடு அடிக்கல் நாட்டப்பட இருக்கிறது. 3,200 கோடி ரூபாய் மதிப்புள்ள தொழிற்சாலை.



142.65 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் சிஸ்கால் நிறுவனத்தின் மெட்டல் கோக் தயாரிக்கும் தொழிற்சாலை.

44.78 கோடி ரூபாய் செலவில் தரமணியில் கலாடா ரிம்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அலுமினியத் தொழிற்சாலை.

200 கோடி ரூபாய் செலவில் தரமணியில் வான் ஓம்மரன் டேங்க் டெர்மினல் நிறுவனத்தின் கெமிக்கல் சேமிப்பு டேங்க் தயாரிக்கும் தொழிற்சாலை.

எண்ணூரில் 2,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் எல்.என்.ஜி. எரிவாயு மின்திட்டம். இப்போது பிரச்சினை எழுப்பப்பட்ட அந்தத் திட்டம்.

ஜெயங்கொண்டத்தில் 4,000 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு 4 மில்லியன் டன் நிலக்கரியை வெட்டி எடுத்து, 500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் அனல் மின் திட்டம். அதற்கான நிலம் கையகப்படுத்துகின்ற பணி வெகுவேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாள்தோறும் 4,5 கோப்புகளிலாவது, நிலம் கையகப்படுத்துகின்ற கோப்புகளிலே நான் கையெழுத்திட்டுக் கொண்டே வருகிறேன். அந்த அளவுக்கு வெகுவேகமாக நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது மொத்த முதலீடு, நான் இப்போது படித்தது. மீதமுள்ள 28 இனங்களுக்கான மொத்த முதலீடு 22,946 கோடி ரூபாய். நேரடி வேலைவாய்ப்பு 11,000 பேருக்கு. மறைமுக வேலைவாய்ப்பு 1½ இலட்சம் பேருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்ற இந்த மிக மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் முதலீட்டில் தமிழகம் முதலிடத்தில் இருப்பதாக நம்முடைய திருமதி பொன்னம்மாள் அவர்களும், திரு. ரங்கநாதன் அவர்களும் பேசும்போது குறிப்பிட்டார்கள். மற்றும் ஆளுங்கட்சி சார்பிலே பேசிய மற்ற உறுப்பினர்களும் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். நானே சொல்லி, கைதட்டல் வாங்க வேண்டுமென்று இருந்தேன். ஆனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மானியக் கோரிக்கைக் குறிப்பிலேயே அதை அவர்கள் வெளியிட்டுவிட்ட காரணத்தால், அதை எல்லோருமே படித்து பேசியிருக்கிறீர்கள். தொழில் வளர்ச்சி குறித்து நான் 23-2-1999 அன்று ஆளுநர் உரைமீது நடைபெற்ற விவாதத்தின்போது பதிலளித்து உரையாற்றியபோது, மே 1996-ல் தொழில் நிறுவனங்களில் செய்யப்பட்டிருந்த முதலீடுகள் அடிப்படையில் தமிழகம் அகில

இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் ஐந்தாம் இடத்திலிருந்தது என்றும், 1996-ல் கழக அரசு மீண்டும் அமைந்து தொழில் வளர்ச்சிக்கு அளித்து வரும் ஊக்கம் காரணமாக, 1999 சனவரி நிலையில் முதலீடுகள் அடிப்படையில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் இரண்டாம் இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது என்று குறிப்பிட்டு, அதற்குரிய புள்ளி விவரங்களையும் இந்த அவையிலே நான் தெரிவித்தேன்.

*பிற்பகல் 1-15*

அண்மையில் 1991 மே மாதத்திலிருந்து 1999 சனவரி மாதம் வரை இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து, 1999 ஏப்ரல் மாதத்தில் இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (Centre for Monitoring Indian Economy-C.M.I.E.) அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கை விவரங்களின்படி தமிழ்நாடு தொழில் முதலீடுகளின் அடிப்படையில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது என்பதை மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய விவரம் என்ன என்பதைச் சொல்லவேண்டும். திருமதி பொன்னம்மாள் அவர்கள் சொன்னதைப் போல, அகில இந்தியாவில் மொத்த தொழில் முதலீடு ஒதுக்கீடு 1999 சனவரி வரையில் 13,15,017 கோடி. 13 இலட்சம் கோடி. அந்த 13 இலட்சம் கோடியில் ஆந்திராவினுடைய பங்கு. அவர்கள் அங்கே செய்துள்ள முதலீடு 1,06,364 கோடி, 8.09% கர்நாடகத்தில் 1,07,703 கோடி, 8.19% ஒரிஸ்ஸாவில் 1,14,033 கோடி, 8.67% குஜராத்தில் 1,46,703 கோடி, 11.16% மராட்டியத்தில் 1,51,058 கோடி, 11.49%. தமிழ்நாடு 1,51,187 கோடி, 11.50% (மேசையைத் தட்டும் ஒலி) குதிரைப் பந்தயத்தில் மூக்கை நீட்டுகிற மாதிரி நீட்டி, முதலிடத்திற்கு வந்திருக்கிறோம். சென்ற ஆண்டு மராட்டியம் நம்மைவிட .02% அதிகமாக இருந்தது. இப்பொழுது நாம் மராட்டியத்தைவிட .01% அதிகமாக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்தக் கயிறு இழுக்கும் போட்டி மாதிரி, ஒரு பெரிய சவாலாக மராட்டியமும், தமிழகமும் இன்றைக்கு இருக்கின்றன. முதலிடத்தில் இன்றைக்கு நாம் வந்திருக்கிறோம் என்பதை நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்.

முதலீட்டில் மாத்திரமல்லாமல், ஏற்றுமதித் தொழிலிலும்கூட நாம் எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ‘Economic Times’ என்ற பத்திரிகையை உங்களுக்கு தெரியும். புகழ்பெற்ற பொருளாதார ஏடு. அது நேற்றையதினம், 28-4-1999-ல் எழுதியிருக்கிறது.



''Tamil Nadu followed closely by Gujarat has taken the lead in terms of the number of 100 per cent export oriented units set up since liberalisation, displacing Maharashtra the traditional leader amongst the industrially developed States.''

தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பின், 100 விழுக்காடு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு, தொழில் நிறுவனங்களை நிறுவுவதில் தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) குஜராத் அதற்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது. இதன் மூலம் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்த மாநிலங்கள் வரிசையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து முதல் இடத்தில் இருந்து வந்த மராட்டிய மாநிலத்தை தமிழகம் தற்பொழுது முந்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் அந்த ஏடு, ‘Economic Times’ எழுதுகிறது. “The State-wise distribution of 100 per cent export oriented units since liberalisation indicates that Tamil Nadu has taken the lead in terms of the number of units set up.”

(தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பின், 100 விழுக்காடு ஏற்றுமதி அடிப்படையில் தொடங்கப்பட்ட தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையை மாநில வாரியாகக் கணக்கிட்டதில் தமிழகம்தான் தலைமை இடத்தைப் பெற்றுள்ளது.) (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் அந்த ஏடு எழுதுகிறது. “As against 3,503, cent per cent EOUS which have come up country-wide, since liberalisation, one sixth have been in Tamil Nadu, followed by Maharashtra, Gujarat, Andhra Pradesh and Karnataka.”

*பிற்பகல் 1-20*

பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட பின் அகில இந்திய அளவில் தொடங்கப்பட்ட 100 விழுக்காடு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட 3,503 தொழில்களில் ஆறில் ஒரு பங்கு தொழில்கள், அதாவது 584 தொழில்கள் தமிழகத்திலே தொடங்கப்பட்டுள்ளன. தமிழகத்தை அடுத்து மராட்டியம், குஜராத், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்கள் வருகின்றன என்று ‘எக்னாமிக் டைம்ஸ்’ குறித்துக் காட்டுகிறது. அதுமாத்திரம் அல்ல, மேலும் இன்னொரு ஆதாரம். அகில இந்திய அளவில் கடன் வைப்புத்

தொகை விகிதாச்சாரம் பற்றி Times of India எழுதுகிறது. கடன் வைப்புத் தொகையில் நாம் முதலிடத்தில் இருக்கிறோம் என்றும் Times of India எழுதுகிறது.

"The States of Tamil Nadu, Andhra Pradesh, Maharashtra and Manipur have recorded the highest credit-deposit ratio (CDR) in the country, according to the latest data available"-

அண்மையில் கிடைத்த புள்ளிவிவரப்படி தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்ட்ரா மற்றும் மணிப்பூர் மாநிலங்கள் நாட்டிலேயே கடன் தொகை வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் (Credit-deposit Ratio) உயர் நிலையில் உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

Against all-India average CDR of 55.5 per cent of all scheduled Commercial Banks (as on the last Friday of December 1997), Tamil Nadu's CDR was an astounding 92.3 per cent.

1997-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், கடைசி வெள்ளிக்கிழமை நிலவரப்படி அனைத்து வர்த்தக வங்கிகளின் ஒட்டுமொத்த அனைத்திந்திய சராசரி கடன் தொகை வைப்புத் தொகை விகிதாச்சாரம் 55.5 சதவிகிதம் என்றால், தமிழகத்திலே அப்போதைய விகிதாச்சாரம் 92.3 சதவிகிதம் என்கின்ற வியப்புக்குரிய செய்தி கிடைக்கிறது என்று அந்த ஏடு எழுதிக்காட்டுகிறது.

Andhra Pradesh recorded the second highest CDR of 74.2 per cent followed by Maharashtra's 68.7 per cent and Manipur's 59 per cent. The National Capital Territory (NCT) of Delhi registered a CDR of 70.9 per cent, close to the Union Territory of Chandigarh's 69.1 per cent.

அதற்கடுத்து, ஆந்திர மாநிலம் 74.2 சதவிகிதம் பெற்று இரண்டாம் நிலையிலும், அதைத் தொடர்ந்து மராட்டிய மாநிலம் 68.7 சதவிகிதம் பெற்றுள்ளது; மணிபபூர் 59 சதவிகிதம் பெற்றுள்ளது என்று குறிப்பிடுகிறது.

சி.டி.ஆர். என்பது வங்கிகள் கடன் வழங்குவதை அதிகரித்துக் கொள்வது என்பதாகும். அது அதன் திறமையைப் பொறுத்துள்ளது. அதே சமயம் அந்த வங்கிகளின் உள்கட்டமைப்பு, அந்தப் பகுதியில் கடன் வசூல் செய்யும் திறன், முதலீட்டிற்காக உதவும் தன்மை, வங்கிக் கடன் வசூல் செய்ய போதுமான வசதிகள் ஆகிய அனைத்தையும் சார்ந்தும் அது இருக்கும். அதுதான் சி.டி.ஆர்.



என்பதாகும். அதிலும் நாம் தலைமை இடத்தில் இருக்கிறோம் என்பதை இந்தப் புள்ளிவிவரம் விளக்குகிறது.

18-12-1998 நாளிட்ட 'எகனாமிக் டைம்ஸ்' பத்திரிகையில் இலண்டன் மாநகரத்தைச் சேர்ந்த சர்வதேச ரியல் எஸ்டேட்ஸ் (International Real Estates) என்னும் நிறுவனத்தின் ஆலோசகர் ஜோன்ஸ் லாங் ஊட்டன் (Jones Long Wootten) சொல்லியிருக்கிறார். "Chennai - சென்னை என்றே சொல்லியிருக்கிறார் பாருங்கள். நாம்தான் இன்னும் 'மெட்ராஸ்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்—"Chennai has distinct strength over other Cities for attracting investments."

அதாவது, முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலே பல நகரங்களைவிட சென்னை சிறப்பான வளங்களைப் பெற்று முன்னணி இடம் பெற்றுள்ளது என்று ஜோன்ஸ் லாங் ஊட்டன் பாராட்டி உள்ளார்.

விகடன் பத்திரிகையில் 13-9-1998-ல் ஒரு தலையங்கம். "தீர்க்கதரிசனத்துடன், நாளைய சவால்களுக்கு நாட்டைத் தயார்படுத்துவதுதான் ஆளுவோரின் இலட்சியமாகவும் கடமையாகவும் இருக்க வேண்டும். அந்த வகையில் தமிழக முதல்வர் கருணாநிதி நடத்திய தகவல் தொழில்நுட்ப தொழிலதிபர்கள் கூட்டம் மிகவும் முக்கியமானது. விப்ரோ, பெண்டாஃபோர், டாடா கன்சல்டன்சி போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட நிறுவனங்களிலிருந்து முன்னணித் தொழிலதிபர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். தகவல் தொழில்நுட்பம் வளர்ந்தால்தான் மற்ற தொழில்களும் நன்கு வளரமுடியும் என்பதை அரசு உணர்ந்து காரியத்தில் இறங்கியிருப்பது பாராட்டத்தக்கது" என்று விகடன் பத்திரிகை தலையங்கம் மூலமாகக் குறிப்பிட்டிருக்கிறது.

இந்தத் தகவல் தொழில் நுட்ப மையத்தை இந்த அரசு தமிழகத்தில் விரிவாகச் செய்ய வேண்டும் என்பதற்காக எடுத்துள்ள முயற்சிகளைப் பற்றி எல்லாம் பலமுறை இந்த அவையிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன். எழுபதுகளிலே வெறும் கருத்துப் படிவமாக மாத்திரமே கருதப்பட்டிருந்த தகவல் தொழில் நுட்பம் இன்றைக்கு எங்கும் நிறைந்த பொருளாக ஆகிவிட்டது என்பதை அவை உறுப்பினர்கள் மிக நன்கு அறிவீர்கள். தொழில் வளர்ச்சியின் ஒவ்வொரு பிரிவும் தகவல் தொழில் நுட்பத்தால் பின்னிப் பிணைக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு வருகின்றது. உலகப் பொருளாதாரத்தோடு இணைந்துவிட்ட ஒன்றாகத் தகவல் தொழில்

நுட்பம் உருவாகி வருகிறது. தகவல் தொழில் நுட்பம் இல்லாத எந்தத் தொழிலும் முன்னேற்றம் அடையாத பழைய தொழிலாகவே இப்பொழுது கருதப்படுகிறது.

பிற்பகல் 1-25

21 ஆம் நூற்றாண்டில் உலகப் பொருளாதாரத்தின் உந்து சக்தியாக தகவல் தொழில் நுட்பம் விளங்கப்போகிறது என்பதை நாம் அறிந்து வைத்துள்ளோம். அதனால்தான், தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்காகவும், அதன் பயன்கள் கிராமப் பகுதிகளிலும் ஊடுருவி, சாமானியர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காகவும், அரசு தொலைநோக்குப் பார்வையோடு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தமிழ்நாட்டிலே ஆண்டுதோறும் படித்து வெளியே வரும் 23 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகளில், 13 ஆயிரம் பட்டதாரிகளுக்கு மேலாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதன் தொடர்பான கல்வியைப் பெற்று இப்பொழுது வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையிலான மென்பொருள் பொறியியல் வல்லுநர்கள் வேலை செய்து வருகிறார்கள். இன்றைய அளவில் தமிழகத்தில் 22 ஆயிரம் பேர்களுக்கு மேலாக மென்பொருளை வாழ்க்கைத் தொழிலாக - Software Professionals - கொண்டிருக்கிறார்கள்;

தகவல் தொழில் நுட்பத்திற்கென்றே, சென்னை தலைமைச் செயலகத்தில் தனியாக ஒரு துறை, ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் தலைமையின்கீழ் 5-10-1998 முதல் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சி அடையவும், அதற்கான அணுகுமுறைகளை உருவாக்கிச் செயல்படுத்தவும், முதலமைச்சர் தலைமையிலே I.T. Task Force ஒன்று உருவாக்கப்பட்டதையும் உறுப்பினர்கள் அறிவீர்கள்.

அரசு தகவல் தொழில் நுட்பத்திற்கென்று, தனியே கொள்கை (I.T. Policy) ஒன்றை உருவாக்கி அறிவித்துள்ளது. இக்கொள்கை, தகவல் தொழில் நுட்பத் தொழில் முனைவோர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.



பழைய மாமல்லபுரம் சாலையில் சிறுசேரி என்ற இடத்தில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய வன்பொருள் (hardware) மற்றும் மென்பொருள் (Software) வளர்ச்சிக்கு பன்னாட்டுத் தரத்தில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்கிக் கொண்டு வருகின்றது. சென்னையில் தரமணியிலிருந்து பழைய மாமல்லபுரச் சாலை வரையிலான பகுதி, தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலையாக (I.T. Super Highway) விரைந்து முன்னேறி வருகின்றது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீபத்தில் சோழிங்கநல்லூரில் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் என்னும் நிறுவனம், ஆசியாவின் மிகப் பெரிய மென்பொருள் மையத்தைத் தொடங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து மற்ற மிகப் பெரிய நிறுவனங்களான விப்ரோ, இன்போசிஸ் மற்றும் பொலாரிஸ் ஆகியவை தங்களது மையங்களை அந்தப் பகுதியிலே நிறுவி வருகின்றன.

"வோர்ல்ட்டெல்" நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு நாம் ஆற்ற இருக்கின்ற அந்த அரும்பணியின் மூலமாக இலட்சத்து ஐம்பதாயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு தமிழகம் முழுவதும் கிடைக்கும் என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். அது, எந்த நிறுவனத்தின் சார்பாக இருந்தாலும்கூட, அதை விரைவுபடுத்தி, இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறுவதையும், தமிழகம் முழுவதும் இணைய மயமாக ஆகின்ற அந்த விஞ்ஞானப் புதுமையையும் இந்த அரசு உங்கள் ஆதரவோடு செய்து காட்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கணினிப் பயன்பாடுகளில் உலக அளவில் போதுமான தமிழ் குறியீடுகள் இல்லாத குறையைப் போக்குவதற்காகத்தான் "தமிழ்நெட் 1999" என்ற ஒரு மாநாட்டை நாம் நடத்தினோம். அதிலே உலகத்தின் பல பகுதிகளிலேயிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அரிய கருத்துக்களையெல்லாம் வழங்கினார்கள். எல்லோரும் சேர்ந்து ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டு அந்த மாநாட்டிலே தமிழ் வடிவமைப்புகள் எப்படி வெளியிடப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அவைகளெல்லாம் இன்னும் இரண்டொரு மாதங்களிலே — அந்த வடிவமைப்புகள், அந்த இணையத்திற்கான வடிவமைப்புகள் — வெளியிடப்பட இருக்கின்றன. அதற்கு அமெரிக்காவிலுள்ள யூனிகோட் கன்சோர்டியம் என்னும் மையத்தில் தமிழ்நாடு ஒரு கூட்டு அங்கத்தினராகத் தன்னைப் பதிவு செய்து

கொண்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே தமிழ் மாநிலம் மாத்திரம்தான் இப்படி அந்த யூனிகோட் கன்சோர்டியத்தோடு தன்னைப் பதிவு செய்து கொண்டிருக்கிற ஒரேயொரு மாநிலம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜூலை மாதத்தில் முடிவான தமிழ் வடிவமைப்புகள் வெளியிடப்பட்டவுடன், யூனிகோடிற்கு ஏற்கெனவே இருக்கும் தமிழ் வடிவமைப்புகளை மாற்றி அமைப்பதற்குரிய செயற்குறிப்புகளை அரசு அனுப்பி வைக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு Tamil Virtual University ஒன்றை அமைக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. இந்த முயற்சிகள் எல்லாம் செயல்முறைக்கு வரும்போது இணையம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயன்கள் அனைத்தும் தமிழகம் மாத்திரமல்லாமல் உலகம் முழுவதுமுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் சென்றடையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலம் முழுவதுமுள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் கணினிப் பயிற்சி பெறவும், ஒவ்வொரு வகுப்பிலும், ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 40 மாணவர்கள் வீதம் 1,200 பள்ளிகளில் ஆண்டு முடிவில் சற்றொப்ப 48,000 மாணவர்கள் கணினி பயின்றவர்களாக வெளியேறுவார்கள், வெளியே வருவார்கள் என்பதையும் எடுத்துக்கூறி, அதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதிலே வந்த இடைக்காலத் தடையை இந்த அவை அறியும். ஆனால் அன்றைக்கு இந்த அவையிலே நான் நடந்துகொண்டதன் காரணமாக மாத்திரமல்ல, உண்மையின் காரணமாகவும், நீதியின் காரணமாகவும் அளிக்கப்பட்ட தீர்ப்பில் நீதிபதி சொல்லியிருக்கிறார், "மனுதாரருடைய நலனுக்காக - (அதாவது எதிர்த்து வழக்குப் போட்டார்களே, அந்த மனுதாரருடைய நலனுக்காக), இந்தத் திட்டத்தைத் தள்ளி வைக்க முடியாது. அரசின் இந்தப் பொன்னான நோக்கத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) 48,000 மாணவர்கள் பயிற்சி பெறுவார்கள் என்பதை இந்த நீதிமன்றம்



பாராட்டுகிறது. தமிழக அரசின்மீது இந்த நீதிமன்றம் நம்பிக்கை வைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதெல்லாம் பெருந்தன்மைக்குக் கிடைக்கின்ற பரிசுகள். தமிழக அரசின்மீது நீதிமன்றம் நம்பிக்கை வைத்திருக்கின்றது. சமூக நீதிக் காவலனாகப் பாடுபடும் அரசு, கிராமப்புற மற்றும் நடுத்தர மக்களிடையே படித்து வந்தவர்கள் நலனில் கவனம் கொள்ளும் என்று நம்பிக்கை கொள்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் நினைவுபடுத்துகிறேன்.

பல நல்ல விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில் இதையும் சொல்ல வேண்டித்தான் இருக்கிறது. காரணம் திரு. ரங்கநாதன் ஆரம்பித்து வைத்துவிட்டார். அதனால் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. கடந்த காலத்திலே தொழில் துறையிலே ஏற்பட்ட பல பின்னடைவுகள், சில முறைகேடுகள் இவைகளைப் பற்றி ஒருமுறை ஞாபகப்படுத்திக்கொள்ள, பலமுறை சொல்லியிருந்தாலும்கூட, மனிதனுக்கு மறதி அதிகம். மறந்துவிடக்கூடாது என்பதற்காக நீங்களும் ஞாபகப்படுத்திக்கொள்ள, நானும் ஞாபகப்படுத்திக்கொள்ள (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் ஞாபகப்படுத்திக்கொள்ள, பொதுமக்களும் ஞாபகப்படுத்திக்கொள்ள இதை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

கிரானைட் குத்தகை விடுவதிலே ஏற்பட்டது சம்பந்தமாக ஒரு வழக்கு. ஏற்கெனவே இந்த அரசு கிரானைட் குத்தகையிலே உள்ள ஊழல்களுக்காக தனி நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கிறது. அந்த வழக்கிற்கான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கிடையிலே, அந்த வழக்கிலே குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் தொழில் துறை அமைச்சர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று அந்த வழக்கையே quash செய்ய வேண்டும் என்று ஒரு மனு கொடுத்தார். அந்த மனுவை விசாரித்த பிறகு, உயர்நீதிமன்ற நீதிபதி என்ன தீர்ப்பு அளித்தார் என்பதை இங்கே சுட்டிக்காட்ட நான் விரும்புகின்றேன். அந்த ஆணை எப்படிப் பிறப்பிக்கப்பட்டது? எந்த ஆணையின் அடிப்படையில் அந்தத் தவறு நடைபெற்றது? 39 என்கிற ஒரு விதி. அரசாணை எண் 97, தொழில் துறை, நாள் 8-3-1993 மூலம் முந்தைய அரசு தமிழ்நாடு சிறு கனிம விதிகளில், விதி 39 என்ற புது விதியை ஏற்படுத்தி, குவாரிக் குத்தகைகளை விருப்பப்பட்டவர்களுக்கெல்லாம் வழங்கியது. 1989 ஆம் ஆண்டில் கழக அரசின் தொழில் துறை பிறப்பித்த ஆணையின்படி அரசுக்கு வருமானம் வர வாய்ப்புகள்

இருந்தும், (கவனிக்க வேண்டும்) நாம் போட்ட ஆணையின்படி அரசுக்கு நிறைந்த வருமானம் வர வாய்ப்புகள் இருந்தும், உயர் நீதிமன்றத்திலே உரிமம் வழங்குவது குறித்த பல வழக்குகள் நிலுவையிலே இருந்தும், குத்தகைதாரர்கள் அரசு கோரும் தொகையைச் செலுத்த விருப்பம் தெரிவித்து கடிதங்கள் கொடுத்திருந்தும் - ஏலம் எடுத்த குத்தகைதாரர்கள் எல்லாம் விருப்பம் தெரிவித்து கடிதங்கள் கொடுத்திருந்தும் - வனத் துறை நிலத்தில் உரிமம் வழங்க மத்திய அரசின் முன்அனுமதி பெற வேண்டும் என்று விதிகள் இருந்தும், அந்த விதியையும் மீறி, அப்போதைய அட்வகேட் ஜெனரலும், அரசு தலைமைச் செயலாளரும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தும், வேண்டாமென்று தடுத்துக் கூறியிருந்தும், அரசுக்கு ஒரே ஒரு குத்தகை மூலமாக மட்டும் 12 கோடி ரூபாய் வருமானம் வர வாய்ப்பு உள்ளது எனக் கோப்பிலே கருத்து, செயலாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தும், அவை அனைத்தையும் புறக்கணித்து, தமிழ்நாடு சிறு கனிம விதிகள் 1959-இல், புதுவிதி 39, முந்தைய அ.தி.மு.க. அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

பிற்பகல் 1-35

மேற்கூறிய விதி 39-ன்கீழ், 9 மாவட்டங்களில் 125 கிரானைட குத்தகைகள் 196.80 ஹெக்டேர் பரப்பில் வழங்கப்பட்டன. விதி 39 என்றால், அரசினுடைய விருப்புரிமையின்படி Nomination முறை, அதுதான் 39; இணைக்கப்பட்ட விதி. பின்னர், அதன் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 95 கோடி ரூபாய். அந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அப்போது தொழில் அமைச்சராக இருந்த திரு. சின்னசாமி, சென்னை உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார். அவரது கோரிக்கையைத் தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம், தன்னுடைய தீர்ப்பில் என்ன குறிப்பிட்டிருக்கிறது தெரியுமா?

"ஏராளமான தொகைகளை வசூல் செய்து கொண்டு குத்தகை உரிமங்கள் வழங்குவதற்காக, சுயலாபம் கருதி தமிழ்நாடு சிறு கனிம விதிகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே, முதல் தகவல் அறிக்கையைத் தள்ளுபடி செய்வதற்கு எந்தவிதமான அடிப்படையுமில்லை." மேலும் சொல்கிறார், நீதிபதி:

"The accused has granted leases to the private individuals without fixing any lease amount for granite quarry in pursuance of the conspiracy hatched between them."



"குத்தகைதாரர்களுக்கும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் இடையில் உருவாக்கப்பட்ட சதித் திட்டத்தின் காரணமாக, குத்தகைத் தொகை எதுவும் நிர்ணயம் செய்யாமல் குற்றம் சாட்டப்பட்டவர் தனி நபர்களுக்குக் குத்தகை உரிமையை வழங்கியுள்ளார்." High Court Judge சொல்கிறார். மேலும் சொல்கிறார்:

"The persons to whom the granite leases have been granted, have paid huge amounts as bribe which has been corroborated by many of the witnesses who have also mentioned the denomination of the currency in separate slips, which also have been recovered from the house of the accused."

கரன்சி நோட்டு யார் யாருக்கு எவ்வளவு கொடுத்தோம் என்ற அந்த நம்பரோடு தனித் தனித் தாள்களில் எழுதி வைத்திருக்கிறார்களாம். இவையெல்லாம் தொழில் அமைச்சராக இருந்தவருடைய வீட்டிலேயிருந்து கிடைத்தது.

"குத்தகை உரிமம் பெற்றவர்கள் பெரும் தொகைகளை லஞ்சமாகக் கொடுத்துள்ளார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களுடைய வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட துண்டுச் சீட்டுகளில் எந்தவகையான கரன்சி நோட்டுகள் கொடுக்கப்பட்டன என்று குறித்து வைத்து இருப்பதிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் இது தெளிவாகின்றது.

அடுத்து, "Mr. Dyaneswaran in his own handwriting has written statement of accounts showing how much amount he has been receiving from the lessees as pecuniary advantage. There is overwhelming evidence against the petitioner and others."

"சுயலாபத்திற்காக எவ்வளவு தொகை குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்டன என்ற விவரங்களையெல்லாம் திரு. தியானேஸ்வரன் தன்னுடைய கைப்படவே கணக்கு எழுதி வைத்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டோருக்கு எதிராக ஏராளமான சாட்சியங்கள் உள்ளன."

மேலும், "The records and circumstances indicate that the entire fraud had taken place with his full knowledge and involvement."

அதாவது, "இந்த முழு பித்தலாட்டமும் குற்றம் சாட்டப் பட்டுள்ளவரின் முழு ஈடுபாட்டோடும், அங்கிகாரத்தோடும்தான் நடைபெற்றிருக்கிறது என்று ஆவணங்களும், சூழ்நிலைகளும் சுட்டிக்காட்டுகின்றன" என்றும் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

மேலும், நீதிபதி, தன்னுடைய தீர்ப்பில் தொடர்ந்து சொல்கிறார்:

"....the money due to the Government has been siphoned off by them and as a result of which they had pecuniary advantage to the extent of several crores".

அப்படிப்பட்ட ஒரு அரசு இருந்த நிலையெல்லாம் மாறி, இந்த அரசு இந்தத் தொழில் துறையில் உங்களுடைய அன்பான ஆதரவோடும், பொதுமக்களுடைய அன்பான ஆதரவோடும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கிரானைட் தொழிலைக்கூட மேலும் ஊக்கப்படுத்த இப்போது நாம் விதிகளையெல்லாம் மாற்றி, 8-இ என்ற திருத்தம் கொண்டு வந்து, ஏலம் விடுகிற முறைகளையெல்லாம் செய்திருக்கிறோம். அதிலேகூட இன்னும் அதிகம் வருவாய் வருவதற்கு இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. நாம் இப்போது நம்முடைய பற்றாக்குறையை எல்லாம் சமாளிக்க பல வழிமுறைகளையெல்லாம் நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்தின்போது, என்னுடைய பதிலுரையிலே குறிப்பிட்டிருக்கிறேன்.

கிரானைட் தொழிலை மேலும் ஊக்குவிக்க, இப்போது 'டாமின்', இடம் நிலம் இருக்கிறது அல்லவா? அந்த நிலத்திலே ஒரு பகுதியை, பொது ஏலத்திலே — டாமினே வைத்துக் கொண்டு தூங்காமல், கிடப்பிலே போடாமல், அந்த 'டாமின்' நிலத்தைக்கூட எடுத்து, அதனைப் பொது ஏலத்திலே விட்டு, அதன் மூலமாகவும் அரசு வருவாயைத் தேடலாம் என்று முயற்சித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்து, காலை முதல் இதுவரையில் அரிய கருத்துக்களைச் சொல்லி, என்னை ஊக்கப்படுத்திய எல்லா உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*பிற்பகல் 1-40*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் உப்பளத் தொழில் என்பது ஒரு ஆபத்தான நிலையிலே இருப்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தில் 5,000-க்கு மேற்பட்ட ஏக்கரில் உப்பளம்



நடந்து கொண்டு இருக்கிறது. பழைய அரசாங்கத்தில் 29 ரூபாய் ஒரு ஏக்கருக்கு குத்தகைத் தொகையாக இருந்த பணத்தை 429 ரூபாயாக ஆக்கியதன் மூலம், தனியார் எல்லாம் இன்று கோர்ட்களிலே ஸ்டே வாங்கி விட்டார்கள். அதே நேரத்தில் அரசாங்கம் நடத்துகின்ற அந்த உப்பளத் தொழிலுக்கு ஒன்றரை கோடி ரூபாய், அரசுக்குச் செலுத்த வேண்டிய ஒரு கட்டாயம் இருப்பதால், அந்தத் தொழில் மூடப்படக்கூடிய ஒரு அபாய நிலை இருக்கிறது. நான் ஏற்கெனவே, இதைப் பற்றி நிதிநிலை அறிக்கையிலே பேசியிருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி, அந்தப் பழைய 29 ரூபாயாகவே அதை ஆக்க வேண்டும். இந்தியாவில் வேறு எங்குமே இவ்வளவு அதிகப்படியாக இல்லை. 29 ரூபாய் என்று இருந்ததை 429 ரூபாயாக ஒரு ஏக்கருக்கு குத்தகையாக ஆக்கியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பெரிய தொகையை இரத்து செய்து, அந்த உப்பளத் தொழில் நிரந்தரமாக நடைபெறுவதற்கும், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்வதற்கும் உதவுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய நல்ல கருத்தை இந்த அரசு அலட்சியப்படுத்தாது. 400 ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டிருந்தால் அது அதிகம்தான். பழைய அளவிற்கு 29 ரூபாய் என்ற அளவிற்கு குறைக்க முடியாவிட்டாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் ஒத்துக்கொள்கின்ற அளவிற்கு அதைக் குறைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உப்பளத் தொழில் மாத்திரம் அல்ல, தமிழகத்தில் அப்பளத் தொழிலும் கெடாமல் இந்த அரசு பார்த்துக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரத்தில் ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் கூறியதற்கு, தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 24 - தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24 - தொழில்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.



**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. என்.ஆர். அழகராஜா, இருக்கையில் இல்லை. திரு. என்.ஆர். அழகராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.எஸ். மணி நாடார், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.எஸ். மணி நாடார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை, திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.16,24,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-4-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

149. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் 1997-98 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

143. மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள் நிருவாகம் மற்றும் மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

144. மானியக் கோரிக்கை எண் 47-ன்கீழ் பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)



145. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

146. பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மக்கள் சாசனம் என்ற புத்தகம், 1999. (தமிழ், ஆங்கிலம்)

147. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1999-2000. (ஆங்கிலம்)

148. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1999-2000. (தமிழ்)

149. மானியக் கோரிக்கை எண் 24 மற்றும் 53—பெருந் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

150. தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

151. பெருந் தொழில்கள் பற்றிய செயல் திட்ட ஆய்வுரை, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

152. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்).

153. சர்க்கரைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

154. தமிழ் நாடு அரசு சர்க்கரைத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

155. தமிழ்நாடு அரசு புவியியல் மற்றும் சுரங்கவியல் இயக்ககத்தின் 'குடிமக்கள் உரிமை ஆவணம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

156. சேலம், தமிழ்நாடு மாக்னசைட் நிறுவன நெறிமுறைகள் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

157. தொழில் துறையின் 'குடிமக்கள் உரிமை ஆவணம்' என்ற புத்தகம், (தமிழ், ஆங்கிலம்)

158. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் நிறுவன சாசனம், 1999. (தமிழ், ஆங்கிலம்)

159. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் 'மக்கள் சாசனம்', 1999. (தமிழ், ஆங்கிலம்)

160. தமிழ்நாடு தொழில் வெடி மருந்து நிறுவனத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம்.. (தமிழ், ஆங்கிலம்)

161. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 'குடிமகன் உரிமை ஆவணம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

162. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

163. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

164. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

165. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதின்மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).



# இணைப்பு

(348 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## கோரிக்கை எண் 24—தொழில்கள்

## கோரிக்கை எண் 53—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

## முதல் பகுதி

### தொழில் கொள்கை-தொழில் வளர்ச்சி-திட்டங்கள்—தமிழ்நாட்டில் மீண்டும் தொழில் நடவடிக்கைகள்

இந்த அரசின் வெளிப்படையான, ஒளிவு மறைவற்ற, முதலீட்டாளர் நாட்டம் கொள்ளும், தொழில் நேயமிகுந்த கொள்கை காரணமாக புகழ்வாய்ந்த பல பன்னாட்டு நிறுவனங்கள் இம்மாநிலத்தைத் தமது பெருமளவு முதலீட்டுக்கான தளமாகத் தேர்ந்தெடுத்து வருகின்றன.

வேகமான தொழில் வளர்ச்சி, விரைவாக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், வறுமையைக் குறைத்தல், சமூகநீதி, சமத்துவம் ஆகியவற்றை உருவாக்குவதில் இந்தியாவிலுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இன்று முன்னணியில் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் கனிமவளம், வேளாண் விளைச்சல், காடுகள், கடல் சார்ந்த பொருட்கள் ஆகியவை இயற்கையாகவே ஏராளமாக உள்ளன.

இந்த இயற்கை வளங்களைத் திறம்படப் பயன்படுத்திப் பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்பில் மிகுந்த கவனம் செலுத்தி இன்றைக்குத் தமிழ்நாடு பல்வேறு தொழில்முனைகளில் அங்காடித் தலைமையாக விளங்குகிறது.

வளர்ச்சியின் வேகத்தில் எண்பதுகளிலும், தொண்ணூறுகளின் முன்பகுதியிலும் சரிவு ஏற்பட்டது. இப்பொழுது தமிழ்நாட்டில் மீண்டும் தொழில் நடவடிக்கைகள் வேகமாகத் தொடங்கியுள்ளன.

**ஊரகப் பொருளாதாரத்திலிருந்து தொழில் பொருளாதாரம்:**

1947 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியத் தொழில் வளர்ச்சி பெருமளவிற்கு மத்திய அரசின் கொள்கைகளாலேயே தீர்மானிக்கப்படும் நிலை இருந்தது. ஆனால், 1991-ல் அறிமுகப்படுத்தப்பட்ட, தாராளமய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக நாட்டின் வளர்ச்சிக்கு ஆற்ற வேண்டிய பங்கு பணியின் பொறுப்பு மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, ஊரகப் பொருளாதாரத்திலிருந்து, சுயேட்சையான தொழில் பொருளாதாரத்திற்கு மாறி வருகிறது. தமிழ்நாடு 21 ஆம் நூற்றாண்டை நோக்கி மிகுந்த நம்பிக்கையோடு நடைபோடுவதற்குத் தயார் நிலையில் உள்ளது.

**அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்**

முதலீட்டை ஈர்ப்பதற்கு அடிப்படை அம்சமாக விளங்குவது உயர்தர அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளாகும். செயல்முறைப் பொருளியல் ஆய்வுக்கான தேசியக் குழு சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வின்படி, போதுமான உயர்தரக் கட்டமைப்பு வசதிகளில் தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது. எனினும், இதில் நிறைவு கொண்டு வாளாயிருந்துவிடாமல் மேலும் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

மின்சாரம், சாலைகள், துறைமுகங்கள், தகவல் தொடர்பு வசதிகள் ஆகியவற்றில் தமிழக அரசு மிகுந்த அளவிற்கு முதலீடுகளைச் செய்து வருகிறது. மாநிலத்தில் இப்போது செய்யப்பட்டு வரும் முதலீட்டில் 50 சதவிகிதத்திற்கும் மேலான முதலீடு, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் செய்யப்பட்டு வருகின்றது. இதில் 50 சதவிகிதத்திற்கும் மேலான முதலீடு, மின்சார உற்பத்தியில் செய்யப்பட்டு வருகிறது. மின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தற்போதுள்ள 7,000 மெகாவாட் மின் உற்பத்தியுடன், அடுத்த ஏழு ஆண்டுகளில் சுமார் 40,000 கோடி ரூபாய்ச் செலவில் 12,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறனை உருவாக்குவது என அரசு உறுதி பூண்டுள்ளது.

சாலைகள், அடிப்படை கட்டமைப்பு வசதிகளில் இரண்டாவது முக்கியமான கூறாக அமைகின்றன. சாலைகளின் விரிவாக்கத்திற்கும், மேம்பாட்டிற்கும் பெரும் முதலீடுகள் தேவை.

சாலைகள் மேம்பாட்டில் கடந்த இரண்டாண்டுகளில் அரசு செய்துள்ள முதலீடு, 4 ஆண்டுகளுக்கு முன்பு இதே கால அளவில் செய்யப்பட்ட முதலீட்டைவிட மூன்று மடங்கு அதிகமானது. சாலை மேம்பாட்டுப் பணிகள் தொடர்பான திட்டங்கள் மாநிலம் முழுவதும் நிறைவேறி வருகின்றன. மீட்டர் கேஜ் இரயில் பாதையை, திட்டச் செலவு பங்கீட்டு அடிப்படையில் அகல இரயில் பாதையாக விரைவாக அமைத்திடுவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.





துறைமுகங்கள், கட்டமைப்பு வசதிகளில் முக்கியப் பங்கு வகிக்கிறது. எண்ணூரில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் துறைமுகம் தவிர சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்கள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. கடலூர் மற்றும் குளச்சல் சிறு துறைமுகங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருகிறது. சென்னையில் புதிய சர்வதேச விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளிலும் அரசு ஈடுபட்டுள்ளது.

முதலீட்டாளர்களை ஊக்குவித்து அவர்களுக்கு உதவி செய்யும் கருத்துடன் தொழில் திட்டங்களுக்கான ஒப்புதல்களை வழங்குவதில் இதுவரை கையாளப்பட்டு வந்த முறைகள் மாற்றியமைக்கப்பட்டு எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தொழில் பிரிவுகளுக்குத் தேவையான ஒப்புதல் மற்றும் அனுமதிகளை விரைவுபடுத்த, ஒற்றைச் சாளர முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தொழிலில் சிலவற்றை மையமான முனைகள் என தெரிவு செய்யப்பட்டு, அவற்றின் வளர்ச்சிக்கு தனிச் சிறப்பு வாய்ந்த கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன.

**தொழில் வளர்ச்சியில் — ஐந்தாவது இடத்திலிருந்து முதலாவது இடம்**

பல்வேறு இந்திய மாநிலங்களில் செய்யப்படும் முதலீட்டைக் கண்காணித்து வரும் மும்பையில் உள்ள சுயேச்சை நிறுவனமான இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின் (Centre for Monitoring Indian Economy) அறிக்கையின்படி மே 1996-ல் மாநிலங்களில் முதலீடுகளின் நிலை பின்வருமாறு:

(ரூ. கோடியில்)

| | |
|---|---|
| கர்நாடகா | 1,11,464 |
| குஜராத் | 1,03,461 |
| ஒரிஸ்ஸா | 1,01,009 |
| மராட்டியம் | 1,00,516 |
| தமிழ்நாடு | 90,650 |

அதற்குக் கீழே

உத்தரப் பிரதேசம்
மத்தியப் பிரதேசம்
ஆந்திரப் பிரதேசம்
மேற்கு வங்கம்

[1999 ஏப்ரல் 29

இவை எல்லாம் 1996 ஆம் ஆண்டு மே மாதத்தினுடைய நிலைமை. அப்போது, தமிழ்நாடு 90 ஆயிரத்து 650 கோடி ரூபாய் முதலீட்டில் உத்தேசிக்கப்பட்டு செயலாக்கத்தில் இருந்த திட்டங்களைப் பொறுத்தமட்டில் 5-ஆவது இடத்தில் இருந்தது.

தொழில் முதலீட்டில் முதலாவது இடத்தில் தமிழ்நாடு

மே 1991 முதல் ஜனவரி 1999 வரை இந்திய மாநிலங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதைத் தொகுத்து வெளியிட்ட இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின் (CMIE) ஏப்ரல் 1999 வெளியீட்டின்படி, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. தமிழ்நாடு | ரூ.1,51,187 கோடி. ஒப்புதலளிக்கப்பட்டு செயலாக்கத்திலுள்ள இந்தியாவின் மொத்த முதலீட்டில் 11.50 சதவிகிதம் | |
| 2. மராட்டியம் | ரூ.1,51,058 கோடி | (11.49%) |
| 3. குஜராத் | ரூ.1,46,703 கோடி | (11.16%) |
| 4. ஒரிசா | ரூ.1,14,033 கோடி | (8.67%) |
| 5. கர்நாடகா | ரூ.1,07,703 கோடி | (8.19%) |
| 6. ஆந்திர மாநிலம் | ரூ.1,06,364 கோடி | (8.09%) |

அகில இந்தியாவினுடைய மொத்த முதலீடு என்று எடுத்துக் கொண்டால் ஜனவரி 1999 வரை ரூபாய் 13,15,017 கோடி.

அதிலே தமிழ்நாட்டிற்கு ரூபாய் 1,51,187 கோடி.

இதே நிலை 1996-இலே பார்த்தால் அகில இந்தியாவில் 10 இலட்சத்து 72 ஆயிரத்து 753 கோடி. அப்பொழுது தமிழ்நாட்டில் 90 ஆயிரத்து 650 கோடி.

அதாவது 8.45 சதவிகிதம். இரண்டரை ஆண்டுகளிலே உயர்வு இந்திய அளவில் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 264 கோடி. தமிழ்நாட்டிலே 60 ஆயிரத்து 537 கோடி. இது 24.98 சதவிகிதம் என்பதை நாம் எண்ணிப் பார்த்து பெருமையடையலாம்.



1999 ஏப்ரல் 29]

கார் தொழிற்சாலைகள்

ஃபோர்ட், ஹூண்டாய், மிட்சுபிஷி போன்ற மிகப்பெரிய பன்னாட்டு ஆட்டோ நிறுவனங்கள் இம்மாநிலத்தை முதலீடு செய்வதற்குகந்ததாகத் தேர்ந்தெடுத்துள்ளன. 2,750 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்ட ஹூண்டாய் மோட்டார் தொழிற்சாலை 9-10-1998 அன்றும், 320 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்ட மிட்சுபிஷி மோட்டார் தொழிற்சாலை 14-4-1998 அன்றும் தொடங்கி வைக்கப்பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. அவற்றின், தயாரிப்புகளுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது.

19-3-1999 அன்று 1,700 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டுள்ள ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலை தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நிறுவனம் 1999, அக்டோபர் மாதத்தில் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கும்.

உலகப் புகழ்வாய்ந்த ஆட்டோ நிறுவனங்கள் இங்கு வந்துள்ளதைத் தொடர்ந்து இருபதுக்கும் மேற்பட்ட ஆட்டோ உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் மேல்நாட்டு நிறுவனங்களும் தங்களது தொழிற்சாலைகளை சென்னை அருகில் நிறுவி வருகின்றன. இவற்றின் மொத்த முதலீடு ரூ.1,000 கோடிக்கும் மேல். இவற்றில் விஸ்டியான், ஏ.சி.டி. (A.C.D.), இல்ஜின், ஆட்டோ, வாலியோ ஆகிய தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. மற்றவை முடியும் தருவாயில் உள்ளன.

அரசு தொழில் நிறுவனங்கள் சீரமைப்பு

17-3-1999 அன்று 1999-2000 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் "டாசிட்" தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) ஆகிய இரண்டும் தொழில்கள் தொடங்குவதற்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் ஒரே மாதிரியான பணியை மேற்கொண்டு வருவதால் "டாசிட்" நிறுவனத்தை "சிப்காட்"-டுடன் இணைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இணைக்கப்பட்ட பின்பு சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளை உருவாக்கும் பணியில் மட்டும் ஈடுபடும். சிப்காட் இதுவரை மேற்கொண்டிருந்த கடன் வழங்கும் பணி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாற்றப்படும். தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு அதன் ஒரு பிரிவாகச் செயல்படும்.

[1999 ஏப்ரல் 29

*தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)*

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), இரசாயனம், பெட்ரோலிய இரசாயனம், மின்சக்தி, தொழிற்பூங்காக்கள், பொறியியல் அடிப்படை கட்டமைப்பு, ஆட்டோ துணைப் பாகங்கள், மருந்துப் பொருட்கள், வேளாண்மை அடிப்படையிலான தொழில்கள் போன்ற பல்வகைப்பட்ட பெரிய மற்றும் நடுத்தர தொழில் திட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறது.

ரூ. 24 கோடி முதலீடு கொண்ட ஆப்டிகல் பைபர் தொழில் திட்டத்திற்கு 1998 ஆம் ஆண்டு சூன் திங்களில் அடிக்கல் நாட்டப்பட்டது. திட்டச் செயலாக்கம் விரைவுபடுத்தப்பட்டு சூன் 1999-ல் உற்பத்தியைத் தொடங்கும். ஸ்ரீபெரும்புதூருக்கருகில் உருவாகிவரும் 14.50 கோடி ரூபாய் முதலீடு கொண்ட குருதிப் பைகள் உற்பத்தித் திட்டம், மார்ச் 2000-ல் உற்பத்தியைத் தொடங்கும். டிட்கோவால் ரூபாய் 5.6 கோடி முதலீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தியன் இயற்கை மருந்துப் பொருட்கள் நிறுவனம் இவ்வாண்டில் 18 வகை சிகிச்சைப் பொருட்களைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தும் திட்டத்தின் நிதி ஏற்பாடுகள் சூன் 1999 வாக்கில் முடிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 21 கோடி திட்டச் செலவு கொண்ட ஸ்ரீராம் ஆட்டோ பாகங்கள் தயாரிப்பு நிறுவனம் மே, 1998-ல் உற்பத்தியை தொடங்கிவிட்டது.

அடிப்படை கட்டமைப்பு மற்றும் மின் உற்பத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் "டிட்கோ" பெருமளவில் ஈடுபாடும் கவனமும் செலுத்தி வருகிறது. சென்னைக்கருகில் ஆட்டோ துணைப் பாகங்கள் பூங்கா ஒன்றினை 210 கோடி ரூபாய் முதலீட்டில் இணைத் துறையில் நிறுவ மஹிந்திரா ரியால்டி அண்டு இன்ப்ராஸ்ட்ரக்சர் டெவலப்பர்ஸ் நிறுவனம், ஐ.அல்.அண்டு எப்.எஸ். நிறுவனம் ஆகிய நிறுவனங்களுடன் "டிட்கோ" நிறுவனம் ஓர் ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளது. இத்திட்டம் ஓராண்டுக்குள் நிறுவப்பட்டு சுமார் 3,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பை அளிக்கும்.

சென்னை எண்ணூருக்கருகில் பெட்ரோகெமிக்கல் பூங்கா திட்டம் ஒன்றினை ரூ. 600 கோடி செலவில் நிறுவிட தமிழ்நாடு பெட்ரோகெம் லிமிடெட் என்ற பெயரில் புதிய நிறுவனம் ஒன்றை டிட்கோ பதிவு செய்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துபவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி 1999 ஆம் ஆண்டு சூன் திங்களுக்குள் முடிவடையும்.



1999 ஏப்ரல் 29]

சென்னை தரமணியில் ரூ.320 கோடி திட்டச் செலவிலான "டைடல்" மென்பொருள் தொழில்நுட்ப பூங்கா அமைக்கும் திட்டம், 2000 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தொடங்கப்படுவதற்கு ஏற்ற முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு வேகமாக நடைபெறுகின்றன. மொத்தப் பரப்பு 8.01 ஏக்கரில் கட்டுமானப்பகுதி 1.12 மில்லியன் சதுர அடியில் அமையும். இத்திட்டம், அதி உன்னத தொழில் நுட்பம் உடையதாகவும், மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்களுக்குத் தேவையான உலகத் தரம் கொண்ட வசதிகளைத் தன்னகத்தே கொண்டதாகவும் அமையும்.

அமெரிக்காவைச் சேர்ந்த இன்பேக் இந்தியா குரூப், ஏக்சஸ் டெக்னாலஜிஸ் இண்டஸ்ட்ரீஸ் ஆகிய இரு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டத்தில் உயர் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றினை செயல்படுத்த தமிழ்நாடு டெக்னாலஜி சிட்டி லிமிடெட் என்ற பெயர் கொண்ட ஒரு கூட்டுத்துறை நிறுவனத்தை "டிட்கோ" அமைத்துள்ளது. செலவு மதிப்பீடு ரூ. 800 கோடியாகும். திட்டத்திற்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்தும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இது முடிவடைந்ததும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் உருவாக்கப்படத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தொழில் வளர்ச்சிக்கு மின்சக்தி இன்றியமையாததாகும். பல்வகை எரிபொருள்களைக் கொண்டு மின்உற்பத்தி செய்யக்கூடிய 20 திட்டங்களை நிறுவுவதன் பொருட்டு திட்ட மேம்பாட்டாளர்களைத் தெரிந்தெடுப்பதற்காக உலக அளவிலான போட்டி ஏலத்தை டிட்கோ வெற்றிகரமாக முடித்துள்ளது. மொத்தமுள்ள 20 திட்டங்களில் 5 திட்டங்களுக்கு முதல் நிலையில் எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து எரிபொருள் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த 5 திட்டங்களிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. 5 திட்டங்களின் மொத்த நிறுவு திறன் 467 மெகாவாட் ஆகும். இந்த 5 நிறுவனங்கள் விரைவில் நிதி ஏற்பாடு முடிவு செய்துவிடும். நிதி ஏற்பாடு முடிவு செய்த நாளிலிருந்து 18 மாதங்களுக்குள் இத்தொழிற் பிரிவுகள் செயல்படத் தொடங்கும். மேலும், மொத்தம் 267 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட இரு திட்டங்களுக்கு எரிபொருள் வழங்கல் ஏற்பாடு செய்யுமாறு அரசு பரிந்துரைத்துள்ளது.

[1999 ஏப்ரல் 29

6,500 கோடி ரூபாய்த் திட்டச் செலவில் ஒருங்கிணைந்த திரவ இயற்கை எரிவாயு (LNG) இறக்கு முனையம் மற்றும் 2000 மெகாவாட் மின்உற்பத்தித் திட்டத்தை கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் (Build, Operate and Transfer) அடிப்படையில் செயல்படுத்திட ஜெர்மனியைச் சேர்ந்த சீமென்ஸ் நிறுவன குழுமத்தை டிட்கோ தேர்வு செய்துள்ளது. இம்மின் உற்பத்தித் திட்டத்தில் திரவ இயற்கை எரிவாயுவை எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கு மைய அரசு கொள்கையளவில் ஒப்புதலளித்துள்ளது. இந்நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு எல்.என்.ஜி. துறை ஒன்றை எண்ணூர் துறைமுகத்தில் ஒதுக்கீடு செய்வதற்கு மைய அரசின் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகம் ஒத்துக்கொண்டுள்ளது. கட்டுமானப் பணிகள் 2001 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களுக்குள் தொடங்கப்படும். இத்திட்டம் செயலாக்கப்படும்போது சுமார் 500 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் சுமார் 3,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கும்.

4,000 கோடி ரூபாய் திட்டச் செலவில் ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மற்றும் மின்உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக திருவாளர்கள் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், அமெரிக்காவைச் சேர்ந்த அமெரிக்கன் கோல் கார்ப்பரேஷன், ஹாங்காங் நாட்டைச் சேர்ந்த போஸ்டர் வீலர் அண்டு சி.இ.பி.ஏ. ஆகிய நிறுவனங்களைக் கொண்ட கூட்டுக் குழுமம், திட்ட மேம்பாட்டாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த தனியாக ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. உற்பத்தியாகும் மின்சாரத்தை வாங்கிக் கொள்வது தொடர்பான பேச்சு வார்த்தைகள் முடிக்கப்பட்டுள்ளன. நிலம் கையகப்படுத்தும் பணி வேகமாக நடந்தேறி வருகிறது. இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணி 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குள் தொடங்கப்படும்.

பல்வகை விமானங்கள் மூலம் வந்தடையும் பல்வகை சரக்குகளை ஏற்றி இறக்குவதற்கும் அவற்றுக்கு கிடங்கு வசதி மற்றும் சேமிப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும், 75 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை விமான நிலையத்திற்கருகில் மாநகர வானூர்தி சரக்கு மையம் ஒன்றினை அமைக்க டிட்கோ கருதியுள்ளது. இதற்கான தொழில் நுட்ப-பொருளாதார சாத்தியக்கூறு ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அமைக்க சென்னை விமான நிலையத்துக்கருகில் பொருத்தமான இடம் கண்டறியப்பட்டு வருகிறது.



1999 ஏப்ரல் 29]

ரூ. 20 கோடி செலவில் ஓசூரில் அமைக்கப்பட உள்ள மலர்வகை அடிப்படை கட்டமைப்புப் பூங்காவிற்கு சக தொழில் முனைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்திட்டத்திற்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளதுடன் மூலதனப் பங்குகள் மற்றும் கடன்களுக்கு நிறுவனங்கள் அணுகப்பட்டுள்ளன. இப்பூங்கா 1999ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் செயல்படும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் விளையும் 9 மில்லியன் டன் பழங்கள், காய்கறிகளில் 30 சதவிகிதம் அறுவடைக்குப் பிந்தைய வசதிகள் இல்லாத காரணத்தால் சேதமடைகின்றன. இந்த வகையில், தமிழ்நாட்டில் விளையும் சுமார் 10 முக்கிய பழங்கள் காய்கறிகள் குறித்து விரிவான ஆய்வு ஒன்றைத் தொடங்குவதற்காக 12-1-1999 அன்று டில்லியில் உள்ள வேளாண் அமைச்சகத்தின் வேளாண் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்துடன் நெதர்லாந்தைச் சார்ந்த டச்சு முகவரமைப்புடனும் டிட்கோ ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஆய்வில், அறுவடை செய்தல், கையாளுதல், போக்குவரத்து செய்தல், சேமித்து வைத்தல் போன்றவை அடங்கும் இவ்வாய்விற்கு தேவைப்படும் தொகையை டச்சு நிறுவனமும், வேளாண் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனமும், தமிழக அரசும் வழங்கும். ஆய்வுப் பணி 10 மாத காலத்திற்குள் முடிந்துவிடும். இந்த ஆய்வின் அடிப்படையில் முன்னோடித் திட்டம் ஒன்று செயலாக்கப்படும். இவ்வகை வசதியைப் பயன்படுத்திக்கொள்ளும் முதல் மாநிலமாக தமிழகம் விளங்கும்.

*தேங்காய் செய்முறைப்படுத்துதல்*

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ரூ. 12 கோடியும், இந்திய ஸ்டேட் வங்கி ரூ. 4 கோடியும் ஏ.டி.எப்.டி. ரூ. 3 கோடியும் தவணைக் கடனுக்கு அனுமதி அளித்துள்ளன. எஞ்சிய பங்கு மூலதனத்திற்கு தொழில் முனைவரால் ஏற்பாடு செய்யப்படாததால், திட்டத்தை நிறைவேற்றுவது தாமதப்பட்டுள்ளது.

**100 சதவிகித ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கோழி இறைச்சி பதப்படுத்தும் திட்டம்**

தமிழ்நாட்டில் கோழியின வளர்ச்சியில் பாராட்டத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த விரைவான வளர்ச்சியின் காரணமாக முட்டை மற்றும் இறைச்சிக் கோழியின் உற்பத்தி உபரியாக உள்ளது. பயோனீர் கோழிவளர்ப்புப் பண்ணை நிறுவனத்தை சக தொழில்

முனைவர்களாகக் கொண்டு இணைத் துறையில் ரூ.30 கோடி திட்டச் செலவில், கோயம்புத்தூர் மாவட்டம், பொங்கலூரில் 100 சதவிகிதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கோழி இறைச்சி செய்முறைப் பிரிவு ஒன்றை டிட்கோ நிறுவி வருகிறது. இத்தொழிற்பிரிவின் மூலம் 300 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 3,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்க வாய்ப்புண்டாகும்.

**100 சதவிகிதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட ஃப்ரோசன் பிரெஞ்ச் ஃப்ரைஸ்**

குவைத்தைச சேர்ந்த, இந்தியாவில் தங்கியிராத இந்தியர் திரு. ஆர்.சி. சுரேஷ் அவர்களை சக தொழில் முனைவராகக் கொண்டு கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில், ரூ. 32 கோடி திட்டச் செலவில் ஃப்ரோசன் பிரெஞ்ச் ஃப்ரைஸ் தயாரிப்பதற்கான தொழிற்பிரிவை டிட்கோ நிறுவி வருகிறது. தொழில் முனைவோர் ஒப்பந்தம் 7-1-1998 அன்று கையெழுத்திடப்பட்டது. இத்திட்டத்திற்காக ஆண்டுக்கு வாங்கப்படும் உருளைக் கிழங்கு சுமார் 18,000 டன்களாகும். இந்த உற்பத்திப் பொருள் ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா மத்தியக் கிழக்கு அங்காடிகளுக்கு ஏற்றுமதி செய்யக் கருதப்பட்டுள்ளது. இதன்மூலம் 120 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும், 1,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும் இந்நிறுவனத்திற்கு, தவணைக் கடன் ஒப்பளிக்கப்பட்டு மேட்டுப்பாளையம் வட்டத்தில் நிலங்கள் வாங்கப்பட்டுள்ளன.

*பி.வி.சி. போம்ட் ஷீட் (செயற்கை மரம்)*

இத்தாலியைச் சேர்ந்த திருவாளர்கள் நோவா சி.எம்.பி. நிறுவனம் டிட்கோவுடன் இணைந்து இணைத் துறையில் ரூ.45.70 கோடி திட்டச் செலவில், ஆண்டுக்கு 8,400 டன் உற்பத்தித் திறன் கொண்ட போம்ட் ஷீட் அடைக்கப்பட்ட மற்றும் ஃப்ரீ ஃபாய்ட் ஷீட் பி.வி.சி. தகடுகள் (சிந்தடிக் மரம்) தயாரிப்பதற்காக புதிய தொழில் திட்டம் ஒன்றைச் சென்னையில் நிறுவி வருகிறது. இவை, மரத்திற்கு மாற்றுப் பொருளாகப் பயன்படுத்தத்தக்கவை. இவை, கட்டடக் கட்டுமானங்கள், மரவேலை மற்றும் தொழில்களுக்குப் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் 300 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கும். இந்நிறுவனம், அதன் உற்பத்தியில் 50 சதவிகிதத்தை ஏற்றுமதி செய்யவும், எஞ்சிய 50 சதவிகிதத்தை உள்நாட்டிலேயே விற்பனை செய்யவும் கருதியுள்ளது. இத்திட்டத்திற்கு சிப்காட் நிறுவனம் இருங்காட்டுக்கோட்டையில் நிலம்



ஒதுக்கியுள்ளது. தவணைக் கடனின் ஒரு பகுதியை, இந்திய ஸ்டேட் வங்கி அனுமதித்துள்ளது. எஞ்சியக் கடன் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

*பென்னார் ரிபைனரிஸ் லிமிடெட்*

ஹைதராபாத்தைச் சேர்ந்த நாகர்ஜுனா குரூப் நிறுவனத்தைச் சகதொழில் முனைவராகக் கொண்டு ஆண்டொன்றுக்கு 5.0 மில்லியன் டன் உற்பத்தித் திறன் கொண்ட ரிபைனரி திட்டத்தை டிட்கோ உருவாக்கி வருகிறது. இத்திட்டத்திற்கானச் செலவு சுமார் ரூ.3,200 கோடி ஆகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. 500 ஏக்கர் நிலம் வரை இதுவரை வாங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 1,500 ஏக்கர் நிலங்களை டாசிட் நிறுவனம் ஒதுக்கீடு செய்ய உள்ளது. அயல்நாட்டு மற்றும் இந்திய வங்கிகள் / நிதிநிறுவனங்கள், ரூ.1,770 கோடி வரை தவணைக் கடன்கள் அனுமதித்துள்ளன. தமிழ்நாடு கடல் சார்ந்த வாரியம் இத்திட்டத்தின் கடல் சார்ந்த வசதிகளுக்கு சிறு துறைமுக அந்தஸ்தை அளித்துள்ளது. கட்டுமானப் பணிகள் 1999 மே மாதம் தொடங்குமெனவும், வணிக அளவிலான உற்பத்தி, 2001 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மேற்கொள்ளப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் 500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 1,500 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கும்.

*சுங்கவரிச் சாலை நிர்வாக நிறுவனம்* **(Toll Road Management)**

பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஐ.எல்.அண்டு எப்.எஸ். டிரான்ஸ்ரூட் இன்டர்நேஷனல் மற்றும் பிரான்ஸ் சி.சி.எப். நிறுவனம் ஆகியவற்றுடன் சேர்ந்து, சுங்க வரிச் சாலை நிறுவனத் திட்டத்தை டிட்கோ நிறுவி வருகிறது. இத்திட்டத்திற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம், இம்மாநிலத்திலுள்ள நெடுஞ்சாலைகள், பாலங்கள் மற்றும் மாற்றுவழிச் சாலைகளின் மேம்பாட்டிற்காக முக்கியமாக செய்து கொள்ளப்பட்டுள்ளது. இத்தகையத் திட்டத்தில் கண்டறியப்பட்ட முதல் வாய்ப்பு, சென்னை துறைமுகத்திற்கும் எண்ணூருக்குமிடையேயுள்ள ஒரு சாலையும், மணலி தொழிற் பகுதிக்குள் உள்ள சாலைகளை மேம்படுத்துவதுமாகும். சுங்கவரி வசூலின் வாய்ப்பை உறுதி செய்ய இந்தப் பகுதியில் போக்குவரத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், ஐ.எல். அண்டு எப்.எஸ். நிறுவனத்துடன் சேர்ந்து ஆலோசகர் பணியை ஒருங்கிணைக்கின்றது.

தற்போது, ட்ரான்ஸ்ரூட் இண்டர்நேஷனல் நிறுவனம் கூட்டுத் திட்டத்திலிருந்து விடுவித்துக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தால் பாதிக்கப்படவுள்ள குடும்பங்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதற்காக, ஏற்ற மனையிடங்களைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)

இம்மாநிலத்தில் நடுத்தர மற்றும் பெரும் தொழில்களை முன்னேற்றும பணி 1971 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட "சிப்காட்" நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம மாநில அரசின் ஆதரவுடன் பின் வரும் பெருந்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது:-

1. தொழில் வளாகங்கள், பூங்காக்கள் மற்றும் நகரியங்களை உருவாக்கி பராமரித்தல் மற்றும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான மேம்படுத்தப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்தல்.

2. தொழில் திட்டங்களுக்குக் குறித்த காலக் கடன் வழங்குதல்.

3. தொழில் முனைவோர் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கு இயந்திரத்தின் மீதான குத்தகைக் கடன் வழங்குதல்.

4. தொழிற்சாலைகளுக்கான விற்பனை வரி வசூல் தள்ளி வைப்பு / தள்ளுபடி திட்டத்தின்கீழ் தகுதிச் சான்றிதழ் வழங்குதல்.

5. சென்னை ஏற்றுமதி செயல்முறை மண்டல தொழிற்சாலைகளுக்கும் 100 சதவிகிதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் விற்பனை வரி (TNGST) ஈடு செய்யும் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

6. குறிப்பிடப்பட்ட பகுதி மற்றும் குறிப்பிடப்பட்ட தொழிற் பிரிவுகளுக்கான மாநில மூலதன மானியம் மற்றும் மின உற்பத்தி சாதனங்களுக்கான கூடுதல் மானியம் மற்றும் மகளிருக்கான வேலை வாய்ப்பு அளித்தல்.

7. பெருந்தொழில் மற்றும் நடுத்தர தொழில்களுக்கு வழிகாட்டுச் சேவை.

டாசிட் நிறுவனத்தை சிப்காட் நிறுவனத்துடன் இணைப்பதற்கும் சிப்காட் நிறுவனத்தின் கடன்கள் வழங்கும் பணியை ஏற்கெனவே சிறுதொழில்களுக்கு கடன் வழங்கும் பணியை மேற்கொண்டுள்ள



தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாற்றுவதற்கும் அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

2. வளாகங்களை நிறுவுதல்

அ. தற்போதுள்ள வளாகங்கள்

(1) சிப்காட் நிறுவனம், இராணிப்பேட்டை (1973), ஓசூர் (1974), கும்மிடிப்பூண்டி (1984), கடலூர் (1984), மானாமதுரை (1980), புதுக்கோட்டை (1983) மற்றும் தூத்துக்குடி (1984) ஆகிய இடங்களில் தொழில் வளாகங்களை வெற்றிகரமாக நிறுவியுள்ளது.

(2) 1991-ல் தொடங்கப்பட்ட கும்மிடிப்பூண்டி பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட, திட்டமிடப்பட்ட மொத்த நிலம் 667.75 ஏக்கரில், ஏற்றுமதி தொழில் பூங்கா அமைப்பதற்காக மட்டும் 224 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1995 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் மேலும் கூடுதலாக 246 ஏக்கர் நிலம் பகுதி இரண்டு திட்டத்தின் விரிவாக்கத்திற்காக சேர்ந்துள்ளது.

(3) 1992 ஆம் ஆண்டில் சுமார் 220 ஏக்கரில் கடலூர் இரண்டாவது திட்டம் மேம்படுத்தப்படுகிறது. சுமார் 112 ஏக்கர் நிலம் வருவாய்த் துறையால் சிப்காட் வசம் இதுவரை ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதில் சுமார் 40 ஏக்கர் நிலம் மருந்து பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிப்காட் தொழில்வளாகம் கடலூரில் தொழில்மனை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 58 தொழிற்சாலைகளில் 43 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன மற்றும் 9 தொழிற்சாலைகளுக்கான கட்டுமானப்பணிகள் பல்வேறுநிலையில் நடைபெற்று வருகின்றன. மீதம் உள்ள 6 தொழிற்சாலைகள் நலிந்த நிலையில் மூடப்பட்டுள்ளன.

(4) 1991-ல் ஓசூர் நிலை இரண்டினை விரிவாக்குவதற்காக 128 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 56 ஏக்கர் புறம்போக்கு நிலம் உரிமை மாற்றம் செய்யப்படவுள்ளது. 1997 ஆம் ஆண்டில் ஓசூர் நிலை இரண்டின் இரண்டாவது விரிவாக்கத்திற்கென மேலும் 212 ஏக்கர் நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(5) இராணிப்பேட்டை மூன்றாவது திட்டம் மேம்படுத்தப் படுவதற்காக 1996 ஆம் ஆண்டில் 798 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

[1999 ஏப்ரல் 29

(6) 1996 ஆம் ஆண்டில் சுமார் 1,616 ஏக்கரில் தூத்துக்குடியில் இரண்டாவது திட்டம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான அரசின் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) புதிய பூங்காக்கள்/நகரியங்கள்**

(1) தொழில் துறையில் பின்தங்கியுள்ள திருவண்ணாமலை மாவட்ட செய்யாறு வட்டத்தில் 1995 ஆம் ஆண்டில் ஒரு புதிய தொழில் வளாகம் சிப்காட் நிறுவனத்தால் அமைக்க உத்தேசிக்கப்பட்டு இதற்காக 1,350 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(2) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், இருங்காட்டுக்கோட்டையில் ஒரு புதிய தொழில் பூங்கா மேம்படுத்தப்படுவதற்காக 1,829 ஏக்கர் நிலம் சிப்காட் நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்டு, நில ஆர்ஜித சட்டத்தின் அவசரப் பிரிவின்கீழ் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 1,784 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

**(3) திருப்பெரும்புதூர் தொழில் பூங்கா**

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் போண்டூர், திருப்பெரும்புதூர்-சி, இருங்குளம், மாம்பாக்கம், திருமங்கலம், சிறுமாங்காடு, சண்டவல்லூர் ஆகிய கிராமங்களைச் சார்ந்த சுமார் 2,469 ஏக்கர் நிலப் பரப்பில் சிப்காட் நிறுவனத்தினால் ஒரு புதிய தொழில் பூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான விரைவான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

**(4) நெமிலி தொழில் துணை நகரம்**

1997 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் நெமிலி, திருப்பெரும்புதூர்-பி ஆயக்கொளத்தூர், மன்னூர், வளர்புரம் ஆகிய கிராமங்களை சார்ந்த சுமார் 2,429 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் நிறுவனத்தினால் ஒரு தொழில் பூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(5) வடமங்கலம் தொழில் பூங்கா**

1997 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் திருப்பெரும்புதூர்-சி, வடமங்கலம், மாம்பாக்கம் மேலும் மற்றைய கிராமங்களைச் சார்ந்த சுமார் 1,408 ஏக்கர் நிலப்பரப்பில்



1999 ஏப்ரல் 29]

சிப்காட் நிறுவனத்தினால் இக்கி ரிசார்ட்டின் பின்புறத்தில் ஒரு தொழிற் பூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(6) கும்மிடிப்பூண்டி மூன்றாவது கட்ட தொழில் நகரியம்**

கும்மிடிப்பூண்டியில் தொழில் நகரியம் அமைக்கும் உத்தேசம் உள்ளது. அதற்கான நிலம் தெரிவு செய்யப்பட உள்ளது.

**(இ) ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழிற் பூங்கா**

மத்திய அரசு ரூ.10 கோடி பங்குத் தொகையுடன் ஒரு ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழிற் பூங்கா அமைக்க அனுமதி அளித்துள்ளது. இதற்காக கும்மிடிப்பூண்டி இரண்டாவது திட்டத்தில் ரூ.19.90 கோடி திட்ட மதிப்பீட்டில் 224 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு வழங்கிய ரூ.2.37 கோடி ஆரணியாறு குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவடைந்துவிட்டன. தற்போது தொழில் முனைவோருக்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றன.

**3. திட்ட நிதியுதவி**

1998-99 ஆம் ஆண்டில் ரூ.39.75 கோடி தவணைக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.318 கோடி வரை முதலீடும் சுமார் 7,633 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரூபாய் 10 கோடி வரையிலான திட்டங்களுக்கு இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) மற்றும் இந்திய தொழில் சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) வரி முறை கடனளி திட்டத்தின் (LOC) கீழ நிதியுதவி செய்யப்படுகிறது. மேலும் ரூ.16 கோடி வரை கடன் தேவைப்படும் திட்டங்களுக்கு சிப்காட் தனது நிதியிலிருந்தும் நிதியுதவி செய்கிறது. சிப்காட் தனது எல்லா நடவடிக்கைகளின் மூலம் இந்நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து 31-03-1999 வரை 1,57,200 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கியுள்ளது. சிப்காட் தொழில் வளாகங்களில் அமைக்கப்பட்டுள்ள 902 தொழிற்சாலைகளுக்கு 5,489 ஏக்கர் பரப்பளவுள்ள மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது 667 தொழிற்சாலைகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

[1999 ஏப்ரல் 29

பல்திறப்படுத்தல் திட்டத்தின்கீழ் சிப்காட் இயந்திரத்தின் மீதான குத்தகைக் கடனுதவி திட்டங்களை 1997 மே மாதம் முதல் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

### இயந்திரத்தின் மீதான குத்தகை கடன் உதவி

இத்திட்டத்தின்கீழ் தொழில்முனைவோர் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கு இயந்திரத்தின் விலையில் 100 சதவிகிதம் கடனாக வழங்கப்படும். குறைந்தபட்சக் கடனாக ரூ.5 இலட்சமும், அதிகபட்சமாக ரூ.250 இலட்சமும் ஒரு தொழிற்சாலைக்கு வழங்கப்படும்.

### 2) குறுகிய கால தவணைக் கடன் உதவி

இத்திட்டத்தின்கீழ் குறைந்தபட்சக் கடனாக ரூபாய் 25 இலட்சமும் அதிகபட்சமாக ரூ. 10 கோடியும் ஒரு தொழிற்சாலைக்கு குறுகிய காலக் கடனாக வழங்கப்படும். குறுகிய காலமான இரண்டு வருடத்தில் இத்திட்டத்தில் உதவி பெறும் கடனைத் திருப்பி செலுத்த வேண்டும்.

### ஊக்கத் தொகை வழங்குதல்

1998-99-ல் சிப்காட் நிறுவனம் பின்வரும் சலுகைகளை நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு அளித்துள்ளது:

**1. விற்பனை வரித் தள்ளுபடி ஒத்திவைப்பு**

| | 5 வருட ஒத்தி வைப்பு | 9 வருட ஒத்தி வைப்பு | 5 வருட தள்ளுபடி | 7 வருட தள்ளுபடி | 12 வருட ஒத்தி வைப்பு |
|---|---|---|---|---|---|
| தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை | 37 | 47 | 3 | - | - |
| தொகை (ரூபாய் கோடியில்) | 191.34 | 244.19 | 140.32 | - | - |

இவற்றுள் 85 நடுத்தரத் தொழில்கள்
2 பெரிய தொழில்கள்



1999 ஏப்ரல் 29]

**2. மாநில மூலதன மானியத் திட்டம்**

| | |
|---|---|
| தொழிற்பிரிவுகளின் எண்ணிக்கை | 88 (87 நடுத்தரத் தொழில்கள் 1 பெரிய தொழில்) |
| ஒப்பளிக்கப்பட்டது | ரூ. 6.25 கோடி |
| அளிக்கப்பட்டது | ரூ. 6.37 கோடி |

### தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்)

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) அரசு ஆணை எண் 11, தொழில் துறை (எம்ஐஜி 2), நாள் 9-1-1992-ன் மூலம் அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்குவதற்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான செயல்பாட்டில் டாசிட் ஈடுபட்டுள்ளது. டாசிட் தொழில் வளர்ச்சி மையங்கள்/வளாகங்கள் அமைத்தல், தொழில் வளாகங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஏற்றுமதி வளர்ச்சிக்குத் தேவையான வசதிகளை அமைத்தல் போன்ற அடிப்படை வசதி திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களில் டாசிடின் பங்கு இதை நடைமுறைப்படுத்துவதில் தொடங்கி வசதிகளை முழுமையாக அமைத்து கொடுப்பது வரை உள்ளதாகும். டாசிட் மற்றும் சிப்காட் நிறுவனங்கள் ஒரே மாதிரியான பணிகளை நிறைவேற்றி வருவதால், இவ்விரு நிறுவனங்களையும் இணைத்திட அரசு முடிவு செய்து, ஏற்கனவே அறிவித்தும் உள்ளது. இது அடிப்படை வசதி மற்றும் நில வங்கி போன்ற திட்டங்களில் அதிக அளவு கவனத்தைச் செலுத்தி அவைகளைச் சிறப்பாக செயல்முறைப்படுத்த வழிவகுக்கும்.

2. டாசிட் இரண்டு தொழில் வளர்ச்சி மையங்களையும், இரண்டு தொழில் வளாகங்களையும் அமைத்து வருகிறது. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு

### (அ) பெருந்துறை வளர்ச்சி மையம்

டாசிட் நிறுவனம் ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் ஒரு வளர்ச்சி மையத்தை அமைத்து வருகிறது. இதுவரை 2,538 ஏக்கர் நிலம் பெருந்துறையில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலம் 1999-2000-க்குள் கையகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெருந்துறை வளர்ச்சி மையத்தில் சாலைகள், குடிநீர், கழிவு நீர்,

வடிகால் அமைத்தல் போன்ற அடிப்படை வசதி மேம்படுத்துவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்தின் முதல் பகுதி 1,300 ஏக்கரில் விரைவில் முடிவடைந்துவிடும். மனைகளை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*(ஆ) கங்கைகொண்டான் வளர்ச்சி மையம்*

கங்கைகொண்டான் வளர்ச்சி மையத்தில் 2,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது. போதிய கேட்பு இல்லாததால் திட்ட மேம்பாட்டுப் பணிகளைத் தற்போது மேற்கொள்ள வேண்டாமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

*(இ) நிலக்கோட்டை தொழில் வளாகம்*

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் ஒரு தொழில் வளாகம் அமைப்பதற்காக 380 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்குகளினால் மீதமுள்ள 20 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி தடைபட்டுள்ளது. நிலக்கோட்டையில் 250 ஏக்கர் பரப்பில் (நிலை 1) அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் முடிவடையும் நிலையில் உள்ளன. இத்திட்டம் மே 1999-க்குள் நிறைவு அடையும்.

*(ஈ) பர்கூர் தொழில் வளாகம்*

தருமபுரி மாவட்டம், பர்கூரில் சுமார் 1,390 ஏக்கர் நிலத்தில் ஒரு தொழில் வளாகத்தை அமைத்து வருகிறது. போதிய கேட்பு இல்லாததால் திட்ட மேம்பாட்டுப் பணிகளைத் தற்போது மேற்கொள்ள வேண்டாமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

*புதிய திட்டங்கள்*

*1. நிரந்தரக் கண்காட்சி மையம், சென்னை*

ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்காக டாசிட், சென்னை, நந்தம்பாக்கத்தில் ஒரு நிரந்தரக் கண்காட்சி மையத்தை அமைக்கவுள்ளது. இத்திட்டம் உருவாக்குதல், தனதாக்குதல் மற்றும் இயக்குதல் அடிப்படையில் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டு டாசிட், காஞ்சிபுரம் மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்தில் உள்ள நந்தம்பாக்கத்தில் 34.61 ஏக்கர் நிலத்தை இதற்காக ஏற்றுக் கொண்டுள்ளது.





*2. மணலி-மாத்தூர் சாலை மேம்பாடு*

டாசிட் நிறுவனம் மணலி தொழிற்பகுதியில் சாலை மேம்பாட்டிற்கான திட்டச் செலவின் ஒரு பகுதியை அதனால் பயன்பெறும் தொழிற்சாலைகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையில் வெற்றி கண்டுள்ளது. இதன் முதல் படியாக மணலி—மாத்தூர் சாலை மேம்பாடு ரூ. 0.49 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.

*3. நில வங்கி*

தொழில் வளர்ச்சிக்கான இடையூறுகளில் ஒன்று தொழில்கள் தொடங்கத் தேவையான நிலங்கள் உடனே கிடைக்காதது. பெரிய நகரங்களுக்கு அருகில் சமூகக் கட்டமைப்பு வசதிகள் ஏற்கெனவே உள்ள பகுதிகளுக்கு அருகிலுள்ள தொழில் மனைகள் மற்றும் நிலங்கள்தான் இப்போது விரும்பிக் கோரப்படுகின்றன. இதன் அடிப்படையில் டாசிட் தொழில் முனைவர்களுக்கு தொழிற்சாலைகள் அமைப்பதற்காக ஒரு நில வங்கியை அமைப்பதற்கு பெரிய அளவில் கையகப்படுத்துவதற்காக நிலங்கள் தேர்ந்தெடுத்துள்ளது.

*நில வங்கி விவரங்கள் பின்வருமாறு*

*(அ) தாம்பரம்-முடிச்சூர், வாலாஜா சாலையை அடுத்த ஒரகடத்தில் தொழில் பூங்கா*

டாசிட் ஒரகடத்தில் ஒரு தொழில் பூங்கா/வளர்ச்சி மையம் அமைப்பதற்கு 2,008 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி வருகிறது. ஒரகடம் வளர்ச்சி மையத்திற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை மாநில அரசு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளது.

*(ஆ) வரதராஜபுரத்தில் தொழில் பூங்கா*

டாசிட் நிறுவனம் சென்னையிலிருந்து 33 கி.மீ. தொலைவிலும், தாம்பரத்தில் இருந்து 8 கி.மீ. தொலைவிலும் கிஷ்கிந்தா அருகில் 1,939 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த திட்டமிட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி டிசம்பர் 1999-ல் முடிவடையும்.

[1999 ஏப்ரல் 29

*(இ) மாமண்டூர் தொழில் பூங்கா*

மாமண்டூரில் தேசிய நெடுஞ்சாலை 45-க்கு அருகில் 860 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவுள்ளது. நிலம் கையகப்படுத்துதல் டிசம்பர் 1999-ல் முடிவடையும்.

*(ஈ) திருக்கச்சூர் துணை நகரம்*

850 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவுள்ளது. டிசம்பர் 1999-க்குள் இப்பணி முடிவடையும்.

*(உ) கடலூர் தொழில் வளாகம்*

3,711 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இது டிசம்பர் 1999-க்குள் முடிவடையும்.

*-தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்*

தமிழக அரசு கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகக் கொண்டு ஆண்டொன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன் அச்சு மற்றும் எழுது காகிதங்களும் தயாரிப்பதற்காக கரூர் மாவட்டம் புகளூரில் ஒருங்கிணைந்த காகித ஆலை ஒன்றை நிறுவியுள்ளது.

இந்த காகித ஆலை 1985ஆம் ஆண்டில் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கியது.

*விரிவாக்கத் திட்டம்*

முதல் ஆலை உற்பத்தியைத் தொடங்கி பத்து ஆண்டுக்கால அளவிற்குள்ளாகவே, இந்நிறுவனம் ரூ. 585 கோடி மூலதனச் செலவில் அதன் உற்பத்தித் திறனை ஆண்டுக்கு 90,000 மெட்ரிக் டன் என்பதிலிருந்து ஆண்டுக்கு 1,80,000 மெட்ரிக் டன் என்ற அளவிற்கு இரண்டு மடங்காக்கியது. 1995 நவம்பரில் இந்நிறுவனம் தனது சமவீத மூலதனப் பங்குகளை ஆரம்ப முயற்சியாக பொது மக்களுக்கு விற்பனைக்குக் கொண்டு வந்து விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதி நிதிக்காக ரூ. 216 கோடியைத் திரட்டியது. எஞ்சிய திட்டச் செலவு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, உலக வங்கி, ஆகியவற்றிடமிருந்து தவணைக் கடன் பெறுவதன் மூலமும் நிறுவனத்தில் சேர்ந்துள்ள



1999 ஏப்ரல் 29]

தொகையைக் கொண்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு உலக வங்கி 75 மில்லியன் அமெரிக்க டாலர்களைக் கடனாக நேரடியாக வழங்கியுள்ளது.

*செயல்பாட்டு மற்றும் நிதி விளைவுகள்*

இந்நிறுவனம் தொடர்ந்து, கடந்த எட்டு ஆண்டுகளாகக் கணிசமான அளவிற்கு ஆதாயம் ஈட்டி 1991 ஆம் ஆண்டிலிருந்து ஆதாயப் பங்கு அளித்துள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் மொத்த இலாபம் ரூ. 39.12 கோடி ஈட்டி ரூ.3.57 கோடிக்கு நிகர இழப்பு ஏற்பட்டுள்ளது. காகிதத் தொழிலில் சரிவு ஏற்பட்டுள்ளதாலும், ஆதாயப் பங்கு வழங்க நிறுவனத்திடம் போதிய நிதி இல்லாததாலும் 1997-98 ஆம் ஆண்டிற்கு ஆதாயப் பங்கை வழங்கவில்லை. இந்நிறுவனத்தின் 1998-99 ஆம் ஆண்டு திறன் பயன்பாட்டு அளவு 97.82 சதவிகிதமாகும். 1998-99 ஆம் ஆண்டின் மொத்த விற்றுமுதல் ரூ. 454.61 கோடியாகும்.

*ஏற்றுமதி*

31-3-1999 வரை 31,195 மெட்ரிக் டன் அச்சு எழுது காகிதத்தை ஏற்றுமதி செய்து ரூ. 74.43 கோடிக்கு நிகரான அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் காகிதத்தை எகிப்து, இலங்கை, ஜோர்டான், ஈரான் போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

மத்திய அரசின் வணிக அமைச்சகம் 1998 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் இந்நிறுவனத்திற்கு "ஏற்றுமதி இல்லம்" என்ற தகுதியை அளித்துள்ளது.

*காற்றாலை*

இந்நிறுவனம் இந்திய மாற்றத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகவரமைப்பிடமிருந்து நிதியுதவி பெற்று ரூ. 47.69 கோடி மூலதனச் செலவில் திருநெல்வேலி மாவட்டம் தேவர்குளம், பெருங்குடி ஆகிய இடங்களில் நவீன, தூய்மைக் கேடற்ற காற்று சக்தி ஆதாரத்தைப் பெற 1993-94 ஆம் ஆண்டில் 15 மெகாவாட் காற்றாலைத் திட்டம் ஒன்றை நிறுவியுள்ளது. 1995-96, 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் முறையே 236.35 இலட்சம் யூனிட்டுகள், 191.65 இலட்சம் யூனிட்டுகள் மற்றும் 168.06 இலட்சம் யூனிட்டுகள் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் 177.94 இலட்சம் யூனிட்டுகள் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 29

மூலப்பொருட்களுக்கான கூடுதல் ஆதாரங்கள்

இந்நிறுவனத்திற்குத் தேவைப்படக்கூடிய மூலப்பொருட்கள் கிடைப்பதை அதிகப்படுத்துவதற்காக கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தொகுதி-2-ல் பல எரிபொருள் மின்சக்தி கொதிகலன் ஒன்றை இந்நிறுவனம் ரூ.26 கோடி மூலதனச் செலவில் நிறுவியுள்ளது.

எகிப்தில் செய்தித்தாள் மற்றும் காகித ஆலை ஒன்றை நிறுவித் தொடங்குவதற்காக, தொழில் நுட்ப உதவியும் ஆதரவும் அளிப்பதற்கு எகிப்திலுள்ள குவான நியூஸ்பிரின்ட் நிறுவனத்துடன் இந்நிறுவனம் 1998 ஜூலையில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது.

கடந்த ஆண்டில் இந்நிறுவனம் தரமான மதிப்புமிக்க பொருள் ஒன்றை அதாவது தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன எக்ஸல் மேபலித்தோ (Excel Maplitho) என்ற வணிகப் பெயரிலான காகிதத்தைத் தயாரிக்கத் தொடங்கி, செய்தித்தாள் காகிதத்தின் தரத்தை மேம்படுத்தியுள்ளது.

இந்நிறுவனம் தொடர்ந்து நிலைத்து நிற்பதற்கும், வளர்ச்சியடைவதற்கும், போட்டி விலையை நிர்ணயித்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, செலவைக் குறைப்பதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இம்முயற்சிகளின் பலனாய் மூலப் பொருட்கள், எரிபொருள் மற்றும் ஏனைய இடுபொருட்களின் அடக்க மதிப்பில் சேமிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நோக்கத்துடன் எடுக்கப்பட்ட இந்த ஏற்பாடுகள், வரும் ஆண்டுகளில் கணிசமான அளவிற்கு பயன்களைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனம், தனது உற்பத்திப் பொருளின் தரத்தை மேம்படுத்துவதுடன், உற்பத்தி அளவை அதிகரிக்க, அதன் காகித இயந்திரம்-I-ஐ மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக, இந்நிறுவனம் விரிவான திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகிறது.

இந்நிறுவனம், புதிய கொதிகலன்களை நிறுவுவதற்கும், தன் சொந்தப் பயனுக்கான மின் உற்பத்தியின் அளவை அதிகரிப்பதற்காக 20 மெகாவாட் திறன் கொண்ட டிஜி.செட் ஒன்றை நிறுவுவதற்கும், முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம், இந்நிறுவனம் தனது மின் தேவையை 100 சதவிகிதத்திற்குப் பெறுவதுடன்



1999 ஏப்ரல் 29]

மட்டுமல்லாது, உற்பத்திக்கான மொத்தச் செலவில், மின் சக்திக்கான செலவையும் குறைக்க இயலும்.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்)

ஆலங்குளம் சிமெண்ட் ஆலை - நவீனப்படுத்துதல்

மாநில அரசின் பொதுத் துறை நிறுவனமான, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, அரியலூர் சிமெண்ட் ஆலை, தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (தகடு), ஆலங்குளம், தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (குழாய்கள்), மாயனூர் மற்றும் கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம் ஆகிய ஐந்து உற்பத்தி ஆலைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் இரண்டு சிமெண்ட் ஆலைகள். இவை ஆலங்குளம், அரியலூரில் அமைந்துள்ளன. விருதுநகர் மாவட்டத்தில் ஆலங்குளம் கிராமத்தில் உள்ள சிமெண்ட் ஆலை 1970-ல் இயங்கத் தொடங்கியது. இந்த ஆலை பழமையான ஈரச்செய்முறை தொழில் நுட்பத்தில் இயங்கி வருகிறது. எனவே, உற்பத்தி செய்முறை மாற்றம் மற்றும் நவீனப்படுத்துதல் மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

மொத்த திட்ட மதிப்பீட்டுச் செலவாக, ரூ.160 கோடியில் நவீனப்படுத்தல்/செய்முறை மாற்றியமைத்தல் செய்திட டான்செம் முன்வந்துள்ளது. இதன்மூலம் இந்த ஆலையின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்களிலிருந்து, 5 இலட்சம் டன்களாகவும் உயர்த்திட உள்ளது. இப்பெருந்திட்டத்திற்காக இத்துறையில் பெயர் பெற்ற திருவாளர்கள் ஹோல்டெக் கன்சல்டிங் பிரைவேட் லிமிடெட், புதுதில்லி என்ற நிறுவனம் ஆலோசனை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. நவீனப்படுத்தப்பட்ட சிமெண்ட் உற்பத்தித் திட்ட முறை 2001-ஆம் ஆண்டின் மத்தியில் செயல்முறைக்கு வரும்.

மாயனூர் ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் ஆலையின் விரிவாக்கத் திட்டம்

ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளுக்கு விற்பனைச் சந்தையில் உள்ள மதிப்பை உணர்ந்து, டான்செம், இந்த ஆலையிலேயே ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் உற்பத்தி செய்யும் தொழிற்கூட வசதியை உருவாக்கிட திட்டமிட்டுள்ளது. இந்த ஆலையை கூட்டுத் துறை நிறுவனமாக மாற்றிடும் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டி பொருத்தமானதொரு கூட்டுத்தொழில் முனைவோரை தேர்வு செய்யும் முயற்சியில் டான்செம் தற்போது ஈடுபட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 29

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாடு கனிம நிறுவனம் முறைப்படியும் விஞ்ஞான ரீதியாகவும் தமிழ்நாட்டில் பெருமளவில் கிடைக்கும் கருப்பு, சாம்பல், வெள்ளை மற்றும் பல வண்ணப் பாறைகளையும், கிராபைட், குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பார், வெர்மிகுலைட், சுண்ணாம்புக்கல் மற்றும் சிலிகாமணல் போன்ற கனிமங்களையும் வெட்டியெடுத்து வருகின்றது. 1998-99 ஆம் ஆண்டில், 17,059 கனமீட்டர் கருப்பு மற்றும் பல வண்ணப் பாறைகளும், 25,008 சதுர மீட்டர் கிரானைட் இறுதி பொருட்களும் 1,59,040 மெட்ரிக் டன் உயர் கனிமங்களையும் டாமின் உற்பத்தி செய்தது. 1999-2000 ஆம் ஆண்டில் டாமின் 21,690 கன மீட்டர் கருப்பு மற்றும் பல வண்ணப் பாறைகளும் 36,350 சதுர மீட்டர் கிரானைட் இறுதிப் பொருட்களும் 1,39,500 மெட்ரிக் டன் உயர் கனிமங்களும் உற்பத்தி செய்யும்.

2. உலக அளவில் கிரானைட் சந்தையில் தேக்க நிலை ஏற்பட்டிருப்பினும் 1998-99 ஆம் ஆண்டு ரூ.53.10 கோடியளவு விற்பனையும், ஏறக்குறைய ரூ.10.10 கோடி இலாபமும் ஈட்டியுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் டாமின் அந்நியச் செலாவணியாக ரூ.33 கோடி ஈட்டும். 1999-2000 ஆம் ஆண்டில் டாமின் ரூ.15 கோடி இலாபமும் அந்நியச் செலாவணியாக ரூ.35 கோடியும் ஈட்டும்.

### 3. புதிய திட்டங்கள்

#### (1) மாலிப்டினம் திட்டம்

டாமின் ரூ.100 கோடி செலவில் மாலிப்டினம் சுத்திகரிப்பு ஆலை ஒன்றினை தருமபுரி மாவட்டம், அரூர் தாலுக்கா, வேலம்பட்டி கிராமத்தில் நிறுவ முயற்சி மேற்கொண்டுள்ளது. மாலிப்டினைட் ஆய்வுப் பணி நடந்து வருகிறது. கனிம ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் மாலிப்டினத்தை ஆய்வு நடத்த மைய அரசு ரூ.3.92 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய புவியியல் மற்றும் நில அளவுத் துறையினரால் ஆராய்ச்சி மேற்கொள்ள தமிழக அரசும் ரூ.1.80 கோடி வழங்கியுள்ளது.

#### (2) கூட்டு முயற்சித் திட்டங்கள்

கூட்டு முயற்சியில் கார்னெட் வெட்டியெடுத்து, கார்னெட் செழுமைப்படுத்துவதற்கான தொழிற்சாலை நிறுவுவதற்கு டாமின் நடவடிக்கை எடுத்து வருகிறது. திறந்த ஒப்பந்தப்புள்ளியின் மூலம் கூட்டுத் தொழில் முனைவோரைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதுபோன்று கூட்டுத் தொழிலில் கிரானைட் பொருட்களை உற்பத்தி செய்ய டாமின் நடவடிக்கை எடுத்து வருகிறது. டாமின், குவார்ட்ஸ் தூள்/உருக்கிய குவார்ட்ஸ் ஆகியவற்றிற்காக கூட்டுத் தொழில் முனைவோரைத் திறந்த ஒப்பந்தப்புள்ளியின் மூலம் தேர்ந்தெடுத்துள்ளது.



## தமிழ்நாடு கிராஃபைட் நிறுவனம்

கிராஃபைட்டை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலைகளை நிறுவும் பொருட்டு, மலேசியாவில் அமைந்துள்ள புரோஜெக் காயன்கான் ஸ்டின் பிட் என்ற நிறுவனம், சிவகங்கை மாவட்டத்தில் எக்ஸ்பாலியேட்டட் கிராஃபைட் மற்றும் கேப்டிவ் பவர் புரோஜெக்ட் (Exfoliated Graphite-*cum*-captive Power Project) என்ற திட்டத்தை அமைக்கவிருக்கிறது. இந்நிறுவனம் ஹைதராபாத்தில் அமைந்துள்ள ஏ.ஆர்.சி. இன்டர்நேஷனல் (A.R.C. International) என்ற நிறுவனத்துடன் இணைந்து பசும்பொன் கிராஃபைட் மற்றும் பவர் கம்பெனியை (Pasumpon Graphite and Power Company Private Limited) நிறுவ உடன்பாட்டு ஒப்பந்தம் (MoU) 23-3-1999 அன்று கையெழுத்தாகியுள்ளது. இப்புதிய நிறுவனம் பல நிலையில் ஆண்டொன்றுக்கு 1,000 மெட்ரிக் டன் எக்ஸ்பாலியேட்டட் கிராஃபைட் பொருள்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்பனை செய்ய உற்பத்தி செய்யும்.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் கிராஃபைட் தொழிலுக்குத் தேவையான கச்சாப் பொருள் சிவகங்கையில் உள்ள பிரிவில் வெட்டி எடுக்கப்படுகிறது. அதன்படி, அங்கு 1998-99-ல் 32,566 டன்கள் கிராஃபைட் வெட்டியெடுக்கப்பட்டு, 3,382 மெட்ரிக் டன்கள் உற்பத்திச் செய்யப்பட்டது.

## தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மாக்)

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மாக்) மேக்னசைட் கனிமத்தை வெட்டியெடுப்பதற்காகவும் அதைக்கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களைத் தயாரிக்கும் நோக்கத்துடனும் சேலத்தில் 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் ஏற்படுத்தப்பட்டது. ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்வதற்காக ரூ.8.57 கோடி செலவில் சுழற்சூளை ஒன்று 1985 டிசம்பர் திங்களில் தொடங்கி

[1999 ஏப்ரல் 29

வைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான நிலைச்சூளை ஆலை, மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட், ரேமிங்மாஸ் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது. டான்மாக், 1998-99 ஆம் ஆண்டில் கச்சா மேக்னசைட்டின் குறியீட்டளவான 70,000 மெட்ரிக் டன்களில் 31-3-1999 முடிய 56,541 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து, இதே காலத்திற்கான கச்சா மேக்னசைட்டின் விற்பனை குறியீட்டளவான 85,000 மெட்ரிக் டன்னில், 63,750 மெட்ரிக் டன் விற்பனை செய்துள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள உற்பத்திக் குறியீட்டளவுகள் பின்வருமாறு:—

(மெட்ரிக் டன்களில்)

| | | |
|---|---|---|
| கச்சா மேக்னசைட் | .. | 70,000 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | .. | 30,000 |
| மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் | . | 9,000 |

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்) தொழில் வெடி மருந்து, வெடி ஊக்கி மற்றும் வெடித்திரி தயாரிக்கவும், அவைகளை விற்பனை செய்யவும் தோற்றுவிக்கப்பட்டது. இது டிட்கோவின் துணை நிறுவனமாகும்.

இந்நிறுவனத்தின் இப்போதைய வருட நிர்மாணத்திறன் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| என்.ஜி.வெடிமருந்து/கலவை | .. | 16,000 டன்கள் |
| வெடி ஊக்கி | .. | 450 இலட்சம் எண்ணிக்கை |
| வெடித்திரி | .. | 110 இலட்சம் மீட்டர்கள் |

*நிறுவனத்தின் சீர் அமைப்புத் திட்டம்*

இந்நிறுவனம் ஆரம்பித்த காலத்திலிருந்தே நட்டத்தில் இயங்கி வந்துள்ளது. எனவே, இந்நிறுவனம் தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் கழகத்திடம் (BIFR) பதிவு செய்யப்பட்டு பிறகு ஒரு நலிந்த நிறுவனமாக அறிவிக்கப்பட்டது.



1999 ஏப்ரல் 29]

தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் கழகத்தின் ஆணையின்படி இந்நிறுவனத்தை புனர் நிர்மாணம் செய்ய ஒரு தகுந்த சீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு அது அனைத்து நிதி நிறுவனங்களினாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்படி இந்நிறுவனம் நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூ.101 கோடி கடனுக்காக ஒரே தவணையில் ரூ.32.03 கோடி கட்டியதால், மீதி 68.97 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, இந்நிறுவனம் இதுவரை அடைந்த நட்டம் முழுவதையும் 1999-2000 ஆண்டின் இறுதியில் ஈடு செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் 1956 ஆம் ஆண்டு தனியார் துறையில் சரக்கு பெட்டிகள், இரும்பு கட்டுமானங்கள் தயாரிப்பதற்காகத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தொழிலாளர் பிரச்சினைகளால் 1969-70-ல் மூடப்பட்டது. எனவே அதில் பணிபுரியும் சுமார் 1,200 தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டுத் தமிழக அரசு இந்நிறுவனத்தை 1971 ஆம் ஆண்டு தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டது.

அரசு இந்நிறுவனத்தை ஏற்ற பிறகு இந்நிறுவனத்தின் பணிகள் பலதிறப்படுத்தப்பட்டன மற்றும் விரிவாக்கப்பட்டன. நிர்வாகத்தின் தொடர் முயற்சிகளின் விளைவாக இந்நிறுவனம் இழப்பில் செயல்படுவதிலிருந்து மீண்டு 1983-84 ஆம் ஆண்டு முதற்கொண்டு ஓரளவு ஆதாயத்தை ஈட்டத் தொடங்கியது. ஆனால் 1987-88 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலையின் முழுத்திறன் அளவிற்கு போதிய பணித் தேவை ஆணையின்மை காரணமாக மீண்டும் இழப்பில் செயல்படத் தொடங்கியது. நிறுவனத்தின் நிகர மதிப்பு எதிர்மறை நிலையை அடைந்ததினால் தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழுமத்திடம் மே மாதம் 1992 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்ட சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் மறுசீரமைப்புத் திட்டம், 1998 ஆம் ஆண்டு சனவரி மாதம், தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழுமத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. நிறுவனத்தின் மறுசீரமைப்புத் திட்டம் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1997-98 ஆம் ஆண்டு இந்நிறுவனம், ரூ.35.47 கோடி விற்பனை அளவினை எய்தப்பெற்று, சிறிதளவு ஆதாயமாக ரூ.0.44 கோடி ஈட்டியது. இந்நிறுவனம் தற்போது நிலவிவரும் தொழில் தேக்க நிலையிலும்,

[1999 ஏப்ரல் 29

31-3-1999 வரை விற்பனை அளவாக ரூ.46.23 கோடியையும், ரூ. 0.15 கோடி இலாபமும் ஈட்டியுள்ளது.

இந்நிறுவனத்தின் புதிய மாற்று வழி உற்பத்தித் திட்டங்களாக, ஐட்லர்ஸ் (IDLERS) இயந்திர நிர்மாணம் செய்யப்பட்டு, சோதனை உற்பத்தி முடிவு பெற்றுவிட்டது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடமிருந்து பெரிய அளவிலான பணி ஆணைகள் பெறுவது தொடர்பாக, விற்பனைத் திட்ட நடவடிக்கைகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. மேலும் இந்த நிறுவனம் தானியங்கி உருளையைக் கையாளும் முறைக்கான (Automatic Cylinder Handling System) வடிவமைப்புப் பணியை முடித்து, இதன் மூல முன்மாதிரி உற்பத்தி, 1999 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் முற்றுப் பெறும்.

இந்த நிறுவனத்தின் பணி ஆணைகள் வசதியான நிலையில் அதாவது ரூ. 30.39 கோடி அளவில் உள்ளன. 1999-2000 ஆம் நிதியாண்டில், புதிய மாற்று வழி உற்பத்தித் திட்டங்கள், அதாவது ஐட்லர்ஸ் (Idlers) மற்றும் உருளை கையாளும் முறை (Cylinder Handling System) முழு அளவில் இயங்கும். ரூ.15.00 கோடி விற்பனையளவு இதன்மூலம் பெறுவதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நடைமுறையிலுள்ள இரயில் சரக்குப் பெட்டிகள் உற்பத்தித் தொடரும். மாநிலத்தில் பெரும்பாலான அடிப்படை கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதால் நிறுவனத்தின் திட்டப் பிரிவிற்கு, பணி ஆணைகள் அதிகம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இந்நிறுவனம் 1999-2000-ஆம் ஆண்டில் இந்திய தர அமைப்பு 9002 (ISO-9002) சான்றிதழ் பெறுவதற்கு திட்டமிட்டுள்ளது.

தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழுமத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மறுசீரமைப்புத் திட்டத்தின்படி கடந்த கால இழப்புகளை சரி செய்ய, இந்நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

### தமிழ்நாடு உப்பு நிறுவனம்

1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு உப்பு நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்தில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தற்போது தொழிற்சாலைக்குத் தேவையான தரமான உப்பு மற்றும் இரும்பு



1999 ஏப்ரல் 29]

ஊட்டச் சத்து உப்பு, இரு சத்து கலந்த உப்பு மற்றும் அயோடின் கலந்த *அரசு உப்பு* முதலிய செறிவூட்டப்பெற்ற உப்புகளை உற்பத்தி செய்து வருகிறது.

2. தமிழ்நாடு உப்பு நிறுவனம் மாரியூர் வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் உப்பு உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள 4,825 ஏக்கர் நிலத்தில் 2,300 ஏக்கர் பரப்பளவில் தொழிற்சாலை மற்றும் உணவு உப்பினை தயாரித்து வருகிறது. உப்பு உற்பத்தி, 1999-2000 ஆண்டு இறுதிக்குள் தற்போதுள்ள 1,30,000 மெட்ரிக் டன்னிலிருந்து 2,00,000 மெட்ரிக் டன்கள் அளவுக்கு அதிகரிக்கும் என்று தற்போதுள்ள விற்று முதல் ரூபாய் 5 கோடியிலிருந்து ரூ.15 கோடியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. ஐதராபாத்திலுள்ள தேசிய சத்துணவு நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் இரு செறிவூட்டப்பட்ட உப்பினை தயார் செய்வதற்கு தமிழ்நாடு உப்பு நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனம் இருப்பு/இரும்புச்சத்து குறைவால் ஏற்படும் நோயினைத் தடுப்பதற்கு தமிழ்நாட்டில் உள்ள சத்துணவு கூடங்களுக்கு இரு சத்து கலந்த உப்பினை வழங்கி வருகிறது.

4. தமிழ்நாடு உப்பு நிறுவனம், அயோடின் கலந்த உப்பினை ஒரு கிலோ எடை உள்ள பாக்கெட்டுகளாக உற்பத்தி செய்து ரூ.2.50-க்கு நியாய விலை கடைகள்மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் *அரசு உப்பு* என்ற பெயரில் விற்பனை செய்து வருகிறது. இத்திட்டம், மற்ற மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவுப்படுத்தப்பட்டு 2000 ஆம் ஆண்டில் தற்போதுள்ள 20 சதவிகித பயன்பாட்டிலிருந்து 100 சதவிகிதம் அளவுக்கு அயோடின் கலந்த உப்பு பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. ஆண்டு ஒன்றுக்கு 36,000 டன்கள் ஈரப்பதம் குறைந்த அயோடின் கலந்த உப்பு மற்றும் 3,000 டன்கள் மிக சுத்தமான உப்பு உற்பத்தி செய்ய ரூ.6.00 கோடி செலவில் தொழிற்சாலை ஒன்றை வாலிநோக்கத்தில் அமைப்பதற்கான கருத்துரு ஒன்று தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் ஆய்வில் உள்ளது.

[1999 ஏப்ரல் 29

6. 1998-99 ஆம் ஆண்டின் செயலாக்கம் மற்றும் நிதித் திறன் பற்றிய விவரங்கள்

| | | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|---|
| | | (மெட்ரிக் டன்களில்) | |
| I. | தொழிற்சாலைக்குத் தேவையான தரமான உப்பு | 1,09,500 | 90,395 |
| II. | டைஎதில் கார்போமைசின் மருந்துச்சத்து கலக்கப்பட்ட உப்பு | 2,250 | 2,292 |
| III. | இரும்பு ஊட்டச்சத்து உப்புத் திட்டம் | 2,741 | 2,803 |
| IV. | நிகர இலாபம் (தற்காலிகமாக) (வரிக்கு முன்) 31-3-1999 அன்றைய நிலவரப்படி | | ரூ. 0.87 கோடி |

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை

புவியியல் மற்றும் சுரங்கத் துறை இரு பெரும் பிரிவுகளாக செயல்பட்டு வருகிறது, அவை, (1) கனிம ஆய்வு (2) கனிம நிர்வாகம் என்பன.

கனிம ஆய்வுப் பிரிவு, கீழ்க்காணும் கனிம ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

*1. கொடைக்கானல் மற்றும் நீலகிரி மாவட்டம், கூனூரில் அமைந்துள்ள புவியியல் தொழில் நுட்ப மையம்.*

கனமழை பொழியும் சமயங்களில் கொடைக்கானல் மற்றும் கூனூரில் ஏற்படும் நிலச்சரிவின் காரணங்களை விரிவாக ஆராயும் பொருட்டு, அவ்விடங்களில் புவியியல் தொழில் நுட்ப மையம் அமைக்கப்பட்டது. கொடைக்கானலில் அமைந்துள்ள மையம் வடிகால் வரைபடம் புவியியல், புவிப்பரப்பியல் போன்ற திமேட்டிக் வரைபடங்களை 325 சதுர கிலோ மீட்டர் அளவுக்குத் தயாரித்துள்ளது. இப்பகுதியின் மண் பகுதிகள் அடங்கிய வரைபடம் மற்றும் மண்டல வரைபடம், களப்பணிகள் முடிவடைந்த பின்னர் தயாரிக்கப்படும்.



1999 ஏப்ரல் 29]

கூனூரில் அமைந்துள்ள புவி தொழில் நுட்ப மையம் 1996-97 ஆம் ஆண்டு வரை மத்திய அரசின் நிதி உதவியுடனும், 1997-98ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசின் நிதி உதவியுடனும் செயல்பட்டு வருகின்றது. இம்மையம், 1997-98-ஆம் ஆண்டில் நிலச்சரிவு சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு 200 பகுதிகளை கட்டுமான பணிகளுக்கு உகந்த பகுதிகளாக தேர்வு செய்தது. கஞ்சமலை மற்றும் எமரால்ட் நீர்நிலைப் பகுதிகள் உட்பட 10 வழுப்படும் வாய்ப்புள்ள பகுதிகளில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1997-98-ஆம் ஆண்டில் கூனூர் செல்லாஸ் சாலைப் பகுதியில் 14 கிலோ மீட்டர் நீளம் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

*2. பெரம்பலூர் மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் ஆய்வு.*

புவியியல் மற்றும் சுரங்கத் துறை விஞ்ஞான ரீதியாக விரிவான ஆய்வுகளை மேற்கொண்டதன் விளைவாக அரியலூர் அருகே தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், டால்மியா சிமெண்ட் நிறுவனம் மற்றும் இந்தியா சிமெண்ட் நிறுவனம் போன்ற மிகப் பெரிய சிமெண்ட் ஆலைகள் நிறுவப்பட்டன. மேலும், ஒரு புதிய சிமெண்ட் ஆலை நிறுவும் எண்ணத்துடனும் அல்லது இவ்விடங்களை குத்தகைக்கு விட்டு அரசுக்கு அதிக அளவு ராயல்டி தொகை கிடைக்கும் என்ற நோக்குடனும், 80 சதுர கிலோ மீட்டர் அளவிற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கங்களில் ஏற்படும் கழிவுகளில் மாலிப்டினம் என்ற கனிமம் இருப்பதை ஆய்வு செய்யவும், சேலம் மாவட்டத்தில் பிளாட்டினம் கனிம சம்பந்தமான ஆய்வு, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டம், குருவிக்குளம் ஜமீன் மற்றும் சங்குப்பட்டி கிராமத்தில் கிடைக்கும் கிராபைட் கனிமத்தின் தரம் மற்றும் அதன் இருப்பு அளவு குறித்து மதிப்பீடு செய்யவும், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பீங்கான் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பென்டோனட் வகைக் களிமண் முதலியன குறித்து கனிம ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

*4. கணினிமயமாக்குதல்.*

பதினோரு கணினிகள் இத்துறையில் வாங்கப்பட்டுள்ளன. அவை, சுரங்கக் குத்தகைப் பதிவேடு, சுரங்கக் குத்தகை பற்றிய தொகுப்பு, நீதிப் பேராணைப் பதிவேடு, சம்பளப்பட்டியல் தயாரித்தல், தன்பதிவேடு

மற்றும் கேட்பு வசூல் பாக்கி முதலிய பணிகளுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

*5. சுரங்கச் செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.*

17-9-1998 நாளிட்ட தொழில் துறை அரசாணை (நிலை) எண்.603 வெளியிட்டதன்மூலம் 1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில், புதிதாக விதி எண்.8-இ சேர்க்கப்பட்டது. இதன்படி, முந்தைய விதி-39ன் கீழ் வழங்கப்பட்ட அரசு நிலங்களில் அமைந்துள்ள கிரானைட் குவாரிகளுக்கு 1989-ஆம் ஆண்டில் இருந்த ஒப்பந்தப்புள்ளி முறை மூலமாகவோ, அல்லது 1996-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலமுறை மூலமாகவோ, அருகில் அமைந்துள்ள கிரானைட் குவாரிகளுக்குப் பெறப்பட்ட குத்தகைத் தொகையின் அடிப்படையிலோ இதில் எது அதிகமோ அதனை குத்தகைத் தொகையாக நிர்ணயம் செய்து வசூல் செய்ய ஆணையிடப்பட்டது.

*சுரங்கக் குத்தகை வழங்க அதிகாரம் பரவலாக்குதல்.*

பட்டா நிலங்களில் பெருங்கனிமங்களுக்கான குத்தகை வழங்கும் அதிகாரம் புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கனிம நிர்வாகப் பிரிவு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு, புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் வருவாயைப் படிப்படியாக பெருக்கி வருகிறது. இத்துறையின் 1997-98-ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற வருவாய் ரூ.89.94 கோடியாகும். 1998-99 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ.98.98 கோடி ஆகும்.

## சர்க்கரைத் தொழில்

தமிழ்நாட்டிலுள்ள 35 சர்க்கரை ஆலைகளில் கூட்டுறவுத் துறையில் 16, பொதுத் துறையில் மூன்று மற்றும் தனியார் துறையில் 16 ஆலைகள் இயங்கி வருகின்றன. 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 10 ஆலைகளின் நிதிநிலைமை நலிவுற்றுள்ளது. இந்த நலிவுற்ற ஆலைகளின் நிதி புனரமைப்புக்காக புனரமைப்புத் திட்டம் பரிசீலனையிலுள்ளது.

எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் ஏற்கனவே



நிறுவப்பட்டுள்ளன. இவ்வாலைகளிலிருந்து பெறப்படும் கரும்புச் சக்கையைக் கொண்டு அதிக அழுத்த கொதிகலன்களையும் டர்பைன்களையும் உபயோகித்து மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கப்பட்டு வருகிறது. சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இணை மின் உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டு 19-6-1998-ல் மின் உற்பத்தி தொடங்கப்பட்டது. இவற்றைத் தவிர மேலும் 9 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் ஒரு பொதுத் துறை சர்க்கரை ஆலையிலும் கூட்டுத் துறையில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

தொழில் அடிப்படை வசதித் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துவதில் வல்லுநர்களான திருவாளர்கள் இன்ப்ராஸ்ட்ரக்சர் லீசிங் மற்றும் பைனான்சியல் சர்வீஸஸ் லிமிடெட் (IL&FS) நிறுவனம் உத்தேசிக்கப்பட்டுள்ள இணை மின் உற்பத்தித் திட்டத்திற்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது. சுமார் ரூ.581 கோடி திட்ட மதிப்பீட்டில், கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி 10 சர்க்கரை ஆலைகளில் 140.90 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பது இதன் நோக்கமாகும். ஆலைகளின் உபயோகம் போக, மாநில மின்வாரியத்திற்கு விற்கப்படும் 84.50 மெகாவாட் மின்சாரம் இதில் அடங்கும். இத்திட்டங்களுக்கு மைய அரசிடமிருந்து ரூ.19.2 கோடி (11%) பங்கு மூலதனம் எதிர்பார்க்கப்படுகிறது.

## இரண்டாம் பகுதி

## தகவல் தொழில் நுட்பம்

தமிழ்நாடு, தகவல் தொழில் நுட்பத் துறையில் விரைவான முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்தியாவிலேயே மென்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முக்கியமானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. 1997-98-ல் ரூ.400 கோடியாக இருந்த மென்பொருள் ஏற்றுமதி 1998-99-ல் 200% அதிகரித்து ரூ.1,170 கோடியை எட்டியுள்ளது என்பது மென்பொருள் வளர்ச்சிக்கு மிகவும் சாதகமான சூழ்நிலை தமிழ்நாட்டில் நிலவுகிறது என்பதை விளக்கும்.

தமிழ்நாடு 1997ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தகவல் தொழில் நுட்பக் கொள்கையை வெளியிட்டு நாட்டின் முன்னோடியாக

விளங்குகிறது. இந்தக் கொள்கையின்மூலம் பல முக்கிய தொடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை 1999-2000ஆம் ஆண்டிலும் தொடரும்.

(1) டிட்கோ நிறுவனம், எல்காட் நிறுவனத்துடன் கூட்டாக இணைந்து 320 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மென்பொருள் தொழில் நுட்பத்தைப் பெருக்க சென்னையிலுள்ள தரமணியில் டைடல் பூங்கா ஒன்றை அமைத்து வருகிறது. இப்பூங்கா உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை, தகவல் தொழில் நுட்பத் துறைக்குக் குறிப்பாகத் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கி 1.2 மில்லியன் சதுர அடிப் பரப்பளவில் அமையுமாறு திட்டமிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இது 2000 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தயார் நிலையில் இருக்கும்.

(2) நாட்டின் முதலாவது தொடக்க சாகச மூலதன நிதியான (Venture Capital Fund) தமிழ்நாடு மென்பொருள் நிதி என்ற ஒன்றை டிட்கோ நிறுவனம் எஸ்.டி.பி.ஐ. மற்றும் ஐ.எல்.எப்.எஸ் என்னும் நிறுவனங்களுடன் இணைந்து தொடங்கியுள்ளது.

(3) பழைய மாமல்லபுரம் சாலையில் சிறுசேரி என்ற இடத்தில் ஒரு மிகப் பெரிய தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனம் நிறுவி வருகின்றது. 1,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்தப் பூங்கா வன்பொருள் மற்றும் மென்பொருள் மற்றும் பன்னாட்டுத் தரத்தில் அமைந்த வசதிகள் கூடிய இடமாக இருக்கும்.

(4) சென்னையில் தரமணியிலிருந்து பழைய மாமல்லபுரம் சாலை வரையிலான பகுதி தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலையாக விரைந்து முன்னேறி வருகிறது. பழைய மாமல்லபுரம் சாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தகவல் தொழில் நுட்ப கட்டமைப்பு வசதிகளை உண்டாக்க நான்கு வழிப் பாதையாக மாற்றும் பணி தொடங்கியுள்ளது. இந்தப் பகுதியில் பல முக்கிய தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் தங்களுடைய மென்பொருள் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன. மேலும் உருவாக்கி வருகின்றன. சமீபத்தில் சோழிங்கநல்லூரில் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் என்னும் நிறுவனம் ஆசியாவின் மிகப் பெரிய மென்பொருள் மையத்தை ஆரம்பித்துள்ளது. அதைத் தொடர்ந்து மற்ற முக்கிய நிறுவனங்களான விப்ரோ, இன்போசிஸ் மற்றும் பொலாரிஸ் ஆகியவை தங்களது மையங்களை





இந்தப் பகுதியில் நிறுவி வருகின்றன.

(5) அரசின் நிறுவனமான தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் தற்போது தகவல் தொழில் நுட்பத் தொழிலை முக்கியமாகக் கருதி வருகிறது. இது தகவல் தொழில் நுட்பத் துறையில் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுவதுடன், தகவல் தொழில் நுட்பப் பகுதிகளை மேம்படுத்தவும் பணியாற்றி வருகிறது. இது ஒரு இலாபம் ஈட்டும் நிறுவனமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தமிழக அரசின், வாக்காளர் அடையாள அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் உணவுப் பொருள்கள் வழங்கு துறையின் குடும்ப அட்டைகள் ஆகியவைகளை வடிவமைத்து உற்பத்தி செய்து வருகிறது. பழைய மாமல்லபுரம் சாலையில் சோழிங்கநல்லூர் அருகில் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களின் நிலத் தேவைகளுக்கு நிலங்களை கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களின் கட்டமைப்பு வசதிகளுக்காக, ஒற்றைச் சாளர வசதிகளையும் செய்து வருகிறது. இதன் கணினி விவரப் பதிவகம் (www.elcot. com) தமிழ்நாட்டின் அதிகாரப்பூர்வமான இடமாகும்.

(6) தமிழ்நாடு அரசு எல்காட்டின் உதவியுடன் இங்கிலாந்திலுள்ள வேர்ல்டுடெல் நிறுவனத்துடன் கூட்டு முயற்சியான சமூக கணினி இணைய மையம் ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளது. வேர்ல்டுடெல் நிறுவனம் ஐக்கிய நாடுகளின் முகவராக பன்னாட்டுத் தொலைத் தொடர்பு சங்கம் அமைத்தது. இந்த முயற்சி தமிழ்நாட்டின் தகவல் தொடர்புக்கு முதுகெலும்பாக அமைவதுடன் 13,000 சமூக கணினி இணைய மையங்களை இணைக்கும் பாலமாக இருக்கும். இது 1,50,000 பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் பெருவாய்ப்பாக அமையும். இந்த மையங்களின் உதவியுடன் கணினி இல்லாதவர்களும் தங்களது அன்றாடத் தேவைகளைப் பெற உதவி செய்யும்.

(7) ஊரகப் பகுதியிலுள்ள மக்களுக்குத் தமிழில் இணைய வசதி இருந்தால்தான் பயனுள்ளதாக இருக்கும். இதனை ஊக்குவிக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் முதல் நிகழ்ச்சி பிப்ரவரி 1999-ல் உலகத் தமிழ் இணையக் கருத்தரங்கு மாநாடு - தமிழ்நெட் 99 நடத்தியதாகும். இந்தக் கருத்தரங்கு தமிழ் விசைப் பலகை மற்றும் தமிழ் வடிவமைப்பு ஆகியவற்றை பரிந்துரை செய்துள்ளது. இந்தக் கருத்தரங்கின் பரிந்துரைகளினால் ஜூலை 1999-ல் முடிவான தமிழ் வடிவமைப்புகள் வெளியிடப்படும்.

[1999 ஏப்ரல் 29

(8) அமெரிக்காவிலுள்ள இன்டர்நேஷனல் யூனிகோட் கன்சோர்டியம் என்னும் மையத்தில் தமிழ்நாடு கூட்டு நபராக பதிவு செய்துள்ளது. யூனிகோடிற்கு ஏற்கெனவே இருக்கும் தமிழ் வடிவமைப்புகளை மாற்றுவதற்கான செயற் குறிப்புகளை அரசு அனுப்பும்.

(9) தமிழ் மென்பொருளில் புதிய வளர்ச்சியை ஊக்குவிக்க ரூ.5 கோடி மதிப்பிற்கு ஒரு தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி ஒன்று உருவாக்கப்படும்.

(10) உலகெங்கிலும் உள்ள ஆர்வமுள்ள மாணவர்களின் தமிழ் கல்விக்காக இன்டர்நெட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு தமிழ் இணைய பல்கலைக்கழகம் நிறுவப்படும்.

(11) தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழில் ஆராய்ச்சி முன்னேற்றங்களை ஊக்குவிக்க தன்னிச்சையாகவோ அல்லது இந்தத் துறையில் ஏற்கனவே இருக்கும் நிலையங்களின் உதவியுடனோ இன்டர்நெட் மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவப்படும்.

(12) தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழில் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்க அண்ணா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், திருச்சியிலுள்ள மண்டல பொறியியல் கல்லூரி ஆகியவற்றில் மூன்று அறக்கட்டளைகள் நிறுவப்படும்.

(13) தகவல் தொழில் நுட்பக் கல்வியை மேம்படுதத டேனிடெக் என்னும் தகவல் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றை, அரசு ஏற்படுத்தியுள்ளது. தகவல் தொழில் நுட்பத் துறைக்கு மிகவும் பொருத்தமான ஓர் ஆண்டு முதுகலைப் பட்டயப் படிப்பை டேனிடெக் தொடங்கியுள்ளது. இது தற்போது 50 மாணவர்களைக் கொண்டும், 1999-2000-ல் 100 மாணவர்களைக் கொண்டதாகவும் இருக்கும். டேனிடெக் தகவல தொழில் நுட்பத் துறையில் பட்டப் படிப்புகளைத் தொடங்கி நடத்திட இருப்பதுடன், தகவல் தொழில் நுட்பத் திறமையைத் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் நிலையங்களில் மேம்படுத்தும் ஓர் ஒருங்கிணைப்பு மையமாகவும் இது செயல்படும்.



1999 ஏப்ரல் 29]

(14) தகவல் தொழில் நுட்பத் துறை, ஏனைய துறைகளின் கணினி மயமாக்கும் நடவடிக்கைகளில் உதவி வருகிறது. பொதுமக்கள் அதிகம் ஈடுபடும் பத்திரப் பதிவு, விற்பனை வரி, வாகனங்கள் மற்றும் நிலப்பதிவு, மக்கள் சாசனம் ஆகியவற்றில் இத்துறை முக்கிய பணி ஆற்றி வருகிறது.

(15) ஊரகப் பகுதிகளில் நல்வாழ்வுத் துறையில் நோயாளிகளுக்கு மருத்துவ ஆலோசனை பெற ஒரு தீவிரத் திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்படும்.

(16) தமிழ்நாட்டில் உள்ள, 1,200 மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி ஒரு விருப்பப் பாடமாக அமைவதற்கேற்ப, பள்ளிக் கல்வித் துறையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கணினிப் பாடம் படிப்படியாக பத்தாவது மற்றும் அதற்குக்கீழ் வகுப்புகளிலுள்ள மாணவர்களுக்கும், ஆசிரியர்களின் திறமைகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படும்.

(17) தமிழ்நாடு அரசின் திறமையான மற்றும் ஒளிவு மறைவற்ற நிர்வாகம் மேற்கொள்ளும் முக்கிய முடிவுகள் அனைத்தும் தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ கணினி, விவரப் பதிவகததில் www.tn.gov.in. கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே அரசுத் துறைகளின் மக்கள் சாசன நகல்கள். வரவு செலவு அறிக்கைகள், மக்களுக்குப் பயன்படும் அரசு துறைகளின் 80 விண்ணப்பப் படிவங்கள் ஆகியவை இந்தப் பதிவகத்தில் உள்ளன. அரசு இதுபோன்ற முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

V211, 3/N99
N99.76